# தமிழரசு

திங்கள் இருமுறை ஜன 1, 1972 35 காசு



# அரசு-மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப் படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு –வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16




# தமிழரசு

மலர் 2] 1—1—1972 [இதழ் 13

## இந்த இதழில்


சட்டப் பேரவையில் தமிழரசு

முத்துப் பல் முறுவலிக்க ...!

நடமாடும் மருத்துவமனை

கோழிப் பண்ணை

உலகத்திலேயே மிகப் பெரிய
தோல் ஆராய்ச்சி நிலையம்

ஒரு ரொட்டியின் கதை

படைத்தவர் யார்? (கவிதை)

வெண்பாப் போட்டி

ஏர் முனையில் போர் முனை (சிறுகதை)

ஏன் இந்தக் காதல்? (தொடர் கதை)

வங்கதேச வரலாற்றுக் கட்டுரைகள்

முதல்வரின் முத்துக்கள்

# முதல்வரின் முத்துக்கள்

**ஆட்காட்டி விரலின் அகராதிப் பொருள்.**

கடந்த உலகப் போரில் இங்கிலாந்து நாட்டுப் பிரதமர் சர்ச்சில் தன் இரண்டு விரல்களை 'V' என்பது போல் காட்டி(வி-ஃபார்-விக்டரி)வெற்றி நமதே என்று கூறினார். ஆனால், இன்று சிலையாக நிற்கும் அண்ணா அவர்கள் ஒரு விரலைக் காட்டுகிறார்கள். அதன் பொருள்....

நெருக்கடி நேரத்தில்—பொதுவான காரணங்களுக்காக நாங்கள் ஒன்றுபடுவோம் என்பதுதான்.

**தாயைப் போல் பிள்ளை**

காய்ச்சல் உள்ள தாயின் பாலை அருந்தும் குழந்தைக்கும் அந்தக் காய்ச்சல் வரும்; அதுபோல, இந்தியத் தாய்க்கு வருவது தமிழ்ச் சேய்க்கும் வரும்.

**படுவது கால்; பதறுவது வாய்**

இந்தியாவின் ஒரு மூலையில் நடைபெறும் போரினால் இன்னொரு மூலையில் இருக்கும் தமிழ்நாட்டையும் அது பாதிக்குமா என்றெல்லாம் கருதாமல், கால் மீது கல் இடித்ததும் வாய் அலறுவது போன்ற உணர்வுடன் தமிழகமும் ஆக்க பூர்வமான ஆதரவுகளைச் செயல் பூர்வமாக ஆற்ற என்றைக்கும் காத்திருக்கிறது.

**போரிலே விளைந்த புதிய போர்**

யுத்தம் அறவே முடிந்துவிட்டதாக நாம் எண்ணிக்கொள்ளக் கூடாது; யுத்தத்தின் விளைவுகளை எதிர்த்து நாம் இனி ஒரு யுத்தம் நடத்த வேண்டியிருக்கிறது.

**நாடுதான் நாம்; நாம்தான் நாடு**

ஒரு கோடி அகதிகளைப் பற்றி எழுந்த பிரச்சினையால் மேலும் ஆறரைக் கோடிப் பேருக்கு வாழ்வு தரவும், அத்துடன் இந்தப் போரில் தொண்ணூறாயிரம் இராணுவச் சிப்பாய்களைக் காப்பாற்றித் தீரவும் வேண்டிய பொறுப்பையும் யாகியாகான் இன்று நம்மிடம் தந்திருக்கிறார்.

இதனால், அவர்களின் வாழ்வுக்கு வழி செய்யும் அறவழியில் நாம் அந்தப்பொறுப்புக்களையெல்லாம் பிறழாமல் காக்க வேண்டியிருக்கிறது. அதற்கு நாடு உங்களையெல்லாம் நம்பியிருக்கிறது.

**பழைய சொல்; புது விளக்கம்.**

நட்சத்திர இரவு என்கிறார்கள். இரவு என்றால் நட்சத்திரம் இருக்கத்தானே செய்யும்! இது வியப்புக்குரியதல்ல. இரவில் நட்சத்திரங்கள் இருப்பதுண்டு. அப்படியிருக்க நட்சத்திர இரவு என்றால் என்ன பொருள் என்று சிந்தித்துப் பார்த்தேன்.

இரவு என்றால் ராத்திரி என்று சொல்லலாம். இரவு என்பதற்கு யாசிப்பது என்று இன்னொரு பொருளும் சொல்லலாம். ஆகவே, இங்குக் காட்டப்பட்டுள்ள நட்சத்திர இரவு, நட்சத்திரங்களையெல்லாம் திரட்டித் தேசியப் பாதுகாப்பு நிதியை யாசிக்கும் நட்சத்திர இரவு என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

**எல்லையில் வீரர்கள்; இங்கே நாம்!**

நாட்டைப் பாதுகாப்பது என்பது எல்லையில் போர் வீரர்களை நிறுத்தி எதிரியை முறியடிப்பது என்பது மாத்திரமல்ல—



எல்லையில் இருக்கும் போர் வீரர்கள் வெளியிலிருந்து வருகிற பகையை எதிர்த்து நாட்டைக் காப்பார்கள்.

அதே நேரத்தில், உள் நாட்டிலுள்ள வறுமை, இல்லாமை அறியாமை, ஏழ்மை, இங்கேயிருக்கிற வன்முறைகள், ஐந்தாம் படைகள், சோர்வு இவை அனைத்தையும் போக்கி, நாம் நாட்டில் ஒரு விறுவிறுப்பு ஏற்படுத்தவேண்டும்.

**வீரமும் இரக்கமும்!**

பொதுவாகப் பெண்களுக்கு வீரமும் உண்டு—இரக்கமும் உண்டு. வெலிங்டன் மகளிர் கல்லூரியில் நடைபெறும் இந்த நிதியளிப்பு விழாவில், வீரத்தை வெளிப்படுத்துவதற்காகப் பாதுகாப்பு நிதியாக 6,000 ரூபாயும், இரக்கத்தை வெளிப்படுத்தப் பிச்சைக்காரர் நிதியாக 12,000 ரூபாயும் அளித்திருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். பாதுகாப்பு நிதிக்குக் குறைவாகக் கொடுத்ததால் வீரம் குறைவு, இரக்கம் அதிகம் என்று நான் சொல்ல மாட்டேன். இப்போது எதிரிகளால் ஏற்படுகிற ஆபத்தின் அளவு குறைவு என்பதால் இதற்குக் குறைவாகவும், அதற்கு அதிகமாகவும் தந்திருக்கிறீர்கள் எனக் கருதுகிறேன்.

**புதிய சகாப்தத்தை உருவாக்குவோம்!**

எல்லாரும் இந்நாட்டுமன்னர் என்று பாடிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. எல்லாரும் இந் நாட்டு மன்னராக, ஒரேயொரு நாள்தான்—தேர்தல் நாளில் கையில் வாக்குச் சீட்டு இருக்கிறவரை—அந்த ஒரு நாள் தான் எல்லாரும் இந்நாட்டு மன்னராக இருக்கிறார்கள்.

வாக்களிக்கும் அந்த ஒரு நாள் மாத்திரம் எல்லாரும் இந்நாட்டு மன்னராக இல்லாமல் எல்லா நாளும்—எல்லா மக்களும் இந்நாட்டு மன்னர் என்கிற அளவிற்கு ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்க வேண்டிய பொறுப்பு—கடமை நமக்கிருக்கிறது.

# சட்டப் பேரவையில் தமிழரசு

திரு எம். தேவராசன் : தலைவர் அவர்களே, 'தமிழரசு' வார ஏட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அமெரிக்கச் சுற்றுப் பயணத்தைப் பற்றி ஒரு தொடர் கட்டுரை வெளியிடப்படுமா என்பதை அறிய அவாக் கொண்டுள்ளேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் அளிக்கின்ற ஓய்வைப் பொறுத்தது.

திரு விளநகர் சி. கணேசன்: 'தமிழரசு' இதழ் துவக்கப்பட்டதிலிருந்து இப்பொழுது விற்பனை அதிகரித்திருக்கிறதா? வேறு மாநில அரசுகள் நடத்தும் பத்திரிகைகளைவிடச் சிறப்பான பத்திரிகை இந்த மாநிலத்தில் வெளியிடப்படுகிறதல்லவா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வேறு மாநிலங்களைப் பற்றிய விவரங்கள் இல்லை. ஆனால், விற்பனையாளர்களைக் கொண்டிருக்கிற இதழ் ஒன்றை ஓர் அரசு மிகுந்த திறமையோடும் வெற்றிகரமாகவும் நடத்துகிறதென்றால் அதுவும் தமிழக அரசே என்று சொன்னால் மிகை ஆகாது. இன்றைக்குத் 'தமிழரசு' இதழ் 52,000 பிரதிகள் விற்பனை ஆகின்றன.

திரு நா. வீராசாமி : வாரத்திற்கொரு முறை கொண்டுவருகிற செயற்குறிப்பு இல்லை என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். வேலை வாய்ப்புகள், ஒப்பந்தப் புள்ளிகள் போன்ற அரசாங்க விளம்பரங்கள் 'தமிழரசி'ல் வெளிவருகின்றன. இவற்றினால் வியாபாரிகளும், வேலை வாய்ப்பை எதிர்நோக்கிக் கொண்டிருப்பவர்களும் படித்துப் பயன் பெறுகிறார்கள். 'தமிழரசு' மக்கள் பலருக்கும் பயனளிக்கக் கூடிய வகையில் வெளிவருவதால் இதை வாரத்திற்கொரு முறை கொண்டுவர உடனடியாக அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதை வார ஏடாகக் கொண்டுவர வேண்டும் என்கிற ஆர்வம் இப்பொழுது அரசுக்கு இருக்கிறது. அச்சகம் முதலிய வசதிகளை நல்ல முறையில் பெருக்கிக்கொண்டு, அந்த இதழை அழகான முறையில் அச்சிடுவதற்கேற்ற வகையில் அந்த வாய்ப்புகள் பெருகியதும் வார இதழாகக் கொண்டு வருவதற்கு ஏற்பாடுகள் நடைபெறும்.

திரு ரா. ரா. முனுசாமி : 'தமிழரசு' இதழை ஊராட்சிகள், ஊராட்சி மன்றங்கள் பெற்று, அங்குள்ள மக்கள் அவற்றைப் படிக்க வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். விவசாயிகள், மற்றும் எல்லாத் தரப்பிலுள்ளவர்களும் அவற்றை வாங்கிப் படிக்கவும் வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். அதனால், நம்முடைய முதல்வர் அவர்கள் தம்முடைய அமெரிக்கச் சுற்றுப் பயணத்தைப் பற்றி அதிலே கட்டுரையாக எழுதி வெளியிட்டால் எல்லா விவசாயிகளும் படித்து அமெரிக்காவிலுள்ள நிலைமைகளைப் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக இருக்கும். தமிழக முதல்வர் அவர்கள் அதில் கட்டுரை எழுதுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அமெரிக்கச் சுற்றுப் பயணத்தைப் பற்றிக் கட்டுரை எழுதுவதாக இருந்தால், அதைத் 'தமிழரசு' பத்திரிகையில்தான் எழுதுவேன்.

திரு வி. கே. இராஜாப்பிள்ளை : தலைவர் அவர்களே, ஒரு சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் அந்தத் தொடரில் நடந்த சட்டமன்ற நிகழ்ச்சிகள் முழுவதையும் அடுத்து வருகிற 'தமிழரசு' ஏட்டில் ஒன்றாக வெளியிட்டால் அது பொது மக்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மிகவும் பயன்படுவதாக இருக்குமாதலால் அரசு அதற்கு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கூடுமானவரையில் சட்டமன்ற நிகழ்ச்சிகள் நாள் ஏடுகளில் வந்துவிடுகின்றன. இருந்தாலும் முக்கியமான நிகழ்ச்சிகளை மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல் 'தமிழரசு' இதழில் வெளியிடுவதற்கு முயற்சி செய்யலாம்.

Dr. H. V. Hande.—Sir, can the Hon. Chief Minister give us an assurance that he will be able to direct the Publicity Department concerned to see that this publication does not, as far as possible, give any indication that it is moving on a party line or a political party line or a ruling party line but purely on a non-party line or impartial Government publication, so that whatever publications or whatever statements on matters like Cauvery issue, whatever it is, are made in it, it will be purely a Government publication as a sort of connection between the Government and the Press and Press also, if they want, they can take out from that and publish certain portions? Will the Government not only see to it that it is a non-party publication but it also gives an impression to the public that it is not published on party lines or that it is not a party publication?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: அப்படிப்பட்ட 'இம்ப்ரஷன்' எதுவும் பொது மக்களிடத்தில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பத்திரிகையினுடைய குறை அல்ல. சில பேருக்கு அப்படிப்பட்ட எண்ணம் ஏற்படுகிறது. அமைச்சர்களைப் பற்றிய செய்திகளைப் போட்டாலே, அமைச்சர்கள் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கும் காரணத்தால், அது கட்சிச் செய்தி என்று இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொள்ளக்கூடாது. 'தமிழரசு' பத்திரிகையில் வெளிவரும் செய்திகள் அனைத்தும் பொதுவான விஷயங்கள்தான். காந்திஜி பிறந்த நாள் விழாவின்போது காந்திஜியினுடைய வாழ்க்கை வரலாற்றைக் குறிப்பிட்டு அவர்களுடைய படம் முகப்புப் படமாக வெளிவரும். பண்டித நேரு அவர்களுடைய பிறந்த நாள் விழாவின்போது அவருடைய வாழ்க்கை வரலாறும் அவருடைய படமும் வெளிவரும். இது போன்று எல்லாக் கட்சிகளைப் பொறுத்தும் அனைவரையும் சமமாக நடத்தும் அளவுக்குத் தான் 'தமிழரசு' பத்திரிகைச் செய்திகள் வெளிவருகின்றன. அமைச்சர்களைப் பற்றி வெளியிடும் செய்திகளை வைத்துக் கொண்டு, அமைச்சர்கள் ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதற்காக அதைக் கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்ப்பது நல்லதல்ல.

திரு கா. காளிமுத்து: 'தமிழரசு' ஏட்டில் ஆண்டு தோறும் நாவல் போட்டி போன்றவைகளை ஏற்படுத்தி, இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: படிப்படியாக ஏற்பட வேண்டிய முன்னேற்றங்களில் அதுவும் ஒன்று.

[தமிழ்நாடு சட்டப்பேரவையில் கடந்த 10—12—1971 அன்று திரு கா. வேழவேந்தன் அவர்கள் கேட்ட கேள்வியை ஒட்டி உறுப்பினர்கள் கேட்ட துணைக் கேள்விகளுக்கு முதல்வர் கலைஞர் அளித்த பதில்கள் மேலே தரப்பட்டுள்ளன.]






# புறநானூற்றுச் சொல்லுக்குப் பொருளாக வந்த மகன்!

களத்திலே பெரும்போர்; வீரனொருவன் சுழன்று சுழன்று போரிடுகிறான். மதங்கொண்ட யானை யொன்று அவனைநோக்கி விரைந்தோடி வருகிறது; தன்னிடமுள்ள ஒரே வேலினை அவ்வேழத்தினை நோக்கிக் குறிவைத்து வீசியெறிகிறான்; வேல்பட்ட வேழம், அலறி வீழ்கிறது.

கையிலிருந்த ஒரே வேலினால் வேழத்தை விரட்டிய வீரன், அடுத்துவரும் பகைமுடிக்க வேல் வேண்டுமே என எண்ணுகிறான்; எங்கிருந்தோ ஒரு வேல் விரைந்துவந்து அவன் உடம்பிலே பாய்ந்தது. கை வேல் எறிந்து, அடுத்துவரும் பகைமுடிக்க வேல் தேடி நின்ற வீரன், குருடன் விழி பெற்றாற் போல, பசிநோயாளன் பாற்சோறு பெற்றாற்போல மகிழ்ச்சியில் திளைத்து மெய்பாய்ந்த வேலினைக் கையிற் பறித்துக் கண்களை அகல விரித்துச் சுற்றிலும் பகை தேடி நிற்கிறான். வேல் பாய்ந்த புண்ணிலிருந்து வழிந்துவரும் வெங்குருதியையும் அவன் பொருட்படுத்தவில்லை. வீர நகை புரிகிறான்.

ஆம்! இத்தகைய தொரு வீரத் தமிழ்மகனை நமக்குக் காட்டுகிறது,

''கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.''

—என்னும் குறட்பா.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்டு முன்னர்க் குறள் காட்டிய அத்தகையதொரு வீரத் தமிழ்மகனை—வெற்றித் திருமகனை நம் கண்முன்னே மீண்டும் கொணர்ந்து நிறுத்துவது போல, அண்மையில் நம் இந்திய எல்லையில் நடந்த போரிலே, வீரம் விளைத்திருக்கிறார் ஆறுமுகம் என்னும் தமிழ் வீரன். ஆம்! ஆறுமுகம் ஒரு வீரத் திரு.

வீரத்திரு ஆறுமுகம் வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருப்புத்தூரையடுத்த தாதவள்ளியில் பிறந்தவர்., இராணுவத்தில் சேர்ந்து கன்னர் ( Gunner ) ஆகப் பணிபுரிந்தார். அவருக்கு ஓராண்டுக்கு முன்புதான் திருமணம் நடைபெற்றது.

அண்மையில் நடைபெற்ற எல்லைப் போரில், வீரத்திரு ஆறுமுகம், ஸ்ரீநகர் விமான நிலையத்தில் காவல்புரிந்து கொண்டிருந்தார். பாகிஸ்தான் விமானங்கள், அங்கே வட்டமிட்டுத் தாக்குதல் நடத்தின. இத்தாக்குதலின்போது வீரத்திரு ஆறுமுகத்தின் தலையில் குண்டு பாய்ந்தது. குண்டடிபட்ட ஆறுமுகத்தின் தலையிலிருந்து குருதி கொட்டியது. அவர் சாவோடு போராடிக். கொண்டிருந்த அந்த நிலையிலும் தான் நின்ற இடத்தைவிட்டு அணுவளவும் நகரவில்லை. அது மட்டுமன்று, கையில் வைத்திருந்த தன் துப்பாக்கியால், வானத்தே பறந்த பாகிஸ்தான் விமானம் ஒன்றை நோக்கிச் சுட்டார். குறி தப்பவில்லை! விமானம், எரிந்து கருகி வீழ்ந்து கொண்டிருந்ததைத் தான் பார்த்து மகிழ்ந்த வண்ணமே அவர் வீர மரண மடைந்தார். ஆம்! வீரத் திரு வீழ்ந்தது!

வீரத்திரு ஆறுமுகத்திற்கு 'வீரச் சக்கர' விருது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இது பற்றி இந்திய இராணுவ அதிகாரி பால் என்பவர், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எழுதிய கடிதம் ஒன்றில்,

''பாகிஸ்தான் விமானத்தை வீழ்த்த, தான் குண்டடிபட்ட நிலையிலும் இந்திய இராணுவ வீரர் ஆறுமுகம் வீரப்போர் புரிந்தார்; தன் உடலில். உயிர் ஊசலாடிக்கொண்டிருந்த கடைசி வினாடிவரை அவர் போர்புரிந்து வீரச் சாதனை புரிந்தார்; அவருடைய மன வலிமையையும் தைரியத்தையும் மனமாரப் பாராட்டுகிறேன்.

வீரர் ஆறுமுகத்திற்கு அண்மையில் திருமணம் நடந்தது; அவர் தன் இளம் மனைவியை—அந்த வீரரின் குடும்பத்தைப் பராமரிப்பது நமது பொறுப்பு'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதைத் தொடர்ந்து, இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், வீரத்திரு ஆறுமுகத்தின் அன்பு மனைவிக்கு —ஆம் இளம் வயதிலேயே, திருமணமான ஓராண்டிலேயே **கைம்மைத் துயரை அணைத்துக்**

கொண்டுள்ள திருமதி முனியம்மாளுக்கு எழுதிய கடிதத்தில்,

''ஆறுமுகம் போரில் இறந்துவிட்டார்; அவர் நாட்டிற்குச் செய்துள்ள தியாகம் என்றும் மறக்க முடியாதது; நாட்டு மக்கள் என்றைக்கும் அதனை, நினைவில் வைத்திருப்பார்கள்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

வீரச்சக்கர விருது பெற்ற வீரத்திரு ஆறுமுகத்தின் குடும்பத்திற்குத் தமிழக அரசு, 3 ஏக்கர் நிலமும், 5,000 ரூபாய் ரொக்கமும் கொடுக்கிறது என்னும் செய்தியை வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவரின் உதவியாளர் அறிவித்திருக்கிறார்.

தற்போது ஆறுமுகத்தின் மனைவியார் திருமதி முனியம்மாள் திருப்புத்தூர் அரசாங்க மருத்துவ மனையில், குழந்தைப் பேற்றுக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார். அவர், அண்மையில் செய்தியாளருக்கு அளித்த ஒரு பேட்டியில்,

''நாட்டைக் காக்கும் வீர முயற்சியில் என் கணவர் வீர மரணம் அடைந்துள்ளார் என்னும் செய்தியைக் கேள்விப் பட்டதும் நான் பெருமை யடைந்தேன்.

''இப்போது எனக்குப் பிறக்கப் போவது பெண் குழந்தையாக இருந்தால் அதற்கு இந்திரா காந்தி என்று பெயரிடுவேன்; ஆண் குழந்தையாக இருந்தால் 'வீரச்சக்கரம் ஆறுமுகம்', என்று பெயரிடுவேன். அவனை வீரனாக வளர்த்து, அவனையும் இராணுவத்திற்கு அனுப்புவேன்.

''எங்கள் பரம்பரையே இனி நாடு காக்கும் வேலையில் ஈடுபடும்.

''என் கணவர் அனுப்பிய பணத்தை வைத்து வீடுகட்டத் தொடங்கினேம்; தமிழக அரசு கொடுக்கும் ரொக்கப் பணத்தைக் கொண்டு அந்த வீட்டைக் கட்டி முடித்து, அதற்கு ''ஆறுமுகம் இல்லம்'' என்று பெயரிடுவேன். அரசு தரும் நிலத்தில் விவசாயம் செய்து வாழ்க்கை நடத்துவேன்'' என்று கூறியிருக்கிறார். அந்த வீரத்திரு—ஆம்—வீரச்சக்கர ஆறுமுகம் மனைவி, புறநானூற்றுக் காலத்து வீர மகளிரை—வீரத்தாயை—மூதின் மகளிரையே நமக்கு நினைவூட்டுகிறார்.

''முன்னர் நடைபெற்ற போரிலே இவளுடைய தந்தை யானையை வென்று களத்தில் மாண்டான்; நேற்றைய போரிலே இவள் கணவன் திரளான பசுக் கூட்டத்தைக் காத்தும் அப்போரில் இறந்தனன். இன்றும் 'போர் முரசு' கேட்கிறது. களத்திலே தன் குடிப் பிறந்தவரும் போரிட வேண்டுமெனக் கருதுகிறாள்; அவளோ, ஒரே மகனன்றி வேறு குழந்தைகள் இல்லாதவள்; என் செய்வாள்?



இருதயத்துடிப்பை அறிவிக்கும் ரேடியோ

ஆபத்தான நிலையில் இருக்கும் நோயாளியை ஆம்புலன்ஸ் வண்டியில் தூக்கிப்போட்டுக் கொண்டு மருத்துவ மனைக்கு விரைகிறோம். போகும்போது அவரது இருதயத்துடிப்பு எப்படி இருக்கிறது என்பதை, தொடர்ந்து மருத்துவமனைக்குத் தெரிவிக்கும் ஒரு ரேடியோ சாதனம் பிரிட்டனில் அறிமுகமாகியிருக்கிறது.

இருதயத்துடிப்பை ஒலி அலைகளாக மாற்றி அதனை ரேடியோ ஒலிபரப்புப் போல் மருத்துவ மனைக்கு அனுப்புவதற்கு இந்தப் புதிய சாதனம் பயன்படுகிறது. மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ள ஒரு பிரத்தியேக ரிசீவிங் செட், அந்த ஒலி அலைகளை மீண்டும் இருதயத் துடிப்பு சிக்னல்களாக மாற்றி, 'கார்டியோகிராப்' கருவியை இயக்குகிறது. இதுதான் புதிய சாதனங்கள் இயங்கும் விதம்.

கேம்பிரிட்ஜ் விஞ்ஞானக் கருவிகள் நிறுவனம் ஒன்று இந்தப் புதிய சாதனத்தைக் கண்டுபிடித்துள்ளது.

அந்த வீரத்தாயின் ஒரே மகனும் மிகச் சின்னஞ் சிறியவன்; அவன், அழுக்குக் கந்தையோடு, தலையிலே எண்ணெய் கூடத் தடவாமல் தெருவிலே விளையாடிக் கொண்டிருக்கிறான். அவனை அழைத்துவந்தாள்; அவன் தலையிலே எண்ணெய் தடவி நீவி விட்டாள். கந்தல் களைந்து, வெள்ளாடையணிவித்தாள். கையிலே வேல் கொடுத்துக் களம் நோக்கிச் செல்மகனே! சென்றுவா! பகையை வென்றுவா? என்று கூறி அனுப்புகிறாள்! ஆம்.

''கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதின் மகளிர் ஆதல் தகுமே
மேல்நாள் உற்ற செருவிற்கு
இவள் தன்னை
யானை எறிந்து களத்து ஒழிந்தனனே
நெருநல் உற்ற செருவிற்கு இவள்
கொழுநன்
பெருநிரை விலங்கி ஆண்டுப்பட்
டனனே
இன்றும்,
செருப்பறை கேட்டு விருப்புற்று
மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது
விரித்து உடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுக நோக்கிச் செல்கென
விடுமே!''

என்பது பழந்தமிழ் நாட்டு 'மூதின்மகள்' ஒருத்தியை நமக்குப் படம் பிடித்துக் காட்டும் ஒக்கூர் மாசாத்தியார் பாடல். புறநானூறு கூறும் 'மூதின் மகளிர்', இருக்கின்ற ஒரு மகனை—சின்னஞ்சிறு சிறுவனைப் போர்க்களம் நோக்கியனுப்பினள். வீரத்திரு ஆறுமுகத்தின் மனைவி முனியம்மாளோ தன் கணவனைப் போர்க்களத்தில் இழந்துவிட்ட நிலையிலும், தனக்குப் பிறக்கப் போவது ஆண் குழந்தையாக இருந்தால், அவனை வீரனாக்கிப் போர்க்களத்திற்கு அனுப்புவேன் என்று சூளுரைக்கின்றார்! புறநானூற்று வீரம் புது மலர்ச்சி பெறுகிறது. ஆம்? இருபதாம் நூற்றாண்டின் மூதின் மகளிரான திருமதி முனியம்மாளும் இந்த நாட்டின் வீர வரலாற்றில் இடம் பெறுகிறார்.

வாழ்க வீரத்திரு ஆறுமுகம்!

வளர்க அவர்தம் வீரப் பரம்பரை.

என் இனிய

# வங்க தேசமே!

தங்க மானஎன் இன்ப வங்கமே!
மனத்தைக் கவருமுன் வானமும் காற்றும்
என்னுளத் திழையும் இன்ப கீதம்!
தாயே! எனக்குநீ தந்தனை வசந்தம்.
மணத்தைப் பரப்புமுன் தேமாஞ் சோலைகள்
மனத்தை மயக்கும் மென்மலர்க் காற்று!
கதிர்கள் குலுங்கும் கழனியின் சிரிப்பு!
எத்தனை அற்புதம்! எத்தனைஒளி! எத்தனைநிழல்!
எத்தனை எத்தனை காந்தக் கவர்ச்சிகள்!
ஆல மரத்தின் அடிமணற் பரப்பில்
கோலம் சொரியும் ஆற்றங் கரையில்
பச்சை மரகதப் பட்டின் பரப்பு!
அன்னாய்! அன்னாய்! அரியஎன் செவிகளில்
தேனாய்ப் பாயும் உனது தீங்குரல்!
ஆடு மாடுகள் மேய்க்கும் சேய்கள்
மண்ணை உழுது வளஞ்செய் மக்கள்
அன்னவர் என்றன் உடன்பிறப் பாளரே
தாயே! உனது தாளிணை வணங்குவன்!
அன்னாய் உனது அடிமலர்த் துகளினை
தூயநன் மணியாய் என்தலையில் சூடுவேன்
உலகில் உள்ளஎன் உடைமைகள் அனைத்தையும்
உவப்புடன் வைப்பேன் உன்திரு வடியில்!
அன்னையே! அன்னையே! வாழ்கநீ யூழி!

(கவியரசர் இரவீந்திரநாத் தாகூர் வங்க மொழியில்
இயற்றிய கவிதையின் நேரடித் தமிழ் வடிவம்)



வங்காள தேச
நிலப்படம்
மைல்கள்
மேற்கு வங்காளம்
(இந்தியா)
அ ஸ் ஸா ம்
மேகாலயா
(இந்தியா)
திரிபுரா
(இந்தியா)
அகர்தாலா
கோமில்லா
மேற்கு
வங்காளம்
(இந்தியா)
கல்கத்தா
சிட்டகாங்
பர்மா
வ ங் கா ள  வி ரி  கு டா

வங்கத்து மண் ஒரு தங்கச் சுரங்கம்! வற்றாத நதிகளால் வளம் பெருகும் பூமி. வறண்டு விட்ட மேற்குப் பாகிஸ்தானை வாழ வைத்த தேசம். ஏற்று மதிச் சரக்குகளை இயற்கையி லேயே பெற்ற நாடு அது. என வே, வெளிநாட்டு நாணயங்கள் விரைந்து வந்து குவியுமங்கே. இத்தகைய செல்வத்தை யார் தான் இழந்திடுவர்? யாகியா தான் இழப்பாரா? பூட்டோ தான் பொறுப்பாரா?

வங்கத்து மக்கள் கொதித் தெழுந்து விடுதலைப் போரிட, மேற்குப் பாகிஸ்தானின் இருப தாண்டுக் கால மொழி ஆதிக்க மும், அரசியல் சர்வாதிகாரமும் மட்டும் காரணமல்ல. பொருளா தாரச் சுரண்டல் ஆதிக்கமும் பெரும் காரணமாகும். மேற்கு வளர்ந்தது. கிழக்கு தேய்ந்தது. அதுவும் வளம் பெற்றுத் திகழும் வங்கத்தின் செல்வமெல்லாம் மேற்கு நோக்கிக் கடத்தப்பட் டது. வங்க தேசம் சுரண்டப் பட்டது; வஞ்சிக்கப்பட்டது; வளமிருந்தும் வறுமை நாடாக்க கப்பட்டது.

வெளிநாட்டுச் செலாவணியை அதிகமாகத் தேடித் தந்தது வங் கத்தின் சணல் ஏற்றுமதிதான். சணலை ஏற்றுமதி செய்வது வங் கம். அதற்குரிய வெளிநாட்டு நாணயத்தை இறக்குமதி செய்து கொள்வது மேற்குப் பாகிஸ்தான். வளம் பெருக்க வேண்டியது வங் கத்தின் கடமை. வருவாயைப் பிடுங்கிக் கொள்வது மேற்குப் பாகிஸ்தானின் திருப்பணி. ஆலைகள் எல்லாம் மேற்குப் பாகிஸ்தானில்; அதற்குரிய கூலி கள் எல்லாம் கிழக்கு வங்கத்து மக்கள்தாம். குறைந்த கூலி கொடுத்து வங்கத்து மக்களை ஏமாற்றிவிட்டு, நிறைந்து குவி யும் இலாபத்தை மேற்குப் பாகிஸ் தான் அள்ளிக் கொண்டிருந்தது. மூலப் பொருட்களை வழங்குவது வங்கம். முதலாளிகள் ஆனவர் மேற்குப் பாகிஸ்தானியரே.

''இந்தச் சுரண்டலை இனியும் சகியோம்'' என எழுச்சி முரசினை முழக்கினர் வங்கத்துச் சிங்கங்கள். கிழக்கு வங்கம் இல்லையென்றால் மேற்குப் பாகிஸ் தான் என்ன ஆகும் என்பதை அதன் பொருளாதார நிலைமை நன்றாகத் தெரிந்து கொண்டால் தான் புரியும்.

'வங்கம் தனி நாடாவதைச் சகிக்க மாட்டேன்; ஒருமைப் பாட்டைக் காத்திடுவேன், என்று இராணுவத்தை அவிழ்த்துவிட்ட யாகியாகான், ஒருமைப்பாட் டைக் காப்பதற்காக எதையும் செய்யவில்லை. உண்மையான ஒருமைப்பாடு உள்ளத்து அன்பில் மக்கள் ஒரே நாடாக வாழ விரும் பினால்தான் ஏற்படமுடியும். ஆனால் யாகியாகான் தனது அதிகாரம் ஒரு பரந்த பூபாகத் தின் மேல் பரவிட வேண்டும் என்றும், அந்தப் பூமி, தனது சர் வாதிகாரம் நீடிக்கப்போதிய பொருளைத் தரவேண்டும் என் றும் தான் விரும்பினார். அவர் வங்கத்து மக்களை நேசிக்கவில்லை; மண்ணையே காதலித்தார். அத னால்தான் மக்களைக் கொன்று குவித்துவிட்டு மண்ணைமட்டுமே சொந்தமாக்க முனைந்தார். ஏனென்றால் வங்கத்து மண் பொன்விளையும் பூமியாகும்.



# விடுதலை பெற்ற வங்க தேசம்

1947-ஆம் ஆண்டு பாகிஸ்தான் பிரிந்தபோது அந்த நாட்டைப் பொருளாதார வளம் நோக்கித் திட்டமிட்டு முன்னேற்றத் தக்க தெளிவும் திறமையுமுள்ள பொரு ளியல் மேதைகள் அங்கே இருந்த தில்லை. மேலும், இயற்கைத் தாதுப்பொருட்கள், உலோகங் கள், ஆலைகள், நல்ல துறைமுகங் கள், தொழில் நுணுக்கம் தெரிந்த மேதைகள் எல்லாம் இந் தியப் பகுதிக்கே கிடைக்க நேர்ந் தது. அத்துடன் திறமையான நிருவாகிகளும் இந்தியப் பகுதி யில் அதிகம் இருந்தனர். எனவே ஆட்சித் திறன் மிக்க நிருவாகி களும் பாகிஸ்தானில் குறைவாக வே இருந்தனர். எல்லாவற்றுக் கும் மேலான, தெளிவான இலட் சியங்கள் எதுவுமே இல்லாமல் இருந்ததால், பொருளாதார முன்னேற்றம் முடங்கிக் கிடந்தது.

தெளிவான கொள்கை இல்லா மற் போனதற்குக் காரணம் தலை வர்கள்தாம். பாகிஸ்தான் பிரிந்து சென்றபோது முஸ்லீம் லீக் கட்சியின் மொத்த உறுப் பினர்களின் எண்ணிக்கை 503. அதில் 163 பேர் நிலக் கிழார்களாகவும் பணக்காரர் களாகவும் இருந்தனர். அந்தக் கிழார்களில் பெரும்பாலோர் பஞ் சாப், சிந்து மாநிலத்தவர்களா வர். வங்கத்தைச் சேர்ந்தவர் கள் மிகவும் குறைவு. பாகிஸ் தானின் இராணுவம், ஆட்சி ஆகிய அதிகார மட்டங்களில் பஞ்சாப்பைச் சேர்ந்த முதலாளி களே செல்வாக்கும் பெற்றிருந் தனர். இந்தப் பஞ்சாப் கிழார் கள் பொருளாதாரத்தின் வளர்ச் சிக்காக ஏங்கி நின்ற கிழக்கு வங் காள மக்களைப் புறக்கணிக்கத் தொடங்கினர். ஆட்சிக்கு வந்தோர் எல்லாம் மேட்டுக் குடி யினராக இருந்தனர். அவர்கள் முதலாளிகள், பணக்காரர்கள் ஆகியோரையே ஆதரிக்கத் தொ டங்கினர். பொதுமக்கள் தமது, உரிமைகள் மதிக்கப்படாமல் இருப்பதை உணரவில்லை; உணர்த்துவாரும் இல்லை. ஆக வே, பொருளாதாரத் துறையில் தீவிரத் திட்டங்கள் எதுவுமே தீட்டப்படவில்லை.

தீட்டப்பட்ட திட்டங்களும் மேற்குப் பாகிஸ்தானுக்குச்சாதக மாகவே தீட்டப்பட்டன. முதல் பத்தாண்டுகளாகத் தொழில் வளர்ச்சி என்பது சில பணக் காரர்களின் வளர்ச்சியே என்றாகி விட்டது. 1955-ல் தான் முதல் ஐந்தாண்டுத் திட்டம் தீட்டப் பட்டது; அது அரசினரால் 1957-ல் ஏற்றுக்கொள்ளப்பட் டது. ஆகவே, 1957 வரை திட் டம் எதுவும் இல்லாமல், விவ சாயம் போன்ற அடிப்படைப் பொருளாதாரத்துறை புறக்க கணிக்கப்பட்டுக் கிடந்தது. பொருளாதாரம் தேய்ந்து கிடந் தது.

## புறக்கணிக்கப்பட்ட கிழக்கு வங்கம்

கிழக்கு வங்கத்தில் மக்கள் தொகை அதிகம். சதுர மைல் ஒன்றுக்கு 510 பேர். மேற்குப் பாகிஸ்தானில் சதுரமைலுக்கு 230 பேர் தான். என்றாலும் மக்கட் தொகை பெருகிக் கிடக்கும் கிழக்கு வங்கத்தைப் புறக்கணித்துவிட்டு, மேற்குப் பாகிஸ்தானில்தான் தொழில்கள் பெருகுவதற்கு வழி செய்யப்பட்டது. முதலீடுகள் தொழில் தொடக்கம் எல்லாம் மேற்கு வங்கத்தில்தான். வெளிநாட்டுக்கு ஏற்றுமதிச் சரக்குகளை அதிகம் அனுப்பி வருவாய் சேர்ப்பது கிழக்கு வங்கம்தான். ஆனால், சராசரி வருமானம் ஓர் ஆளுக்கு 30 சதவீதமேயாகும். மேற்குப் பாகிஸ்தானில் சராசரி வருமானம் அதிகமாக இருந்தது.

பாகிஸ்தான் பிரிந்தபோது, கிழக்கு வங்கத்தில் தொழில்கள் குறைவாகத்தான் இருந்தன. ஆனாலும், அதற்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள் எல்லாவற்றிலும் மேற்குப் பாகிஸ்தானியரே முதலாளிகளாயினர். அதாவது, தொழில் தொடங்கும் வாய்ப்பும், வசதியும் மேற்குப் பாகிஸ்தானியருக்கே வழங்கப்பட்டது. பாகிஸ்தானின் மொத்த மக்கட்தொகையில் கிழக்குப் பாகிஸ்தானில் தான் மக்கள் பெரும்பான்மையாக இருந்தனர். என்றாலும் பெரும்பான்மை மக்கள் வாழும் கிழக்கு வங்கத்தைப் புறக்கணிப்பதால் ஏற்படவிருக்கும் பின் விளைவுகளை எண்ணிப் பார்க்கத் தவறிவிட்டனர், மேற்குப் பாகிஸ்தானின் ஆட்சியாளர்கள். கிழக்கு வங்கத்தைப் புறக்கணித்ததால் பாகிஸ்தான் முழுவதுமே பாதிக்கப்பட்டது. கிழக்கு வங்கத்தின் விவசாயத்தைப் புறக்கணித்ததால் உணவு உற்பத்தி குறைந்தது. அதன் விளைவாக 1952 வரை உபரியாக உணவுப் பெருக்கம் செய்துகொண்டிருந்த பாகிஸ்தான், உணவுக்கு வெளிநாட்டில் கையேந்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

பொருளாதாரத்தில் ஏற்பட்ட வஞ்சகப்போக்கு, பாகிஸ்தானின் இரண்டு பகுதிகளுக்குமிடையே ஏற்றத்தாழ்வை வளர்த்தது. இதனை 1955-ஆம் ஆண்டிலேயே பாகிஸ்தானின் திட்டக் குழுவின் தலைமைப் பொருளியல் மேதையான டாக்டர் எம். ஐ. குவேரிஷ் என்பார் தெளிவாகச் சுட்டிக் காட்டி எச்சரித்தார். '1947-ஆம் ஆண்டில் இருந்ததைவிட, 1954-55-ல் சராசரி வருமானம் குறைவாகவே இருக்கும், என்று தெரிகிறது. மக்களின் வருமானத்தில் ஏற்றத்தாழ்வு அதிகரித்துவிட்டது. நாட்டின் தேசிய வருமானமோ குறைவாக இருக்கிறது. மக்கள் தொகையோ பெரிதாக இருக்கிறது. கிடைக்கின்ற வருவாயும் சமமாக முறையாகப் பங்கிட்டு மக்களுக்கு வழங்கப்படவில்லை. இதனால் ஏற்கனவே தாழ்ந்துகிடந்த மக்களின் வாழ்க்கைத் தரம் மேலும் தாழ்ந்துவிட்டது,'' என்று அவர் கூறினார். பாகிஸ்தானின் பொருளாதார நிலையைப் படம் பிடித்துக் காட்ட வேறு யார் வர வேண்டும்?

### வங்கத்தின் சொத்து கடைத் தேங்காயானது

வங்கத்தின் செல்வம் எல்லாம் மேற்குப் பாகிஸ்தானுக்கே பயன்பட்டது. தொடர்ந்து ஆண்டு வந்த பாகிஸ்தானின் சர்வாதிகாரிகள் கிழக்கு வங்கத்து மக்களை வஞ்சித்து அவர்களின் செல்வத்தை மேற்குப் பாகிஸ்தான் முதலாளிகளுக்கே காணிக்கையாக்கிக் கொண்டிருந்தனர். இதை வேறு வகையாகவும் சொல்லலாம். அதாவது காளியிடம் திருடி மூளியிடம் கொடுத்தது போல என்பார்களே அப்படிச் சொல்லலாம். முதல் பதினான்கு ஆண்டில் கிழக்கு வங்கத்தின் வெளிநாட்டு வாணிபத்தால் கிடைத்த இலாபம் ரூ. 474கோடி. அந்தத்தொகை முழுவதும் மேற்குப் பாகிஸ்தானின் பற்றாக்குறையைச் சரிக்கட்டவே பயன்படுத்தப்பட்டது. அது மட்டுமல்லாது உள்நாட்டு வாணிபத்தில் கிழக்கு வங்கத்தை வஞ்சித்து மேற்குப் பாகிஸ்தான் ஈட்டிய தொகை மேலும் ரூ. 253 கோடியாகும். இவ்வாறு மேற்குப் பாகிஸ்தான் வளர்ந்தது; வங்கத்தின் வளம் தளர்ந்தது. கிழக்கு வங்கத்தின் வெளிநாட்டு வருமானத்திற்கு ஈடாக எதுவுமே கொடுக்காமல் மேற்குப் பாகிஸ்தான் முழுவதும் ஏப்பமிட்டது.

மேற்குப் பாகிஸ்தானில் வளர்கின்ற தொழில்களின் மூலம் பயனடைவோர் மேற்குப் பாகிஸ்தானியர் மட்டுந்தான். அத்தொழில்களின் மூலம் கிடைக்கும் வருவாய், கிழக்கு வங்கத்துக்கு வழங்கப்படுவதில்லை. மேற்குப் பகுதியின் வளம் கிழக்குப் பகுதிக்குக் கிடைக்காமல் தடைப்பட்டுப் போனதால், இரண்டு பகுதிகளும் சீரான பொருளாதார அமைப்பைப் பெறாமல், முரண்பட்டு நின்றன; மோதிக் கொள்ள நேர்ந்தது. இந்த உண்மையை உணராமல், உணர்ந்தும் மறைத்துவிட நினைத்து முறிவுக்கே வழிவகுத்து விட்டனர் பாகிஸ்தான் ஆட்சியாளர்கள்.

நிதி நிலையைக் கணக்கிட்டுக், கிழக்கு வங்கத்துக்குப் பங்கிட்டுக் கொடுக்கும் தொகையைவிட அதிகமாகவே அங்கிருந்து பறிக்கப்பட்டது. இவ்வகையில், கிழக்கு வங்கம் ஆண்டுதோறும் 21 கோடி ரூபாய் இழந்துவந்தது. நிதிநிலை அறிக்கையிலும் 2/3 பகுதி மேற்குப் பாகிஸ்தானுக்கே ஒதுக்கப்பட்டது.

கிழக்கு வங்கத்தில் தொழிலில் முதலீடு செய்வது மேற்குப் பாகிஸ்தான் முதலாளிகளேயாகும். அரசாங்கம் மேற்குப் பாகிஸ்தான் முதலாளிகளுக்கு ஊக்கம் கொடுத்துக் கிழக்கு வங்கத்தில் கிடைத்த இலாபத்தை மேற்குப் பாகிஸ்தானுக்குக் கிடைக்கும்படிச் செய்தது. மேற்குப் பாகிஸ்தான் முதலாளிகளை ஊக்கப்படுத்திவிட்டுக், கிழக்குப் பாகிஸ்தானில் உள்ள பணம் படைத்தவர்களை அடக்கி ஒடுக்கியது அரசாங்கம்.


**சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்.**

* 'தமிழரசுக்'குக் கடிதம் எழுதும் சந்தாதாரர்கள் தங்களின் சந்தா எண்களைத் தவறாது குறிப்பிடவேண்டும்.
* சந்தாவைப் புதுப்பிக்கும் போது சந்தா எண்ணுடன் 'புதுப்பித்தல்' என்பதையும் குறிப்பிடவேண்டும்.
* தங்களின் முகவரிகளைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்.
* சந்தா தமிழ் இதழுக்கு அல்லது ஆங்கில இதழுக்கு என்பதையும் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

## வெண்பாப் போட்டி 26

ஈற்றடி : ஓயா துழைத்துயர் வோம்

முடிவுத் தேதி : 17—1—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
'' தமிழரசு '' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

குறிப்பு: அஞ்சலட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

கிழக்கு வங்கம் விவசாய நாடாகும். அதைச் சாக்காக வைத்துக்கொண்டு கிழக்கு வங்கத்தில் தொழில்களை வளர்ப்பது பற்றியே அக்கறை காட்டாமல், மேற்குப் பாகிஸ்தானில் மட்டுமே தொழில் வளர்ச்சியை விரைவு படுத்தியுள்ளது அரசு. மேற்குப் பாகிஸ்தானில் உற்பத்தியாகும் பொருட்களுக்குக் கிழக்கு வங்கம் ஒரு சந்தையாக மட்டுமே பயன்பட்டு வந்தது. இவ்வாறு கிழக்கு வங்கத்தில் தொழிலதிபர்களும் தலைதூக்க முடியாமலே பொது மக்களும் மேற்குப் பாகிஸ்தானில் உற்பத்தியாகும் பொருட்களையே வாங்கவேண்டிய கட்டாயத்திலிருந்து மீளமுடியாமல் தவிக்கும் ஒரு சிக்கலான நிலையைப் பாகிஸ்தானின் மத்திய அரசு ஏற்படுத்தியது.

வங்கதேசத்தில் விடுதலை முழக்கம் ஏன், எப்படிப் பிறந்தது என்பதைத் தெரிந்துகொள்வதற்கு முன்னர் இத்தகைய அரச தந்திர சுரண்டல் வரலாற்றைத் தெளிவாகத் தெரிந்துகொள்வது இன்றியமையாததாகும். வங்க தேசம், மேற்குப் பாகிஸ்தானின் தொழில் வளர்ச்சிக்கு மூலப் பொருள் வழங்கும் பூமி. வருவாய் பெருக்க உதவும் சந்தை. வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் ஏராளமான இயற்கைச் செல்வங்களைக் கொண்ட பூமி.

வெளிநாட்டுச் செலாவணி வங்கத்தால் வருவதால் அது வங்கத்திற்கே என்று ஆகிவிட்டதால், மேற்குப்பாகிஸ்தானின் தொழில்களுக்கு முதலீட்டுத் தொகை இல்லாமல், நடக்கும் தொழில்களும், தவழும் தொழில்களும், ஓடும் தொழில்களும் நலிந்து தளர்ந்து முடங்கிப் போய்விடும். அதைச் சரிக்கட்ட வெளிநாடுகளிடமிருந்து கடன் பெறலாம். ஆனால், காலமெல்லாம் கடன்கார நாடாகவே பாகிஸ்தான் இருக்க வேண்டியதிருக்குமே?

வங்க தேச விடுதலைக்குரிய பொருளாதாரக் காரணங்கள் இன்று கண்டுபிடிக்கப்பட்டதல்ல; சுரண்டப்படும் எந்த நாடும் மெல்ல மெல்லத்தான் தனது நிலையை உணரும். ஆங்கிலேயரின் சுரண்டலைக் கண்டுபிடித்து, உணர்ச்சி கொண்டு, வெளியேற்றிடப் போராடுவதற்கு எவ்வளவு காலமாகியது! சுரண்டப்படும் நாடுகளின் வரலாறு ஓர் உண்மையைப் புலப்படுத்துகிறது. சுரண்டல் என்பதே மறைமுகமாக நடைபெறுவதுதான். அதனால் தான் அதைக் கண்டுபிடிக்க நாளாகிறது. ஆனால் 'சுரண்டப்படுகிறோம்' என்பதை உணர்ந்துகொண்ட எந்த நாடும் விடுதலை பெற்றே தீரும். அதற்கு வங்க தேசம் தலைசிறந்த எடுத்துக் காட்டாகும்.

### அகதிகள் சுமை!

வங்க தேசத்திலிருந்து இந்தியாவிற்கு வந்த அகதிகளினால் இந்தியாவிற்குத் தாங்கமுடியாத சுமைஏற்பட்டுள்ளது என்பதைப் பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

அகதிகளின் மொத்த எண்ணிக்கை 1 கோடி

(ஐ.நா. சபையில் உறுப்பினராக உள்ள பெரும்பாலான நாடுகளின் மக்கட்தொகையைவிட அதிகமாகும்).

முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகள் 67 இலட்சம் பேர்

| | கோடி ரூபாய் |
|---|---|
| 1972-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வரை ஏற்படக்கூடிய மொத்தச்செலவு | 525 |
| நவம்பர் 1971 வரை ஏற்பட்டுள்ள செலவு. | 190 |
| திட்ட ஒதுக்கீடு | 260 |
| துணை வரி விதிப்பு | 100 |
| பொருளாகவும், தொகையாகவும் கிடைத்த அந்நிய உதவி | 77.6 |
| எதிர்பார்க்கப்படும் அந்நிய உதவி மொத்தம் | 187 |

* * *

| | |
|---|---|
| அகதிகள் முகாம் | 896 |
| அகதிகளைக் கவனிக்கும் டாக்டர்கள் | 800 |
| துணை மருத்துவ ஊழியர்கள் | 2,100 |
| குழந்தைகள், பெண்களுக்கான சத்துணவு நிலையங்கள் | 70 |
| காலிசெய்து கொடுக்கப்பட்டுள்ள பள்ளிக் கூடங்கள் | 2,500 |
| பள்ளிகள் மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் | 5 இலட்சம் |

திரிபுரா மாநிலத்திலும், எல்லையோர நகரங்களிலும் வாழும் மக்கள் தொகைகளை விட, அகதிகளின் தொகை அதிகமாகிவிட்டது.

## தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்,

19/20, லிங்கி செட்டித் தெரு, சென்னை-1.

தந்தி விலாசம் : 'அர்பாங்க்'

தொலைபேசி எண் : 20367

தபால் பெட்டி எண் : 226

| | (வருடத்திற்குச் சதவீதம்) |
|---|---|
| கரண்ட் அக்கௌண்ட் | 0·50 |
| சேவிங்ஸ் பாங்க் அக்கௌண்ட் | 4·00 |
| சிசன் டெபாஸிட்டுகள்—ரூ. 1000ம் அதற்கு மேலும் | |
| 15 நாட்கள் | 2·00 |
| 46 நாட்கள் | 3·00 |
| பிக்செட் டெபாஸிட்டுகள் ரூ. 100ம் அதற்கு மேலும் | |
| 91 நாட்கள் | 4·75 |
| 6 மாதங்கள் | 5·25 |
| 12 மாதங்கள் | 6·25 |
| 2 வருடங்கள் | 6·76 |
| 3 வருடங்கள் | 7·25 |
| 4 வருடங்கள் | 7·50 |

குறைந்த பட்ச கால அளவாக ஓராண்டுக் காலத்திற்கு ரூ. 1000-க்கும் அதற்கு அதிகமாக உள்ள டெபாஷிட்டுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம, கல்வி ஸ்தாபனங்களில் டெபாஷிட்டுகளுக்கு மேலே குறிப்பிட்ட வட்டி விகிதத்தைவிட ½ சதவீதம் கூடுதல் வட்டி தரப்படும்.

ரெக்கரிங் டிபாசிட்டுகள் :

| | தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம். | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| ரூ. 5-ம் அதன் மடங்குகளும் | ரூ. 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

ஆர். கனகசபை
தலைவர்.

பி. என். டி. சாரி,
செயலாளர்.



# நெய்வேலியும்...நமது நாடும்

நெய்வேலி யூரியா:
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரோஜன் கூட்டப்பட்ட உரம் தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

மின்விசை:
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.





சுட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லீக்கோ:
வீடுகள், ஓட்டல்கள், பல்வேறு தொழில்களில் பயன்படு அதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திறம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.

நெகோலின்:
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தரவல்ல இன்ஸுலேட்டர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண் ஜவுளி, ரப்பர், ... தொழில்களிலும் இது பயன்படுகிறது.

தார்ப்பொருள்கள்:
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோகிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால், ... ஆகியவை.

நெய்வேலி லிக்னைட்
கார்ப்பொரேஷன் லிமிடெட்.,
நெய்வேலி—1

"வங்காளத்தின் நண்பன்" (பங்காள பந்து) என்று வங்காள மக்களால் அன்புடன் அழைக்கப்படும் செய்கு முஜிபுர் ரகிமான் கண்ட கனவு நனவாகி விட்டது!

ஆம்! 'வங்காள தேசம்' மேற்குப் பாகிஸ்தானின் கோரப் பிடியிலிருந்து விடுபட்டு 16—12—1971-ல் விடுதலை பெற்றுவிட்டது!

ஆனால் வங்காள தேசத்தை உருவாக்க முயன்ற முஜிபுர் ரகிமான் மேற்கு பாகிஸ்தானில் எங்கோ ஓர் இடத்தில், யாருக்கும் தெரியாமல் வெஞ்சிறையில் வாடிக் கொண்டிருக்கிறார்!

மேற்குப் பாகிஸ்தானின் ஆதிக்கத்தில் காலங் காலமாகக் கண்ணீர் சிந்திய வங்காள மக்கள், கடைசியில் தங்கள்




செந்நீரைச் சிந்தி, வங்காளத்தைப் பிரித்து விட்டாலும், தங்கள் தலைவன் முஜிபுர் ரகிமான் விடுதலை பெறும் நாள் எந்நாளோ என்று ஏங்கித் தவிக்கின்றனர்!

வங்காள தேசத்திற்காகத் தன் வாழ்நாளில் பெரும் பகுதியைச் (10 ஆண்டுகளுக்கும் மேலாக) சிறையிலேயே கழித்து வரும் முஜிபுர் ரகிமான் 1920-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 17-ஆம் நாள் பரித்பூர் மாவட்டத்தில் உள்ள தங்கி பரா என்ற ஊரில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தார். அவர் உயர்தரக் கல்வியைக் கல்கத்தாவில் கற்றார்; சட்டப் படிப்புப் பட்டத்தையும் அங்கு தான் பெற்றார். 1947-ஆம் ஆண்டில் பட்டதாரி ஆதவற்கு முன்பே, முஜிபுர் அரசியலில் ஈடுபட்டார்.

### விளையும் பயிர் முளையிலே!

பதினேழு வயதில், பள்ளிக்கூட மாணவராக இருக்கும் போதே அரசியல் பேரணியில் கலந்து கொண்ட காரணத்திற்காக ஒரு வார சிறைத்தண்டனை அனுபவித்தார். முஜிபுர் ரகிமானின் அறிவுத் திறனையும், ஆற்றலையும், மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்ற துடிப்பையும், துணிவையும் கண்ட எச். எஸ். சுராவர்த்தி (பிற்காலத்தில் பாகிஸ்தானின் தலைமை அமைச்சராக இருந்தவர்) முஜிபுர் ரகிமானை முஸ்லீம் லீகில் சேருமாறு தூண்டினார். இஸ்லாமியக் கல்லூரி மாணவராக இருக்கும்போதே முஸ்லீம் லீக் தலைவர்களுடன் முஜிபுர் ரகிமானுக்குநெருங்கிய தொடர்பு உண்டு.

பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு, இஸ்லாமிய மதத்தின் பேரால், கிழக்கு வங்காளம் சுரண்டப்படுவதையும், கிழக்கு வங்காள மக்கள் தாழ்த்தப்படுவதையும் கண்ட முஜிபுர் ரகிமானுக்கு முஸ்லீம் லீகின் கொள்கைகள் பிடிக்கவில்லை. ஆயினும் அவர் முஸ்லிம் லீகுடன் தொடர்பு கொண்டிருந்தார். ஆனால் டாக்கா நகரில் நடந்த நிகழ்ச்சி ஒன்று முஜிபுர் ரகிமானின் கண்களைத் திறந்தது!

### மொழிப்போர்!

"உருது மொழியே இந்த நாட்டின் தேசிய மொழியாக ஆகப் போகிறது............ எவரேனும் இதை ஒப்புக் கொள்ளாமல், வேறு ஏதேனும் சொன்னால், அவர்கள் பாகிஸ்தானின் பகைவர்களாவார்கள்" என்று 1948-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 21-ஆம் நாள் டாக்காவில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் ஜனாப் ஜின்னா அவர்கள் குறிப்பிட்டார். அதைக் கேட்டவுடன் முஜிபுர் ரகிமானின் கண்கள் திறந்தன. மேற்குப் பாகிஸ்தானியர்களின் ஆதிக்க மனப்பான்மை அவருக்குத் தெளிவாகத் தெரிந்தது. உடனே ஒரு சில மாணவர்களைக் கூட்டிக் கொண்டு ஜனாப் ஜின்னாவின் கூற்றுக்கு மறுப்புத் தெரிவித்தார் முஜிபுர் ரகிமான். அதனால் அங்கேயே முஜிபுர் ரகிமானும், மாணவர்களும் கைது செய்யப்பட்டுச் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டனர்.

கிழக்கு வங்க மக்களின் மேல் உருதுமொழி திணிக்கப்பட்டதால், முஜிபுர் ரகிமான் முஸ்லிம் லீகிலிருந்து எதிர் முனைக்குச் செல்ல நேர்ந்தது. உருதுமொழி எதிர்ப்புப் போராட்டத்தில் கிழக்கு வங்காளம் முழுவதுமே ஈடுபட்டது. கைது செய்யப்பட்ட முஜிபுர் ரகிமான் 7 நாள் தண்டனை விதிக்கப்பட்டார்.

விடுதலையடைந்த பின்பு, ரகிமான் தன் கொள்கைக்கு ஆதரவு தேட மேலும் தீவிரமாகப் பாடுபட்டார்.

மேற்குப் பாகிஸ்தான் அரசு, கிழக்குப் பாகிஸ்தான் மக்களை இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்துவதையும், அரசியல் பொருளாதாரத் துறைகளில் கிழக்குப் பாகிஸ்தான் புறக்கணிக்கப்படுவதையும் கண்டிப்பதில் முஜிபுர் ரகிமான் முழு மனத்துடன் ஈடுபட்டார். மத அடிப்படையில் வங்காள மக்கள், எவ்வாறு வாய்ப்பூட்டுப் போடப்படுகிறார்கள் என்பதையும், முஸ்லீம் லீக் மேற்கொண்டு வரும் தந்திரங்கள் யாவை என்பதையும் விளக்கி, "மேற்குப் பாகிஸ்தானியர்களை நம்ப வேண்டாம்" என்று கூறி உடன் பிறந்த வங்காளிகளுக்கு எச்சரிக்கை விடுத்தார். முஜிபுர் ரகிமானின் கருத்துக்கள் காட்டுத் தீ போல் பரவியதுகண்ட ஆட்சியாளர், அவரைக் கைது செய்து இரண்டரை ஆண்டுக் காலம் சிறையில் வைத்திருந்தனர்.

### விழிப்பு உணர்ச்சி

முஜிபுர் சிறையில் இருந்தாலும், அவருடைய கொள்கைகள் மக்களிடையே பரவிய

தால், மக்களுக்காகப் பரிந்து பேசும் முக்கிய மனிதராக, மக்கள் மனத்திலே இடம் பெற்று விட்டார். அதனால் 1954-ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநிலத் தேர்தலில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஓராண்டிற்குப் பிறகு பாகிஸ்தான் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1954-ஆம் ஆண்டில் கொஞ்ச காலம் கிழக்கு வங்காளத்தில் ஆட்சி செய்த பசல் ஹக் அமைச்சரவையில் வணிக அமைச்சராகப் பணியாற்றினார். மீண்டும் சிறிது காலம் அட்டர் ரகிமான் அமைச்சரவையிலும் பொறுப்பேற்றிருந்தார்.

பாகிஸ்தானில் புதிய அரசியலமைப்பு 1956-ஆம் ஆண்டில் பிரகடனப் படுத்தப்பட்டது. முஜிபுர் ரகிமானும் இதர அவாமி லீக் தலைவர்களும் அதைப் பலமாக எதிர்த்தனர். கிழக்குப் பாகிஸ்தானுக்கு முழு சுய ஆட்சி வேண்டுமென்றும், மேற்கு, கிழக்குப் பாகிஸ்தான்களுக்கிடையே பொருளாதார வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதிலும், நிதி ஒதுக்குவதிலும் மிகுந்த பாகுபாடு காட்டப்படுவதற்கு முடிவு கட்ட வேண்டுமென்றும் தீவிர இயக்கம் நடத்தினர்.

## அடிக்கடி சிறைவாசம்!

அயூப்கான் 1958-ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தார். அதன்பின் முஜிபுர் ரகிமான் அடிக்கடி சிறைப்பிடிக்கப்பட்டார். 1958 அக்டோபரிலும், 1962-ஆம் ஆண்டிலும், 1966-ஆம் ஆண்டிலும் முஜிபுர் ரகிமான் தண்டிக்கப்பட்டார்.

முஜிபுர் ரகிமான் 1968-ஆம் ஆண்டில் விடுதலை செய்யப்பட்டார். விடுதலையாகிய சற்று நேரத்திலேயே, வரும் வழியிலேயே, முஜிபுர் ரகிமான் மீண்டும் கைது செய்யப்பட்டு, அகர்தலா சதி வழக்கில் தொடர்புப் படுத்தப்பட்டார். அச்சதி வழக்கு 1969-ஆம் ஆண்டு ஜனவரியில் திரும்பப் பெறப்பட்டு. மீண்டும் முஜிபுர் ரகிமான் விடுதலையானார்.

## அயூப் வீழ்ச்சி

இந்தியாவுக்கும், கிழக்குப் பாகிஸ்தானுக்கும் எண்ணற்ற தொல்லைகளைத் தொடர்ந்து கொடுத்து வந்த ஜெனரல் அயூப்கான் 1969-ஆம் ஆண்டு மார்ச்சு 25-ஆம் நாள் ஆட்சி பீடத்திலிருந்து கவிழ்ந்தார். அயூப்பின் வீழ்ச்சிக்கு முஜிபுர் ரகிமான் மேற்கொண்ட நடவடிக்கைகளே முக்கிய காரணம் என்றால் மிகையல்ல.

அயூப்கானுக்குப் பிறகு ஆட்சி பீடமேறிய ஜெனரல் யாகியாகான், பொதுத் தேர்தல் நடத்தப்பட்ட பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் ஆட்சியை ஒப்படைப்பதாக உறுதி கூறினார். 1970-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில், பாகிஸ்தானின் பிரிவினைக்குப் பிறகு முதன் முதலாக, வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டுப் பொதுத் தேர்தல் நடைபெற்றது.

### மடக்கு சைக்கிள்

ஆடைகளை மடித்துப் பெட்டிக்குள் வைத்துக் கொள்வது போல், சைக்கிளை நான்காக மடக்கிக் 'கார் டிக்கி'யில் வைத்துக் கொள்ளலாம். மறுபடியும் எடுத்து விரித்தால் முழு சைக்கிள் உருவாகும். கார் செல்ல முடியாத இடங்களில் இதைப் பயன்படுத்தலாம். ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் உருவாக்கப்படும் இந்தச் சைக்கிளின் விலை ரூ. 200.

## அவாமி லீக்கின் பெரும் வெற்றி

கிழக்குப் பாகிஸ்தானுக்கு முழு சுய ஆட்சி வேண்டும் என்ற குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு, 6 அம்சத் திட்டத்துடன், முஜிபுர் ரகிமானைத் தலைவராகக் கொண்டு தேர்தல் களத்தில் அவாமி லீக் இறங்கியது. நாடாளுமன்றத்துக்கான 313 இடங்களில் 167 இடங்களையும், கிழக்குப் பாகிஸ்தான் மாநில சட்டமன்றத்துக்கான 300 இடங்களில் 288 இடங்களையும் அவாமி லீக் கைப்பற்றியது!

பெரும்பான்மை இடங்களைப் பெற்ற அவாமி லீகிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டிய யாகியாகான், பூட்டோவைக் கலந்து கொண்டு, முஜிபுர் ரகிமானிடம் கிழக்கு வங்க சுய ஆட்சிபற்றிப் பேரம் பேசினார். டாக்காவில் முஜிபுர் ரகிமானுக்கும் யாகியாகானுக்கும் இடையில் 10 நாட்களுக்கும் மேலாகப் பேச்சு வார்த்தை நடந்தது. 98 சத மக்கள் விரும்பும் 6 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் பூட்டோ குறுக்கிட்டார். ''ஆறு அம்சத் திட்டத்தில் எந்தவிதத் திருத்தமும் செய்யப் பூட்டோவுக்கு உரிமை இல்லை'' என்று கூறினார் முஜிபுர் ரகிமான்.

## நயவஞ்சகம்

முஜிபுரின் வல்லமையைக் கண்ட யாகியாகான் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கும்போதே பெரும்படையை வரவழைத்துவிட்டு, மார்ச்சு 25-ஆம் நாள் பேச்சு வார்த்தையைத் திடீரென்று, நயவஞ்சகமாக முடித்துக் கொண்டார். முஜிபுர் ரகிமானை மார்ச்சு 26-ஆம் நாள் காலையில் கைது செய்து மேற்குப் பாகிஸ்தானுக்குக் கொண்டு சென்று விட்டார் யாகியாகான்.

நாட்டுக்காகப் பாடுபட்ட நல்லவர் முஜிபுர் ரகிமான், யாகியாகானின் கொடுஞ்சிறையிலே வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார். முன்பே 10 ஆண்டுக் காலத்திற்கும் மேலாகப் பாகிஸ்தான் சிறையிலே கடுந்தண்டனை அனுபவித்த முஜிபுர், இப்பொழுது சிறையில் இருப்பதைப் பற்றிக் கவலைப்படமாட்டார். ஆனால் ''நமக்காக வல்லவோ ஓர் உயிர் சிறையிலே ஊசலாடிக் கொண்டிருக்கிறது'' என்று எண்ணுகின்ற வங்காள தேச மக்கள் தங்கள் தலைவனை விடுவித்து, ''வங்க தேசத்தின் தங்கமே! வருக! வருக!'' என்று வாழ்த்துக் கூறக் காத்திருக்கின்றனர்.



# வங்கதேச வாழ்த்து!




"என்னுயிர் வங்க நாடே!
இனிமைசால் தங்கத் தாயே!
உன்னரும் நீல வானர்,
உலவிடும் இனிய காற்று,
மன்னிடும் இதய மெல்லாம்
மயக்கிடும் குழலின் கீதம்
கன்னலின் இனிய சாறு
கனியுமாஞ் சோலைக் காட்சி!

மருவென மயக்கும் காற்று,
மலர்ந்திடும் இனிய வேனில்,
விதமுறு மணிகள் தாங்கும்
விளைநிலக் கதிர்கள் காட்சி,
புதுமைசால் என்றன் தாயே!
போற்றுமென் செல்வ மன்றே!
இதமுறு வங்கத் தாயே!
எங்கும்நீ இன்ப மன்றே!

விங்கிள வேனிற் காலம்
வியத்தகு தோற்ற மன்றே!
ஓங்குயர் ஆலின் நீழல்
ஒளிதிகழ் ஆற்றின் தீரம்
தாங்கிடு மென்மை மேய
தண்ணிய பசும்புல் மெத்தை
ஈங்கெலாம் வழங்கு நாடே
என்னரும் வங்கத் தாயே!

தேனினும் இனிய தாகச்
செவியிலுன் குரல்தான் பாயும்;
ஆனிரை மேய்க்கும் மக்கள்,
அயர்விலா துழுவோர், மற்றோர்,
வானினும் உயர்ந்தாய்! என்றன்
மாண்புடன் பிறப்பே யன்றோ!
ஊனினிற் கலந்த தாயே!
உயிரினும் இனிய நாடே!

உன்னிணை அடிகள் போற்றி
உச்சிமேற் கொண்டு வாழ்வேன்;
மின்னிடும் மணிக ளாக
மேவியே தாங்கி நிற்பேன்!
அன்னையே! என்றன் ஆவி
உடலொடு பொருளை யுன்றன்
பொன்னடி வைத்தேன்; வாழி!
போற்றியே வணங்கு கின்றேன்.

கரு: கவியரசர் இரவீந்திரநாத் தாகூர்
உரு: — "பாவசோண"

# “வருடக்கணக்கில் மருந்துகள் சாப்பிடுவதால் தீமைகள் ஏற்படலாம் என்பது வைத்திய மேதைகளின் கருத்து”

**பிரபல பழனி**

வைத்திய திலகம்



வைத்தியராஜ்

DR. S. காளிமுத்து
R. M. P. (IND.) V. V. C.,
A. M. I. H.

வாழ்க்கையில் சுகபோகங்களை இழந்த வாலிப· வயோதிக அன்பர்களுக்கு பிரபல-பழனி வைத்திய திலகம்-வைத்தியராஜ் S. காளிமுத்து R.M.P. (IND), V.V.C., A.M.I.H. அவர்களின் ஆலோசனையும்-கருத்தும்.

ஆடவர்கள், படித்த பட்டதாரியும், பாமரரும் தங்கள் வாழ்க்கையில் முன் நடந்த தீய வழக்கங்களால் தங்கள் உடல் பலகீன மடைந்து ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி -உஷ்ணம்-சோம்பல், கைகால் அசதி, உடல்மெலிவு, தூக்கக் குறைவு, ஆயாசம், களைப்பு, பீதி, வெட்கம், பயம், வெறுப்பு, தளர்ச்சி, வாழ்க்கையில் வெறுப்பு உண்டாகி குடும்ப வாழ்க்கையில் மனவேதனையும் அதிருப்தியும், சஞ்சலமும், நிம்மதியில்லாமலும் கஷ்டப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் வருடக் கணக்கில் மருந்துகள் சாப்பிட்டுப் பலனில்லாமல் பின் நம்மிடம் சிகிச்சை பெற்று விரைவில் குணமடைந்தோர்கள் ஏராளம்.... ‘வீட்டு வாடகை தருவதுபோல் மாதாமாதம் பணம் செலுத்தி வருடக்கணக்கில் மருந்துகள் சாப்பிட்டேன்; ஒன்றும் பலனில்லை’ என்றும் ஏராளமான கடிதங்கள் நமக்கு வந்து தினசரி குவிகின்றன! பழனி மருந்தைப் பற்றித் தெரியாதவர் பாரில் உண்டோ! மருந்தை உபயோகிக்கும் போதே பலனைப்பெறும் அன்பர்கள் மட்டும் எம்மிடம் சிகிச்சை பெறலாம்—வருடக் கணக்கில் சிகிச்சை பெற நினைக்கும் அன்பர்களுக்குக் கண்டிப்பாக நாம் சிகிச்சை தர இயலாது.

கேம்புகளில் நேரில் மருந்துகள் பெற முடியாதவர்கள் வி.பி. பார்சலுக்கு ஆர்டர் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். போஸ்டேஜ் இலவசம்.

—: 1 மாத சிகிச்சை மருந்துகள் :—

| மிக உயர்தரம் | தங்க பஸ்பம் | உயர்தரம் | முதல் தரம் | இரண்டாந் தரம் |
|---|---|---|---|---|
| ரூ. 90-00 | ரூ. 120-00 | ரூ. 42-00 | ரூ. 33-00 | ரூ. 24-00 |

கிளை : 41, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1. போன்: 21448.
சென்னை கிளை ஆபீசில் 1 முதல் 7 தேதி மீண்டும் 15 முதல் 21 தேதி நேரில் விஜயம்

GOVT. REGD. T. M. No. 204841 REGD 15443.

வைத்திய திலகம், வைத்திய ராஜ் டாக்டர் S. காளிமுத்து R.M.P., (IND.), V.V.C., A.M.I.H.

## பழநி சித்தர் வைத்தியசாலை (T) பழநி S.I.

போன் : 316

தந்தி : சித்தர்

# வெற்றிப் பயணம்



## மாண்புமிகு அரிசன நல அமைச்சர் சிறப்புப் பேட்டி



"அந்தமான் நிக்கோபர் தீவுகளில்வாழும் தமிழர்கள், தமிழகஅரசு தமிழ் நாட்டுமக்களுக்கு அளிக்கும் நிலப்பட்டா, இலவச வீட்டுமனை போன்று மத்திய அரசும் செய்து தர வேண்டும் என்று விரும்புகிருர்கள்.

அந்தமான் நிக்கோபர் தீவுகள் கூட்டத்தில் ஏறத்தாழ முந்நூறு தீவுகள் உள்ளன. இந்தத் தீவுகள் அனைத்திலும் மக்கள் வாழ முடியாது. தீவுகளில் சில காடுகளாக உள்ளன. வாழக் கூடிய வசதிகள் உள்ள தீவுகளில் மட்டுமே மக்கள் வாழ்கிருர்கள்.

" சுற்றுலா வளர்ச்சிக்கு அருமையான இடங்களாகத் திகழ்கின்றன அந்தமான் நிக்கோபர் தீவுகள்"—என்கிருர் அரிசன நல அமைச்சர் சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள்.

கடந்த நவம்பர்த் திங்களில் அந்தமான் நிக்கோபர் தீவுகளில் ஏறத்தாழ பன்னிரண்டு நாட்களுக்கு மேல் சுற்றுப் பயணம் செய்த அமைச்சர் அவர்கள் தமிழரசு இதழுக்கென அளித்த பேட்டியின் போதுதான் மேற்கண்டவாறு கூறிஞர்கள். அரிசன நல அமைச்சர் தொகுத்துத் தந்த செய்திகள் கீழே தரப்படுகின்றன.

* * *

இலங்கையிலிருந்து நாடு பெயர்ந்து தாயகம் திரும்பும் 1,000 குடும்பங்களை அந்தமான், நிக்கோபர் தீவுகளில் குடியமர்த்துவதன் தொடர்பாகவே நான் அந்தமான் சென்றேன்.

அங்கே இலங்கையிலிருந்து திரும்புவோரைக் குடியமர்த்த நல்ல வாய்ப்புகள் உள்ளன.

இந்த வகையில் என் பயணம் வெற்றிப் பயணம் என்பதுடன் முழு நம்பிக்கை தருவதாகவும் அமைந்தது.

இலங்கையிலிருந்து தாயகத்துக்குக் குடிபெயர்வோரைக் குடியமர்த்த அந்தமான் நிக்கோபர் தீவுகளில் 6,000 ஏக்கர் வரை மத்திய அரசு ஒதுக்க முடிவு செய்துள்ளது. இப்பொழுதே 850 ஏக்கர் பரப்பளவு உள்ள இடம் ரப்பர் பயிரிடுவதற்கு ஏற்றதாக அமைந்துள்ளது. இலங்கையிலிருந்து வருபவர்களைப் பயன்படுத்தி அந்தமான் நிக்கோபர் தீவுகளில் சிறந்த வகையில் ரப்பர்த் தோட்டங்களை உருவாக்க முடியும்.

விலை உயர்ந்த மரங்கள் அந்தமான் நிக்கோபர் தீவுகளில் ஏராளமாக உள்ளன. பல தீவுகள் காடுகளாகவே உள்ளன. அந்தமானில் மரங்களை வெட்டி ஏற்றுமதி செய்யும் ஆலை ஒன்றும் உள்ளது.

அந்தமான் நிக்கோபர் தீவுகளைச் சுற்றி ஆழமான கடல்கள் உள்ளன. மீன் வளமும் ஏராளமாக உள்ளது. ஆனால், போதிய அளவு மீன்பிடி தொழில் வளர்ச்சி பெறவில்லை. நவீன படகுகளில் சென்று மீன் பிடிக்கத் தேவையான அளவுக்குப் பயிற்சி பெற்ற மீனவர்கள் இல்லை என்று கூறுகிருர்கள்.

நவீனமுறையில் மீன்பிடிக்கத் தெரிந்தவர்களை அங்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளனர்.

* * *

ஒரு காலத்தில் குற்றவாளிகள் பரம்பரையினர் தான் அந்தமான் நிக்கோபர் தீவுகளில் இருக்கின்ற



காட்டுப் பகுதிகள் ரப்பர் தோட்டங்களாக மாற்றப்படுகிறது.



அந்தமான் சிறையையும் அமைச்சர் பார்வையிட்டார்.



கொரங் நல்லா மக்கள் அமைச்சருக்கு அளித்த வரவேற்பு.

ஊர் என்ற நிலை இருந்தது. ஆனால் இன்று அந்நிலை கிடையாது. பல்வேறு மாநிலத்தைச் சேர்ந்த இந்திய மக்களும் இருக்கின்றனர்.

தமிழ் மக்கள் உள்ள எல்லா இடங்களுக்கும் சென்று வந்தேன். தார்முக்கிலி என்ற கப்பலில் மாயபந்தர், ரங்கத், கூர் நிக்கோபர், கச்சால்—லிட்டில் அந்தமான்ஸ் மற்றுமுள்ள தீவுகளுக்குச் சென்று வந்தேன்.

நிம்புதேரா என்னும் இடத்தில் பர்மாவிலிருந்து வந்த அகதிகள் உள்ளனர்.

தமிழ் மக்கள் வாழுமிடங்களில் எல்லாம் மக்கள் எங்கள் குழுவுக்கு வரவேற்பு அளித்தனர்.

செப்பிகாட் என்னும் இடத்தில் 500 ஏக்கர் பரப்பளவில் பெரிய பண்ணை உள்ளது. அங்கு காய்கறிகளும் நெல்லும் பயிரிடுகிறார்கள்.

நான்கௌரி, காமோட்டா, கச்சால், நிக்கோபர் தீவுகளில் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். லிட்டில் அந்தமானில் உங்கிஸ் என்ற பழங்குடியினர் உள்ளனர்.

வடமத்திய அந்தமானில் ‘ஜாரவாஸ்’ என்ற பழங்குடியினர் வாழ்கின்றனர். இவர்கள் மனிதர்களையும் வேட்டையாடும் மனிதர்கள். வில்—அம்புடன் காணப்படும் இவர்களைப்பிடித்துத் திருத்த வேண்டும் என்று அரசு எவ்வளவோ முயற்சி எடுத்தது. ஆனால், மனிதர்கள் நெருங்கினாலே வேட்டையாடும் இவர்களைத் திருத்தவும் முடியவில்லை.

அந்நியர் யாரைக் கண்டாலும் முதலில் வேட்டையாடுவதே இவர்கள் வேலையாகும்.

ஆண்களும் பெண்களும் மிக குறைந்த அளவிலே அரையிலே மட்டும் இலைகளையும் மரப்பட்டைகளையும் கட்டிக் கொண்டிருக்கின்றனர் என்று பார்த்தவர்கள் கூறுகின்றனர்.

இவர்களிடமிருந்து மக்களைப் பாதுகாக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

* * *

அந்தமான் நிக்கோபர் தீவுகளின் வளர்ச்சிக்கு ஏராளமான வாய்ப்புகள் இருப்பினும் துறைமுகங்கள் போதிய வசதியுடன் உள்ளவைகளாக உள்ளன.

இப்பொழுது கல்கத்தாவிலிருந்துதான் அந்தமானுக்கு விமானப் போக்குவரத்தும் கப்பல் போக்குவரத்தும் உள்ளன. ஆனால் அங்குள்ள தமிழர்கள் சென்னையிலிருந்து விமானப் போக்குவரத்தும் கப்பல் போக்குவரத்தும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

* * *

லிட்டில் அந்தமானில் 1,000 ஏக்கர் பரப்பளவில் பெரிய பண்ணை ஒன்று அரசுக்குச் சொந்தமாக உள்ளது.

சில்காட் பண்ணையில் ஏராளமான அளவில் நெல் பயிரிடப் படுகிறது.

வளமான பூமி அது !

இயற்கையன்னை அளித்துள்ள ஈடில்லாச் செல்வங்கள் ஏராளம்! ஏராளம்!

மைய அரசு இன்று அங்கு செய்து வரும் பணிகளை இன்னும் அதிக அளவில் தொடருமானால்—தமிழகத்தைப் போல் மிகுந்த முன்னேற்றம் அந்தமான் நிக்கோபர் தீவுகள் அடையும் என்பதில் ஐயமில்லை.

* * *

அந்தமான் நிக்கோபர் தீவுகளுக்குச் செல்ல நமக்குக் கிடைக்கும் போக்குவரத்து வசதிகளைக் கொண்டே இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து தாயகம் வருபவர்களை அங்குக்குடியமர்த்துவதை விரைந்து செயல்படுத்த முடியும். அதற்கு மைய அரசும் துணை செய்ய வேண்டும்.





பெரார் கஞ்சரப்பத் தோட்டம் பர்மா அகதிகள் இங்கு பணியாற்றுகிறார்கள்.



அரிசன நல அமைச்சருடன் பர்மா அகதிகள் குழந்தைகள்



நிம்பூதேரா பண்ணையை அமைச்சர் பார்வையிட்டார்.


ஒளிமயமான
வருங்காலத்திற்கு
BHEL
அளிக்கும்
மின்சக்தி வளம்
BHEL-திருச்சி, தொழிற்சாலைகளுக்கும், மருத்துவ மனைகளுக்கும், வீடுகளுக்கும் வேண்டிய அனல் மின்சக்தியை உற்பத்தி செய்ய துரிதமாக நிறுவப்படும் அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான கன ரக கொதிகலன்களைத் தயாரித்து கொடுக்கிறது. மேலும். உர, ரசாயனத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய நீராவிக்கொதி கலன்களையும் தயாரித்துக் கொடுக்கிறது.
வளம் கொழிக்க மின்சக்தி உற்பத்திப்பணியில்...
BHEL
பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட், (இது ஒரு அரசாங்க நிறுவனம்), யூனிட்: ஹைபிரஷர் பாய்லர் பிளாண்ட், திருச்சிராப்பள்ளி-14
பதிவு பெற்ற அலுவலகம்: 5, பார்லிமெண்ட் தெரு, புதுடில்லி-1

# ஏன் இந்தக் காதல்?

## 12. எப்படிச் சோதிப்பது?

அ. மறைமலையான்

தன்னுடைய அறையினுள் அழைத்துச் சென்றதும், டாக்டர் பூங்கொடியை நோக்கி,

''காபி கொண்டு வரச் சொல்லட்டுமா? இல்லை ஆர்லிக்ஸ் கொண்டுவரச் சொல்லட்டுமா?'' —என்று கேட்டாள் தேன்மொழி

''இரண்டும் வேண்டாம்; இப்போ உங்கள் மனத்திலே இருக்கிற முக்கியமான செய்தியை வெளியே கொண்டு வாருங்கள், அது போதும்.''

—என்று சிரித்தாள் பூங்கொடி.

ஆனால் தேன்மொழி விட வில்லை; சமையற்காரி சண்பகத்தை அழைத்து ஆர்லிக்சே கொண்டுவரச் சொன்னாள்.

அதைக் குடித்து முடித்த பிறகும் தேன்மொழி தான் கேட்க நினைத்ததைக் கேட்காமல் அங்கும் இங்குமாக உலவிய வண்ணமே இருந்தாள். அவளுடைய பார்வை சன்னல் வழியே தோட்டத்துப் பக்கமே சென்றது. அவளுடைய வெறித்த விழிகளில், 'எப்படி இதைப்பற்றி மனம் விட்டுக் கேட்பது?' —என்கிற தயக்கமும் நிழலாடியது.

பூங்கொடிக்கோ அதற்கு மேலும் பொறுமையோடு இருக்க முடியவில்லை.

''என்ன தேன்மொழி! ஏதோ முக்கியமான சேதி என்றீர்கள்; ஆனால் அதைப்பற்றிப் பேசாமலே இருக்கிறீர்களே! நானும் நோயாளிகளைப் போய்க் கவனிக்க வேண்டும் இல்லையா?'' —என்று இரங்கிய குரலில் கேட்டாள்.

தேன்மொழி துணிச்சலை வரவழைத்துக் கொள்பவளைப் போலத் தொண்டையைக் கனைத்துக் கொண்டாள். ஒரு வறட்டுப் புன்னகையை உதிர்த்த வண்ணம் பூங்கொடியை இப்படிக் கேட்டாள்.

''தொழுநோய் உள்ளவரைப் பெண்கள் திருமணம் செய்து கொள்ளலாமா, டாக்டர்?''

''இது என்ன அசட்டுத்தனமான கேள்வி! எதற்கு அப்படிச் சிக்கிக்கொள்ள வேண்டும்? கண்ணைத் திறந்து கொண்டே யாராவது பள்ளத்தில் போய் விழுவார்களா, என்ன?''

—பூங்கொடி நகைத்தாள்.

''அதற்கில்லை, டாக்டர்; ஒரு பெண் மனமார ஒருவரைக் காதலித்து விடுகிறாள்; பிறகு தான் அவருக்குத் தொழுநோய் என்று தெரிவதாக வைத்துக் கொள்ளுங்கள்; அம்மாதிரியான இக்கட்டான நிலையிலே அவள் காதலைத் துறப்பதா? இல்லை, அவரையே மணப்பதா? என்று தான் கேட்கிறேன்.''

''காசு கொடுத்துத்தான் தேங்காயை வாங்கி வருகிறோம்; வீட்டுக்கு வந்து உடைத்துப் பார்த்தால் அது அழுகலாக இருக்கிறது. காசு கொடுத்து விட்டோமே என்பதற்காக அழுகல் தேங்காயை யாராவது குழம்பிலே சேர்த்துக் கொள்வார்களா? அதன் நாற்றத்தைத்தான் சகித்துக் கொள்வார்களா? காதலித்தே இருந்தாலும் கூட தொழுநோய்க்காரர் என்று தெரிந்து விட்டால் பிறகு தூர விலகி வந்துவிட வேண்டியது தானே! ஆமாம், நீங்கள் ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்? உங்கள் தோழிகள் யாராவது அப்படிச் சிக்கிக் கொண்டு விட்டார்களா!''

''என் தோழிகள் என்ன, நானே தான் அப்படி அகப்பட்டுக் கொண்டு விட்டேன் என்று வைத்துக் கொள்ளுங்களேன்!''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள், தேன்மொழி?''

—திடுக்கிட்டுப் போய்க் கேட்டாள் பூங்கொடி.

''உண்மையைத்தான் சொல்கிறேன், டாக்டர்''

—தேன்மொழியின் கண்கள் பளபளத்தன, நீரில் மிதந்தது; குரலும் தழுதழுத்தது.

''என்னால் நம்பவே முடியவில்லையே! மாதவனின் தோற்றத்தைப் பார்த்தால் அப்படித் தெரியவே இல்லையே!''

''வெளிப்படையாக எனக்கும் அந்தமாதிரித் தெரியவில்லை தான்; எந்தவித அறிகுறியும் தென்படவும் இல்லைதான். ஆனாலும் என்னால் சந்தேகப்படாமலும் இருக்க முடியவில்லை.''

''ஏன், அப்படிச் சந்தேகப் படுகிறீர்கள்?''

''அவருடைய அக்காளுக்கு அந்தக் கடுமையான நோய் வந்திருக்கிறது. அவளுடைய உருவத்தையே அது சீரழித்து

ஊரை விட்டே அவளைத் துரத்தியும் இருக்கிறது.''

'' அப்படியா ? ''

'' ஆமாம், டாக்டர்; அதுவும் அவர் கைப்பட எழுதிக்காட்டிய உண்மை இது ; அக்காளுக்கு வந்த அந்த நோய் இவருக்கும் வருவது இயற்கைதானே ? ''

'' ஓ ! நீங்கள் அந்தக் கண்ணோட்டத்திலேதான் மாதவனைப் பற்றியும் சந்தேகப்படுகிறீர்களா ? ''

'' ஆமாம், டாக்டர் ''.

'' ஆனால் உங்களுக்கு ஓர் உண்மையைச் சொல்லட்டுமா?''

'' என்ன டாக்டர் ? ''

'' தொழுநோய் என்பது, அம்மை அல்லது வாந்திபேதி போல, ஒருவருக்கு வந்தால் உடனே மற்றவர்களைத் தொற்றிக் கொள்ளக்கூடிய ' ஒட்டுவார் ஒட்டி ' இல்லை ; பரம்பரை நோயும் இல்லை; ஆகையால், அவருடைய அக்காளுக்கு இருந்த காரணத்தால் மாதவனுக்கும் அது வந்திருக்குமோ என்று நீங்கள் அச்சப்படுவதில் அர்த்தமே இல்லை.''

'' அப்படியானல், அந்த நோய் இலட்சக்கணக்கான மக்களிடம் எப்படிப் பரவி இருக்கிறது ? ''

'' அதற்கு எத்தனையோ காரணங்கள் உள்ளன. சாதாரணமாக மென்மையான தோல் அல்லது சதைப் பகுதிகள் தான் தொழுநோய்க் கிருமிகளுக்குச் சுவையான இருப்பிடம் ஆகும். அதனால்தான் குழந்தைகள் மூலமே அந்நோய் பரவக்கூடும் என்று மருத்துவ வல்லுநர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

'' அது எப்படி, டாக்டர் ? ''

'' தொழுநோய் உள்ள ஒரு பெரியவர், பால் மணம் மாறாத பச்சிளங் குழந்தையொன்றைத் தொட்டுத் தழுவி முத்தங் கொஞ்சுகிறார் என்று வைத்துக் கொள்வோம் ; அப்போது அந்தக் குழந்தையின் மிருதுவான உடலில் எளிதில் இறங்கி விடுகின்றன கிருமிகள் ; அதே சமயம் தடித்த, அதாவது முதிர்ந்த தோலுடைய பெரியவர்களிடம் அவைகளால் அவ்வாறு ஊடுருவ முடிவதில்லை: அப்புறம், அளவுக்கு மீறித் தவறான நடத்தையின் மூலம் அந்த நோய் கொண்டவர்களிடம் உடலுறவு கொள்வதன் காரணமாகவும் அது பரவுவது உண்டு. மாதவனைப் பொறுத்த மட்டில் அந்த மாதிரி எதுவும் இருக்கும் என்று எனக்குத் தோன்றவே இல்லை. அவருக்கு இப்போது முப்பது வயதாவது இருக்கலாம் இல்லையா ! ''

'' இருக்கலாம் ''.

'' அவருடைய அக்காளுக்கு இருந்த நோய் இவருக்கும் தொற்றியிருக்கலாம் என்றால் இந்நேரம் அதற்கான அறிகுறி கொஞ்சமாவது தென்பட்டிருக்கலாமே ? அவருடைய காது மடலோ, மூக்கு நுனியோ, மிளகாய்ப் பழம் மாதிரிப் பளபளவென்று சிவப்பாகத் தெரிகிறதா ? ''

'' அப்படி ஒன்றும் இல்லையே!'

'' உடம்பிலே முதுகு, மார்பு, தொடைகள்—இங்கு எங்காவது திட்டுத் திட்டாகத் தோல் தடித்துக் கருஞ்சிவப்பாகக் காணப்படுகிறதா ? ''

'' அந்த அளவுக்கு நான் எங்கே அவரை நெருங்கிப் பார்த்தேன் ? ''

'' நீங்கள் சொல்வதைப் பார்த்தால், இரண்டு பேருமே மிகவும் கட்டுப்பாடாகத்தான் இருக்கிறீர்கள் என்று தெரிகிறது !'' அவர் பனியனைக் கழற்றிக்கூட நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள் போல் இருக்கிறதே! ''

—குறும்பு நெளியச் சிரிப்பை சிந்தினாள் பூங்கொடி.

'' ஆமாம், டாக்டர்.''

—நாணத்துடன் தலைகவிழ்ந்தவாறே கூறினாள் தேன்மொழி.

சிறிது நேரம் இருவரும் வாயைத் திறக்கவில்லை. தத்தம் போக்கில் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிப்போயினர். பின்னர்—

'' ஒன்று செய்வோமா ?''

'' என்ன, டாக்டர்? ''

'' மாதவனுக்கும் அந்த நோய் இருக்குமோ என்று அச்சமும் ஐயப்பாடும் கொண்டு நீங்கள் மனத்தைப் போட்டு அலட்டிக் கொண்டே இருப்பதைவிட, அவருக்கு அது உண்டா இல்லையா என்று ஒரு வழியாகத் தெளிவுபடுத்திக் கொண்டுவிடுவது நல்லதுதான் இல்லையா ?''

'' ஆமாம், டாக்டர்.''

'' அதற்கு ஒரு தொழுநோய் டாக்டரிடம் போய்ச் சோதனை செய்து பார்த்துவிட்டால் போகிறது .''

'' அவரை எப்படி நான் அந்த மாதிரியான மருத்துவச் சோதனைக்கு வெளிப்படையாக அழைக்க முடியும்? நான் ஏதோ சந்தேகப்பட்டுத்தான் அத்தகைய ஏற்பாட்டைச் செய்கிறேன் என்று அவர் தவறாகக் கருதி விடமாட்டாரா? பிறகு, என்மீது அவருக்கு ஒருவித வெறுப்புணர்ச்சி உண்டாகிவிடாதா? ''

'' நீங்கள் சொல்வதும் சரிதான். மிகவும் சிந்தனையைக் குழப்பும் சிக்கல்தான் இது. மற்ற எந்த நோயாக இருந்தாலும் நாம் மனந்திறந்து—வாய்விட்டுக்—கேட்டு விடலாம். ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை, தொழுநோயைப் பொறுத்தமட்டில் ஏதோ ஒரு விதத் தயக்கம் வந்து நம் குரல்வளையிலே தடைச் சுவரையே எழுப்பி விடுகிறது. கணவனிடம் மனைவிகூடக் கேட்க முடிவதில்லை ; மனைவியிடம் கணவனும் அதைப் பற்றிப் பேச முடிவதில்லை; அந்த நோய் வந்திருப்பவர்களும் அதைப்பற்றி வெளியிலே சொல்லவே வெட்கப்பட்டு, அது நன்றாக முற்றி வெளிப்படும் வரை மூடி மறைக்கவே முயலுகிறார்கள் ; அது வந்திருப்பவர்களைப் பார்ப்பவர்களும் எப்படி விசாரிப்பது—என்னதான் ஆறுதலைக் கூறுவது—என்று தெரியாமல் திணறி எதையும் கண்டு கொள்ளாதவர்களைப் போலவே, வாயை மூடிக் கொள்கிறார்கள். நாம் இப்படிப் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தாலேகூட மாதவன் எப்படி எடுத்துக்கொள்வாரோ? ''

'' அதுதான் டாக்டர் என்னுடைய மூளையையும் ஈட்டியாய்த் துளைக்கிறது! மற்ற மனிதர்களை விட மனப்பக்குவம் படைத்தவர் தான் அவர் ; ' எதையும் தாங்கும் இதயம் ' படைத்தவர் தான் அவர் ; என்றாலும், தங்களுக்கு என்று ஒரு

தாங்கொணாத அதிர்ச்சியைச் சந்திக்க நேரும்பொழுது எவ்வளவு திடமான நெஞ்சங்கொண்டவர்களும் நிலைகுலைந்து தடுமாறுவது இயற்கைதானே! அதுவும் தொழுநோயைப்போல அருவருப்பானது மட்டுமல்ல, அதிர்ச்சி தரத்தக்க நோயும் வேறு என்ன இருக்கிறது? நாம் நல்ல எண்ணத்தோடேயே அதைப் பற்றி விவாதித்துச், சோதனை செய்து கொள்ளலாம் என்று அழைத்துப்போக 'நமக்கும் அந்த நோய் இருக்குமோ?' என்று எண்ணிய அளவிலேயே அவரது இதயம் இடிந்து நொறுங்கி விட்டால் என்ன செய்வது? அவரைப் பிறகு யார்தான் தேற்ற முடியும்? எப்படித்தான் தேற்ற முடியும்?''

'' சரி; அவருடைய உள்ளம் ஒடிந்து விடுமே என்று நீங்கள் ஒதுங்கி நின்றாலும்—அவருக்குச் சோதனை செய்து பார்க்காமல் விட்டு விட்டாலும்—உங்களுடைய உள்ளத்திலே ஆழமாகப் பாய்ந்திருக்கும் அந்தக் கூரான அச்சமுள்ளை எப்படித்தான் கீறி எடுத்து எறிவது? ' இவருக்கும் தொழுநோய் இருக்குமோ?.. தொழுநோய் இருக்குமோ? .. நமக்கும் அது வந்து விடுமோ? ........அது வந்து விடுமோ?' என்று பயந்து பயந்து அந்தப் பீதி நெருப்பிலேயே நீங்களும் எத்தனை காலத்திற்குத்தான் வெந்து வெந்து கருகுவது? வேதனையில் புழுங்கியே சாவது?''

'' அதை நினைத்தால்தான் டாக்டர், என் நெஞ்சே வெடித்து விடும்போல் இருக்கிறது !''— என் நெஞ்சே வெடித்து விடும்போல் இருக்கிறது !'' —சன்னல் அருகே நின்று பேசிக்கொண்டிருந்த தேன்மொழி, குமுறிக்குமுறிக் கதறியவாறே சட்டென்று அந்தச் சுவர் ஓரமாகவே சரிந்து விழுந்தாள். தன் உள்ளங்கைகளிலே முகத்தைப் புதைத்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

அவளுடைய அழுகுரலைக் கேட்டு—அவல நிலையைப் பார்த்து—டாக்டர் பூங்கொடிக்கும் துயரச் சுமையைத் தாங்க முடியவில்லை; அவளது நெஞ்சு விம்மியது; கண்கள் பனித்தன.

சோபாவிலிருந்து எழுந்து போய்த் தேன்மொழியை ஒட்டித் தானும் கீழே அமர்ந்து கொண்டு அவள் தோளை ஆதரவாகப் பற்றினாள்; சின்னக் குழந்தை மாதிரிச் செருமித் தேம்புகின்ற அவளைத் தன் நெஞ்சோடு இறுக அணைத்துக் கொண்டு அவளது முதுகை வருடிக் கொடுத்தாள் பரிவாக.




அந்த அழுகை—ஆறுதல் நிலையிலேயே சில மணித்துளிகள் ஆவியாகப் பறந்தன.

பின்னர், பூங்கொடி இப்படித் தணிந்த குரலில் மொழிந்தாள்;

'' கவலைப்படாதீங்க, தேன்மொழி! உங்களுடைய வேதனைக்கெல்லாம் ஒரு விடிவு காலம் ஏற்படாமல் போகாது; நானும் எப்படியாவது இதற்கொரு வழி கண்டுபிடிக்காமல் விடமாட்டேன்.

—என்றவள், திடீரென்று ஏதோ ஒரு புதிய திட்டம் தன் மூளையிலே மின்னலிட்டவளைப் போல,

'' ஆமாம், இப்படிச் செய்தால் என்ன ?''

—என்று தேன்மொழியின் காதிலே கிசுகிசுத்தாள்.

அதைக் கேட்டதும் அந்த வேதனைப் புருவின்விழிகள் சற்றே அகல விரிந்தன வியப்பினால்.

* * *

மறுநாள் காலையிலேயே தங்களுடைய திட்டத்தை நிறைவேற்றிவிட மாதவனின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருந்தாள் தேன்மொழி.

அவனோ.......அன்று மட்டும் அல்ல, அடுத்த ஐந்தாறு நாட்களும் கூட அந்தப் பக்கம் தலைகாட்டவே இல்லை.

' பேரின்பமுத்து நிறுவன'த்தைச் சார்ந்த பல்வேறு நிருவாக அலுவலகங்களையும், தொழிற்சாலைக் கூடங்களையும் நேரடியாகவே சோதனை செய்யவும் மேற்பார்வையிடவும் அவன் கிளம்பிவிட்டான்.

பகலில் எப்போதாவது ஒரு முறை தொலைபேசியில் அழைப்பான் தேன்மொழியை.

'' நலமாக இருக்கிறாயா? ஏதாவது தேவையா? பணியாட்கள் எல்லாம் வீட்டில் ஒழுங்காக வேலை பார்க்கிறார்களா? நேரா நேரத்திற்குச் சாப்பிடுகிறாயா? பொழுது போகாவிட்டால் ஏதாவது திரைப்படத்துக்குப் போவது தானே?''

—என்று பொதுப்படையான கேள்விகளைத் தொடுப்பான்.

'' தினம் ஒரு தடவையாவது இங்கே வீட்டுக்கு வந்து முகத்தைக் காட்டிவிட்டுப் போகக் கூடாதா ?

ளவோ கெஞ்சலாகக் கேட்டும் அவன் வரவில்லை.

'' எனக்கு எங்கே தேன்மொழி நேரம் ஒழிகிறது? ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அலுவலகத்தையும் சுற்றி வருவதற்கே பொழுது போதமாட்டேன் என்கிறது! பெரியவர் தான் இல்லையே—நாம் எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம்—என்கிற பொறுப்பில்லாத போக்கு நம் ஊழியர்களிடம் ஏற்பட்டுவிடக்கூடாது பார்; அதற்காகத்தான் நான் இப்படி அலைந்து அலைந்து திடீர்ச் சோதனைகள் செய்ய வேண்டி இருக்கிறது. ''

—என்று தான் அவளை வந்து சந்திக்க முடியாமைக்குத் தொலைபேசியிலேயே முகாந்திரம் கூறிக் கொண்டிருந்தான் மாதவன்.

'' எனக்கு உடம்பு முடியவில்லை; உங்களோடு சேர்ந்து போய் யாராவது நல்ல டாக்டரிடம் காட்டிக் கொண்டால் தேவலாம்போல் தோன்றுகிறது''.—என்று பொய்யையும் அவிழ்த்துவிட்டுப் பார்த்தாள் தேன்மொழி.

'' உங்களுடைய குடும்ப டாக்டர், பூங்கொடி ஊரில் இல்லையா? அவரைவிட னுமொரு கெட்டிக்கார டாக்டர் வேறே யார் இருக்கிறார்கள்? நீ உடனே காரை எடுத்துக்கொண்டு போய் அவரிடம் காட்டிக்கொள்ள வேண்டியது தானே? அல்லது அவரையே வீட்டுக்கு வரச் சொன்னாலும் போச்சு...... நான் கூட வராவிட்டால் என்ன, தேன்மொழி? இதற்கு முன்னெல்லாம் நான்தான் உன் கூடவே வந்தேனா? நேரங் கிடைக்காததால் தான் இப்படிச் சொல்கிறேன். நீ ஒன்றும் தப்பாக எடுத்துக் கொள்ளாதே!''

—என்று அவன் தட்டிக் கழித்தும் விட்டான் தந்திரமாக.

மாதவன் இப்படித் தொடர்ந்து தன் இல்லத்திற்கு வந்து தன்னைச் சந்திக்காமலே போனது தேன்மொழியின் நெஞ்சிலே புதியதொரு சந்தேக விதையைத் தூவிவிட்டது.

' ஒருவேளை நானும் டாக்டர் பூங்கொடியும் அன்றைக்குப் பேசிக் கொண்டிருந்தது அவருடைய காதிலும் விழுந்திருக்குமோ? அதனால்தான் வேலையைச் சறுக்குச் சொல்லி இப்படி ஒதுங்கிப் பார்க்கிறாரோ!

—என்று அஞ்சித் தவித்தாள் அவள்.

' அப்பா எவ்வளவோ எடுத்துச் சொல்லி எல்லாப் பொறுப்புக்களையும் ஒப்படைத்த பிறகு, இவர் எங்கள் வீட்டிலேயே வந்து தங்கிக் கொள்ள வேண்டியதுதானே! இவர் எப்படி முன்போலவே வாடகை வீட்டிலே தங்கிக் கொள்ளலாம்? இதைப்பற்றி அப்பாவுக்கும் எழுத வேண்டியது தான்; அதற்கு முன்னே இவரையும் ஒரு வார்த்தை கண்டிப்பாகக் கேட்டுவிட வேண்டியதுதான். ஆனால், போனில்தான் இவர் சரியாகப் பேசவே இடங்கொடுக்காமல் உடனே உடனே வைத்து விடுகிறாரே!......இருக்கட்டும் இருக்கட்டும்; ஒருநாள் காலையிலேயே அவர் குடியிருக்கிற வீட்டிற்கே போய் அவரைக் கேள்வி கேட்டு மடக்காமலா விடுவது?'

—தன் இதயத்தில் அலைபாய்ந்த எண்ண ஓட்டங்களுக்கு உடனே வடிவங் கொடுத்துவிடத் துடித்தாள் தேன்மொழி.

அவ்வாறே ஒருநாள் காலை தன் பியட் காரை எடுத்துக் கொண்டு மாதவனின் வீடு நோக்கிப் பறந்து சென்றாள்.

அங்கோ.....அவன் ஒரு பெண்ணிடம் முகமலர்ச்சியோடு உரையாடிக் கொண்டிருந்தான்.

(வளரும்).


# காலக் கண்ணடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந் திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.

மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ!

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**

பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

உயர்ரகத்தைக் குறிக்கும்
வாட்டர்மார்க்



ECL 596 177 THA




**வேளாண்மை வினாக்களே கேட்கப்படவேண்டும்**

**வினா :** 'தமிழரசு' டிசம்பர் 1-ஆம் தேதி இதழ், பக்கம் 23-ல் 'நெல்லடிக்கும் பொறி' என்ற கட்டுரையைப் படித்தேன். அந்தக் கருவி எங்கு கிடைக்கும் என்ற விவரத்தைத் தெரிவித்தால் பேருதவியாக இருக்கும்.

—என். ஆர். வெங்கடேசன்,
துறையூர்.

**விடை :** தாங்கள் கேட்டுள்ள நெல்லடிக்கும் பொறி கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் ஆராய்ச்சிக் கூடத்தில் கண்டு பிடிக்கப்பட்டதாகும். அக்கருவியைப் பெறுவதற்குக் கீழ்க் கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

உதவி வேளர்ண்மைப்
பொறியாளர் (ஆராய்ச்சி),
தமிழ்நாடு வோளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

* * *

**வினா :** நான் 85 சென்ட் நிலத்தில் ஐ.ஆர். 8 நெல் பயிரிட்டு இருக்கிறேன். நல்ல முறையில் யூரியா முதலிய உரங்கள் இட்டும், பயிர் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. சில இடங்களில் செழித்து வளர்ந்து இருக்கிறது. நாற்று நட்டு 34 நாட்கள் ஆகின்றன. இப்பயிர் செழித்து வளர என்ன செய்ய வேண்டும்?

—கே. நாகப்பன்,
ஞாமேடு.

**விடை :** ஐ. ஆர். 8 நெல்லிற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள அளவு இரசாயன உரத்தைப் பரவலாகவும், ஒரே சீராகவும் நிலத்தில் இட்டிருந்தால், பயிர் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக செழித்து வளர்ந்திருக்கும். தாங்கள் அவ்வாறு செய்யாததனாலேயே ஒரே மாதிரியாகச் செழித்து வளராமல் சில இடங்களில் மட்டும் வளர்ந்திருக்கக்கூடும். பூச்சிகள் அல்லது நோய்களின் தாக்குதலாலும் சில இடங்களில் பயிர்கள் கரைந்து காணப்படலாம். எனவே தவறாமல் மருந்து தெளிக்க வேண்டியதும், மேலுரமிட வேண்டியதும் அவசியமாகும். ஐ. ஆர். 8 நெல்லிற்கு நடவு செய்த 25-ஆம் நாளும், 55-ஆம் நாளும் ஆக இருமுறை மேலுரம் இடவேண்டும். எனவே நடவு செய்த 55-ஆம் நாள், 15 கிலோ தழைச் சத்து அளிக்க, 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவை மேலுரமாக இடுங்கள். இவ்வாறு செய்தால், மகசூல் மிகுதியாகக் கிடைக்கக் கூடும்.

* * *

**வினா :** உருளைக்கிழங்குகளை எம்மாதங்களில் பயிர் செய்யலாம்? விதை உருளைக் கிழங்குகளை எங்கே பெறலாம்?

—எஸ். எம். வேலு,
பனசக்காடு, புதுக்கோட்டை.

**விடை :** சமவெளிப் பிரதேசங்களில் கோ-சிம்லா உருளைக் கிழங்கு ரகத்தைப் பயிரிடலாம். இந்த ரகத்தைக் கீழ்க்கண்ட 3 பருவங்களில் பயிரிடலாம் :—

1. ஏப்ரல் முதல் ஆகஸ்டு.
2. செப்டம்பர்முதல் டிசம்பர்.
3. பிப்ரவரி முதல் மே.

இதில் செப்டம்பர்-டிசம்பர் பருவமே நல்ல மகசூல் தருகிறது.

புதுக்கோட்டைப் பகுதியின் காலநிலை உருளைக்கிழங்குச் சாகுபடிக்கு ஏற்றதாக இருக்க முடியாது. எனவே புதுக்கோட்டையில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலரின் ஆலோசனையைக் கேட்டுக் கொண்ட பிறகு, உருளைக்கிழங்கு சாகுபடியில் ஈடுபடுவது சிறந்தது.

* * *

**வினா :** கோ-9 என்ற கேழ்வரகு ரகம், கோ-7 என்ற கேழ்வரகு ரகத்தை விட எவ்வகையில் சிறந்தது?

—வாதானூர் கிராம
வானொலி மன்றம்,
புதுவை மாநிலம்.

**விடை :** கோ-9 என்ற கேழ்வரகு ரகம் தமிழ் நாட்டில் எல்லா இடங்களிலும் பயிரிடச் சிறந்தது. கோ-7 ரகத்தை விட அதிக மகசூல் தரக்கூடியது. பூச்சிகளாலும், நோய்களாலும் அதிகம் தாக்கப்படாது; களர் தன்மையை அதிகம் தாங்கக் கூடியது; அதிக அளவு புரதச் சத்தையும் கொண்டுள்ளது.

**வினா :** கரும்புக் கரணைகளை நடுவதற்கு முன்பு, எந்த மருந்திலாவது நனைத்து நடவேண்டுமா?

—மேல்மாயில் கிராம
வானொலி மன்றம்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

* * *

**விடை :** 224 கிராம் அகலால் அல்லது 112 கிராம் அரிட்டான் மருந்தை 45 லிட்டர் தண்ணீரில் கரைத்துக்கொண்டு, அந்தக் கரைசலில் கரும்புக் கரணைகளின் வெட்டு முனைகளை நனைத்து நடுவதே சிறந்தது.

**வினா :** சூரியகாந்தி பயிரிட ஆவல் உள்ளவனாக இருக்கிறேன். பட்டம், செயல்முறை, விதையளவு தெரிவிக்கவும். விதை கிடைக்குமிடமும் தெரிவிக்கவும்.

டி. பாலகுருநாதன்,
விருத்தாசலம்.

**விடை :** சூரியகாந்தி பயிரிடுவதற்குரிய பட்டம், ரகம், விதையளவு, உரமிட வேண்டிய அளவு, பின்செய் நேர்த்தி ஆகியவைகளைப் பற்றி அறிவதற்காக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# முன்னேற்றத்திலும்
# செழிப்பிலும்
# எமது பங்கு

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

## TANSI

### தொழில்

* கட்டுமான கட்டமைப்புகள்
* தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
* எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக்கப்பட்ட உறுப்புகள்
* மின் தடுப்புச் சாதனங்கள்
* விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
* இனாமல், டிசிசி கம்பிகள்

### விவசாயம்

* வேளாண்மைக் கருவிகள்
* பயிர் பாதுகாப்பு கருவிகள்
* டிராக்டர் தொடர்பு வண்டி
* மோட்டார் விசையேற்றங்கள்
* கரும்பாலை
* வடிமுனைக் குழாய்கள்

### அன்றாட உபயோகப் பொருட்கள்

* எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
* மருத்துவமனை சாமான்கள்
* கதவுகளுக்கான பூட்டு
* தாழ்ப்பாள்கள்
* சுகாதார வசதி பொருட்கள்
* பீங்கான் பொருட்கள்
* காலணிகள்
* தோலணிப் பொருட்கள்

### ஏற்றுமதி

* பல வண்ண சாதாரண தோல்கள்
* நீலநிற ஈரமான குரோம் தோல்கள்
* கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

ஆராய்ச்சியின் முடிவு தெரிந்தவுடன் 'தமிழரசு' இதழில் விளக்கமாகத் தெரிவிக்கப்படும். அதுவரைத் தயவு செய்து பொறுத்திருங்கள்.

* * *

**வினா:** 'காரட்' பயிர் செய்வது எவ்வாறு? விதைகள் எங்கே கிடைக்கும்? புன்செய் நிலங்களில் செவ்வல் மண்ணில் பயிராகுமா? விவரமாக விளக்குமாறு வேண்டுகிறேன்.

—ஆர். சேஷாத்திரி,
தலைவர், ஊராட்சி மன்றம்,
துளசேந்திரபுரம்,

**விடை:** 'காரட்' பயிர் செய்வதற்குத் தண்ணீர் நன்கு வடியக்கூடிய குறுமண் நிலமே மிகவும் ஏற்றது. மழைக் காலம் தவிர, ஆண்டு முழுவதும் காரட்டைப் பயிரிடலாம். 'லேட் நான்டிஸ்', 'பூசா கேசன்' என்ற 2 ரகங்களும் தமிழ் நாட்டிற்கு மிகவும் சிறந்தது. ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு உரமிட்டு நிலத்தை நன்கு புழுதியாக உழ வேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 100 கிலோ அமோனியம் சல்பேட், 125 கிலோ சூப்பர் பாஸ்பேட், 20 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இட வேண்டும். அதன்பின் வயலில் ஒரு அடி தூரத்திற்கு ஒரு பார் வீதம் அமைக்க வேண்டும். பார்களில் தண்ணீர் விட்டு 6 அங்குல இடைவெளியில் விதைகளை ஊன்ற வேண்டும். ஒரு ஏக்கர் காரட் பயிரிட 2 கிலோ விதை வேண்டும். வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். களைகளை அவ்வப்பொழுது அகற்றிவிட வேண்டும். விதை ஊன்றிய 3-வது வாரத்தில் 50 கிலோ அமோனியம் சல்பேட் மேலுரமாக இட வேண்டும். கிழங்கு வெளியே தெரியாமல் மண் அணைத்து விடவேண்டும். இல்லாவிட்டால் கிழங்குகள் பச்சை நிறமாகி, விற்பனை மதிப்பை இழந்து விடுகின்றன. ஒரு ஏக்கரிலிருந்து சுமார் 4,500 முதல் 5,000 கிலோ வரை மகசூல் கிடைக்கும்.

* * *




குடிசை மாற்று வாரியம் அமைப்பதற்குமுன் கட்டப்பட்ட கட்டடங்கள், தீப்பிடிக்காத வீடுகள், ஒதுக்கப்பட்ட மனைகள் முதலியன.

| | | |
|---|---|---|
| 1 | குடியிருப்புகள் | 7,366 |
| 2 | தீப்பிடிக்காத வீடுகள் | 5,122 |
| 3 | திறந்தவெளி மனைகள் | 7,979 |
| 4 | தற்காலிகக் குடியிருப்புகள் | 630 |

குடிசை மாற்று வாரியம் அமைக்கப்பட்ட பின் துவக்கப்பட்டுக் கட்டடங்கள் முடிவடைந்து ஒதுக்குவதற்குத் தயாராக உள்ளவை.

| | | |
|---|---|---|
| 1 | மாம்பலம் ஏரிக்கரை (போக்ரோடு ஓரம்) | 232 |
| 2 | மாம்பலம் ஏரிக்கரை (அண்ணாசாலை ஓரம்) | 128 |
| 3 | சுபேதார் தோட்டம் | 126 |
| 4 | அப்பாவு நகர் | 36 |
| 5 | பிருந்தாவனம் | 108 |
| 6 | ஆண்டிமானியம் | 84 |
| 7 | டொம்மிக் குப்பம் | 128 |
| 8 | வெங்கடாபுரம் | 242 |
| 9 | நொச்சி நகர் | 259 |
| | | 1,343 |

**வினா:** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் பேப்பர் மரத்தைப் பற்றிப் பேசி வருகிறார்கள். அது விவசாயிகளுக்கு நல்ல வருவாய் தருவதாகவும் கூறப்படுகிறது. ஆகவே ஒரு ஏக்கரில் சாகுபடி செய்வதற்குள்ள நடைமுறைத் திட்டங்களையும், பலனை எங்கு அனுப்பினால் பணம் கிடைக்கும் என்ற விவரத்தையும் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று எண்ணுகின்றேன்.

—கணபதி,
சங்கரநயினார்கோவில்.

**விடை:** மாண்புமிகு தமிழ் நாடு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளது பேப்பர் மரமல்ல; புளிச்சைக் கீரைச் செடிகளையே அவர் குறிப்பிட்டுள்ளார். புளிச்சக் கீரைச் செடியின் தண்டுகளை அறைத்துக் கூழாக்கிக் காகிதம் தயாரிக்கலாம். இதைப் பயிரிடத் தண்ணீர் அதிகம் தேவைப்படாது. 5 மாதங்களில் நன்கு வளர்ந்து, ஏக்கருக்கு 40 டன் வரை தண்டுகள் கொடுக்கும். இதனால் அதிக வருவாயும் கிடைக்கும். 1,000 ஏக்கரில் பயிராகும் புளிச்சைக் கீரைகளின் தண்டு, ஒரு தொழிற்சாலை அமைப்பதற்குப் போதுமானதாகும். தமிழ் நாட்டில் 10 இடங்களில் இத்தகைய தொழிற்சாலைகளை அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. எனவே இத்திட்டம் அனுமதிக்கப்பட்ட பிறகே, இது பற்றிய விவரங்கள் வெளியிடப்படும்.

# கனிச்சாறு பாயும் கல்லாறு



பாளை கமுகு பரிசுடைப் பந்தல் இட்ட பாதையில் மேட்டுப்பாளையத்திலிருந்து உதகை செல்வோருக்கு நான்காவது மைலில் ஒரு தித்திப்பான அனுபவம் கிடைக்கும்.

இடது புறத்தில் சிறியதோர் பாதை பிரியும். அதில் நுழைந்து நுழைந்து நான்கு பர்லாங்குகள் நறுமணக் காற்றை முகர்ந்த வண்ணம் தொடர்ந்து சென்றால் பழமுதிர்சோலை ஒன்று பார்வையில் தெரியும். வகை வகையான வண்ணங்களிலும் அளவுகளிலும் குலை விடும் வாழைகள், பலா, அன்னாசி, சப்போட்டா, மங்குஸ்தான், ரம்பூத்தான், ரோஸ் ஆப்பிள், செர்ரி, திராட்சை, சீனத்துலிச்சி, கேரம்போலா, பேரிக்காய், கிச்சிலி என எத்தனை கனி வகைகள் அங்கே!

நினைக்கும் பொழுதே நாவில் நீர் ஊறுகிறதல்லவா!

1900-ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அரசினர் தோட்டம் இது. 1,300 அடி உயரத்தில் அமைந்திருக்கும் இந்தப் பண்ணையில் பழ வகைகளைப் பற்றிய ஆராய்ச்சிகள் நடக்கின்றன. 22—23 ஏக்கர் நிலத்தில் ஒவ்வொரு அடி மண்ணையும் அருமையுடன் பண்படுத்திச் செடிகளை வளர்த்து வருகிறார்கள். மெத்தென்ற மண்ணின் மீது இந்தச் சோலைக்குள் நடந்து செல்வதே தனிச் சுகம்தான்.

விதையே இல்லாத எலுமிச்சை இங்கே விளைகிறது. ரம்பூத்தான் என்றொரு பழம்; குட்டிப் பலாப் பழத்தைப் போன்று தோற்றமளிக்கிறது. மேல் தோலுக்கும் கொட்டைக்கும் இடையே உள்ள வெண்மையான பகுதி கற்கண்டு கலந்த பாலைப்போல இனிக்கிறது.

பாக்கு மரத்தைப் போன்று நெடிது வளர்ந்திருக்கும் பலா மரத்தில் மாங்காயைப் போன்று பழங்கள் தொங்குகின்றன. இந்த விந்தையான பலாமரம் சிங்கப்பூரைச் சேர்ந்ததாம். நம்முடைய நாட்டுப்பலாமரங்கள் பயன்தர ஏழு முதல் பத்து ஆண்டுகள் ஆகும். ஆனால், சிங்கப்பூர் பலா 42 திங்களில் நிறமும் மணமும் மிக்க கனிகளை அதிக அளவில் தருகிறது.

செர்ரி வகைகள் இங்கு உண்டு. மங்குஸ்தான், மலேசியன் ஆப்பிள் ரகங்களும் நிறையப் பயிராகின்றன.

ஊட்டச் சத்து இயல்பாக உள்ள வளமான மண்ணில் செடிகள் செழித்து வளர்ந்திருக்கின்றன. கூனூர் நதியிலிருந்து பாசனத்திற்கு நீர் கொண்டு வரப்படுகிறது.

பழ வகைகளோடு, கிராம்பு, இலவங்கம், சாதிக்காய் போன்ற நறுமணப் பொருள்களும் கோக்கோ போன்ற பான வகைகளும் சத்துமிக்க தவசிக் கீரையும் கூட, கல்லாற்றுப் பண்ணையில் செழித்து வளர்கின்றன.

கடையிலே சென்று கனி வகைகளை வாங்குவதைவிட, தோட்டத்தில் நுழைந்து அவற்றைப் பெறுவதில் ஒரு தனிச்சுவை இருக்கத்தானே செய்கிறது! உதகைக்கு வழக்கமாகச் செல்வோர், வழியில் கல்லாறைக் காணாமல் செல்வதில்லை. பருவக் காலத்தில் இந்த ஆராய்ச்சிப் பண்ணை ஒரு சந்தையைப் போலத் தோற்றமளிக்கும். ஆண்டுக்கு 55,000 ரூபாய்க்கு மேல் இங்கு விற்பனை ஆகிறதென்றால் பண்ணையின் பெருமைக்கு வேறென்ன சான்று வேண்டும்?

# முற்றிலும் பயன்தரும் மரம்



தலைவலி பொறுக்க முடியவில்லையா! உங்கள் கரம் நீலகிரித் தைலத்தைத் தானே தேடுகிறது!

யூகலிப்டஸ் மரத்தில் நூற்றுக் கணக்கான வகைகள் உண்டு. அவற்றில் தைலம் அதிகமாகத் தருகின்ற ப்ளூ கம் (Blue gum) எனப்படும் யூகலிப்டஸ் க்ளோபுலஸ், தன் பிறந்த அகமான ஆஸ்திரேலியாவிலிருந்து, 'உதக மண்டலத்துக்கு வந்து 130 ஆண்டுகள் ஆகின்றன.

யூகலிப்டஸை முதன் முதலில் நீலகிரியில் உருவாக்கியவர் கேப்டன் எப். பகாட்டன் என்பவர். ஆனால், ஆரம்பத்தில் பெரும்பாலான செடிகள் வளராமலேயே பட்டுப் போய்விட்டன. 1863-ல் கவர்னர் வில்லியம் டெனிசன் பரவலாகப் பயிரிடத் திட்டமிட்டார்.

தொடக்கத்தில் யூகலிப்டஸ் அடுப்புக்கு உதவும் கட்டையாகவே பெரும்பாலும் பழக்கத்தில் இருந்தது. இன்று, அடி முதல் நுனிவரை அது முற்றிலும் பயன்தரும் மரமாகிவிட்டது.

அதன் கசக்கப்பட்ட இலையிலிருந்து பாக்டீரியாவை முறியடிக்கும் உலகப் புகழ்பெற்ற நீலகிரித் தைலம் எடுக்கின்றனர். அதன் பூக்களிலிருந்து நிறைந்த தேன் கிடைக்கிறது. மரத்தின் கூழ், காகிதம் தயாரிக்க மிகவும் உகந்ததாகிறது. யூகலிப்டஸைப் பயன்படுத்தி மேட்டுப்பாளையத்தில் ரேயான் தயாரிக்கும் தொழிற்சாலை, ஈராயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திருப்பதுடன் ஆண்டுக்கு மூன்றரைக் கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை மீதப்படுத்துகிறது. யூகலிப்டஸின் வளர்ச்சியால் அது விளையும் மண்ணும் நல்ல சத்தினைப் பெறுகிறது. காற்றின் வேகத்தைத் தடுத்து உதவுகின்ற இம்மரத்தின் கட்டைகள், கூரைகளில் அமைக்கவல்ல எழில் விரிப்புகளாகவும் உதவுகின்றன.

களத்தில் இட நெருக்கடியை நினைத்தே, கால்வாயில் தண்ணீர் வந்தவுடன், அவசரத்துடனே நட்டு முடிப்பதில் முந்திக்கொள்வார்கள். அறுவடையும் முந்தி வரும்; களத்தில் ஆற அமரக் கதிரடித்து முடிக்கலாம்.

முந்திக் கொண்டவன் அறுவடையை, அவன் அளந்தெடுக்கும் கண்டு முதல் எவ்வளவு என்பதைக் கிராமமே உன்னிப்பாகக் கவனிக்கும். மேடேறி விட்டால், அடுத்த போகம் களம் காணும் வரையிலும், தலை நிமிர்ந்து நடக்கலாம். இல்லையெனில் முந்திக் கதிரறுத்து, குத்தகைக்கே கட்டிவராமல், அதோ தலையிலே கை வைத்து உட்கார்ந்து விட்டானே பெருமாள்—இந்தக் கதிதான்.

முதல் போகத்தை விட இரண்டாம் போகம் மேலும் சுழித்து விட்ட அதிர்ச்சியில் கதிகலங்கிப் போய் விட்டான் பெருமாள். இப்படியும் கையைக் கடிக்கும் என்பதை அவன் எதிர்பார்க்கவே இல்லை. மூச்சுத் திணறியது.

அடுத்துச் சோத்துக்கு என்ன செய்வது? அடுத்த போகம் நடவுக்கான செலவுக்குத்தான் எங்கே போவது. கூட்டுறவுச் சங்கத்தில் நுழையலாமென்றாலோ, பழைய கடன் தலைக்குமேல் நிற்கிறதே! மறுபடியும் 'நெல் வட்டி'க்குக் கடன் வாங்கி அதிலேயே மூழ்கிப்போக வேண்டியது தானா? குடும்பம் பூராவும் அல்லவா உட்கார்ந்து அழப்போகிறது!

பெருமாளுக்கு நெஞ்சு கனத்தது.

எதிரே-சூட்டடி நெல் ஐந்து மூட்டைகள் தேறுமா? அதையும் அறுவடைக் கூலிக்கு அளந்து விட்டால், ஆள் மட்டும் தப்பி, களத்திலிருந்து வெளியேறிக் கொள்ளலாம். தலையடி நெல் பூராவையும் காலையிலேயே 'ஐயா' கொண்டு போய் விட்டார். முதலாளியை நொந்து கொண்டு என்ன பயன்? முதல் போகத்தில் குத்தகை நெல்லே கொடுக்கவில்லை. இப்போதும் கையை விரிக்க முடியுமா?

வீட்டிற்கு மதியச் சோறு கொண்டு வரச் சென்றிருந்த சி[illegible]யம்மாளின் தலையைக் 'கண்டதும், பெருமாளுக்கு மேலும்



இரக்கம் உண்டாயிற்று. அவளுக்குப் பொருமல் அடங்க வில்லை.

அவனுக்கு எதிரே வந்து நின்ற சீனியம்மாள், தூக்குப் போணியையும், தண்ணீர்ச் செம்பையும் அவன் முன்னால்வைத்துவிட்டு, முந்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டே புருசனைத் திரும்பிப் பார்த்தாள்.

''பிடிச்சுவச்ச பிள்ளையார் மாதிரிஎதுக்கு உட்கார்ந்திருக்கே? களத்தைக் காலி பண்ணு'' என்றாள்.

காலமும் நேரமும் ஒத்து வரவில்லை என்ற பெருமூச்சோடு எழுந்து, செம்புத் தண்ணீரால் கைகளைக் கழுவிக் கொண்டான் பெருமாள்.

இந்த மனச் சுமையில் சோறு தான் வாய் நிறையுமா? உண்ணும் போதாவது இவள் பேசாதிருக்கப் போகிறாளா?

பெருமாள் சாப்பிட உட்கார்ந்தான்.

ரசமும் ஊறுகாயும் தானா? இதை இப்போது வாய் திறந்து கேட்டு விட முடியுமா?

களத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டுப் புலம்பிக் கொண்டே முன்னால் வந்து நின்றாள் சீனியம்மாள்.

'' மண்ணு விளையலையின்னா என்ன செய்யச் சொல்றே? சும்மா பாத்துப் பாத்துப் பொருமுறியே'' என்றான் பெருமாள் சோத்தைப் பிசைந்தபடியே.

சீனியம்மாள் சீறினாள்.

''இதை வேறு யாருகிட்டேயும் போய்ச் சொல்லு. முதல்லே ஒழுங்கா விதை நெல்லைக் கட்டி வச்சியா? நாத்துப் பாவுற வரைக்கும் நினையாமத் திரியிறது. ஆத்திர அவசரத்துக்கு யாரு கிட்டயோ கடனுக்கு விதை நெல்லை வாங்கியாந்து அவுத்துக் கூடப் பாக்காம முளைக்கப் போட்டியே. குறுகிப் போயி நின்ன பயிருக்கு மேலுரமாவது தூவுனியா? நான் அப்பவே நினைச்சேன். அப்படியே தான் ஆகிப் போச்சு. நல்லா நிமிந்து பாரு. வைக்கோல்தான் மிச்சமாகப் போகுது. இதுக்கு மேலே நீயும் நானும் அதைத்தான்திங்கணும்'' என்றாள் ஆவேசத்தோடு.

பெருமாளுக்கு வாயிலிருந்த சோறு தொண்டையிலே இறங்கவில்லை. ஆனாலும் இந்தச் சூட்டோடு, அடுத்துச் சொல்ல இருந்ததையும் சொல்லி விட்டான்.

'' வைக்கோலையும் களத்திலேயே வித்துப் போடப் போறேன் '' என்றான் முணுமுணுத்த குரலில்.

'' ஏன் இதையும் வித்துப் போட்டா—மாடுக மண்ணையா தின்னும்? திட்டம் போடுறியாக்கும் '' என்று பொரிந்தாள்.

பெருமாளும் தொடர்ந்தான்.

'' மாட்டையும் தான் கொடுத்திடப் போறேன். கூலிக்கி ஏர்ப் பிடிச்சு நடுறது. அப்புறம் மாடு வாங்கிக்கலாம்'' என்று சொல்லி விட்டு, கைகளைக் கழுவிக் கொண்டான்.

''புத்திதான் போகுது பாரு. நீ தலைகீழா நின்னாலும் மாட்டை விக்க விடமாட்டேன். இருக்கிற காணியையும் விட்டுப் போட்டு, தெருவிலேதான் நிக்கப் போறோம்'' என்றாள் ஆத்திரத்தோடு.

பெருமாளுக்குக் கோபம் வந்து விட்டது.

எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே இவளுக்குப் பேச்சு மீறுதே!

'' இப்ப நீ.... ஒப்பாரி வைக்காமப் போறியா இல்லையா? '' என்று சிம்பினான்.



தவுல் போன்ற இசைக் கருவிகளுக்கு மட்டுமல்ல, குழந்தைகளுக்கான காலணிகள், பைகள், அழகுச் சாமான்கள், கால்பந்து போன்ற விளையாட்டுப் பொருள்கள் முதலியன செய்ய இதன் தோல் பயன்படுகிறது.

'' தலையிலே கையை வச்சு உட்கார்ந்திட்டதிலே குறைச்சலில்லே. ரோசம் வருதாக்கும் ரோசம்'' என்றாள் கைகளை வீசியவாறு.

அவ்வளவுக்குள் பெருமாளுக்குக் கோபம் பொங்கித் தட்டி விட்டது. துள்ளி எழுந்தான்.

'' இன்னிக்கி உனக்குப் போங்காலந்தான் வந்திருக்கு '' என்று பெருங் குரலில் சொல்லிக் கொண்டே அவளை நெட்டித் தள்ளினான்.

இமைக்கும் நேரத்தில் கதிரடிக்கும் பலகையில் நெற்றி மோதி, குப்புற விழுந்தாள் சீனியம்மாள். அவளை மேலும் அடிக்க பெருமாள் பாய்ந்த போது, சுற்றியிருந்தவர்கள் ஓடி வந்து அவனைப் பிடித்துக் கொண்டனர்.

சீனியம்மாள் தட்டுத்தடுமாறி எழுந்தாள். அவள் நெற்றியில் பட்டிருந்த காயத்திலிருந்து இரத்தம் வழிந்தது.

அதே சமயத்தில், பெருமாளின் மகள் செல்வி, வீட்டிலிருந்து முக்கியமான செய்தியை மடியிலே கட்டிக் கொண்டு, மேல் மூச்சு வாங்க ஓடி வந்தவள், தாயின் கோலத்தைக் கண்டு திகைத்து நின்றாள்.

பெற்றோரைப் பார்த்துக் கண் கலங்க நிற்கும் மகளை, பக்கத்திலே இழுத்து அணைத்துக் கொண்டு, '' என்னம்மா? '' என்று கேட்டாள் சீனியம்மாள்.

'' பட்டாளத்து மாமா வந்திருக்கு '' என்று பரபரப்போடு சொன்னாள் மகள். அவளுக்குப் பத்து வயதிருக்கும்.

சீனியம்மாளுக்கு மெய் சிலிர்த்தது. அந்த நிலையிலும் பூரித்துப் போனவளாக, '' யாரு...... முருகனா வந்திருக்கான் '' என்று ஆவலோடு கேட்டாள்.

தனது ஒரே தம்பி பட்டாளத்தில் இருப்பதில் அவளுக்கு எவ்வளவோ பெருமை. அந்த உடையில் கம்பீரமாக நிற்கும் தம்பியின் புகைப்படத்தைத் தினமும் சற்று நேரமாவது நின்று பார்க்காமல் தீராது அவளுக்கு.

வடக்கே சண்டை நடக்கும் எல்லையில் இருப்பதாக எழுதி இருந்தான் முருகன்.

தம்பி வந்திருக்கானு ?

பரபரப்புடன், சூழ்நிலையையே மறந்தவளாக, மகளையும் இழுத்துக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தாள் சீனியம்மாள்.

தன்னைத் திரும்பியே பார்க்காது செல்லும் அவளைத் திகைப்போடு பார்த்துக் கொண்டு நின்ருன் பெருமாள்.

இந்த நேரங்காலம் பார்த்துத் தான் மச்சினன் வந்து நிற்க வேண்டுமா ? அக்காளிடம் உயிரையே வைத்திருப்பவன். இவள் நெற்றியில் காயத்தோடு போய் நிற்கும்போது, அந்தப் பட்டாளத்துக்காரன் கையில் துப்பாக்கி இருந்தால், பெருமாளை இங்கேயே சுட்டுத் தள்ளி விட மாட்டானு ?

தயங்கினுலும், தூரம் தொலைவிலிருந்து அவன் வந்திருக்கும் போது வீட்டிற்குப் போகாதிருக்க முடியுமா ?

* * *

பெருமாள் வீட்டிற்குள் நுழைந்த போது, '' என்னக்கா இது நெத்தியிலே காயம்? ரெத்தம் வருதே!'' என்று பதட்டத்தோடு கேட்டுக் கொண்டிருந் தான் முருகன்.

பெருமாளுக்கு உள்ளுக்குள்ளேயே உதறியது.

'' வா மாப்பிள்ளே '' என்று சுரத்தில்லாமல் கேட்டு விட்டு, சற்றுத் தள்ளி, உள் திண்ணையிலேயே உட்கார்ந்து கொண்டான். நேருக்கு நேராகத் தம்பியிடம் சொல்லி விடத்தான் போகிருள் என்பதை எதிர்பார்த்தே சீனியம்மாளை ஏறிட்டுப் பார்த்தான்.

சீனியம்மாள் நெற்றியைத் துடைத்துக் கொண்டாள்.

எட்டாக் கையிலே—உயிரைப் பணயம் வைத்து பகையாளிகளிடம் போராடி விட்டுவந்திருக்கும் தம்பியிடம், இந்தப் போராட்டத்தை முன்னுல் வைத்துச் சொல்ல வேண்டுமா ? அவனுக்கு மனம் நொந்து போகாதா ?

அவள் தம்பியைக் கண்நிறையப் பார்த்தாள்.

''என்னக்கா காயம்?'' என்று மேலும் சற்றுக் கோபத்தோடு கேட்டான்.



இதன் தோலை மயிருடன் பதனிட்டு உடைகளும் மேசை விரிப்புகளும், தயாரிக்கிருர்கள். இதன் உடலில் பஞ்சு அடைத்து வீட்டில் அழகுக்காகவும் வைக்கிருர்கள்.

''களம் கூட்டுறப்ப பலகையிலே முட்டிக்கிட்டேன் ''என்று சொல்லிச் சிரித்தாள் சீனியம்மாள்

நன்றியோடு அவளைத் திரும்பிப் பார்த்த பெருமாளுக்கு நெஞ்சு படபடத்தது.

'' மாமா எதுக்கு இப்படி உக்காந்திருக்காரு?'' என்று திரும்பிப் பார்த்துக் கேட்டான் முருகன்.

'' அறுவடையிலே பதக்குக் கூட மிஞ்சலே; அந்தக் கவலை அவருக்கு '' என்ருள் சீனியம்மாள்.

'' மாமா—உங்க போக்கு இன்னமும் மாறலையா ? நிலத்திலே வர்ற வருமானத்தை நாலு வழியிலேயும் செலவழிச்சுப் போட்டு, ஏனோ தானேன்னு விவசாயம் செய்தா எப்படி மிஞ்சும்? இதுனுலே வீட்டுக்கும் கேடு, நாட்டுக்கும் நட்டம். மனுசத் தன்மையே மருந்துக்குக் கூட இல்லாத எதிரிகளை முறியடிக்கிறதுக்கு, இங்கே உங்க ஏர்முனை செம்மையா இருக்கணும் மாமா '' என்ருன் முருகன்.

'' மெத்தனமா இருந்தா இப்படித்தான் முடியும். இப்பத்தான் தெரியுது '' என்று கவலையோடு தான் சொன்னுன் பெருமாள்.

'' வந்து நிக்கிறவன் இந்தப் பேச்சை ஆரம்பிச்சா இது தீரப் போகுதா? சோறு போடுறேன்'' என்றழைத்தாள் சீனியம்மாள்.

'' அக்கா இப்ப எதுக்கு வந்திருக்கிறேன் தெரியுமா ? நானே சம்பாதிச்சு உனக்கு நகை செய்து போடணுன்னு ரொம்ப நாளாவே நினைச்சுக்கிட்டே இருந்தேன். யுத்த முனையிலேயே ஆறுமாசம் இருந்ததுக்காக தனி அலவன்ஸ் கொடுத்தாங்க. லீவும் கிடைச்சது. எல்லாத்தையும் சேர்த்து உனக்காகவே எண்ணூறு ரூபா கொண்டாந்திருக்கேன். '' என்ருன் முருகன் பொங்கும் உவகையோடு.

தம்பியின் பாசத்தை நினைக்கும் போது சீனியம்மாளின் கண்களில் நீர் பொங்கியது. தம்பியின் கரங்களைப் பற்றிக் கண்ணிலே ஒற்றிக் கொண்டாள்.

முருகன் மாமனின் பக்கமாகத் திரும்பினுன்.

'' எந்திரிச்சு வாங்க மாமா '' என்ருன்.

பெருமாளுக்கும் புதிய உணர்வுகள் நெஞ்சை நிறைத்தது.

இந்த இளம் வயதில், உயிரையே துச்சமென மதித்து, மழையிலும், பனியிலும், கடும் புயலிலும் எதிரிகளின் இலக்குக்கு முன்னுல் நின்று நாட்டைக் காத்ததற்குக் கிடைத்த பரிசை,ஊதாரியாக, யாருக்கும் பயனில்லாதவனுக நிற்கும் பெருமாளிடம் கொண்டு வந்து கொடுக்கிருனே! இந்தப் பணத்தின் அருமையை அளவிட முடியுமா ?

முகத்தைத் துடைப்பதுபோல் கண்களையும் துடைத்துக்கொண்டு எழுந்து வந்தான் பெருமாள்.

முருகன், பையில் கைக்குட்டையில் சுற்றி வைத்திருந்தபணத்தை எடுத்து, மாமன் கையில் கொடுத்து, '' இனிமேலாவது கருத்தோட பாடுபட்டு, செட்டும் சிக்கனமாய் இருந்து, அக்காளுக்கு நகை செய்து போடுங்க' என்ருன்.

'' எனக்கெதுக்கு? மகளுக்குச் செய்து போடட்டும். நாளைக்கி அது உனக்குத்தான் வந்து சேரும் '' என்று சொல்லிச் சிரித்தாள் சீனியம்மாள்.

# முத்துப்பல் முறுவலிக்க..!

டாக்டர் பி.பி. ராஜன்



"பல் இல்லையேல் சொல் இல்லை" என்பதற்கிணங்கப் பற்கள்தான் மனிதனுக்கு இன்றியமையாதனவாகும். உடலுக்கு வாயிற்படியாக இருப்பது வாய்தான். அந்த வாயினுள் இருக்கும் பற்களைச் சரியாகப் பாதுகாக்காவிடின் மக்களுக்கு ஏற்படும் மற்ற நோய்களுக்கு அதுவே மூலகாரணமாக அமையும்.

### காரணம் என்ன ?

நல்ல உடம்பிற்கும் தோற்றத்திற்கும், தூய்மையான உள்ளத்திற்கும், உச்சரிப்பிற்கும் பற்கள் மிக அவசியமானவையாகும்.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதுபோல் உடற்கூறுகளின் தன்மையை வாயின் மூலமாக அறிய வாய்ப்பு உண்டு. பண்டைக்காலப் பழக்க வழக்கங்களின்படி பற்களை நன்றாகப் பாதுகாக்க அக்காலத்து ஆகாரங்களே பெரிதும் உதவியிருக்கின்றன. இக்காலத்தில் நாமும் மேல் நாட்டுப் பழக்கங்களை அனுசரித்து மிருதுவான ஆகாரங்களை அதிகமாக உட்கொள்வதால் பற்கள் வேலையற்றுப் போய்விடுவதுடன் அத்தகைய ஆகாரங்கள் பற்களின் மீது படிந்து விடுகின்றன. இவ்விதம் தங்கிப் போகும் ஆகாரங்கள் மீது கிருமிகள் வளர்ந்து பற்கள் சொத்தையாவதற்கு ஏதுவாகின்றன. தவிர, அடர்ந்த பற்களும் இரத்தக் கசிவு உள்ள ஈறுகளும் மேலும் பற்களைச் சேதமடையச் செய்து அவைகளே மற்ற உடல் உறுப்புகளையும் பாதிக்கக் காரணமாக விளங்குகின்றன.

### உடலே பாதிக்கிறது!

உதாரணமாக, கெட்டுப்போன பற்கள் வாயில் விஷப்பொருளாக இருந்து அருகிலுள்ள கண், காது, தொண்டை முதலிய முக்கிய உறுப்புகளைப் பாதிப்பதுடன் அல்லாமல், இரத்தத்தின் மூலமாகப் பிற உறுப்புகளையும் முக்கியமாக இருதயம், சிறு நீரகம், குடல், தோல் முதலியவற்றையும் பாதிக்கின்றன. வாயிலிருந்து வரும் துர்நாற்றம் பிறரை அருவருக்கச் செய்கிறது.

### அறிகுறி என்ன?

அடர்ந்த பற்களும், அழுக்கடைந்த பற்களும், முழு வளர்ச்சியடையாத பற்களும் சொத்தையாவதற்கு அடிப்படைக் காரணம் பற்களில் எளிதில் ஒட்டிக் கொள்ளும் 'சாக்லேட்' போன்ற இனிப்புப் பொருள்களை நொறுக்குத் தீனியாக உட்கொள்ளுதலே யாகும். சிலருக்குப் பற்சொத்தை முன்னோர்கள் வழிவரும் வியாதியாகும். பற்களின் இயற்கையான பளபளப்பு மங்கலாக மாறுவதும், பற்களில் கூச்சம் தோன்றுவதும், அவைகளில் கறுப்புப் புள்ளி தோன்றி குழிகளாக மாறுவதும் பல் சொத்தையாவதற்கான ஆரம்பக்கால அறிகுறிகளாகும்.

### வேண்டாம் மிட்டாய் !

பற்கள் சொத்தையாகாமல் தடுக்க நாள் தோறும் இரு முறை பற்களைச் சுத்தம் செய்ய வேண்டும். புதிய காய்கறிகளையும் பழ வகைகளையும் சாப்பிட வேண்டும். சத்தான உணவு உட்கொள்ள வேண்டும். அடிக்கடி மிட்டாய் சாப்பிடும் பழக்கத்தைத் தவிர்க்க வேண்டும்.

ஒழுங்கீனமான பற்களையும், அடர்ந்த பற்களையும், முன் தள்ளிய பற்களையும் சரிப்படுத்தி விடலாம். குழந்தைகளுக்குப் புட்டியில் பாலூட்டுவதும் குழந்தைகள் விரல்களைச் சூப்புவதும், எழுதுகோல் போன்றவைகளைக் கடிப்பதும் பற்களை ஒழுங்கீனமாகச் செய்துவிடும். சில குடும்பங்களில் வழிவழியாக இப்படிப்பட்ட பல் அமைப்பு ஏற்படுவதும் உண்டு. இவைகளுக்கெல்லாம் தகுந்த மருத்துவச் சாதனங்கள் பொருத்திச் சரிப்படுத்திவிட இன்று வாய்ப்பும் வசதியும் உள்ளது.

### ஆலும் வேலும் !

'ஆலும் வேலும் பல்லுக்குறுதி', 'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்பதுபோல், ஆலும் வேலும் போன்ற பிரஷ்ஷையும் பற்பசையையும் கொண்டு, நாலும் இரண்டும் போன்று, நாள் தோறும் இரு முறை பற்களைத் துலக்குவோமாயின் பற்கள் ஆரோக்கியத்துடன் விளங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பற்கள் நலமாயின் வாய் நலமாகும்; வாய் நலமாயின் உடல் நலமாகும்; உடல் நலமாயின் நாடு நலமாகும்; எனவே, வீடும் நாடும் செழித்து வளரப் பல்லும் வாயும் பாங்குடன் இருக்க வேண்டியது அவசியம்.

---

**பஞ்சாப் பல்கலைக் கழகத்தில் பைந்தமிழ்.**

பஞ்சாப் மாநிலப் பல்கலைக் கழகத்தில் தமிழைப் போதிக்கப் பஞ்சாப் அரசு ரூபாய் மூன்று இலட்சம் ஒதுக்கியுள்ளது. உஸ்மானியா பல்கலைக்கழகம் தமிழ்மொழிப் பயிற்சிக்கு வகை செய்துள்ளது. தமிழ்நாடு அரசு அம்முயற்சிக்குத் தன் ஆதரவைக் காட்டும் வகையில் ரூ. 25 ஆயிரம் வழங்கியுள்ளது. வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்துக்குத் தமிழ் மொழி வகுப்புகள் நடத்த ரூ. 10 ஆயிரமும் தமிழ்ப் பண்பாட்டியல் வகுப்புகள் நடத்த ஆக்ரா பல்கலைக் கழகத்துக்கு ரூ. 1,532-ம் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.




நவம்பர் பதினெட்டு!

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள காட்டாங்குளத்தூர் அன்று விழாக்கோலம் பூண்டிருந்தது. கொட்டும் மழையிலும் மக்கள் திரளாக வந்திருந்தார்கள். அரசு அதிகாரிகள், மருத்துவர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் இப்படி எல்லாத் துறையினரும் அங்குக் குழுமியிருந்ததற்குக் காரணம், அன்று நடந்த ‘சித்தரஞ்சன் நடமாடும் மருத்துவமனை’யின் துவக்க விழாவே!

நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், இந்த நடமாடும் மருத்துவமனையைப் பெருமிதத்துடன் துவக்கி வைத்தார். ஏழை, எளியவர்கள் அடையப் போகும் பயனை எண்ணிஎண்ணி அவர்முகம் மகிழ்வால் மலர்ந்தது.

பட்டி தொட்டிகளிலே வாழும் பாமர மக்களின் பிணிபோக்கி, அரும்பணி ஆற்றுவதுதான் இந்த மருத்துவமனையின் நோக்கம். இளம் மருத்துவர்கள் பலர் இந்த அரும்பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டு அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருகின்றனர். நோயாளிகளிடத்திலே அவர்கள் காட்டும் கனிவு ஒன்றே போதும், கடும் பிணியும் நீங்கிவிடும்.

சுமார் அறுபது கூடாரங்கள், காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் பக்கத்தில் காட்சியளிக்கின்றன. நல்ல காற்றோட்டமும், அமைதியும் மிக்க இந்தச் சூழ்நிலையில் நோயாளிகள் பலர் தங்கிச் சிகிச்சை பெற்று நலமுடன் திரும்பியிருக்கிறார்கள்; பலர் தங்கிச் சிகிச்சை பெற்றும் வருகிறார்கள். இதனால் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் இந்த நடமாடும் மருத்துவமனையால் பெரும் நன்மைகள் அடைந்து வருகின்றனர். இந்த மருத்துவமனையின் சிறப்புகளை இன்றைக்கெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கலாம்.

மழை, வெய்யில் இவற்றால் பாதிக்காத இந்தக் கூடாரத்தில் நோயாளிகள் படுக்க நல்ல வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக ‘வார்டு’கள் இருக்கின்றன. மருத்துவர்கள் மிக நல்லமுறையில் அவர்களைக் கவனித்து ஆவன செய்வதால் அவர்கள் நலத்துடன் வீடு திரும்பி வருகின்றனர். தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு நல்ல சத்துள்ள உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

இந்த மருத்துவமனை இந்த இடத்தில் மூன்று மாதங்கள் இருக்கும். முதலில் கும்மிடிப் பூண்டியில் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் துவக்கப்பட்ட இந்த நடமாடும் மருத்துவமனை, ஊர் ஊராகச் சென்று மக்கள் நல்வாழ்வுக்காகத் தொண்டாற்றும்.

இங்கு இது துவக்கப்பட்ட செப்டம்பர் திங்கள் முதல் நாளில், புறநோய்ப் பகுதியில் (Out Patient) 33 பேர்களே சிகிச்சை பெற வந்தார்கள். பிறகு படிப்படியாக ஊராட்சி ஒன்றியத்தின் உதவியால் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை வளர்ந்து வந்தது. சராசரி ஒரு நாளைக்கு 300 பேர் வரை சிகிச்சை பெறும் அளவுக்கு உயர்ந்தது. நவம்பர் 15-ஆம் தேதி வரை மொத்தம் 14,683 பேர்கள் புறநோய்ப் பகுதியில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

முதலில் நான்கு பேர்களே தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த இந்த மருத்துவமனையில், இன்று சுமார் 150 பேர்வரை சிகிச்சை பெற்றுள்ளனர்.

குடும்பநல அறுவைச் சிகிச்சைக்கான ஒரு பகுதியும் இம் மருத்துவமனையோடு சேர்க்கப்பட்டுள்ளது. ஆடவருக்கும், மகளிருக்கும் அறுவைச் சிகிச்சை இங்கு நாள்தோறும் நடைபெற்று வருவதைப் பார்த்தால், ‘அளவான குடும்பமே வளமான வாழ்வு’ என்பதனை மக்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் குடும்ப நலத்திட்டத்தில் எவ்வளவு ஆர்வமும், அக்கறையும் வைத்திருக்கிறார்கள் என்பதையும் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

அக்டோபர் 4-ஆம் நாளிலிருந்து 15-ஆம் நாள்வரை 57 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இதில் ஆண்கள் 52, பெண்கள் 5. அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஆண்களுக்கும், பெண்களுக்கும் வேட்டி, புடவைகளை அமைச்சர் வழங்கிய காட்சி, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

மகப்பேற்றுக்காகவும் இங்கு ஒரு பிரிவு இருக்கிறது. மூன்று மகப்பேறுகள் நடந்துள்ளன. இதில் இரண்டு ஆண் குழந்தைகள். ஒன்று பெண் குழந்தை. முதலில் பிறந்த ஆண் குழந்தைக்கு மருத்துவமனையின் நினைவாக ‘சித்தரஞ்சன்தாஸ்’ என்னும் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள்.

இந்த மருத்துவமனையில் கண் நோய்க்கான ஒரு பிரிவும் இருக்கிறது. இதுவரை ஒன்பது பேர்களுக்குக் கண் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. இவை மட்டுமா?

கிராமப் பகுதிகளுக்குச் சென்று வீடுகளிலும் பள்ளிகளிலும் இம்மருந்துவமனையைச் சேர்ந்த மருத்துவர்கள் காலரா, அம்மை மற்றும் தொத்து நோய்களுக்கான தடுப்பு ஊசிகள் போட்டு வருகின்றனர். படித்துப் பட்டம் பெற்ற இம் மருத்துவ இளைஞர்கள் 'நகரத்திலேயே வாழ்க்கை நடத்த வேண்டும்' என்று பிடிவாதம் பிடிக்காமல் பட்டிக்காடுகளில் உழவர் பெருமக்கள் வாழும் கிராமப்புறங்களில் சிறிதும் சோர்வில்லாமல் தொண்டாற்றுகிறார்களென்றால், அவர்களை நாம் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் கிராமப் புறங்களில் தொண்டாற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன், தொடங்கப்பட்டதுதான் 'இளைஞர் அணி'. இப்படி இளைய சமுதாயம் அணி அணியாகத் திரண்டு தம் பணிகளைச் செவ்வனே செய்வதுதான் நாட்டிற்கு அணிகலனாகும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணக் கனவு கண்டு கொண்டிருந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவை, இன்று, முதல்வர் கலைஞர் அவர்கள் நனவாக்கிக் கொண்டு வருகிறார்கள். அதற்காக அவர் அமைத்துள்ள பல்வேறு அமைப்புகளில் ஒன்றுதான், இந்த நடமாடும் மருத்துவமனை.

**மாப்பிள்ளையும், மாமனாரும்!**

''ஒரு மருத்துவக் கல்லூரியில் ஒரு மாணவர் படித்துப் பட்டம் பெற்று வெளிவருகிறவரை, அவருக்காக அரசு சுமார் ரூ. 35 ஆயிரம் செலவிடுகிறது. இந்தக் காலத்தில் எந்த மாமனாரும் மாப்பிள்ளைக்கு இவ்வளவு சீதனத்தைத் தரமாட்டார்! ஆனால், அரசு உங்களுக்கு இந்தச் சீதனத்தை அளிக்கிறது என்றால், நீங்கள் பொறுப்புடனும், கடமையுணர்ச்சியுடனும் நடந்து, நாட்டுக்கும் வீட்டுக்கும் தொண்டாற்ற முன்வர வேண்டும்.''

—செங்கை மருத்துவக் கல்லூரி மாணவியர் விடுதி அடிக்கல் நாட்டு விழாவில் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள்.

இந்த மருத்துவ மனையில், 27 பேர் பணியாற்றுகின்றனர். அவர்களில் ஒருவர் மருத்துவ அதிகாரி, மூவர் செவிலியர்கள்; ஒருவர் மருந்தாளுநர். மற்றும் எக்ஸ்-ரே நிபுணர், சமையல்காரர்கள், உதவியாளர்கள், ஏவலாளர்கள் ஆகியோர் உள்ளனர். இவர்களெல்லாம் கிராமப் பணியில் மிக்க ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவதை நாம் இங்குக் குறிப்பிட வேண்டும்.

இந்த நடமாடும் மருத்துவமனை மற்ற மாநிலங்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் விளங்கப் போகிறது. அண்மையில், ஆந்திர மாநிலத்திலிருந்து சில அதிகாரிகள் வந்து, நடமாடும் மருத்துவமனையைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். இதன் அருமை பெருமைகளை உணர்ந்த அவர்கள், இதேபோல் ஒரு நடமாடும் மருத்துவமனையை அமைக்க எண்ணியுள்ளனர்.

தமிழகம் பல் வேறு துறைகளில் முன்னேடியாகத் திகழ்ந்து வருவதை, இந்தியா மிக உன்னிப்பாகக் கவனித்து வரும் இவ்வேளையில், இளைஞர்கள்—படித்துப் பட்டம் பெற்றவர்கள் தங்களை நாட்டுப் பணியில் ஈடுபடுத்திக் கொள்ள முன்வர வேண்டும். அப்போதுதான் நாளுக்கு நாள் தமிழகம் நலம் பல எய்தும்; வளம்பல கொழிக்கும். 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் வரவேண்டும் என்று சொல்லாமல் சொல்கிறது இந்த நடமாடும் மருத்துவமனை!

## மலையின் மேலொரு மருத்துவ நிலையம்

**நமது** இரத்தத்தில் சில விஷக் கிருமிகள் புகுந்துகொள்வதால் தான் நமக்கு நோய் வருகிறது. இவ்விஷக்கிருமிகளைக் கொன்று நோயைக் குணப்படுத்தும் வகையை ஆராய்ந்து கண்டுபிடித்தார் பிரெஞ்சு நாட்டு விஞ்ஞானி லூயி பாஸ்டியர் என்பவர். இவரின் சாதனையின் பலனால் தான் நீலகிரி மாவட்டத்தில் கூனூர் என்னுமிடத்தில் 1906-ல் "தென்னிந்திய பாஸ்டியர் இன்ஸ்டிடியூட்" ஆரம்பிக்கப் பட்டது.

பொதுமக்கள் கொடுக்கும் நன்கொடையைக் கொண்டும், சில "அறக்கட்டளை"களிலிருந்தும், மருந்தை விற்றுக் கிடைக்கும் பணத்திலிருந்தும் தான் இந்த நிலையம் நடைபெறுகிறது.

வெறிநாய்க் கடியிலிருந்து மக்களைக் காப்பாற்றவும், பொது மக்களுக்கு அந்த நோயைப் பற்றிய விவரங்களைத் தெரிவித்து, அதிலிருந்து அவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அவசியத்தையும், அது சம்பந்தமான ஆராய்ச்சிகளிலும் இன்னும் சில வியாதிகள் பற்றிய ஆராய்ச்சிகளிலும் இந்த நிலையம் ஈடுபடுகிறது.

1922 வரை கூனூர் சென்றுல்தான் நாய்க்கடிக்கு வைத்திய வசதி கிடைக்கும் என்ற நிலை இருந்து வந்தது. ஆனால், பிறகு பல்வேறு இடங்களிலும் இதற்கான சிகிச்சை அளிக்க வசதி செய்யப்பட்டது.

கூனூர் நிலையத்தில் பல் வேறு மிருகங்கள் மீதும் ஆராய்ச்சிகள் நடத்தி வருகிறார்கள். முக்கியமாக வெறிநாய்க் கடிக்கும், இன்ஃப்ளுயன்சா போன்ற நோய்க்கும் கூட மருந்து தயாரித்து வருகிறார்கள்.

6,000 அடி உயரத்தில் மிகவும் அமைதியான சூழ்நிலையில் உள்ள இந்தப் பாஸ்டியர் நிலையத்தினுள் நுழைந்தாலே ஒருவிதப் புத்துணர்ச்சி உண்டாகும். இங்குள்ள நூல் நிலையத்தில் உலகிலுள்ள எல்லா மருத்துவச் சம்பந்தப்பட்ட நூல்களும் இருக்கின்றன. பல மருத்துவர்கள் சில மாத காலம் இங்குத் தங்கி விஷயங்களைத் தெரிந்து கொண்டு செல்வதுண்டு.

# கூட்டுறவு முறையில் கோழிப்பண்ணை



“முட்டை முந்தியதா?கோழி முந்தியதா?’ என்னும் ஒரு விஞவை எழுப்பி, அதற்கு விடை சொல்ல வருவோரையும் மடக்கி, விதண்டா வாதம் புரிந்து, தங்களது பொன்னன நேரத்தை வீணுக்குவோர் பலர் உண்டு.

''திருமணம் நடந்தால்தான் பைத்தியம் தெளியும்'' என்பதற்குப் பைத்தியம் தெளிந்தால் தான் திருமணம் நடக்கும்'' என்று கூறும் பிரிவைச் சார்ந்தவர் அவர்கள்.

இவர்களது வாதங்களில் எது முந்தி வந்து நிற்கிறதோ, இல்லையோ, இன்று சத்துள்ள உணவுப் பொருட்களின் வரிசையில் கோழிமுட்டை முந்தி வந்து நிற்கிறது.

''அப்படி என்ன தனிச் சிறப்புகள் அதற்கு?''

''ஒரு முட்டையானது உருவாகாத ஒரு கோழிக் குஞ்சுக்கு நிகர்'' என்பார் டாக்டர் ஹட்சிஹன் என்னும் அறிஞர்.

மாவுச்சத்து, கொழுப்புச் சத்து, புரதச்சத்து, உலோகச் சத்து, நீர்ச்சத்து, நார்ச்சத்து—எனப் பிரிக்கப்பட்டுள்ள உணவின் பல பகுதிகளில், புரதச் சத்து மிகவும் இன்றியமையாதது என்பது பள்ளிப் படிப்பு மட்டுமல்ல ; வாழ்வுக்குப் பாடமுமாகும்.

தசைகளின் வேலைக்கும், உடலில் கெட்டுப்போன பாகங்களை ஈடு செய்வதற்கும், காயங்கள், புண்கள் விரைவினிலே ஆறுவதற்கும், இரத்த ஊட்டத்துக்கும், நோய்களை எதிர்க்கும் ‘ஆண்டிபயாடீஸ்’ என்னும் தடுப்புகளை உருவாக்குவதற்கும், சுரப்பிகள் நன்கு சுரப்பதற்கும், எலும்புகளின் வளர்ச்சிக்கும், அவைகளின் உறுதிக்கும், புரதமே துணை செய்கிறது என்பது வெறும் ஏட்டுச் சுரைக்காய் அல்ல; நூற்றுக்கு நூறு உண்மை.

13 சதவிகிதம் புரதம், உயிர்ச் சத்துக்கள், உலோகப் பொருட்கள் கோழியில்—கோழி முட்டையில் அடங்கியுள்ளன என்னும் வல்லுநர்களின் கணிப்பு புள்ளிவிவரம் மட்டுமல்ல; புரிந்து கொள்ள வேண்டிய நுணுக்கங்கள்.

நாம் உட்கொள்ளும் உணவில் போதுமான அளவு (புலால் உணவென்ருல் 85 கிராம்) புரதம் சேராவிட்டால் இரத்தம் நீர்த்துத் தசைகள் சுருங்கும்; உடல் தளர்ச்சி அடையும்; ஈரல் நோய் வரும்; சோகை பிடிக்கும்; வீக்கம் காணும்-என்பது மருத்துவர்கள் மட்டும் உணரக் கூடிய உண்மை அல்ல; எல்லார்க்கும் தேவையான விளக்கம்.

இத்துணைச் சத்து நிறைந்த முட்டையை நாம் எத்தனைபேர் இன்று உட்கொள்கின்ருேம்?



நாள் ஒன்றுக்கு ஆளுக்கொன்று என வைத்துக் கொண்டாலும், நாட்டிலுள்ள கோழிகளையும் அவைகள் இடுகின்ற முட்டைகளையும் கணக்கெடுத்துப் பார்ப்போமானால் ஆளுக்குப் பாதி முட்டை கூட வரவில்லை என்பது ஆய்வாளர்கள் தரும் புள்ளி விவரம்.

இந்தக் குறைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து, அவற்றைத் தன்னளவிலாவது இயன்றமட்டும் நீக்க முன்வந்துள்ளது செங்கை மாவட்டம். அப்பணியை வரவேற்போம்! வாழ்த்துரைப்போம்!

செங்கை மாவட்டத்தின் தலைநகராம் காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஒரு சிற்றூர்...... ஆறு தேக்கிய நல் வாய்க்கால்களும், வரப்பெடுத்த வயல்களும் சூழ்ந்துள்ள செவிலிமேடு கிராமம்........ அங்கேதான் கடந்த 10–11–71 அன்று வீசு தென்றல் தாலாட்ட, மாலை மதியம் புத்துணர்ச்சி ஊட்ட, செங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் கோழி வளர்ப்பு முன்னோடித் திட்டத்தைக் கூடி நின்ற மக்களின் முன்னே தொடங்கி வைத்தார்.

நிலமற்ற ஏழை விவசாயப் பெருமக்களுக்கு ஒரு பகுதிநேர வேலை வாய்ப்பாகவும்; குறைந்த அளவு மூலதனத்தைக் கொண்டு ஓரளவு கணிசமான வருவாய் பெறுவதற்காகவும்; எளியவர்தம் குடும்பங்களில் உள்ள குழந்தைகள் வளர்ச்சி பெற்றிட நாளும் ஒரு முட்டை வீதமாகிலும் சாப்பிட ஊக்குவிப்பதற்காகவும்; மேலும் இச்சிறு பண்ணைகளின் வாயிலாக ஏற்படும் அனுபவத்தைக்கொண்டு, கோழிவளர்ப்பை ஒரு பெருந் தொழிலாகவே ஏற்று நடத்த வழியாகவும்; மாவட்டத்தில் உள்ள ஏனைய ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் இதைச் செயல்படுத்தும் வகையில் ஒரு முன்னோடித் திட்டமாக ஆட்சித் தலைவரால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு எளிய குடும்பங்களைச் சேர்ந்த 20 நபர்கள் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். பல வங்கிகளுடன், கடன் வசதி பெறுவதற்குத் தொடர்பு கொள்ளப்பட்டு முடிவில் காஞ்சிபுரம் இந்தியன் வங்கி ரூ. 18,000 அளிக்க முன்வந்து, மனமுவந்து கொடுத்திருக்கிறது. ஊர்மக்களின் பாராட்டுதலையும் பெற்றிருக்கிறது.

''கொத்தித் திரியுமந்தக்
கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா''

என்று பாரதி சொன்னது பிள்ளைகளுக்கு மட்டுமின்றி, இன்று பெரியவர்கள் தங்கள் வாழ்வையே மேம்படுத்திக் கொள்ளவும் பயன்படுகிறது.

முதலிலே திட்டமிட்டபடி 'கோழி வளர்ப்போர் சங்கம்' அமைக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் 20 பேரும் அதன் உறுப்பினர்கள் ஆவார்கள். தலைவர், துணைத் தலைவர், பொருளாளர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். சங்கத்திற்கென விதிகளும் இயற்றப்பட்டுள்ளன.

'கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்பதுபோல், கடன் சுமையை, அதன் அழுத்தத்தை இவர்கள் நன்கு உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். அதனால் தான் வங்கியிலிருந்து வாங்கப்பட்ட கடன் தொகையைச் சங்க உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் (ஆளுக்கு ரூ. 900 வீதம்) தனித்தனியே அதே வங்கியிலேயே பற்று வரவுப் புத்தகங்களில் பதிய வைத்து, அந்தப் புத்தகங்களைச் சங்கத்தின் பொறுப்பிலேயே வைத்துக் கொள்ளுகின்றார்கள். கோழித் தீவனமும் மொத்தமாக வாங்கி உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன. உற்பத்தியாகும் முட்டைகளை உறுப்பினர்களிடமிருந்து சேகரித்தும் அவைகளை விற்பனை செய்தும், வங்கிக்குச் சேர வேண்டிய கடனைச் செலுத்தும் பொறுப்பையும் சங்கமே ஏற்றுக்கொண்டுள்ளது மிகச் சிறந்த பணியாகும்.

இவர்கள் எல்லாரையும், கோழி வளர்ப்போர் சங்கத்தின் சார்பில் கவனித்து வருவதற்குச் செவிலிமேடு கால்நடை வளர்ச்சி அலுவலர், சங்கத்தின் அதிகாரப் பற்றற்றச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கால்நடை உதவி இயக்குநர், கால்நடை விரிவாக்க அதிகாரி, உதவி மருத்துவர் இவர்களின் ஆய்வுரைகளைக் கேட்டு அவர் செயலாற்றுகின்றார்.

இந்த இருபது பேர்களுக்கும், அவரவர் வீட்டுக்கருகிலேயே, ஆழ்குப்பை, கோழிவீடு அமைப்பதற்குக் கீற்று, மூங்கில், கம்பிவலை போன்ற பொருட்களைச் சங்கமே மொத்தமாக வாங்கி வழங்கியுள்ளது.

முப்பது முட்டையிடும் பெட்டைகளை வைத்து வளர்ப்பதற்கு வசதியாகக் குறைந்தது 10'×10' அளவுள்ள ஆழ்குப்பை, கோழி வீடுகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 250-க்கு மேற்படாமல், சிக்கனமாகக் கட்டியிருக்கின்றார்கள். எளிய முறையில் குடிநீர்த் தொட்டிகள், தீனித் தொட்டிகள் மொத்தமாக வாங்கி வழங்கியுள்ளார்கள். உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க உயர் இனக்கோழிகள் திருநின்றவூரில் தனியார் ஒருவரிடமிருந்தும், செங்கற்பட்டு அரசினர்






கோழிப் பண்ணையிலிருந்தும், சென்னையிலிருந்தும் வாங்கி வழங்கியிருக்கின்றார்கள்.

''கூட்டுறவு என்னும் சொல் புனிதமானது. கூட்டுறவு இயக்கத்தின் தத்துவமும் புனிதமானது. கூட்டுறவுத் துறையில் சிலருடைய நடவடிக்கைகளால் களங்கம் ஏற்படுவதும் உண்டு. மேகங்கள் கூடுவது மழை பொழிவதற்கு; காகங்கள் கூடுவது பகிர்ந்து கொள்வதற்கு; கூட்டுறவு நிருவாகத்தில் இருப்பவர்கள் மேகங்களைப் போல் கூடி, ஏழை எளிய மக்களுக்கு நன்மை என்ற மழை பொழியச் செய்ய வேண்டும்; காக்கைகளைப் போல் கூடி இருப்பதைப் பகிர்ந்து கொள்ளக்கூடாது'' என்றுரைத்த நமது முதல்வர் கலைஞர் அவர்களின் பொன்மொழியை இந்தச் சங்கம் தன் ஒவ்வொரு நடவடிக்கையிலும் கடைப்பிடித்து வருகிறது.

அரசுத் துறையில் குறைந்த விலையில் பக்குவப்படுத்தி வழங்கப்படும் தீவனம் உறுப்பினர்களுக்குக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவர்கள் எல்லாரும் கோழி வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்களே. ஆனாலும் ஆழ்குப்பை, கோழி வீடு வளர்ப்பு முறையில் அதிக அனுபவம் இல்லாதவர்கள். எனவே, அவர்களுக்கு நாள்தோறும் பண்ணைகளில் அனுசரிக்க வேண்டிய முறைகள் அனைத்தையும் தெளிவாகக் கற்றுத் தருகின்றார்கள். மேலும் கால்நடைத்துறை அலுவலர்களும் இந்தப் பண்ணைகளைப் பார்வையிட்டு அறிவுரைகள் வழங்குகின்றனர்.

கோழிகளுக்கு நோய் வருவது இயல்பு. அதுவும் சில குறிப்பிட்ட நேரங்களில் வருகின்ற நோய்கள் அவைகளை அப்படியே பூண்டோடு அழித்து விடுகின்றன. இதை யுணர்ந்து நல்ல முன்னேற்பாடுகளைச் சங்கம் செய்துள்ளது. கோழிகளுக்கு அன்றாடம் அளிக்க வேண்டிய தீவனம், மருந்து வகைகள் முதலியவற்றைக் கால்நடை விரிவாக்க மருத்துவ அதிகாரி கவனிக்கின்றார். கோழிகளைப் பாதுகாக்க உயிர்ச்சத்துப் பொருட்களைத் தண்ணீரில் கலந்து கொடுத்து வருகிறார்கள்.

பண்ணைகளில் உள்ள கோழிகள் இப்போது முட்டையிட ஆரம்பித்து விட்டன. நாள் ஒன்றுக்கு 200 முட்டைகள் உற்பத்தியாகின்றன. இனி எல்லக் கோழிகளும் முட்டையிடுமானால் 400 முட்டைகள் நாள்தோறும் கிடைக்கும் என்கிறார்கள்.

முட்டைகளை விற்பனை செய்து அதில் வரும் இலாபத்தில் ஒரு பகுதியைச் சேமிப்பு நிதியாக அவர்கள் பற்று வரவுப் புத்தகத்தில் பதிய வைக்கிறார்கள். இத்தொகையைக் கொண்டு புதிய கோழிகளை வாங்கித் தொடர்ச்சியாக—முட்டை உற்பத்தி பாதிக்காமல் பார்த்து வருகிறார்கள். இந்தியன் வங்கியிலிருந்து வாங்கியுள்ள கடன் தொகையைத் திட்டமிட்டபடி ஒரே ஆண்டுக்குள் திருப்பிச் செலுத்தி விட்டு விரைவில் முழுப் பலனையும் உறுப்பினர்களே அடையப் போகிறார்கள்.

இன்று செவிலிமேடு கிராமத்தில் உள்ள இந்த 20 விவசாயப் பெருங்குடி மக்களும், தங்களது உழைப்பால் தங்கள் வாழ்வை வளமாக்கிக் கொள்ளக் கோழிப் பண்ணை என்னும் ஊன்றுகோலைப் பற்றியுள்ளார்கள். இதைத் தளர விடாமல், தன்னம்பிக்கையோடு பற்றி நின்று வெற்றி பெறுவார்கள் எனும் நம்பிக்கை நமக்குண்டு. அந்த வெற்றிதானே மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் இந்த அரசுக்கும்—நாட்டுக்கும் அவர்கள் ஆற்றும் நன்றிக்கடன்.

'' உழைப்பின்வாரா உறுதிகள் உளவோ ?'' நிச்சயம் உண்டு!

— இளங்கோ

## தந்தையும் மகனும்

மோதிலால் நேரு மிகப் புகழ் பெற்ற வழக்கறிஞராகத் திகழ்ந்தவர். தனது மகன் ஜவகர்லாலும் தன்னைப் போலவே ஒரு வழக்கறிஞராக வேண்டும் என்று நினைத்த மோதிலால், ஜவகரை மேல் நாட்டுக்கு அனுப்பிச் சட்டக் கல்வியைப் படிக்க வைத்தார். ஜவகரும் திறம்படத் தேர்ந்து வெளிவந்தார்.

அவரிடம் தனது வழக்கினைக் கொடுக்க நினைத்தார் ராஜா மகாராஜ் சிங் என்பவர். நேருவின் தந்தை மோதிலால் நேருவுக்கு 500 ரூபாயை அனுப்பி ''தங்கள் மகன் நேரு எனக்காக வழக்கறிஞராக வாதாட வேண்டும்'' என்று எழுதியிருந்தார். அதனைப் பெற்ற மோதிலாலுக்கு மகிழ்ச்சியும் பெருமையும் தாங்கவில்லை. உடனே மகனை அழைத்தார்.

''எனக்கு முதல் வழக்கில் கிடைத்த தொகை எவ்வளவு தெரியுமா ? ஐந்தே ஐந்து ரூபாய் தான் ! ஆனால் உனக்கு 500 ரூபாய் ! உன்னுடைய மதிப்பும் தகுதியும் என்னைப் போல் நூறு மடங்கு உயர்ந்துள்ளது'' என்றார்.

"இந்தத் தோல் பெட்டி எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தீர்களா ?"

"இந்தப் பையைப் பாருங்கள், எப்படிப் பளபளவென மின்னுகிறது.........."

"எல்லாவற்றையும் விட நான் அணிந்திருக்கும் செருப்புதான் சிறப்பாக இருக்கிறது!"

# உலகிலேயே மிகப் பெரிய தோல் ஆராய்ச்சி நிலையம்

இப்படி ஒவ்வொருவரும் தம்மிடமுள்ள தோல் பொருட்களின் நேர்த்தியைப் புகழ்ந்து பேசுகிறார்களென்றால் இதற்கெல்லாம் மூல காரணம், சென்னை அடையாறிலுள்ள மத்திய தோல் ஆராய்ச்சி நிலையம்தான். அடிப்படையிலிருந்து, எல்லா விதமான ஆராய்ச்சி வசதிகளும் கொண்ட தோல் ஆராய்ச்சி நிலையம், உலகிலேயே இதுவே மிகப் பெரியதாகும். இத்தகைய பெருமைக்குரிய இந்நிலையம் தோன்றிய வரலாறு மிகச் சுவையானதாகும்.

நம்நாட்டில் கால்நடைகள் அதிகமிருந்தும், அவைகளால் முழு அளவு பயனில்லையே, இதற்குக் காரணம் என்ன ? 1. அவை சரியானபடி பராமரிக்கப்படவில்லை. 2. தோல்களை முறைப்படியாகத் திரட்டிப் பதப்படுத்தி, அறிவதற்கு ஏற்ற ஏற்பாடுகள் இல்லை. இந்த இரண்டு காரணங்களால் இத்தொழிலில் போதுமான அளவுக்கு நமக்கு வருவாய் கிடைக்கவில்லை. இந்நிலையிலும் நாம் ரூ.24 கோடிக்குப் பலரகத் தோல்களை ஏற்றுமதி செய்திருக்கிறோம் ; ஆனால் அப்போது நாம் தோல் இறக்குமதி செய்தது ரூ. 1.30 கோடிதான்.

நாட்டு விடுதலைக்கு முன் இத்தோல் தொழில்கள் கிராமங்களில் குடிசைத் தொழிலாக இருந்து வந்தது. தோலைச் சரியானபடி பதப்படுத்தவோ, பக்குவப்படுத்தவோ அவர்களுக்கு ஏற்ற கல்வி அறிவு இல்லை. இந்நிலையில் மேலும் மேலும் இத்துறையை வளரச் செய்ய பலர் முயன்றனர். நல்ல வருவாய் வரக்கூடிய இந்தத் தொழிலை மேம்படுத்தும் தீவிரமான திட்டங்கள் பல உருவாக்கப்பட்டன. விஞ்ஞான முறைப்படி தோல் ஆராய்ச்சி செய்து, அதனைப் பதப்படுத்தி விதப்படுத்திப் பல்வேறு துறைகளுக்குப் பயன்படுத்தலாம் என்று பலர் தங்கள் மேலான எண்ணங்களைத் தெரிவித்தார்கள். தோல் துறை வல்லுநர் பேராசிரியர் வி. எம். தாஸ் தலைமையின் கீழ், 'தோல் ஆராய்ச்சிக் குழு' ஒன்று செயற்கரிய பல செயல்களுக்குத் திட்டங்கள் தீட்டியது. அதன் விளைவாக, 1948-ஆம் ஆண்டு ஏப்ரல் 24-ஆம் நாள் சென்னை அடையாறிலுள்ள 'மத்திய தோல் ஆராய்ச்சி நிலையத்துக்கான அடிக்கல் மத்திய அமைச்சர் திரு சியாம் பிரசாத் முகர்ஜி அவர்களால் நாட்டப்பட்டது. 1958 சனவரித் திங்கள் இந்த அரும் பெரும் நிலையம் — உலக அரங்கிலே உச்சநிலை அடைந்துள்ள இவ்வாராய்ச்சி நிலையம் துவக்கப்பட்டது. அப்போது இந்நிலையத்தின் முதல் இயக்குநராகப் பேராசிரியர் வி.எம். தாஸ் பொறுப்பேற்றார். இந்த நிலையம் நிறுவப்படுவதற்குப் பண்டித நேரு அவர்களின் முயற்சியும் ஒரு காரணம் என்பதை நாம் இங்குக் குறிப்பிட வேண்டும். இக்கட்டடம் கட்டுவதற்காகத் தமிழ்நாடு அரசு இலவசமாக நிலத்தை வழங்கி உதவியிருக்கிறது.

திரு வி. எம். தாஸ் அவர்களின் அரிய யோசனைகளால், செயல்திறனால் இந்த ஆராய்ச்சி நிலையத்தின் புகழ் எங்கும் பரவத் தொடங்கியது. ஆனால் 1956-ல் அவர் திடீரென காலமானார். அந்தப் பொறுப்பை இத்துறையில் நிபுணரான திரு ஒய். நாயுடம்மா அவர்களிடம் ஒப்படைத்தனர். அன்று முதல் இன்று வரை இவரே இயக்குநராக இருந்து பல அரிய செயல்களைச் செய்து வருகிறார்.

93 ஏக்கர் பரப்பளவுள்ள இந்த நிலையம் இங்கே நிறுவப்பட்டதற்குப் பிறகுதான், இந்தியத் தோல் தொழிலின் வளர்ச்சியும், வருமானமும் நாளுக்கு நாள் வளர்ந்தது. 1969—70-ல் ஏற்றுமதி செய்யப்பட்ட தோல் பொருட்களின் மதிப்பு ரூ. 985.5 மில்லியன்கள். இத்துடன் உள்நாட்டிலும் இதற்கு நிறைய கிராக்கி இருந்து வருகிறது. இவற்றுக்கெல்லாம் காரணம், விஞ்ஞான முறைப்படி ஆராய்ந்து தோல்களைப் பதப்படுத்துவதே ஆகும். இங்கு 15 பரிசோதனைக் கூடங்கள் ( Laboratories ) உள்ளன. இவை தவிரக் கால்நடைகள், தோல் வியாதிகள் சம்பந்தமான ஆராய்ச்சிக் கூடங்களும் உள்ளன. தோல்கள் பாதிக்கப்பட்டுள்ளனவா என்பதைக் கண்டுபிடிக்க இது உதவுகிறது.

இந்தியாவிலேயே தோல் ஆராய்ச்சிக்காகவே கட்டப்பட்ட நிலையம் இது ஒன்றேயாகும். இந்த நிலையத்தில் 224 விஞ்ஞானிகள் நிரந்தரமாகப் பணியாற்றுகின்றனர். இந்த விஞ்ஞானிகளின் அரிய ஆராய்ச்சித் திறனும், இங்கு அடிப்படையிலிருந்து எல்லா விதமான பரிசோதனைக்கூடங்கள் இருப்பதாலும் உலக நாடுகள் பலவற்றிலிருந்து பலர் இங்கு வந்து படித்துப் பட்டம் பெற்றுச் செல்கின்றனரென்றால் நமக்கெல்லாம் பெருமையாக இல்லையா ?

சூடான், ஜப்பான், பர்மா, தைவான், இந்தோனேசியா, உகாண்டா, நைஜீரியா, எகிப்து, பிலிப்பைன்ஸ், இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிலிருந்தும் வந்து இங்கு பயிற்சி பெறுகிறார்கள். இதுவரை சுமார் இருநூறு பேர்கள் இங்குப் பயின்று பட்டம் பெற்றுத் திரும்பியுள்ளார்கள். இம்மாதிரியான பயிற்சியில் பட்டம்

தரும் நிலையம் இது ஒன்றுதான். ஆனால், கல்கத்தா, பம்பாய், சென்னை, பஞ்சாப் போன்ற நகரங்களில் 'தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள்' உள்ளன. இவை 'டிப்ளமா' மட்டுமே தருகின்றன. சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஒரு பிரிவான தோல் தொழில் பற்றிப் படிப்போர்களும் இந்நிலையத்தில் பயிற்சி பெறுகிறார்கள்.

தோல் நல்லதா ? கெட்டதா? என்று அறிந்துகொள்வது எப்படி ? சில தோல்களைப் பார்த்தாலே தெரியும் இது மட்டம் தான் என்று; சில தோல்களை இரசாயன ஆராய்ச்சி செய்தால் தான் கண்டுபிடிக்க முடியும். நம்நாட்டில் மாட்டுத் தோல் அவ்வளவாகக் கிடைப்பதில்லையாதலால், சில சமயங்களில் அவைகளை நாம் வெளி நாடுகளிலிருந்து தருவிக்க வேண்டியிருக்கிறது.

இவர்களுடைய நோக்கமெல்லாம் புதுமை, புதுமை, புதுமை தான்! பழைய முறைகளை மாற்றியமைத்து, விஞ்ஞானத்தின் துணை கொண்டு புதுமையைப் புகுத்துவதுதான் இவர்களுடைய கவனமெல்லாம். கண்ணைக் கவரும் வண்ண வண்ணப் பொருட்களைத் தயாரிக்கவும் தற்கால நாகரீகத்துக்கு ஏற்ற எழில்மிக்க ஆடை வகைகளை உருவாக்கவும், வண்ணங்கள் பலவற்றைப் பூசித் தோல் அலங்கார வேலைகள் செய்யவும் இவர்கள் தங்கள் எண்ணங்களை முழுக்க முழுக்க ஈடுபடுத்தியிருக்கிறார்கள்.

பெட்டி, பை, பொம்மை, ஆடை, விளையாட்டுக் கருவிகள், மருத்துவச் சாதனங்கள், போன்றவற்றுக்கெல்லாம் தோல்கள் பெருமளவு பயன்பட்டு வருகின்றன. இது போன்ற தோல் பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் இந்தியாவில் நிறைய இருக்கின்றன. இவர்களுக்கு, எப்படியெல்லாம் தோலில் புதுமைகளைப் புகுத்தலாம் என்று ஆலோசனை சொல்வவோடு. புதிய கண்டுபிடிப்புகளையும் அவர்களுக்குக் கொடுத்து உதவுகிறார்கள்.

இந்தியாவில், பம்பாய், ராஜ்கோட், கல்கத்தா, கான்பூர், ஜலந்தர், ஆகிய நகரங்களில் வட்டார நிலையங்கள் இருக்கின்றன. இவர்களின் தலையாய பணி அந்தப் பகுதிகளில் நடைபெற்று வரும் தோல் தொழிலகங்களுக்கு உதவுவதே ஆகும். மேலும் ஊர்தி ஒன்றில் இத்தொழில் ஆரர்ய்ச்சி சாதனங்களான உருப் பெருக்காடி (Microscope) போன்ற கருவிகளுடன் ஆங்காங்குச் சென்று, தோல் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு விஞ்ஞான முறையைக் கற்றுத் தருகிறார்கள்.



இதன் தோல் மிகவும் கெட்டியானது. இயந்திரங்களுக்கு வேண்டிய பெல்ட்டுகள், வாஷர்கள், சைக்கிள் சீட்டுகள், குதிரைச் சேணம் ஆகியவையும், இதன் கொம்புகளிலிருந்து சீப்புகளும், பொம்மைகளும்; குளம்புகளிலிருந்து சிகரெட் சாம்பல் கிண்ணமும் தயாரிக்கப்படுகின்றன. தண்ணீர் இறைக்கும் இறவைக்கும், படகுகள் செய்யவும் இதன் தோல் பயன்படுகிறது.

இவர்கள் பணி இதோடு நின்றுவிடவில்லை. இந்த ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றும் தோல் துறை வல்லுநர்கள், சூடான், நைஜீரியா, சோமலியா, எதியோப்பியா, பர்மா, ஜோர்டான் போன்ற நாடுகளுக்குச் சென்று, அங்குஇத் தொழிலிலுள்ளவர்களுக்கு, மேலும் இதனை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம் என்பன போன்ற ஆலோசனைகளையும், வழிவகைகளையும் சொல்லி வருகின்றனர்.

அடையாறிலுள்ள இந்த நிலையத்தில் பார்வைக்காகச் சில தோல்பொருட்களையும், கண்ணைக் கவரும் வண்ணந் தீட்டிய தோல் வகைகளையும் வைத்திருக்கிறார்கள். 16-ஆம் நூற்றாண்டில் இத்தாலிய நாட்டுத் தோல் பொருள் ஒன்றும், 17-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தயாரித்ததோல்பெட்டியும்,தோலிலே வரைந்த ஓவியமும் ஜாவா நாட்டின் தோல் பொம்மையும் இங்கு வைக்கப்பட்டுள்ளன. மற்றும், யானை, ஒட்டகம் தவளை, பாம்பு போன்றவற்றின் தோலினால் செய்த பலவிதப் பொருட்கள் கண்ணாடிப்பெட்டிக்குள்ளே வைக்கப்பட்டுள்ளன. அவைகளையெல்லாம் பார்க்கும் போது, ஒரு சாதாரண தோல் எப்படியெல்லாம் உருவாகி, உள்ளத்தைக் கவர்கிறது என்று நம்மால் வியக்காமல் இருக்க முடியவில்லை உதாரணமாக ஓர் எலியின் தோலைக் கூட வீணாக்காமல் அதையும் பயன்





இதன் கொழுப்பு, உயர்தர 'ஷேவிங் சோப்' தயாரிக்கப் பயன்படுகிறது. இதன் இரைப்பையிலிருந்து எடுக்கும் "பெப்சின்" மனிதனின் இரைப்பை நோய்களுக்கு மருந்தாகிறது. இது நன்ருக உழைப்பது. இதிலிருந்து கால்பந்து, பெல்ட், கையுறை, காலணிகள், முதலியன செய்யப் படுகின்றன. இதன் எலும்புத் தூள் உரமாகவும், குளம்புகள் வச்சிரமாகவும் பயன்படுகின்றன.



படுத்த முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிருர்கள். எலியின் தோலில் குழந்தைகளுக்குக்கான காலணிகள், பர்ஸ், பை முதலியன செய்யப்படுகின்றன. இதன் வால் கடிகாரப் பட்டைக்குப் பயன்படுகிறது. காரணம் இந்த வால் இயற்கையிலேயே கடிகாரப் பட்டைப்போல் அமைந்திருப்பதுதான்,

இந்த ஆராய்ச்சி நிலையத்தில் வெளியேற்றப்படும் கழிவுநீர்களைக் கூட வீணுக்க இவர்களுக்கு மனம் வரவில்லை. அதற்கும் ஒரு வழி கண்டு பிடித்திருக்கிருர்கள். வெளியேற்றப்படும் கழிவு நீர்களைக் கால்வாய்கள் வழியாகக் கொண்டு வந்து சுமார் 4 ஏக்கர் பரப்பளவுள்ள பயிர் வகைகளையும், பழ மரங்களையும் வளர்க்கிருர்கள். ஐ. ஆர். 8 நெல் கூட இங்குப் பயிரிடப் படுகிறது. வாழை, தென்னை போன்ற மரங்கள் நன்கு வளர்ந்துள்ளன இக்கழிவு நீரால்!

இந்நிலையத்தில் புத்தகப் 'பைண்டிங்' வேலையும் நடக்கிறது. அதாவது தோலால் செய்யப்படும் 'பைண்டிங்'. பெண்களும் ஆண்களும் இந்தப் பிரிவில் பணியாற்றுகின்றனர். இந்நிலையத்தின் சார்பில் 'லெதர் சயின்ஸ்' என்ற திங்கள் இதழ் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளிவருகிறது. இந்த இதழில், தோலைப் பதப்படுத்தும் முறைகள் பற்றிய கட்டுரைகளும் தோல் சம்பந்தமான செய்திகளும் இடம் பெற்றுள்ளன. மேலும் இவர்கள் குறைந்த விலையில் ஆங்கிலத்திலும், தமிழிலும், புத்தகங்களையும் வெளியிட்டிருக்கிருர்கள். 1972 சனவரித் திங்கள் தோல் பொருள் கண்காட்சி ஒன்றும் இங்கு நடைபெறவிருக்கிறது. இதில் பல நாட்டு நிறுவனங்கள் கலந்து கொள்ளப்போகின்றன.



சீரிய பணி பல புரிந்துவரும் இவ்வாராய்ச்சி நிலையம் தோன்றியிராவிட்டால், தோல் தொழில் இந்த அளவுக்கு வளர்ந்திருக்குமா? இந்தியாவில் 1952–53-ல் ரூ. 27 கோடியே 39 இலட்ச ரூபாய்க்கு ஏற்றுமதியான தோல், 1969–70-ல் 98 கோடியே 50 இலட்ச ரூபாய் அளவிற்கு உயர்ந்திருக்கிறதென்ருல் இதற்குக் காரணம் இந்நிலையே அல்லவா?

# வெண்பா மேடை

## 23. மாண்பதனைக் காத்தல் மரபு

வீட்டிற் கொருபிள்ளை வீதம் அளிக்கின்ற
நாட்டினர்நாம்! இந்நாள்நம் நாடுற்ற—கேட்டினைக்
காண்பதுவோ ? வீரக் கலைசெறிந்த பைந்தமிழர்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—வங்கனூரரான், வங்கனூர்.

இகலால் படையதனை எல்லைப் புறத்தே
மிகையாக ஊடுருவ விட்டுப்—பகைவர்செய்
வீண்வம்பை வெஞ்சமரால் வேரறுத்துப் பாரதத்தின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—சு. தருமர், மேலாண்மறைநாடு.

தெள்ளு தமிழ்ப்பாவைத் தேர்ந்தே எழுத்தசை
தள்ளாமல் சீர்தளை தட்டாமல்—உள்ளத்தில்
மூண்ட கவிதை முடித்தேநற் காரிகையின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புலவர் நா. கோதண்டபாணி, ஒரத்தநாடு.

ஆண்மகனைத் தோன்றி அறிவொழுக்கந் தானின்றிக்
காண்பார் சிரிக்கமனக் காவலின்றி—ஊண்விரும்பி
வீண்காலம் போக்கி வினைகேட னாகாமல்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—நா. சிவராமமுத்துக்குமாரவேல், தேனி.

வெங்குருதிச் சாக்காட்டில் வெற்றிபெறப் போராடும்
வங்கத்துச் சிங்கங்காள்! வாழ்கவெனப்—பொங்குகின்ற
ஆண்மையுடன் பாடுவோம் ; ஆர்வமுடன் நாம்உதவி
மாண்பதனைக் காத்தல் மரபு.

—எழிலன், பி.ஏ.,பி.இடி., வெற்றியூர்.

முக்கரணம் போட்டு முயன்றே எழுதினும்எப்
பக்கமும் என்றும்என் பாஇல்லை—துக்கந்தான்
ஆண்மைக் கழகோ அழாதிருத்தல்! போட்டியின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—சுப. அறவாணன், முதலிப்பட்டி.

கருதாமல் தூண்போலக் காதளவுக் கப்பால்
கிருதாவை ஏன்வளர்க்க வேண்டும்?—கிருதாவைக்
காண்பவர்கள் எல்லாரும் கண்டு நடுங்காமல்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—இராம. ஆதிரத்தினம், மேலூர்.

மாணுக்க ரென்றாலே மாண்புடையர் ; அப்பொருளை
வீணாக்கும் செய்கை விழையாதீர்—சேணேக்கி
ஆண்பெண் ணிருவருமே ஆற்றலுடன் கற்றடங்கி
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புலவர் துரை. முருகு, திண்டுக்கல்-1.

நாட்டினைக் காத்திடவே நல்லபல போர்முறைகள்
நாட்டியவர் நம்மவர்கள் நன்கறிவோம்—கூட்டுறவாய்
மூண்டெழுவோம் ; மோதுகளம் வெற்றிகொள்வோம்;
முந்தையர்நம்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—மூ. செல்லையா, விளாத்திகுளம்.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:—

திரு வங்கனூரரான், பாரதிதாசன் இல்லம்,
வங்கனூர் அஞ்சல், திருத்தணி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

முன்னோர் நெறிநின்று மூத்த தமிழ்வளர்த்தே
என்றுந்தன் மானம் இழக்காமல்—அன்னியர்க்கு
வேண்டும் உதவிசெய்து வீரராம் செந்தமிழர்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—மா. கணபதி, சங்கமங்கலம்.

தென்றல் திரு.வி.க. தெய்வ மறைமலையார்
நன்றுணர்ந்த பாரதியார் நம்முன்னோர்—தொன்றுதொட்டுத்
தூண்போலப் போற்றிநிதம் காத்துவந்த நம்நாட்டின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—வித்துவான் க. சேதுராமலிங்கன், இராமேச்சுரம்.

தங்கள் விடுதலையைத் தாயகத்தில் தாமிழந்து
இங்கே வருகின்றார் வங்கத்தார்—அங்கவர்க்கு
வேண்டுவன நாமளித்து வேதனையை நீக்குமந்த
மாண்பதனைக் காத்தல் மரபு.

—வித்துவான் முல்லை. நெல்லையப்பன், தச்சநல்லூர்.

தன்னுயிரைத் தந்து தமிழ்கேட்டான் நந்திவர்மன்
இன்னுயிரைச் சங்கரனார் ஈந்திட்டார்—தென்மொழிக்கே
காண்கின்றோம்; யாதுபயன்? காலமெல்லாம் நாமந்த
மாண்பதனைக் காத்தல் மரபு.

—நாகு. ஆறுமுகம், அரிக்காரன்வலசு.

சித்தருடன் யோகிகளும் சீராட்ட விஞ்ஞானம்
புத்தொளியாம் விந்தை புரிந்ததுவே!—இத்தனையும்
ஆண்டாண்டுச் செல்ல அழிந்ததுவோ? நம்நாட்டின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—இரா. ஜெயபால், காந்திக்கிராமம்.

வாய்மணக்க நெஞ்சினிக்க வந்தாரை 'வா' வென்றே
தாய்போல் அரவணைத்த தண்டமிழர்—நாய்போல
ஊண்வேண்டி ஊர்ஊராய் ஓடினுமே மாத்தமிழர்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—சேரை இரத்தினக்குமார், கொலாபா, பம்பாய் 5.

கோவலனின் வாழ்வழித்த குற்றத்தால் உள்ளழிந்து
மேவியதன் னுவியையே விட்டொழித்த—காவலனும்
பாண்டித் திருநாடன் பண்பு குலையாமல்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புலவர் தி.செ. கந்தசாமி, சங்ககிரிதுர்க்கம்.

தாய்போன்ற அன்பும் தரங்குறையா நற்பண்பும்
சேய்போன்ற தன்மையும், சீற்றத்தில்—பாய்புலியாய்க்
காண்பார்க்குத் தோன்றிடும் கண்போன்ற செந்தமிழர்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—க. தியாகராசன், பி.ஏ., நெய்வேலி-2.

மாற்றானின் தோட்டத்து மல்லிகைப்பூ வாசனையை
ஏற்கும் குணங்கொண்ட எம்மண்ணன்—கூற்றினை
வீண்போக்கா தென்றும் விதியாய்க் கடைப்பிடித்து
மாண்பதனைக் காத்தல் மரபு.

—பொ. வேலம்மாள், கொட்டாரம்.

வீட்டுக் குடித்தனத்தை வீழ்ச்சியுறச் செய்யாது
நாட்டிற்குத் தொண்டுசெய்து நல்லவராய்க்—கூட்டுறவின்
தூண்போல வாழ்ந்துவரும் தாயகுலப் பெண்ணினத்தின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—கோ. கிருட்டினசாமி, பூனா-11.

புவிசெழிக்க வெண்மைப் புறாப்பறக்கும் நாட்டைத்
தவிதவிக்கச் செய்யத் தருக்கர்—குவித்தபடை
காண்பதென்றுந் தோல்வியாகக் காலனாகி இந்தியத்தின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—கிரி, கோவை.

முல்லைக்குத் தேரீந்த முத்தமிழ்சேர் நன்னாட்டில்
இல்லையெனும் பேச்சுக் கிடமில்லை—அல்லலுறக்
காண்பவர்கள் யாருமில்லை காணீர் எனச்சொல்லும்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புலவர் க. பசுவையன், குடியாத்தம்.

முப்பால் முதலான மூதறிவு நூல்களை
இப்பார்க் களித்துள்ளோம் என்றுநாம்—எப்பொழுதும்
வீண்பெருமை பேசுவதை விட்டொழித்து நம்முன்னோர்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—ஆய்மதி, அதிராம்பட்டினம்.

கடமை வழிநின்ற காந்தியுடன் நேர்மைக்(கு)
இடமாய் இலங்கிய நேரு—மடமைகள்
வேண்டா வெனஉரைத்த அண்ணா இவர்மூவர்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—மயிலை வை. வாணி, பி.ஏ., சென்னை-4.

காவிரிச் செம்பியனும் கன்னித் தமிழ்காத்துப்
பாவிரித்த பாண்டியனும் பைம்பனையில்—பூவிரித்த
காண்டகுதார்ச் சேரலனும் காட்டிய முத்தமிழ்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—ந. சிவஞானம், புதுக்கோட்டை.

துஞ்சா விழியோடு துன்பச் சுமையோடு
தஞ்சமென் றிங்குவந்து தங்குவார்க்கு—வஞ்சமின்றி
ஊண்படைத்து நல்லுயிரை ஓம்பும் உயரிய
மாண்பதனைக் காத்தல் மரபு.

—எஸ். வைத்தியநாதன், III-பி. காம், மதுரைக் கல்லூரி

குப்பைப் புழுவொன்று கோழியினை வென்றகதை
எப்பொழுதும் இப்பாரில் இல்லையே—எப்படியோ
வீண்பழியால் யாகியாகான் வீழ்ந்தழிந்தான் என்றேங்கு
மாண்பதனைக் காத்தல் மரபு.

—என். சி. கிருட்டினசாமி, பொன்மலை.

வங்கத் தகதிகளை வாழ்விக்க நம்மால்ஆம்
பங்கதனைச் செய்வம் பகிர்ந்துகொள்வம்—துங்கமுற
வேண்டுவன தந்து விருந்தோம்பி வந்ததமிழ்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புலவர் கரு. சுப்பையா, கல்லூரணி.

பாரறியச் செய்துவிட்டோம் பாகிஸ்தான் அக்கிரமம்
யாரறியப் போவா ரவன்வீழ்ச்சி—நேராகக்
காண்பதே வெற்றிக் களத்திடை நம்நாட்டின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—வே. சாமுவேல், போடிநாயக்கனூர்.

தாயைப்போல், தங்கையைப்போல், தம்மருமைக் கண்மணி நேர்
சேயைப்போல் பெண்களிடம் சிப்பாய்கள்—தூயமனம்
பூண்டொழுகிப் போரிற் புறங்காணு வீரஞ்சேர்
மாண்பதனைக் காத்தல் மரபு.

-- சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

நானும் எழுதுகிறேன் நல்லதமிழ் வெண்பாக்கள்!
ஏனோ வருவதில்லை ஏந்திழையே!—ஆனாலென்?
காண்பதெலாம் ஏட்டில் கவிவடிவே; ஆயினும்,பா
மாண்பதனைக் காத்தல் மரபு.

—அடைக்கலக்குறளன், கோவிலூர்.

நல்லவனாய்த் தானிருந்தும், நஞ்சை உமிழ்கின்ற
பொல்லா இனத்தாரைப் போற்றுவதால்—எல்லையிலா
வீண்பழிதான் சேரும் விரைவினிலே; ஆதலினால்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—சி. செள. கருப்பன்செட்டி, திருச்சி-15.

எல்லையிலே வாலாட்டும் ஈனப் பதர்களுயிர்
கொல்லுதலே திண்டோள் குறித்தசெயல்—பல்லுயிர்கள்
வீண்பழியில் சாதல் விரும்போம்! எனினும்நம்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—சு. பொன்னுராசு, வாளவாடி.

தந்தைதாய்க் கேற்ற மகளாகத் தற்கொண்டான்
சந்தப் புகழ்மிக்க நங்கையாய்ப்—பந்தமுடன்
தான்பெற்ற மக்கள் நலங்காக்கும் தாயாய்ப்பெண்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—எஸ். சீதாலெட்சுமி, ஆத்தூர்.

எழுத்தொடு சொற்பொருள் யாப்பணியென் றைந்தாய்
வழுத்து மிலக்கணம் வாய்ந்த—விழுத்தமிழில்
சேண்மொழிச்சொல் சேர்த்துரையோம் செந்தமிழர் தம்மொழி
மாண்பதனைக் காத்தல் மரபு.

—தா. சுப்பிரமணியன், குகை.

ஆடைக் குறைப்பெல்லாம் அந்நியரின் நாகரிகம்
நாடுவதோ ஈதெல்லாம் நம்பெண்கள்?—கூடிநாம்
வீண்பெருமை நீக்கிவிட்டு மெச்சுகின்ற பண்டைய
மாண்பதனைக் காத்தல் மரபு.

—ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

அல்லல் படுவதைக்கண் டாற்றாத வேள்பாரி
முல்லைக்குத் தேரீந்தான் முன்னொருநாள்—எல்லையிலா
வான்பொருளை ஈந்தே அகதிகட்கு வாழ்வளிக்கும்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புலவர் தி.செ. குப்புசாமி, திருச்செங்கோடு.

எத்தனைவெண் பாநா னெழுதி விடுத்தாலும்
அத்தனையில் ஒன்றேனும் அச்சேறா—இத்தாளைக்
காண்பதே யென்றன் கடனென்று வீற்றிருக்கும்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—பாவை. மயிலோன், பாரதிநகர்

நாட்டின் நிலைமறத்தல் நல்லவரை நோகடித்தல்
காட்டிக் கொடுக்கும் கயமைஎன—ஏட்டினிலே
காண்பதனை யெல்லாம் கருத்தெனவே கொள்ளாது
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புவனை கலைச்செழியன், அரியூர்

மெய்வருந்த வாழ்ந்தாலும் மெய்பேசி வாழ்ந்திடுவோம்!
செய்தொழில் மேன்மைதனைச் சேர்த்திடுவோம்!—பொய்யில்லை
காண்கின்ற எச்செயலும் கண்ணியமே என்றுசொல்லி
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புலவர் வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்

தொல்லைகள் பன்னாள் தொடர்ந்து வருமெனினும்
எல்லையைத் தாண்டாம லேந்திழையர்—தொல்லுகில்
ஆண்டிருந்தார் நற்புகழை, அன்னமே! நீயுமந்த
மாண்பதனைக் காத்தல் மரபு.

—சு. முத்துக்கருப்பன், பேரையூ

ஏட்டினிலே செய்திகளை ஏறுக்கு மாறாகப்
போட்டுவிடின் பொங்கும் புரட்சிகள்—நாட்டினிலே;
சாண்வயிற்றுக் காகச் சதிபுரியேல்! பத்திரிகை
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புலவர் மு. சிக்கந்தர், கோரிக்கடவ

நல்லாட்சி நாவளமை நங்கையவின் கற்புநெறி
சொல்லாட்சி, காதல், துணிவுடைமை—எல்லாம்நாம்
காண்பதெனில் செந்தமிழ் காட்டும் இலக்கியத்தின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—விரு. இராசு. மாரியம்மன் கோவில்பட்டி.

பொன்னிற மேனியைப் பூத்தசெவ் வாயிதழை
இன்னும் எனக்களிக்க அச்சமேன்?—மன்னவரே
'நாண்' ஏறு முன்னே நலமழியாப் பெண்மையெனும்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—வ. பெ. இராமசாமி, சென்னை-18.

அன்புடைமை, இன்சொல், அடக்கம், பிறர்வாழ
இன்புறுதல், செய்ந்நன்றி யெண்ணுதல்—மன்புவியில்
காண்பரிய நேர்மை கமழும் தமிழினத்தின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—அ. குமரப்பன், சீர்காழி.

அன்புப் பிணைப்பினிலும் ஆற்றல் விரிப்பினிலும்
இன்பக் களிப்பினிலும் இன்னலிலும்—இன்றமிழர்
வேண்டுமறை யாட்சியிலும் வேற்றுரைக் காப்பதிலும்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—கவிஞர் எழிற்கோவன், ஓசூர்.

செந்நீருங் கண்ணீருஞ் சிந்துங்கீழ் வங்கத்தில்
எந்நாளோ நல்லமைதி ஏற்படுநாள்?—அந்நாளைக்
காண்பதற்கே முற்படுக காசினியே! எந்நாளும்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—க. இரத்தினம், திருத்துரைப்பூண்டி.

கூழைக் குடித்துக் குடிசையிலே வாழ்கின்ற
ஏழை எளியவர்கள் இன்பமுடன்—வாழவழி
காண்பதற்குப் பாடுபடும் கன்னித் தமிழரசின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—குழ. அண்ணாமலை, கோவை

வஞ்சகம் நானறியேன் வாதிடவும் எண்ணுகிலேன்
நஞ்சினும் கொல்விழி நாயகியே!—வஞ்சியே
ஊண்மறந்தேன் நாண்துறந்தேன் உன்நினைவால்; நின் பெண்மை
மாண்பதனைக் காத்தல் மரபு.

—ஆ. இரா. சந்திரன், ஆத்தங்குடி.

குன்றாய் நிமிர்ந்தூக்கம் குன்றாமல் பேரிமயக்
குன்றருகே யாகியாவின் கூட்டத்தை—வென்றுபெரும்
தூண்போல நிற்பபார்க்குத் தோள்கொடுத்துச் செந்தமிழர்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—க. ஒப்பிலான், திருச்சி-15.

பெற்ற திருநாட்டைப் பேணிச் செழுந்தமிழைக்
கற்ற பெரியோர் கருத்தேற்றுச்—சுற்றமெனக்
காண்பவரை அன்பால் கவர்கின்ற நற்செயல்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—அ. வை. முத்துச்சாமி, அந்தியூர்.

சிங்கத் தமிழா! சிறுநரியாய் அன்னியர்கள்
பொங்கும் பொறாமையால் பொங்குகிறார்—இங்கவரைச்
சேண்விளங்கும் வானுலகம் செல்லவழி காட்டியுன்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புலவர் செல்வி. வ. இராஜரத்தினம், திருவெகம்பத்து.

புலவர் தமைப்புரந்து பொல்லாரைக் காய்ந்து
நலம்பலவும் செய்திந்த நாட்டைக்—குலமன்னர்
ஆண்ட வரலா றறிவோம்நாம்; அத்தகைய
மாண்பதனைக் காத்தல் மரபு.

—செ. தங்கவேல்சாமி, இராமேச்சுரம்.

உள்ளத்தில் ஊற்றும்; உணர்ச்சிப் பிழம்பாமே
கள்ளமிலாக் கண்ணகியின் காவியந்தான்—அள்ளுசுவைத்
தோண்டியெடு கற்கோவில்! தூயபுகார்த் தேசொளியாம்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புலவர் கோ. பொன்னுசாமி, அயன்கரிசல்குளம்.

துன்னலர் போரைத் தொடர்ந்திடும் போதுநாம்
இன்னல் வடக்கிலென் றெண்ணுமல்—முன்னெழுந்(து)
ஆண்மையுடன் போரிடுவோம்; அன்னைத் திருநாட்டின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

— முத்துச்சோழன், கோயம்புத்தூர்.

சீரோடு தோன்றிட்ட செல்வத் திருமனைக்கும்
ஏரோடு சென்ற எழில்மனைக்கும்—பேரோடு
காண்பவர்தான் போற்றிடக் காரிகை தன்கற்பின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—மு. ப. சங்கரலிங்கம், உடுமலை.




# ஒரு ரொட்டியின் கதை




"இந்த இனிப்பு ரொட்டி எவ்வளவு சுவையாக இருக்கிறது........'' என்று ஒருவன் அந்த ரொட்டியின் துண்டுகளை ஒவ்வொன்றாக எடுத்து வாயில் போட்டுக் கொண்டிருந்தான். எதிரிலிருந்த அவன் நண்பனோ ஒரு பழ ரொட்டியைக் காட்டி, ''இதைச் சுவைத்து விட்டுப் பதில் சொல். ஆகா! நினைக்கும்போதே நாவில் நீர் ஊறுகிறதே......'' என்றான். உடனே மூன்றாமவன், ''நீங்கள் இருவரும் இந்த ரொட்டியைச் சாப்பிட்டிருக்க மாட்டீர்கள். இதன் பெயர் பால் ரொட்டி!'' என்றான்.

இப்படி ரொட்டியின் சுவையை அனுபவித்தவர்கள் பேசும்போது, இத்தகைய அருமைக்கும் பெருமைக்கும் உரிய அந்த ரொட்டி எது என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

அதுதான் மத்திய அரசு நிறுவனமொன்றால் தயாரிக்கப்படும் 'மாடர்ன் ரொட்டி'. இதன் மகிமையை உலக நாடுகளே அறிந்து பாராட்டும் அளவுக்கு அதில் என்ன இருக்கிறது? அதைத் தெரிந்துகொள்வதற்கு முன், முதலில் இதைத் தெரிந்து கொள்வோம்:

மாடர்ன் பேக்கரீஸ் (இந்தியா) லிமிடெட் [Modern Bakeries (India) Ltd.] என்னும் இந்த மத்திய அரசின் நிறுவனம் சென்னை அடையாறில் மூன்று ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டிருக்கிறது. 1968-ல் துவக்கப்பட்ட இந்தக் கட்டடத்தைத் தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறை கட்டியது.

'மாடர்ன் ரொட்டி' என்னும் பெயரில், சத்துள்ள வகை வகையான ரொட்டிகளைத் தயாரிக்கும் இந்த நிறுவனத்தில் 96 பேர் வேலை செய்கிறார்கள். மூன்று 'ஷிப்ட்'டாக 24 மணி நேரமும் இங்கு ரொட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. இங்கு வேலை செய்கிறவர்கள் ஒரு குறிப்பிட்ட வேலையைத்தான் செய்வார்கள் என்று இல்லை; இத்தொழிற்சாலையிலுள்ள எல்லா வேலைகளும் அவர்களுக்குத் தெரியும்.

இங்குள்ள விந்தையான கருவிகளையெல்லாம் ஆஸ்திரேலிய அரசு இலவசமாக வழங்கியிருக்கிறது. கொழும்புத் திட்டத்தின் கீழ் இந்த உதவி நமக்குக் கிடைத்திருக்கிறது. கோதுமை மாவைச் சலித்துத்தண்ணீர் விட்டுப் பிசைவது முதல் ரொட்டி சுட்டு, 'பேக்கிங்' செய்வது வரை எல்லாம் இயந்திரம்தான் செய்கிறது. நம் கண்களை நம்மால் நம்ப முடியாத அளவுக்கு, அத்தனைத் துரிதமாக ரொட்டி தயாரித்து வருகிறது, இந்த விந்தை இயந்திரங்கள்!

இங்குள்ள பெரிய கிடங்கில் மூட்டை மூட்டையாக உயர்தரக் கோதுமை மாவு, சர்க்கரை, பால் பவுடர் அடுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு கோதுமை மாவு மூட்டையை ஓர் இயந்திரத்தில் கொட்டுகிறார்கள். அது மிக விரைவில் மாவைச் சலித்து ஒரு பெரிய பாத்திரத்திலும், திப்பியை மறு பக்கமும் தள்ளி விடுகிறது. வாயகன்ற பெரிய பாத்திரத்திலுள்ள மாவை எடை போடுகிறார்கள். அந்தப் பாத்திரத்தில் ஓர் இடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தள்ளிக் கொண்டு போவதற்கான சக்கரங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

சுமார் 800 ரொட்டிக்குத் தேவையான மாவுள்ள அந்தப் பாத்திரம் இன்னொரு கருவியில் பொருத்தப்படுகிறது. அங்கு மாவோடு, சர்க்கரை, பால் பவுடர், கொழுப்புப் பதார்த்தங்கள், வைட்டமின்கள் எல்லாம் போடுகிறார்கள். மாவுடன் அவைகளைக் கலப்பது இயந்திரமே. பிறகு அந்த மாவில் நீர்விட்டு மாவை நன்றாகப் பிசைவது மனிதரல்ல; அதுவும் இயந்திரமே! இந்த வேலை அரை மணிநேரத்தில் முடிந்துவிடுகிறது. பிசைந்த மாவில் 'ஈஸ்ட்' என்னும் பொருளை, மாவு புளிப்பதற்காகச் சேர்க்கிறார்கள்; நாம் வீட்டில் தோசைமாவைப் புளிக்க வைக்கிறோமே, அதைப்போல. பிசைந்த மாவு உள்ள பாத்திரத்தைத் தள்ளிக்கொண்டு, வெப்ப அறைக்குள் (Fermentation Room) போகிறார்கள். அங்கு அந்தப் பாத்திரத்தை வெள்ளைத் துணியால் மூடி வைத்துவிட்டுக் கதவை மூடிவிடுகிறார்கள். மின்சாரப் பட்டனைத் தட்டியதும் அந்த அறையில் ஒரே சீரான வெப்பம் பரவுகிறது. வெப்பத்தில் கெட்டியான மாவு, பொங்க வைக்கப்படுகிறது; அதாவது, மிருதுவாக்கப்படுகிறது. மூன்று அல்லது நான்கு மணி நேரத்தில் இந்த வேலை முடிந்துவிடுகிறது. மிருதுவான இந்த மாவுள்ள பாத்திரத்தைத் தள்ளிக் கொண்டு போய், மாவைத் துண்டு போடும் இயந்திரத்தில் பொருத்துகிறார்கள். பாத்திரத்திலுள்ள மாவை அப்படியே ஓர் இயந்திரம் கொட்டுகிறது. கண் சிமிட்டும் நேரத்தில் துண்டு துண்டாக மாவு வெளியே வந்து

விழுகின்றது. நமக்கு எந்த அளவு ரொட்டி தேவையோ, அந்த அளவுக்குத் துண்டுகள் கிடைக்கின்றன.

200, 400, 800 கிராம் ரொட்டிகளுக்குத் தேவையான மாவுத் துண்டுகளை இக்கருவி மூலம் நாம் பெறலாம். அந்தத் துண்டுகள் அடுத்த கருவியில் உருண்டையாக்கப்பட்டு, ரொட்டிக் கிண்ணத்தில் இந்த உருண்டைகள் விழுந்து, ரொட்டி உருவைப் பெறுகின்றன. இவையெல்லாம் விஞ்ஞானத்தின் விந்தையே! விரைந்து செயல்படும் இவ் வியந்திரங்களை நேரில் கண்டு வியக்கலாம்.

இப்போது பச்சை ரொட்டி தயார். அதைச் சுட வேண்டும். இதற்காகவாவது அடுப்பு வைத்து வீட்டில் சுடுவதைப் போல் சுடுகிறார்களா என்றால், நெருப்பு இல்லாத, புகை இல்லாத மின்சார இராட்சத அடுப்பல்லவா இதனைச் சுடுகிறது! இரண்டு வகையான அடுப்புகள் இருக்கின்றன. ஒன்று 100 டிகிரியும், மற்றது 430 டிகிரியும் வெப்பமுள்ளது. முதலில் கிண்ணத்திலுள்ள பச்சை ரொட்டிகள் வரிசையாக 100 டிகிரி வெப்ப அடுப்புக்குத் தானாகவே



'கன்வேயர்' மூலம் செல்கின்றன. அந்தக் கிண்ணங்கள் அடுப்பிலுள்ள தட்டுகளில் எடுத்து வைக்கப்படுகின்றன. பிறகு மின்சாரத்தின் மூலம் அவை சுடப்பட்டுப் பக்குவப் படுத்தப்படுகின்றன. இந்த அடுப்புக்கு ஃபைனல் ப்ரோவர் (Final Prover) என்று பெயர். இதற்குப் பிறகுதான் நாம் சாப்பிடும் அளவுக்கு ரொட்டி நன்றாகச் சுடப்படுகிறது.

பக்குவப்படுத்தப்பட்ட ரொட்டிகள் மீண்டும் 'கன்வேயர்' மூலம் அடுத்த 430 டிகிரி வெப்ப அடுப்புக்குச் செல்கின்றன. இந்த அடுப்பில் தான் ரொட்டிகள் நன்றாகச் சுடப்படுகின்றன. இந்த அடுப்புக்கு ஓவன் (Ovan) என்று பெயர். சுட்ட ரொட்டிகள் அப்படியே கிண்ணத்தோடு வெளியே வருகின்றன. அப்போது அதன் வெப்பம் கையில் தொட முடியாத அளவுக்குச் சுடும். எனவே, கொதிக்கும் கிண்ணத்திலுள்ள ரொட்டியைப் பக்குவமாக எடுக்கவும் ஒரு கருவி இருக்கிறது.

'கன்வேயர்' மூலமாகத் தொட்டால் கொதிக்கும் ரொட்டிகள்



வரிசையாகச் செல்கின்றன. அங்குள்ள டிபேன்னர் (Depanuer) என்னும் கருவிதான் சூடான கிண்ணத்திலுள்ள ரொட்டியை எடுத்தெடுத்து வைக்கிறது. கிண்ணத்திலிருந்து எடுக்கப்பட்ட ரொட்டிகள் சூடாக இருக்குமாதலால், அவை குளிர்படுத்தக்குளிர்ப்பதன (Cool Room) அறைக்குக் கொண்டு போகப்படுகின்றன. இந்த அறையில் ரொட்டிகள் இரண்டு மணி நேரம் இருக்கும். இதற்குப் பிறகுதான் 'பேக்கிங்'.

ரொட்டிகளைச் சிறு சிறு துண்டுகளாக அரிவது, மெழுகுத்தாளை அதன்மேல் சுற்றுவது, பிறகு பசையால் அதனை ஒட்டுவது எல்லாம் இந்த விந்தை இயந்திரம்தான் !

ரொட்டியின் கதையை ஓரளவு தெரிந்து கொண்ட நாம், இந்த ரொட்டி உலக நாடுகளை எப்படிக் கவர்ந்தது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா ?

மாடர்ன் ரொட்டி தயாரிக்கும் இந்த நிறுவனத்தில், தரக் கட்டுப்பாடு பரிசோதனைக் கூடம் (Quality Control Lab) ஒன்றும் இருக்கிறது. ரொட்டி தயாரிப்பில் உபயோகப்படுத்தப்படும் மூலப் பொருள்கள் தரமாக இருக்கின்றனவா என்பது இங்குப் பரிசோதிக்கப்படுகிறது. முற்றிலும் சுகாதார முறைப்படி தானாகவே இயங்கும் இயந்திரங்களைக்கொண்டு செய்யப்படும் இது போன்ற தொழிற்சாலைகள், இந்தியாவில் ஒன்பது நகரங்களில் உள்ளன. சென்னை உட்பட அகமதாபாத், பெங்களூர், பம்பாய், கல்கத்தா, கொச்சின், டில்லி, ஐதராபாத், கான்பூர் ஆகிய நகரங்களிலும் மாடர்ன் ரொட்டிகள் தயாரிக்கும் நிறுவனங்கள் உள்ளன. பம்பாய், கல்கத்தாவிலுள்ள தொழிற்சாலைகள் நாளொன்றுக்கு 400 கிராம் எடையுள்ள 72,000 ரொட்டிகளைத் தயார் செய்கிறது; சென்னை உட்பட மற்ற இடங்களில் நாளொன்றுக்கு 36,000 ரொட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. தேவை ஏற்படும்பொழுது இந்தத் தொகை மேலும் அதிகரிக்கவும் இத்தொழிற்சாலைகளில் வசதிகள் இருக்கின்றன.

இந்த நிறுவனங்களின் நோக்கமென்ன ?

உணவுப் பழக்கங்களை மாற்றித் தரத்தை உயர்த்தி சத்துப் பொருள் கொண்ட உணவை அளிப்பது; மற்றும் பல தரப்பட்ட உணவு வகைகளை வழங்கிச் சத்துணவை மக்களிடம் பரப்புவது. சத்துப் பொருட்கள் கொண்டு ஊட்டம் செய்யப்பட்ட இந்த ரொட்டிகளை எந்த நேரத்திலும், எந்த உணவுடனும் எளிதாகக் கலந்து உண்ணலாம்.

உணவில் சத்துப்பொருள் பற்றாக்குறைவினால் இலட்சக்கணக்கான மக்கள் நோய்வாய்ப்பட்டு அல்லலுறுகின்றனர். அவர்கள் உணவில் எல்லா வைட்டமின்களும், புரதச்சத்தும், தாதுப் பொருட்களும் அதிகரிக்க வேண்டும். இச்சத்துப் பொருட்களை எல்லாம் ரொட்டி போன்ற ஓர் அன்றுட உணவில் சேர்த்து மக்களுக்கு வழங்குவது என்பது இந்திய அரசின் ஒரு தீவிரமான நோக்கம். ... காணும் சத்துக்கள் அடங்கியுள்ளன :—

1. வைட்டமின்-ஏ : நல்ல கண்பார்வைக்கும் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் உகந்தது.

2. வைட்டமின் பி காம்ப்ளெக்ஸ் : பசியை உண்டாக்குவதற்கான தியாமின், ரிபோபிளாவின், நியாஸின் ஆகிய சத்துக்களை விசேடமாகப் பெற்றுள்ள இது இதயமும், தசை நார்களும் நன்கு செயல்படச் செய்கிறது.

3. தாதுப் பொருட்கள் : சிறப்பாக அயச்சத்து—இரத்தம் சுத்தமாயிருக்க இன்றியமையாதது.

4. புரதச் சத்துக்கள் : நல்ல ஆரோக்கியத்திற்கும், குழந்தைகளின் துரித வளர்ச்சிக்கும் அவசியமாகும்.

5. கார்போ ஹைடிரேட் : நாள் முழுவதும் உடலுக்குச் சக்தியளித்து ஊக்குவிக்கிறது.

இந்த அளவுக்கு ரொட்டியில் அதிகமான சத்துப் பொருட்களைச் சேர்த்து ஊட்டம் செய்து பெரிய அளவில் தயாரிப்பது, உலகிலேயே இதுதான் முதன் முறையாகும். இந்த ரொட்டி உண்ணுவதற்கு மிக்கச் சுவையாக இருப்பதற்கு, இதன் மூலப் பொருள்கள் தரமாக, துல்லியமாக இருப்பதுதான் காரணம். இந்த ரொட்டி செய்வதற்கான பால் பவுடர் நியூசிலாந்திலிருந்து வருகின்றது. மாடர்ன் ரொட்டியில் 'லைசின்' என்னும் பொருள் சேர்க்கப்படுவ



புரதச்சத்தை இது மேலும் அதிகரித்துக் கொடுக்கிறது.

இந்தத் தொழிற்சாலையில் நான்கு விதமான ரொட்டிகளைத் தயாரிக்ககிறார்கள். அவை 1. சாதாரண ரொட்டி, 2. இனிப்பு ரொட்டி.3. பழவகை ரொட்டி, 4. பால் ரொட்டி.

சாதாரண ரொட்டியில் பால், இனிப்பு எல்லாம் சமஅளவில் இருக்கும்; இனிப்பு ரொட்டியில் கொஞ்சம் இனிப்பு அதிகமாக இருக்கும்; பழவகை ரொட்டியில் எல்லாவிதமான பழக் கலவையும் இருக்கும். முக்கியமாகத் திராட்சை இருக்கும். இந்தப் பழக்கலவை பம்பாயிலிருந்து வருகிறது; பால் ரொட்டியில், மற்றச் சத்துக்களோடு அதிகமாகப் பால் சேர்க்கப்பட்டிருக்கும்.

இதைத் தவிரச் சிறந்த பால் ரொட்டியும் (Special Milk Bread) தமிழ்நாடு அரசுக்காகத் தயாரிக்கப்படுகிறது. இந்த ரொட்டிகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ், குடிசை வாழ் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. இதன்படி 1,50,000 குழந்தைகள் இந்த உணவுத் திட்டத்தில் பயன் பெறுகிறார்கள். ஆறு மாதத்திலிருந்து மூன்றுவயதுகுட்பட்ட குழந்தைகளுக்கு இந்த ரொட்டிகள் வழங்கப்படுகின்றன. வாரத்தில் ஐந்து நாட்கள் இந்த ரொட்டிகள் தமிழகத்திலும், சென்னையிலுமுள்ள ஒரு குறிப்பிட்ட நிலையங்களில் (Centres) விநியோகிக்கப்படுகின்றன.

மாடர்ன் ரொட்டிகளுக்குத் தமிழகத்திலும், சென்னையிலும் நல்ல கிராக்கி உள்ளது. திருச்சி, மதுரை, கோவை, சேலம், ஈரோடு, வேலூர், காஞ்சி, திருப்பூர், பாண்டிச்சேரி, காரைக்கால் போன்ற ஊர்களுக்கு இந்த ரொட்டிகள் பெருமளவு அனுப்பப்படுகின்றன. மாவட்ட ஆட்சியாளர் அல்லது நகர மன்ற ஆணையாளர் மூலமாக இந்த ரொட்டிகள் அந்தந்த ஊர்களில் வழங்கப்படுகின்றன. சென்னை நகரில் உள்ள அரசினர் மருத்துவ மனைகளுக்கும், மதுரை இரயில்வே மருத்துவமனைக்கும் இந்தச் சத்தான ரொட்டி மெத்தவும் பயன்படுகிறது. முகவர்கள் மூலமாகவும் தமிழகத்தின் சில ஊர்களில் ரொட்டி விற்பனை நடைபெறுகிறது.

இந்த ரொட்டிகள் எத்தனை நாள் கெடாமல் இருக்கும்?

பொதுவாக இந்த ரொட்டிகள் மூன்று நாட்கள் வரை கெடாமல் இருக்கும். ரொட்டிகள் தவிர புரதச் சத்துக்கள் நிறைந்த பிஸ்கட்டுகளைத்தயாரிக்க இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது, வரவேற்கத்தக்கது.

இந்திய மக்களின் உணவின் தரத்தை உயர்த்த மாடர்ன் பேக்கரிஸ் நிறுவனம் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சி வெளிநாடுகளின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்திருக்கிறது. பல நாடுகள் இதைபோற்றியுள்ளன. நம்மைப்போல உணவுத்திட்டப் பிரச்சினையுள்ள லத்தீன் அமெரிக்க நாடுகள் இம்முயற்சியை ஆர்வத்துடன் கவனித்து வருகின்றன.

"மாடர்ன் ரொட்டி, இந்திய அரசினரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு புதிய முயற்சி. லைசின் வைட்டமின்கள், தாதுப் பொருட்கள் கொண்டு ஊட்டம் செய்து ரொட்டியை மேலும் சத்துணவாக்குகிறது. உலகத்திலேயே பெரும் அளவில் லைசின் சேர்த்து ஊட்டம் செய்யும் திட்டம் இது ஒன்றே" என்று லத்தீன் அமெரிக்கப் பத்திரிகைகள் பாராட்டுகின்றன.

"உலகத்திலேயே பெருந்துறையில் அமைனோ அமிலம் சேர்த்துச் சத்துணவாக்குவது இந்தியா ஒன்றே" என்று ஒரு ஜப்பானிய இதழும், "குறிப்பாகக் குழந்தைகளுக்கும், கருவுற்றிருக்கும் காலத்திலும், மகப்பேறு பெற்ற சமயத்திலும் மகளிருக்கு மிகவும் நன்மை பயக்கும்" என்று அமெரிக்க ஏடு ஒன்றும் இத்திட்டத்தை வரவேற்கின்றன.

பிரேசில் நாட்டினரும் மாடர்ன் பேக்கரி முறையைக் கடைப்பிடிக்க, இங்குத் தொடர்புகள் வைத்திருக்கின்றனர். அமெரிக்காவில் சத்துணவுத்திட்டத்திற்காக அமைக்கப்பட்ட அரசினர் குழு ஒன்று, மாடர்ன் ரொட்டியின் உதாரணத்தை தம் நாட்டிலும் கடைப்பிடிக்கலாம் என்று கருத்தறிவித்துள்ளது.

குறைந்த விலையில் நிறைந்த சத்துக்களைத் தரும் இந்த எளிய உணவை எல்லாரும் விரும்பி வரவேற்க வேண்டும். 'நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம்' அல்லவா? அந்தச் செல்வத்தைப் பெற நாள் தோறும் நாம் உணவில் சத்துக்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நம் வாழ்வு நல்வாழ்வாக விளங்கும்.

### கண் நோய் ஏன் வருகிறது?

வைட்டமின் 'ஏ' யாவருக்கும் தேவையானது. குறிப்பாக ஒன்றுமுதல் ஆறுவயது வரை உள்ள குழந்தைகளுக்கு மிகவும் தேவை. அண்மையில் எடுத்த மதிப்பீட்டின்படி 25 இலட்சம் இந்தியக் குழந்தைகள் வைட்டமின் 'ஏ' பற்றுக் குறையினால் பீடிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதனால் கண் நோய்கள் ஏற்பட்டு, பார்வையை இழக்கும்படியும் நேரிடுகிறது. உட்கொள்ளும் உணவில் தேவையான அளவு வைட்டமின் 'ஏ' இருந்தால் இந்த நோய்கள் வராமல் தடுத்துவிடலாம். வைட்டமின் 'ஏ' சேர்ந்த உணவை ஒவ்வொரு நாளும் உட்கொள்ள வேண்டும். ஒரு பெரிய மாடர்ன் ரொட்டியில் இந்தச் சத்து முழுதும் இருக்கிறது.

### இரத்தச் சோகை வருவதேன்

இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களின் உற்பத்திக்கு இரும்புச் சத்து தேவைப் படுகிறது. இந்த முக்கியமான தாதுப்பொருளின் பற்றுக்குறையால் இரத்தச் சோகை உண்டாகிறது. இந்த நோய் நம் நாட்டில் பொதுவாகக் காணப்படுகிறது. பெண்கள், குறிப்பாக இளம் வயதினர் இந்த நோய்க்கு இலக்காகின்றனர். இவர்கள் இரும்புச்சத்து மிகுந்த உணவை அதிகம் உட்கொள்ள வேண்டும். பெரிய மாடர்ன் ரொட்டியில் நாளொன்றுக்கு ஒருவருக்கு வேண்டிய இரும்புச் சத்தில் 75 சதவீதம் கொடுக்கிறது.



# முதல்வரின் செயல்திறன் வேகமே குடிநீர் வடிகால் வாரியம்!

"வழிகாட்டும் தமிழ்நாடு".

"தமிழ்நாட்டில் உள்ள இது போன்ற அமைப்பு வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது"

"இந்தியாவிலுள்ள ஏனைய மாநிலத்தவர்கள் நம்முடைய இம்முயற்சியைப் பாராட்டி இது போன்ற அமைப்புகளைத் தமது மாநிலத்திலும் அமைக்க விரும்புகிறார்கள்"

இதுபோன்ற சொற்றொடர்களைப் பலமுறை எழுத நமக்கு வாய்ப்பு ஏற்பட்டது உண்டு.

அதற்கு இன்னொரு வாய்ப்பைத் தருகிறது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

ஆமாம்! இந்தியாவில் வேறு எங்கும், மாநில அளவில் இப்படி ஓர் அமைப்புக்கிடையாது. கடந்த தமிழ்ப்புத்தாண்டுத் தினத்தன்று தொடங்கப்பட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மிகக் குறுகிய காலத்திலேயே மகத்தான செயல்களைச் செய்துள்ளது.

இதைப் பற்றி நாம் கேட்கும் பல்வேறு கேள்விகளுக்கு இதன் தலைவர் திரு செ. கந்தப்பன் அவர்கள் அளிக்கின்ற பதில்கள் வருமாறு:—



## குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் செ. கந்தப்பன் அவர்கள் பேட்டி

தன்னுள் தனி அதிகாரம் பெற்று விளங்கும் அமைப்பான தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம் முதல்வர் கலைஞரின் நேரடியான பொறுப்பின் கீழ் இயங்குகிறது.

குடிநீர், வடிகால் வசதிகளைப் பெருக்கவும், இத்திட்டங்களை ஒருங்கிணைத்து விரைவுபடுத்தவும் நமது அரசால் இவ்வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. நாடு விடுதலை அடைந்த பின்னர் நிறைவேற்றப்பட்ட முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் குடிநீர், வடிகால் திட்டங்களுக்காக மொத்தத்தில் 15 கோடி ரூபாய் தான் செலவிடப்பட்டிருக்கிறது.

ஆனால் 1967-ஆம் ஆண்டுக்குப் பின்னர் கடந்த நான்கு ஆண்டுகளில் குடிநீர், வடிகால் திட்டங்களுக்காக ரூ. 12 கோடி செலவிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு பல்வேறு குடிநீர், வடிகால் திட்டங்களுக்காகச் செலவிட ரூ. 18.31 கோடிக்கு வழிவகை காணப்பட்டுள்ளது.

குடிநீர் வடிகால் வாரியம் இத்திட்டங்களை மேற்கொண்டுள்ளதால் பணிகள் விரைந்து செயல்படுத்தப்படுகின்றன.

இப்பொழுது வாரியம் 81 குடிநீர்த் திட்டங்களையும் 9 வடிகால் திட்டங்களையும் மேற்கொண்டுள்ளது. மேலும் 81 திட்டங்கள் ஆய்வில் உள்ளன.

தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புறங்களில் ஒன்றேகால் கோடி மக்களுக்கு மேல் வாழ்கின்றனர். இவர்களில் எழுபது சதவீதத்தினர் மட்டுமே இதுவரை பாதுகாக்கப்பட்ட குடிநீரைப் பெற்று வருகின்றனர். எஞ்சியுள்ள நகர்ப்புற மக்களும் இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் பாதுகாக்கப்பட்ட தண்ணீரைப் பெறுவதற்குத் தேவையான முயற்சிகளைக் குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டுள்ளது.

### புதை வடிகால்—சில சிக்கல்கள்

புதை வடிகாலைப் பொறுத்த வரையில் நகர்ப்புற மக்களிலேயே பத்து விழுக்காட்டுக்குக் குறைந்த அளவு மக்களே இது வரை அந்தப் பயனைப் பெற்று வந்தனர்.

புதை வடிகால் திட்டங்களை நிறைவேற்றுவதில் பல சிக்கல்கள் உள்ளன.

நம்முடைய நகர அமைப்புகள் திட்டமிடப்படாத நகர அமைப்புகள்— புதைகுழிச் சாக்கடைகளையோ, சுகாதாரப் பயன்களையோ நகர மக்களே உணராத காரணத்தால் இப்பணிகளை வேகப்படுத்துவதில் இடர்ப்பாடு உண்டு. முன்னரே வடிகால் திட்டம் நிறைவேற்றப்பட்ட



பயனைக் காண முடியவில்லை.

வீட்டின் புறக்கடையிலிருந்து முன்புறத்திலே செல்லும் புதை வடிகாலோடு கழிவு நீரை இணைக்கச் செலவு காரணமாகப் பலர் முன்வருவதில்லை.

தண்ணீர்த் திட்டங்களைப்போல வருவாய் தரும் திட்டங்களாகப் புதை வடிகால் திட்டங்கள் இல்லாமையால், நகராட்சி மன்றங்களும் பேரூராட்சி மன்றங்களும் புதை வடிகால் திட்டங்களை மேற்கொள்ளத் தயங்குகின்றன.

கழிவு நீரைக் கொண்டு புல் பண்ணை, தீவன உற்பத்தி முதலியன செய்வதன் மூலமும், கழிவு நீரை நன்னீராக்கி அதிலிருந்து கிடைக்கும் நீரைப் பாசனத்திற்கும் தொழிற்சாலைகளுக்கும் பயன்படுத்துவதன் மூலமும் வடிகால் திட்டங்களை ஓரளவுக்கு ஆதாயம் தரும் நிலைக்குக் கொண்டுவரக் குடிநீர், வடிகால் வாரியம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதன் தொடர்பாகச் சென்னைக்கு அருகில் கொடுங்கையூரில் ஓர் ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகிறது.

சென்னை நகரில் மட்டும் தற்போது ஒரு நாளைக்குச் சுமார் 40 மிலியன் காலன் கழிவுநீர் கடலில் கலக்கிறது.

வீராணம் திட்டம் நிறைவு பெறும்போது இதன் அளவு இரட்டிப்பாகும். இதிலிருந்து பாசனத்திற்குத் தேவையான அளவு நீரை உற்பத்தி செய்வதானால் சுமார் 7,500 ஏக்கர் நிலம் ஆண்டு முழுமைக்கும் பாசனம் பெறும்.

இப்பொழுது கோவை, புதுக்கோட்டை, மதுரை போன்ற நகரங்களில் தீவனப் பண்ணைகள் இயங்கி வருகின்றன.

பண்ணைகளைப் பெரிதுபடுத்தி இதைப்பெருமளவில்செய்வதற்கு வழிவகைகள் காணப்பட்டால் நகரங்களில் வருமானத்தைப் பெருக்க முடியும். இதனால் வடிகால் திட்டங்களை நிறைவேற்றுவதில் நகராட்சி, பேரூராட்சி மன்றங்கள் ஆர்வம் காட்டலாம்.

**கிராமப் புறங்களில்......**

கிராமப் புறங்களில் இதுவரை குடிநீருக்காக ஏறத்தாழ 41,000 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. மேல்நிலைத் தொட்டிகள் சுமார் 4,500.

1947-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு வரை குடிநீர் கிணறுகளுக்காக ரூ. 10.98 கோடி செலவிடப்பட்டுள்ளது.

ஆனால் 1967-க்குப் பிறகு, கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும், 6.55 கோடி வரை செலவிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மட்டும் கிணறுகள் தோண்ட 2 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிணறுகள் பெருமளவுக்குக் கோடைக்காலத்தில் வற்றி விடுகின்றன. ஊற்றுக்கள் நல்ல வண்ணம் உள்ள கிணறுகளில் கிடைக்கும் நீர், சில இடங்களில் குடிப்பதற்கு ஏற்றதல்ல என்று கருதப்படுகிறது. இது போன்ற பிரச்சினைகளில் குடிநீர் வடிகால் வாரியம் மிகுந்த கவனம் செலுத்துவதுடன், ஊற்றுக்கள் வற்றுவதையும் கருத்தில் கொண்டு ஏறத்தாழ 8,850 துணைக் கிணறுகளைத் தமிழ்நாட்டில் பல பகுதிகளில் தோண்டும் திட்டம் ஒன்றை அரசு தயாரித்துள்ளது.(UNICEF) யுனிசிஃப் நிறுவனத்தின் உதவியுடன் துவக்கப்பட்டுள்ள இத் திட்டத்திற்கு நமது அரசு 271 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

குடிநீர் வடிகால் வாரியம் இத்திட்டத்தை விரைந்துசெயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டின் நாட்டுப்புறத் தேவைகளை நிரந்தரமாகத் தீர்க்க ஆழ்துளைக் கிணறுகளினால் தான் முடியும் என்பதால் குடிநீர் வடிகால் வாரியம் மேலும் சில இயந்திரங்கள் வாங்கி இத்திட்டத்தைப் பரவலாக்க எண்ணியுள்ளது.

இது மட்டுமல்ல; பல கிராமங்களை இணைத்து அதற்கெனத் தனிப்பெரும் திட்டங்களைத் தயாரித்துச் செயலாக்கும்முயற்சியிலும் வாரியம் இறங்கியுள்ளது.

சில நகர நீர்த்திட்டங்களுக்காகத் தொலைவிலிருந்து தண்ணீரை எடுக்கும்போது வழியிலுள்ள கிராமங்களுக்கும் குடிநீர் அளிக்கும் வகையில் இப்பொழுது திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

நாட்டுப்புறம் முழுமைக்கும் பாதுகாக்கப்பட்ட தண்ணீரைத் தொட்டிகள்மூலமாகக் கோடைக் காலத்திலும் பற்றாக்குறை ஏற்படாமல் வழங்குவதற்கான நகல் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. அதற்கிடையில் கடுமையான தண்ணீர் பஞ்சம்உள்ள இடங்கள், தண்ணீர் காரணமாக நோய்க்கு இரையாகும் பகுதிகள் ஆகிய பிரச்சினைகளை விரைவில் சீர்செய்ய ரூ. 8 கோடி அளவில் ஒரு மாபெரும் திட்டம் தயாரிக்கப்பட்டு, ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் கடன் கோரி அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

* * *

வாரியத்தின் மிகப் பெரிய திட்டம் வீராணம் குடிநீர்த் திட்டம். நீண்ட நெடுங்காலத் தயக்கத்திற்குப் பிறகு, 1967-ஆம் ஆண்டில் புதிய அரசு அமைந்தவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டமாகும்.

1974-ஆம் ஆண்டின் இடையில் சென்னை நகருக்கு வீராணம் திட்டம் மூலம் தண்ணீர் கிடைக்கும் என்ற தகவலை முதல்வர் அவர்கள் அண்மையில் சட்டப் பேரவையில் தெரிவித்தார்கள்.

வீராணம் திட்டம் நிறைவேறி ஞலும் தொழில் வகைகளில் வேக மாக வளர்ந்து வருகின்றசென்னை யில் நீண்ட நெடுங்காலத் தேவை யைக் கருத்திற் கொண்டு வேறு பல நல்ல திட்டங்களுக்கான யோசனையை இப்போதிருந்தே குடிநீர் வடிகால் வாரியம் செய்து வருகிறது.

அடுத்து, குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொள்ளப்போகும் பெரிய திட்டம் நெல்லித்துறைத் திட்டமாகும்.

* * *

ரூபாய் 14 கோடி செலவில் மேற்கொள்ளவிருக்கும் இத்திட் டத்தால் கோவை, சிங்காநல் லூர், சூலூர், பல்லடம் போன்ற வறட்சிப் பகுதிகளின் குடிநீர்த் தேவைகளையும், தொழிற்சாலை களின் தேவைகளையும் நிறை வேற்ற இத்திட்டம் பயன்படும். விரைவில் தொடங்க விருக்கும் இத்திட்டம், தமிழ்நாட்டின் ஒரு பகுதியின் பெரும் பிரச்சினையைத் தீர்க்கும்.

ஏறத்தாழ 700 பொறியாளர் கள் குடிநீர் வடிகால் வாரியத் தின் பல்வேறு பிரிவுகளில் பணி யாற்றுகிருர்கள்.

நிலத்தடி, நீரின் தன்மை, ஆழம், அளவுகளை ஆய்வு செய்ய வாரியத்தில் தனிப்பிரிவு அமைக் கப்பட இருக்கின்றது.

நல்ல நீரின் தேவை வேகமாகப் பெருகி வருகிறது. உலகம் முழு மைக்கும் இந்தநிலை என்று சொல்லப்படுகிறது. எனினும் தமிழகத்தில் இந்த வகையில் எதிர் காலத்தில் நெருக்கடி எது வும் தோன்ருது இருக்கவே இன்று பல முயற்சிகள் மேற் கொள்ளப் பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு மிகுந்த கவனத்தோடும் அக்கறை யோடும் இருப்பதால் இப்படி ஒரு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

குடிநீர் வடிகால் வாரியம் என்ற அமைப்பை உருவாக்கிய பெருமை நமது முதல்வர் கலைஞர் அவர்களையே சாரும். பயனுள்ள எந்தத் திட்டத்தையும் விரைந்து செயல்படுத்த வேண்டும் என்ப திலே கண்ணும் கருத்துமாக உள்ள முதல்வர் அவர்கள் குடி நீருக்கும் வடிகாலுக்கும்தனியான வாரியம் அமைத்திருப்பது இப்பணியை விரைந்து செயல் படுத்த வேண்டும் என்ற உளப் பாங்கைக் காட்டுவதாகும்.



இதன் தோலை உரோமத்தோடு பதனிட்டு உடைப் பெட்டிகள், காலணிகள் செய்கிருர்கள். இதன் உரோமம் கம்பளத்துக் கும், இதன் தாடிமயிர், சித்திரம் வரையும் பிரஷ், ஷேவிங் பிரஷ் ஆகியவை செய்யவும் பயன்படுகின்றன.

இப்படி வாரியம் அமைத்த தால் எல்லாப் பணிகளும் விரைந்து செயல் படுத்தப்படு கின்றன. வாரியம் துவங்கிய திலிருந்து இதுவரை 31 புதிய குடிநீர்த் திட்டங்களும், 9 வடி கால் திட்டங்களும் தொடங்கப் பட்டிருப்பதிலிருந்து இதைப் புரிந்து கொள்ளலாம்.

பஞ்சாப் மாநில அரசு நமது குடிநீர் வடிகால் வாரியத்தின் அமைப்பு முறைகளையும் விதிகளை யும் விளக்கமாகக் கேட்டுள்ளது.

சென்னைக்கு வந்திருந்த உலக வங்கியின் பிரதிநிதிகள் நமது குடிநீர் வடிகால் வாரியத்தின் செயல்முறைகளை அறிந்து பாராட்டியுள்ளனர்.



நன்ருக வளர்ந்த யானையின் தோல் ஒரு டன் எடை இருக் கும். இதன் தோலைப் பதனிட்டு மேஜையாகவும், யானையின் கால்களைப் பாதியாக வெட்டி நகத்தோடு பதனிட்டு ஸ்டூலாக வும், உபயோகிப்பர். யானை இறைச்சி பர்மா ஆப்பிரிக்கா முதலிய நாடுகளில் உணவாகப் பயன்படுகிறது.

தமிழக அரசு அமைத்திருக்கும் மாநிலத் திட்டக்குழு, சுகா தாரம் என்ற தலைப்பில் துணைக் குழு ஒன்றினை நியமித்துக் குடி நீர் வழங்குதல், வடிகால்கள் அமைத்தல், தொழில் நிறுவனங் களாலோ வேறுவகையாலோ தண்ணீர் கெட்டுவிடாமல் பாது காத்தல், மக்கள் வாழுமிடங்களைச் சாக்கடை மற்றும் குப்பை கூளங்களால் சுகாதாரக்கேடு விளை யாத வண்ணம் தடுத்தல் ஆகிய வற்றை விரிவாக ஆய்ந்து ஒரு சில மாதங்களில் திட்ட நகல் ஒன்றைக் கொடுக்க இருக்கிறது.

இத்துணைக் குழுவின் தலைவ ராகவும் வாரியத் தலைவர் திரு. செ. கந்தப்பன் அவர்களே பணி யாற்றுகின்ருர்கள்.

இவ்வளவு குறுகிய காலத்தி லேயே மிக வேகமாகப் பல திட் டங்களைத் தொடங்கியுள்ள குடி நீர் வடிகால் வாரியத்தின் சாதனைகளைப் பற்றி நாம் பெரு மிதப்படும் பொழுது வாரியத் தலைவர் திரு. செ. கந்தப்பன் அவர்கள் கூறுவது என்ன தெரி யுமா ?

'' இத்தனை வெற்றிக்கும் முழு மையான காரணம் முதல்வர் கலைஞர் அவர்கள்தான். அவர் களுடைய நேரடியான பொறுப் பின் கீழ் இயங்குவதாலும், முதல் வரைக் கலந்தாலோசித்து முடிவுகள்எடுப்பதாலும் விரைந்து செயல்பட முடிகிறது '' என்பது தான்.

வாரியத்தில் இப்பொழுது பத்து உறுப்பினர்கள் உள்ளனர். வாரியச் சட்ட அமைப்புப்படி மூன்று திங்களுக்கு ஒரு முறை கூட்டம் நடத்தவேண்டும். என்ரு லும் குடிநீர் வடிகால் வாரிய உறுப்பினர்களின் கூட்டம் மாதந் தோறும் நடைபெறுகின்றது.

விரைந்து செயல்பட இதுவும் பயன் தருகிறது.

மாபெரும் திட்டங்களைக் கொண்டுள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பற்றிச் சுருக்க மாகச் சொல்ல வேண்டுமாளுல்—

செயல்படும் வேகம்—
சீரமைப்புத் திறன்—
சிக்கனம்—இந்த இலட்சி யங்களின் அடையாளமே தமிழ் நாட்டின் குடிநீர் வடிகால் வாரியம்.



# செல்வி கன்னுவின் வாழ்க்கையில் பெருமைக்குரிய நிகழ்ச்சியாகும் இது

தங்கள் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள பணியில் செலவிட்டால் எந்தப் பெண்ணும் பெருமை பெறலாமே! ஆமாம் செல்வி கன்னு தனது ஓய்வு நேரத்தைச் சிறுசேமிப்பு முகவராகப் பணியாற்றுவதில் செலவிட்டாள்.

மேலே உள்ள படத்தைப் பாருங்கள். 1970-71 ஆம் ஆண்டில் சிறுசேமிப்பு வாடிக்கை யாளர்களைச் சேர்ப்பதில் பெருஞ் சாதனையைச் செய்தமைக்காக மத்திய அரசு துணை நிதியமைச்சர் திருமதி **சுசிலா ரோஹட்கி** யிடமிருந்து பரிசு பெறுகிறார்.

செல்வி கன்னுவின் தனிப்பட்ட முயற்சியால் கூடுதலான வருவாய் கிடைத்ததை நீங்கள் அறிவீர்கள். சிறு சேமிப்புக்காக வாடிக்கையாளர்களைச் சேர்ப்பது சுலபமானது. நீங்கள் கூடச் சிறுசேமிப்பு வாடிக்கையாளராகப் பணியாற்றலாம். அதன் மூலம் வருவாய் பெறுவதுடன் பரிசுகளையும் பெறலாமே!

உங்கள் ஓய்வு நேரத்தை இப்படிப் பயனுள்ள பணியில் செலவிட்டு நாட்டுக்கும் சமுதாயத்துக்கும், நற்றொண்டாற்ற இன்றே சிறுசேமிப்பு முகவராகச் சேருங்கள்.

விவரங்களுக்குத் தொடர்பு கொள்க

வட்டார இயக்குநர்
**தேசிய சேமிப்பு நிறுவனம்**
எண் 1/18 அண்ணா சாலை
சென்னை - 2.
தொலைபேசி: 85962

சிறுசேமிப்பு இயக்குநர்
**தமிழ்நாடு அரசு**




இடம் : வேலூர் வாழை மண்டி.
காலம் : 1971-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 30-ஆம் நாள் காலை 7 மணி.

சந்தித்தவர்கள் : 1. வடஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் பகுதியில் உதித்த பச்சை வாழை. 2. வட ஆர்க்காடு மாவட்டம் ஒடுகத்தூர் பகுதியில் உதித்த ரஸ்தாளி வாழை.

ரஸ்தாளி வாழை :—என்ன தம்பி! எங்கோ பார்த்தது போல் இருக்கு, எந்த ஊரோ ?

பச்சை வாழை :— நாங்க இதே மாவட்டம் தானுங்க. எங்க ஊர் குடியாத்தம் பக்கம் இருக்குங்க.

ரஸ்தாளி :—ஓகோ அப்படிங்களா தம்பி—நானும் இம் மாவட்டத்தைச் சேர்ந்தவன் தான். எங்க ஊர் ஒடுகத்தூர் பகுதியில் இருக்குது.

பச்சை :—ஓகோ அப்படியா அண்ணே ! எங்க உறவினர்கள் கூட அங்கு இருக்கிறுங்களே!

ரஸ்தாளி:—ஓகோ அப்படியா ! ஏதோ ஒரு வீட்டார் அல்லது இரு வீட்டார் மட்டும் இருப்பார்கள் போல் தெரிகிறது.

பச்சை :—அப்படியா ! அந்த இரு வீட்டாரைக் கொண்டே நாங்கள் குடும்பத்தைப் பெரிய தாக்கி விடுவோமே !

ரஸ்தாளி :—நாங்கள் அங்கு தான் வாழ்க்கைப்பட்டிருந்தோம். சமீபத்தில் தாக்கிய சூருவளியாலும், வாடல் நோயினுலும் எங்களுடைய குடும்பம் அழிந்து மேலும் வளர முடியாமல் போய்விட்டோம்.

பச்சை :—அப்போ நாங்கள் அங்கு வந்து குடியேறலாமா அண்ணே ! ஏனென்ருல், எங்கள் பகுதியிலே தண்ணீர் பஞ்சம் அதிகமாகி விட்டதால் உயிர் வாழ முடியாமல் இருக்கிறுேமுங்க.

ரஸ்தாளி :—அப்படியா தம்பி! —நாங்களே அங்கு வரலாம் என்று நினைத்தோம். அதற்குள் நீங்கள் முந்திவிட்டீர்களே!

பச்சை :—நாங்களே தண்ணி இல்லாம அவதிப்படும்போது நீங்கள் எதுக்கு அங்கு வரணும்? இத்தோட உங்களைத்தான் வாடல் நோயும் சூருவளியும் தாக்கும்போது அங்கு மட்டும் எப்படி வாழ்க்கை நடத்துவீங்க? அதனுலே நீங்க அங்கேயே கொஞ்சமா ஒட்டிக்கிட்டிருங்க.

ரஸ்தாளி :—அப்போ தம்பி உன்னைச் சூருவளியும் வாடல் நோயும் தாக்குவதில்லையா ?

பச்சை :—என்னை எந்த நோயும் தாக்குவதில்லை. இலைப்புள்ளி என்ற நோய் மட்டும் தாக்கும். அதற்கு ஒரு கிலோ பிளைடாக்ஸ் அல்லது பைடோலானை 100 படி தண்ணீரிலே கரைத்து விசைத் தெளிப்பான் மூலம் இலை, காய் எல்லாப் பகுதியிலேயும் வாரம் ஒருமுறை வீதம் மூன்று அல்லது நான்கு முறை தெளித்துவிட்டால் இலைப்புள்ளி நோய் எங்க குடும்பத்தை ஒன்றும் செய்வதில்லீங்க!

ரஸ்தாளி :—எங்களுக்கு அம்மாதிரி மருந்து எதுவும் இல்லையா தம்பி ?

பச்சை :—உங்களுக்கு நோய் தாக்கினுல் ஊசியோ—மருந்தோ எதுவும் கிடையாதுங்க.

ரஸ்தாளி :—ஆமாம், உங்களுடைய ஆயுசு எவ்வளவு தம்பி?

பச்சை :—12 மாதம் தானுங்க

ரஸ்தாளி :—எங்களுக்கு 18 மாதம் ஆகிறது.

பச்சை :—அப்போ உங்களுக்கு ஆயுசும் கொஞ்சம் நீடிச்சிருக்கு.

ரஸ்தாளி :—உங்க இனத்தை எப்போது பயிரிடுவாங்க? உங்களுக்கு என்ன வசதி தேவை என்பதைக் கொஞ்சம் சொல்லு தம்பி !

பச்சை :—எங்களை வருடம் முழுதும் பயிரிடுவாங்க. முக்கியமா ஜனவரி, மார்ச்சு காலத்தில், அதிகம் பயிரிடுவாங்க. எங்களுக்கு முக்கியமா வடிகால் வசதி உள்ள செம்மண் நிலம் தேவை அண்ணே.

## இடைவெளி

ரஸ்தாளி :—உங்க இனத்துக்கு எவ்வளவு இடைவெளி விடுவாங்க? எங்க இனத்துக்கு 7' × 7' இடைவெளி விடுவாங்க. இப்படி விட்டால் ஒரு ஏக்கருக்கு 889 பேர் தான் நாங்கள் குடியேற முடியும்.

பச்சை :—எங்க இனத்துக்கு இடைவெளி $5\frac{1}{2}$' × $5\frac{1}{2}$' விட்டால் போதும். இப்படி விட்டால் ஏக்கருக்கு நாங்கள் 1,440 பேர் குடியேறுவோம்.

ரஸ்தாளி :—அப்போ உங்களுக்கு இடைவெளியும் குறைவு. வயதும் குறைவு. காற்றினுலும் வெய்யிலினுலும் உங்கள் இனம் பாதிக்காது.

## வெளிநாட்டிற்கு ஏற்றது

பச்சை :—அண்ணே ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளில் எங்களுக்கு நிறைய கிராக்கி இருக்கின்றதாம். அத்துடன் உள்நாட்டு மக்களும் எங்களைத்தான் விரும்பிச் சாப்பிடுருங்களாம். அதனுல்தான் நம்ம அரசு தீவிரச் சாகுபடித் திட்டத்தை ஏற்படுத்தி எங்களை நல்ல முறையில் சாகுபடி செய்து வெளி நாட்டிற்கு விரைவில் ஏற்றுமதி

செய்யப் பாடுபடுகிறோம் என்று வேளாண்மைத் துறையினர் கூறுகிறார்கள்.

ரஸ்தாளி :—ஏன் ? எங்களுக்கு வெளிநாட்டுக் கிராக்கி எதுவும் கிடையாதா தம்பி ! ஏதாவது அவங்களைக் கேட்டீங்களா ?

பச்சை :—கேட்டேங்க ! வெளி நாட்டவர் எங்களைத்தான் விரும்பிச் சாப்பிடுகிறாங்க; உங்களைத் தேவை இல்லையென்று சொல்லிட்டாங்களாம். அதனால்தான் வேளாண்மைத் துறையினர் எங்கள் இனத்துக்கு முக்கியத்துவம் தருகின்றனர்.

## கடன் வசதி

ரஸ்தாளி :—ஆமாம். ஏற்றுமதி என்றால் சிறிய விவசாயிகள் எல்லாம் அதிகம் உங்களைச் சாகுபடி செய்வார்களே ! அதுக்கு ஏதாவது கடன் வசதி கொடுக்கிறாங்களா?

பச்சை :—கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகவும், தனியார் துறை வங்கி மூலமாகவும், எங்கள் இனத்துக்கு ஏக்கருக்கு 1,000 ரூபாய் கடன் வசதி தர்றாங்க.

ரஸ்தாளி :—அது உங்க இனத்துக்குத்தானா? எப்படித் தருகிறார்கள் என்பதைக் கொஞ்சம் விளக்குகிறீர்களா ?

பச்சை :—எங்க இனத்துக்குத்தான் கொடுக்கின்றார்கள். அதுவும் பாதி உரமாகவும், பாதி பணமாகவும் கொடுக்கின்றார்கள்.

ரஸ்தாளி :—அதை எப்போது திருப்பிக் கட்டுவது ? மான்யம் கொடுக்கிறார்களா ?

பச்சை :—நல்ல கேள்வி கேட்டே அண்ணே ! எப்போதும் கடன்தான் தருவாங்க. தவிர இவ்வளவு பேருக்கு மானியம் எங்கிருந்து கொடுப்பாங்க? கடனை எங்க இனம் அறுவடை முடிந்ததும் அதாவது கடன் வாங்கிய 14 மாதத்திலே திருப்பிச் செலுத்திவிடணும்.

## உரமிடல்

பச்சை :—உங்களுக்கு என்ன உரம் வைக்கிறாங்க ?

ரஸ்தாளி :—வாழைக்கு உரம் வைக்கிற முறையை . எங்கள் பகுதி விவசாயிகள் கொஞ்சமாகத் தெரிஞ்சி வருகிறாங்க. முன்பு எல்லாம் செடி ஒன்றுக்கு ஒரு கூடை எரு போட்டு வந்தாங்க. அதுக்கு மேலே ஏக்கருக்கு 20 முதல் 25 மூட்டை கடலைப் பிண்ணாக்கும் 1—2 மூட்டை யூரியாவும் வைப்பாங்க.

### ஆயிரமாயிரம் வேலைகள்

கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் செங்கற்பட்டு மாவட்டத்தில் ஆயிரம் பேருக்கு வேலை கொடுக்கப்பட்டு அவர்கள் இதுவரையில் 48 திட்டவேலைகளை நிறைவேற்றியிருக்கிறார்கள். மேலும் ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கத் திட்டமிட்டுள்ளது அரசு.

பச்சை :—நாங்களும் முன்னே எல்லாம் அப்படித்தான் வைச்சிருந்தோம். இப்போ பிண்ணாக்கு விலையும் ஏறிப்போச்சு. அத்துடன் மாட்டுக்கும் நல்ல தீனியாகி விட்டது. அதனால் நம்ம தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறையின் ஊழியர்கள் எல்லாம் எங்களை அடிக்கடி வந்து பார்த்துப் பிண்ணாக்கு வீணாக அதிகமாக வைக்காதீங்க என்று சொல்கிறார்கள்.

ரஸ்தாளி :—எங்க பக்கமும் கூட வேளாண்மைத் துறை ஊழியர்கள் எல்லாம் இருக்கிறாங்க. ஆனால் அவங்க மட்டும் என்ன செய்வாங்க ? பச்சை வாழையான உங்களுக்குத்தான் அதிகமாகக் கவனம் செலுத்துறாங்க.! ''உங்களைக் கவனிப்பது கஷ்டம். ஏனெனில் காற்று மழை எல்லாம் உங்களைத் தாக்குது ; அதனால் நீங்க இங்கே இருக்காதீங்க'' என்று கூறுகிறார்கள். இருந்தாலும் நான் சொல்லறது சொல்லிடுறேன். கன்று நட்ட மூன்றாவது மாதம் தொழு உரம் 12 கிலோவும், அதோடு அம்மோனியம் சல்பேட் 284 கிராம், சூப்பர் பாஸ்பேட் 284 கிராம், மியூரியேட் ஆப் பொட்டாஷ் 340 கிராம், பிண்ணாக்கு 284 கிராம், இந்த உரத்தை எல்லாம் கலந்து ஒரு மரத்துக்கு வைக்கணுமாம். இதே போல ஐந்தாவது மாதத்திலும் அம்மோனியம் சல்பேட் 142 கிராம், மியூரியேட் ஆப் பொட்டாஷ் 340 கிராம் பிண்ணாக்கு 142 கிராம், ஆகியவைகளைக் கலந்து ஒரு மரத்திற்கு வைக்க வேண்டுமாம்.

### வங்கியின் உதவி

தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள 18 நிலவள வங்கிகள் மூலம் டிராக்டர்கள், பம்பு செட்டுகள் வாங்குவதற்கு இதுவரையில் ரூ. 1 கோடியே 28 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

பச்சை :—எங்கள் பகுதியிலே இருக்கிற வேளாண்மைத் துறை ஊழியர்களும் இதைத்தான் சொல்லுறாங்க. ஏன், கிட்ட இருந்து உரம் வைக்கிற வரைக்கும் ஆளை விடறது கிடையாதுங்க. அதோடு மருந்தும் கூட அடிக்கடி தெளிக்கும்படி கூறித் தெளித்துவிட்டும் செல்லுகிறாங்க.

## நீர்ப் பாய்ச்சுதல்

ரஸ்தாளி :—உங்களுக்கு எத்தனை நாளைக்கு ஒரு தடவை தண்ணி பாய்ச்ச வேண்டும்.

பச்சை :—அண்ணே ! நிலத்திற்கேற்றவாறு வாரம் இரு முறை நீர் பாய்ச்சினால் போதும்.

ஆனால் தண்ணீர் தேங்கக் கூடாது. ஏன் என்று கேட்டீங்களா தண்ணி தேங்கினால் நாங்கள் பழுத்து, வேர் அழுகி மரம் சாய்ந்து விடும். அப்புறம் எதுவும் செய்ய முடியாது.

ரஸ்தாளி :—எங்களுக்கும் இப்படித்தான். ஆனால் எங்களுக்குத் தேங்கினாலும் கொஞ்சம் பரவாயில்லை.

## பக்கக் கன்று அகற்றுதல்

பச்சை :—உங்களுக்குப் பக்கத்தில் உள்ள கன்றுகளை எப்படி எடுப்பார்கள் ?

ரஸ்தாளி :—பக்கக் கன்றுகளை அரிவாளால் அறுத்தும், கடப்பாறையால் கன்றைக் குத்தி அதில் மண்ணெண்ணெய் ஊற்றியும் அகற்றுவார்கள். ஆனால் மரம் போகும் வரை அகற்றுவார்கள். அதன் பிறகு அவ்வாறு செய்வதில்லை.

பச்சை :—எங்களுக்கு அப்படித்தான் செய்யருங்க. ஆனல் தாரு போட்ட பிறகு எடுப்பதில்லையே! ஏன் கொஞ்சம் சொல்லீங்களா ?

ரஸ்தாளி :—தம்பி, தாரு போட்ட பிறகு எடுத்தா நமக்குப் பலம் குறைந்து குலைகள் சீக்கிரத்தில் முதிராது.

பச்சை :—அதுதான, இல்லை, இன்னும் ஏதாவது காரணம் இருக்காண்ணே !

ரஸ்தாளி :—அது என்னமோ தெரியலே தம்பி !

பச்சை : என்னமோ தெரியலேன்னு சொல்றியே, முக்கியமான காரணம் ஒன்று இருக்கு. அதாவது நம்ம வேளாண்மைத் துறையினர் நடும்போது 3—4 மாதக் கன்றை நடவு செய்யணும்னு சொல்லுருங்க. அதுக்குத் தாரு போட்ட 100—105 நாளில்தான் தாரு வெட்ட முடியும். உடனே தேவையான கன்றையும் எடுத்துப் பூமியைக் காலி செய்து வேறு பயிர் செய்ய நலமாக இருக்கும்னு சொல்லுருங்க.

ரஸ்தாளி : அப்போ அவங்க சொல்லறது எல்லாம் நன்மைக்குத் தான் போலிருக்கே!

பச்சை : அவர்கள் நன்மைக்குச் சொல்லாமல் தீமைக்கா சொல்லுவார்கள் ?

## அறுவடை

ரஸ்தாளி : தம்பி உங்களை எப்படி அறுவடை செய்கிருர்கள்?

பச்சை : அண்ணே குலைவிட்ட 100—105 நாளில் காய் நன்ருக முதிர்ந்ததும் எங்களை அறுவடை செய்வாங்க.


நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
''கோபுரம்'' மார்க்
மைதா, சூஜி
மற்றும்
''கப்பல்'' மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670 - 52671
52672 - 52673

தந்தி : MONARCH


## விற்பனை

ரஸ்தாளி : எங்களையும் அப்படித்தான் அறுவடை செய்ருங்க. அப்புறம் நீங்கள் எல்லோரும் எங்கு விற்பனைக்குச் செல்லுகிறீர்கள். ?

பச்சை : அதான்னே கேட்டேன். எங்கள் 2—3 வீட்டாரையும் ஒன்று சேர்த்து, எங்க குலையின் மேலே இலைகளைப் போர்த்தி, லாரியில் மொத்தமாக அடுக்கிக்கொண்டு சென்னை, வேலூர், பெங்களூர் போன்ற பெரிய இடங்களுக்கு ஏற்றிச் சென்று மொத்தமாக விற்பனை செய்துவிட்டு வராங்க. பணமும். மொத்தமாகக் கிடைக்குது அண்ணே.

ரஸ்தாளி : அப்படியா தம்பி! நாங்கள் இருப்பது கொஞ்சம் தான். அதனலே எங்களை ஒரு வண்டியிலே ஏற்றி வேலூருக்குக் கொண்டு வந்து சில்லறை வியாபாரியிடம் விற்றுவிட்டுத் தினந்தோறும் கொஞ்சம் செலவிற்குப் பணத்தைச் செலவிட்டும், வீணுகச் செலவு செய்தும், கைக்கு மொத்தமாகக் கிடைக்காமலே எங்கள் குடும்பம் அழிந்து வருகிறது தம்பி.

பச்சை: இன்னென்றைச் சொல்ல மறந்துவிட்டேன்.

ரஸ்தாளி : என்ன தம்பி அந்த ரகசியம் ?

பச்சை : எங்க இனத்துக்கு ரஷ்யா, ஜப்பான் போன்ற வெளி நாட்டிலே பழத்துக்குக் கிராக்கி இருப்பதோடு, பச்சை வாழைப் பழப் பவுடர், பழச் சாறு போன்றவற்றிற்கும் நல்ல கிராக்கி இருக்குதண்ணே !

ரஸ்தாளி : அப்படியா தம்பி! அப்போ நாங்களே எங்கள் பகுதியிலே இருக்கிற உழவர்களுக்கும், சொல்லி உங்களையே (பச்சை வாழையையே) அதிகம் பயிரிடும்படி சொல்லுகிறேன் தம்பி. வணக்கம் தம்பி. வரட்டுமா? அடிக்கடி கடிதம் எழுது தம்பி.

பச்சை : அப்படியே ஆகட்டும் அண்ணே ! வணக்கம், விடை பெறுகிறேன் !

# TIDCO

# தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் லிமிடெட்

(தமிழ்நாடு அரசுக்கு உரியது)

150-A, அண்ணா சாலை, மத்திய நூலகக் கட்டிடம், சென்னை-2.

(நிறுவனத்தின் நெறியாளர் குழுவினரால் 26-10-71ல் ஏற்கப்பெற்ற விளம்பரத்தின் வாசகம்)

நிறுவப் பெற்ற தேதி : 21-5-1965

பதிவுத் தலைமை அலுவலகம் : மத்திய நூலகக் கட்டிடம், 150-A, அண்ணா சாலை, சென்னை-2.

பொது மக்கள் மற்றும் இதர நிறுவனங்களிலிருந்து ஆயிரம் ரூபாயோ அல்லது அதற்கு மேற்பட்டு (ஆயிரக் கணக்கில்) செலுத்தப்படும் டிபாசிட் தொகைகளை இத் தொழில் நிறுவனம் கீழ்க்கண்ட வருடாந்திர வட்டி விகிதங்களில் ஏற்றுக்கொள்ளும்.

| | | | |
|---|---|---|---|
| ஓர் ஆண்டும் அதற்கு மேலும் ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குள் | 9% | இரண்டு ஆண்டுகளுக்கும், அதற்கு மேலும் | 9½% |

## மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வட்டி கொடுக்கப்படும்

### நெறியாளர்கள் குழு:

திரு. வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்.,
சிறப்புச் செயலாளர்
தொழில்துறை,
தமிழ்நாடு அரசு — தலைவர்

திரு. எஸ். வெங்கிட்டரமணன், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்
நிதித்துறை,
தமிழ்நாடு அரசு — நெறியாளர்

திரு. ஆர். நடராசன், ஐ.ஏ.எஸ்.,
சிறப்புச் செயலாளர்,
பொதுப் பணித்துறை,
தமிழ்நாடு அரசு — நெறியாளர்

திரு. ஏ. பத்மனாபன், ஐ.ஏ.எஸ்.,
தலைவர் & நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு சிறு தொழிற் வளர்ச்சி
நிறுவனம், சென்னை. — நெறியாளர்

திரு. சி. என். ராகவன், ஐ.ஏ.எஸ்.,
நெறியாளர்
தொழில்–வணிகத்துறை,
சென்னை. — நெறியாளர்

திரு. பி. சிவலிங்கம், பி.இ., (ஆனர்ஸ்)
தொழில் நுட்பக் கல்வி நெறியாளர்,
சென்னை. — நெறியாளர்

திரு. ஜி. துவாரகாநாதன், ஐ.ஏ., & ஏ.எஸ்., — நெறியாளர் (நிதி)

திரு. டி. எஸ். விஜயராகவன், ஐ.ஏ.எஸ்., — நிர்வாக இயக்குனர்

கம்பெனி மேற்கொண்டுள்ள அலுவல்கள்:

(A) தமிழக அரசுக்கு சொந்தமான தொழிற்கூடங்களை நிர்வகித்தல்
தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம். எஃகு தொடர்பு வார்ப்பு ஆலை, அரக்கோணம்.

(B) கூட்டுத் துறையில் தொழில்களை துவங்க ஊக்குவித்தல்.
தூத்துக்குடி உர ஆலை, ஹைட்ரோ சல்பைட் ஆலை,
ஆட்டோமோபைல் டயர் & டியூபுகள், சிகரெட்டுகள் முதலியன.

தமிழ்நாடு சிமெண்ட் தொழிற்சாலை 5-2-70ல் உற்பத்தியை துவக்கியுள்ளது. இந்தத் தேதிக்கு முன் செய்யப்பட்ட செலவுகள் எல்லாம் மூலதனத்தோடும், தொழிற்சாலை கட்டுமானச் செலவுகளுடனும் சேர்க்கப்பட்டுள்ளன.

1970—71ல் நஷ்டம்: ரூ. 78,30,009

அறிவிக்கப்பட்ட பங்கு வீதம்: ஒன்றுமில்லை

| | | (லட்சத்தில்) |
|---|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனம் (31—3—71ல் உள்ளபடி) | | ரூ. 636.74 |
| அரசு வழங்கிய கடன் | ,, | ரூ. 444.33 |
| ரிசர்வ் தொகை | ,, | ரூ. *Nil* |
| கடன் பத்திரங்கள் மூலம் (*Debentures*) | ,, | ரூ. 75.00 |
| ரொக்க கடன் | ,, | ரூ. 75.00 |
| அதிகப்பற்று (*Overdraft*) | ,, | ரூ. *Nil* |

விண்ணப்ப நமூனுக்களுக்கும் விதிமுறைகளுக்கும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தாருக்கு (டிபாசிட் பிரிவு), 150-A, அண்ணா சாலை, சென்னை 2-க்கு எழுதிக் கேட்கவும்,





## ஜெர்மனியில் நீலகிரி மண் சிலைகள்

ஜெர்மனியில் மேற்கு பெர்லின் நகரில் சர்வதேச " இந்திய ஆராய்ச்சி " மாநாடு சமீபத்தில் நடந்தது. பல்வேறு நாடுகளிலிருந்து 200 அறிஞர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட பல அரிய புராதனப் பொருள்களும், ஆராய்ச்சிகளின் முடிவுகளும், பெர்லின் நகரில் அரும் பொருட் காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருந்தன. கடந்த உலகப் போரின்போது குண்டு வீச்சில் ஒரு பகுதி நாசம் அடைந்தது. நாசத்திலிருந்து பாதுகாக்கப்பட்ட பல அரிய புராதன இந்தியப் பொருள்கள், இப்போது புதிய கூடத்தில் இடம் பெற்று இருக்கின்றன. நீலகிரி மாவட்டத்தில் தோண்டி எடுக்கப்பட்ட புராதன மண் சிலைகள் இங்கு மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு இருக்கின்றன.

இந்த மண் சிலைகள் 2,000 ஆண்டுகளுக்கு முந்தியவை எனக் கருதப்படுகிறது.





# படைத்தவர் யாரோ?



மனிதன்:

பஞ்சுவடம் போல்ஒளிரும் அருவி தன்னைப்
பாலாடை ஆக்கிவைத்தாய் மலைப்பெண் ணுக்கு
கொஞ்சுகின்ற ஓடையினைத் துள்ளும் ஆற்றைக்
கொடுக்கின்றாய் ; பெருநன்றி ; இயற்கைத்
தாயே !

இயற்கை :

மிஞ்சிவிட்டாய் எனைமகனே ! குளிர்ந்த ஆற்றை
வெள்ளருவி யெலாம்படைத்தேன் ; அவற்றி
னின்று
வெஞ்சூட்டு மின்னாற்றல் படைத்தோன் யாராம் !
வித்தகனே ! இரவினைநீ பகலாய்ச் செய்தாய் !

மனிதன் :

அன்னைஎனைத் தாங்கிநின்றாள் ! அவளைத் தாங்க
அவனிமண்ணை நீபடைத்தாய் ! தாயே ! அங்கே
பொன்படைத்தாய் ! வளிபடைத்தாய் ! படைத்த
உன்றன்
பூம்பாதம் தனில்கண்ணீர் சிந்து கின்றேன் !

இயற்கை :

என்னைவிட நீமுந்தி விட்டாய் தம்பி !
இருக்கின்ற அணுவெல்லாம் படைத்தேன் ;
ஆனால்
மின்னணுவை நீதானே பிளந்தாய் ! பின்னர்
மிகஅரிய நீள்சக்தி படைத்தோன் யாராம் !

மனிதன் :

காயாம்பூச் சாறெடுத்துக் கடலைச் செய்தாய் !
கடலகத்தின் அடிவயிற்றில் முத்தை வைத்தாய்!
நாயாட்டம் ஆடுகின்ற திமிங்கி லத்தை
நல்லவளே ! அங்கேஏன் காவல் வைத்தாய் !




இயற்கை :

ஓயாத சீர்மகனே ! திமிங்கி லத்தை
ஒப்புக்குப் படைத்திட்டேன், உண்மை ! ஆனால்
பேயோடி விரட்டுதல்போல் அதைவி ரட்டப்
பெருநீர்மூழ் கிக்கப்பல் படைத்தோன் யாராம் !

மனிதன் :

சிந்திவிட்ட வைரத்தைப் பொறுக்கு தற்குத்
திக்குண்டா ? நாதியுண்டா ? வான கத்தில் !
தந்திரமாய்க் கருடனுக்கும் இறக்கை வைத்தாய் !
தாயே ! ஏன் எமக்குமட்டும் குறையை
வைத்தாய் ?

இயற்கை :

முந்திவிட்டோன் நீதானே மகனே ! தாவி
முன்னேறும் பறவைஎட்டா வெளியில் கூட
வந்துசெல்ல வான்கப்பல் படைத்த னுப்பி
வாய்மீதில் விரல்வைக்க வைத்தோன் யாராம் !

மனிதன் :

கவிஞர்க்கும் காதலர்க்கும் விருந்து நல்கக்,
கள்வருக்கும், கொடியவர்க்கும் வேலி கட்டப்,
புவிமகளை மஞ்சளினால் குளிக்க வைக்கப்,
பொன்நிலவை நீபடைத்தாய் ! நன்றி, தாயே !

இயற்கை :

குவிக்காதே புகழ்மொழியை ! மகனே ! நானே
குறைநிலவைத் தான்படைத்தேன்! நீயோ இன்று
புவிசுற்றும் பலநிலவைப் படைத்த னுப்பிப்
புகழ்சுமந்து நிற்கின்றாய்! பெருமை யார்க்கு ?





கவிஞர். கா. வேழவேந்தன். எம்.எல்.ஏ.

# முயற்சியால் முன்னுக்கு வந்த சார்லஸ் டிக்கன்ஸ்



''ஆகா, இந்த நாவல் எவ்வளவு சுவையாக இருக்கிறது..'' என்றார் இளங்கோ, அந்தப் புத்தகத்தை மேசைமீது வைத்தவாறே.

கையில் காப்பியுடன் வந்த கண்ணகி, ''எந்த நாவல் அண்ணா?'' என்று கேட்டுக் கொண்டே எதிரில் வந்து உட்கார்ந்தாள்.

''இதோ, இந்த நாவல்தான்! 'ஆலிவர் டுவிஸ்ட்' என்பது அதன் பெயர். ஓர் அனாதைச் சிறுவனைப் பற்றி இதன் ஆசிரியர் மிக அழகாக வருணிக்கிறார். படிக்க விறுவிறுப்பாக உள்ள இந்த நாவலை எழுதியவர் இவர்தான். பெயர் சார்லஸ் டிக்கன்ஸ்'' என்று அவர் படத்தைக் காட்டினார் இளங்கோ.

''ஒரு குமாஸ்தாவின் மகனாகப் பிறந்தவர்தான், சார்லஸ் டிக்கன்ஸ். அவர்கள் குடும்பம் பெரியது. அளவான குடும்பமாக இருந்தால் தானே அமைதியும், மகிழ்ச்சியும் இருக்கும்? அவர்கள் குடும்பத்திலோ நிறையப் பேர்கள் இருந்தார்கள். இதனால் தரித்திரம் தலைவிரித்தாடியது. டிக்கன்ஸின் தந்தை ஆடம்பரமானவர். தாயோ சிக்கனமில்லாதவள். இதனால் குடும்பம் கடன் தொல்லைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டது.

''டிக்கன்ஸ் வீட்டுப் பக்கத்தில் ஒரு பாதிரியார் இருந்தார். அவர் ஒன்பது வயதுச் சிறுவனான டிக்கன்ஸைப் படிக்க வைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். ஒரு நாள் டிக்கன்ஸ் தம் வீட்டுப் பரணையில் என்ன இருக்கிறது என்று ஆராய்ந்தான். மேலே தூசு படிந்த சில புத்தகங்கள் இருந்தன. அவற்றையெல்லாம் கீழே இறக்கி ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தான். மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தான். ராபின்சன் குரூசோ போன்ற வீரர்களின் வாழ்க்கை வரலாறுகள்தான் அவை. அவைகளையெல்லாம் ஆர்வமுடன் படிக்க ஆரம்பித்தான் டிக்கன்ஸ்.''

''சிறு வயதிலேயே இப்படியொரு ஆர்வம் எல்லாருக்கும் வர வேண்டும் இல்லையா அண்ணா?''

''ஆமாம் கண்ணகி. படிக்கப் படிக்கத்தான் அறிவு வளரும் என்பார்கள். அதைப்போல டிக்கன்ஸின் அறிவும் நாளுக்கு நாள் வளர்ந்தது. அதோடு அவர்கள் குடும்பத்தில் கடன் தொல்லைகளும் வளர்ந்து வந்தது! பசி, பட்டினியால் குடும்பம் தவியாய்த் தவித்தது. ஒரு நாள் கடன் கொடுத்தவர்கள் வந்து டிக்கன்ஸ் வீட்டிலுள்ள சாமான்களையெல்லாம் பறிமுதல் செய்து கொண்டுவிட்டார்கள். அப்படியும் கடன்கள் தீராததால், டிக்கன்ஸின் தந்தை ஜான் டிக்கன்ஸைக் கைது செய்து கடன்பட்டவர்களுக்காக உள்ள ஒரு தனிச்சிறையில் அடைத்து விட்டார்கள்..''



''பாவம்! பதினோரு வயது சிறுவனான அவன் என்ன செய்வான்? வீட்டு வேலைகளைக் கவனிப்பது, கடைகளுக்குச் செல்வது, தம்பி, தங்கைகளுக்கு ஆதரவாக இருப்பது, சிறையில் இருக்கும் தந்தையைப் போய்ப் பார்த்து வருவது போன்ற வேலைகளில் ஈடுபட்டு வந்தான். தந்தையின் துன்பநிலையை எண்ணி எண்ணி வேதனை அடைந்தான். எதிர்காலம் எப்படி இருக்குமோ என்று ஏக்கம் கொண்டான்.''

''டிக்கன்ஸ் ஏதாவது ஒரு வேலையில் சேர்ந்தால் குடும்பத்துக்குக் கொஞ்சம் உதவியாக இருக்குமல்லவா?''

''ஆமாம். இவர்கள் உறவினர் ஒருவர், காலணிகளுக்கு மை பூசும் தொழிற்சாலை ஒன்றை நடத்தி வந்தார். அதில் டிக்கன்ஸுக்கு ஒரு வேலை கிடைத்தது. கறுப்பு மைப்புட்டிகள் மீது காகிதத்தைச் சுற்றிக்கட்டி 'லேபில்'களை ஒட்டுவதுதான் அந்த வேலை. இந்த வேலையில் அவன் தன் திறமையை நன்கு வெளிப்படுத்தினான். ஆனால் தன் தந்தையின் நினைவு அடிக்கடிவந்து அவனை வாட்டியது. படிக்க வேண்டிய பருவத்தில் அவன் வேலையில் அமரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. ஆனால்

அவன் மனம் படிப்பிலேயே லயித்திருந்தது. அதற்குத் தடையாக இந்த வேலை இருக்கிறதே என்று அவன் சலித்துக்கொண்டான்.''

''சிறையில் அவன் தந்தை என்னென்ன துன்பப் பட்டாரோ?''

''அதை ஏன் கேட்கிறாய்? மனைவியையும் மக்களையும் நினைத்து அவர் ஏங்கினார். இந்தச் சிறை ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் இருந்தது. சிறைக்கு உள்ளே கடைகள் பல இருந்தன. சிறையிலிருப்பவர்களைப் பார்க்க நாள்தோறும் பெருங்கூட்டம் வந்து போய்க் கொண்டிருந்தது. சிறையில் இருப்பவரின் சொந்தக்காரர்கள் ஒரு குறிப்பிட்ட வாடகையைக் கொடுத்தால், அவர்களும் சிறைக்குள்ளேயே கைதியுடன் வசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். ஆகவே, தன் பெரிய குடும்பத்தைத் தான் ஒருத்தியே இருந்து நடத்துவது சிரமமாயிருந்ததால் டிக்கன்ஸின் தாய் தன் கணவனுடன் சிறையிலேயே தங்கிவிட்டாள்''

''டிக்கன்ஸும் சிறையிலேயே இருந்தானா?''

''இல்லை. டிக்கன்ஸ் தவிர மற்றெல்லாரும் சிறையிலேயே இருந்தார்கள். ஞாயிற்றுக்கிழமை மட்டும் டிக்கன்ஸ் தம் பெற்றோர்களுடன் சிறையில் இருப்பான். மற்ற நாட்களிலோ தனக்குப் பிடிக்காத கறுப்பு மை தொழிற்சாலையில் இருப்பான். சிறுவன் டிக்கன்ஸ் காலையில் ஒரு துண்டு ரொட்டியையும், கொஞ்சம் பாலையும் உண்டு விட்டுத் தொழிற்சாலைக்குக் கால்நடையாகவே செல்வான். வழியில் ஆப்பக் கடைகளைப் பார்க்கும் போது, அவனுக்கு நாக்கில் நீர் ஊறும். அவன் ஒரு ஆப்பத்தை வாங்கித் தின்று கொண்டே செல்வான். பகல் உணவு ஒரு துண்டு ரொட்டி மட்டும்தான். வேலை முடிந்ததும் அவன் நேரே சிறைச்சாலைக்குச் சென்று தம் பெற்றோர்களைப் பார்ப்பான். இந்தச் சிறை வாழ்க்கை அவன் மனத்தை உறுத்திக் கொண்டேயிருந்தது..''

'' அவன் அங்குக் கண்ட காட்சிகளும், தாயார் சொன்ன கதைகளும் அவன் மனத்தில் நன்கு பதிந்திருந்தன. இவற்றையெல்லாம் ஒன்று திரட்டிப் பின்னால் இந்தச் சிறுவன், அதாவது வருங்காலத்தில் புகழ்பெற்ற நாவலாசிரியரான சார்லஸ் டிக்கன்ஸ் 'லிட்டில் டோரிட்' என்ற நாவலில் மிக அருமையாக இதனை விளக்கியுள்ளார்.''

''டிக்கன்ஸின் தந்தை விடுதலை ஆகவே இல்லையா?''

''எதிர்பாராதவிதமாக அவருக்கு வாரிசு உரிமை மூலம் கொஞ்சம் பணம் கிடைத்தது. அந்தப் பணத்தைக் கடன் கொடுத்தவர்களுக்குக் கொடுத்துவிட்டு, சிறையிலிருந்து விடுதலை அடைந்தார். டிக்கன்ஸ் கறுப்பு மை வேலையிலேயே இருந்தான். ஆனால் அது நீடிக்கவில்லை. டிக்கன்ஸின் பெற்றோர்களுக்கும் கம்பெனிக்காரருக்கும் ஏற்பட்ட தகராறினால் டிக்கன்ஸ் வேலையிலிருந்து நீக்கப்பட்டான். பிறகு பெற்றோர்கள் டிக்கன்ஸை ஒரு பள்ளியில் சேர்த்தார்கள். கொஞ்ச காலம் படித்துக் கொண்டிருந்த அவன், குடும்பத்தில் மீண்டும் வறுமை வரவே பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கும்படியாகிவிட்டது. மீண்டும் அவன் வேலை செய்து பிழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.''

''பாவம் அவனுக்கு வேலை ஏதாவது கிடைத்ததா?''

''டிக்கன்ஸ் ஓரளவு எழுதவும் படிக்கவும் இலத்தீன் மொழியைக் கொஞ்சம் பேசவும் கற்றுக் கொண்டிருந்தான். அடுத்த ஊரில் வக்கீலாயிருந்த மிஸ்டர் பிளாக்மூர் என்பவரிடம் 'குமாஸ்தா'வாக வேலை கிடைத்தது.''

''இவரது தந்தை வேலை ஏதேனும் செய்தாரா?''.

''கையிலிருந்த பணமெல்லாம் தீர்ந்து விட்டது. டிக்கன்ஸின் தந்தை சுருக்கெழுத்தைக் கற்றுக் கொண்டு, ஒரு பத்திரிகையில் நிருபராக வேலை பார்த்தார். டிக்கன்ஸ் தந்தையைப்போலவே தானும் ஒரு நிருபராகவேண்டும் என்று விரும்பினார். உடனே ஒரு பழைய சுருக்கெழுத்துப் புத்தகத்தை வாங்கி வந்து ஆழ்ந்து படிக்கலானார். அவரது முயற்சியால் ஒரு நீதிமன்றத்தில் வேலை கிடைத்தது. பிறகு படிப்படியாக அவர் 'ட்ரூஸன்', 'மிர்ரர் ஆஃப் பார்லிமெண்ட்' ஆகிய பத்திரிகைகளில் நாடாளுமன்ற நிருபராக வேலை பார்த்தார்.

## ஏழையாய் இருந்து ஏற்றம் பெற்றவர்

''டிக்கன்ஸ் பிறகு 'மார்னிங் கிரானிக்கிள்' என்ற பத்திரிகையின் விசேட நிருபராகப் பணியாற்றினார். இதனால் அவருக்கு இந்தத் துறையில் நல்ல அனுபவம் ஏற்பட்டது. விழாக்கள், தெருச் சண்டைகள், கலவரங்கள், தேர்தல் முதலிய சம்பவங்களை மிகச் சுவையாக எழுதி, மற்ற நிருபர்களைப் போட்டி போட முடியாமல் திணற அடித்தார். இப்போதுதான் டிக்கன்ஸ் பணமுடை இல்லாமல் வாழ்ந்தார். ஆகவே, கதைகள் எழுதுவதற்கு நல்ல சமயம் கிடைத்தது. தம் இருபத்திரண்டாம் வயதில் முதன் முதலாக ஒரு சிறு கதையை 'போஸ்' என்ற பெயரில் எழுதி ஒரு பத்திரிகைக்குப் பயந்து கொண்டே அனுப்பினார்.''

''அந்தக் கதை வெளிவந்ததா?"

''வெளிவந்தது. டிக்கன்ஸ் அதைப் பார்த்துவிட்டு மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தார். இதைத் தொடர்ந்து கதைகள் எழுதுவதில் அவருக்கு ஊக்கம் பிறந்தது. 'மார்னிங் கிரானிக்கிள்' என்னும் பத்திரிகையாளர்கள் கதைகளைத் தொடர்ந்து எழுதும்படி அவரைக் கேட்டுக்கொண்டனர். அதற்கு அன்பளிப்புத் தருவதாகவும் சொன்னார்கள். உடனே, டிக்கன்ஸ் அதில் தொடர்ந்து கதைகளை எழுதி வந்தார். இப்போது டிக்கன்ஸுக்கு நல்ல வருவாய் கிடைத்தது. பிறகு இந்தக் கதைகளெல்லாம் தொகுக்கப்பட்டுப் புத்தகமாக வெளிவந்தது. இந்தப் புத்தகத்திற்கு இலண்டன் வாசகர்கள் பெரிதும் ஆதரவு தந்தார்கள். இதன் விளைவு? டிக்கன்ஸ் நிருபர் வேலைக்கு முழுக்குப்போட்டு விட்டுப் புத்தகங்கள் எழுதும் முயற்சியில் முழு நேரத்தையும் செலவிட்டார்!''

ஆர்வமாக எழுந்து போய் புத்தக அலமாரியிலிருந்து ஒரு பத்திரிகையை எடுத்து வந்தார்.

''கண்மணி! இந்தப் பத்திரிகையின் பெயர் 'பிக்விக் பேப்பர்'. இலண்டனில் உள்ள ஒரு புத்தகக் கம்பெனியார், டிக்கன்ஸிடம் ஒரு கட்டுரைத் தொகுதி வேண்டும் என்று கேட்டனர். டிக்கன்ஸும் அதற்கு இணங்கிக் கட்டுரைகளை வரைந்து கொடுத்தார். அக்காலத்தில் பிரபல ஓவியராக இருந்த சீமர் என்பவர் இதற்குச் சித்திரங்கள் வரைந்திருந்தார். இந்தக் கட்டுரைகளைத் தாங்கி வந்த 'பிக்விக் பேப்பர்' என்னும் பத்திரிகைக்கு மக்கள் பெரும் வரவேற்பை அளித்தார்கள். நாளடைவில் டிக்கன்ஸின் நகைச்சுவை மிக்க அந்தக் கட்டுரைகளுக்குப் பட்டி தொட்டிகளிலெல்லாம் ஆதரவு பெருகியது. முதலில் 400 பிரதிகளே அச்சிடப்பட்ட 'பிக்விக் பேப்பர்' 40 ஆயிரம் பிரதிகளுக்கும் மேலாக அச்சிட வேண்டிய நிலை ஏற்பட்டது''.

''இன்னும் கேள். 'பிக்விக் பேப்பர்' நடந்துகொண்டிருந்த போதுதான் டிக்கன்ஸ் திருமணம் செய்து கொண்டார். மனைவி பெயர் கேதரின் ஒகார்த். இந்தப் பத்திரிகை இலண்டன் நகரிலும் சக்கைபோடு போடவே அங்குள்ள புத்தக வெளியீட்டாளர்கள் போட்டி போட்டுக் கொண்டு டிக்கன்ஸின் கதைகளைப் புத்தகமாக வெளியிட முன்வந்தனர்! டிக்கன்ஸ் இப்போது முன்னைவிடச் சுறுசுறுப்பாக எழுதிக் குவித்துக் கொண்டேயிருந்தார்.''

''இப்போது டிக்கன்ஸ் புகழ் பெற்ற பெரிய நாவலாசிரியராகி விட்டார். இல்லையா?''

''ஆமாம். அவர் இப்போது பிரபல நாவலாசிரியராகிவிட்டார். அவர் எழுதியவைகளை வாங்கிக் கொண்டுபோக, அவர் வீட்டு வாசலில் அச்சகப் பையன் கால்கடுக்கக் காத்துக் கொண்டிருப்பான் என்றால் பார்த்துக் கொள்ளேன். டிக்கன்ஸ் பெரும்பாலும் காலை வேளைகளில்தான் எழுதுவார். இவர் எழுதிய 'ஓல்டு கியூரியாஸிடி ஷாப்' என்ற தொடர்கதை இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் பெருத்த அளவுக்கு விற்பனை ஆயிற்று. இந்தக் கதையின் கதாநாயகி என்ன ஆனாள் என்று தெரிந்து கொள்வதற்காக அமெரிக்க வாசகர்கள் இந்த நாவலின் கடைசிப் பகுதியை ஏற்றி வந்த கப்பலை எதிர்பார்த்து நிற்பார்களாம்!''



அன்பான இதயத்தோடு அணுகி, இதமாகப் பேசினால் யாரையும் திருத்த முடியும். மனிதர்களில் யாரும் பிறக்கும் போதே கெட்டவர்களாகப் பிறப்பதில்லை.

''புகழ் என்றால் இப்படியல்லவா பெறவேண்டும்.''

''டிக்கன்ஸைப் பார்க்க அமெரிக்க மக்கள் பெரிதும் விரும்பினார்கள். தவிரத் தம் நாட்டுக்கு வரும்படியும் அழைத்தார்கள். இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு டிக்கன்ஸ் அமெரிக்கா சென்றார். அங்கு அவருக்கு மிகச் சிறப்பான முறையில் வரவேற்புத் தந்து போற்றிப் புகழ்ந்தார்கள்.''

''அவர் குடும்பம் என்ன ஆயிற்று அண்ணா?''

''குடும்பத்துக்கென்ன? குதூகல வாழ்வுதான்! சிறுவயது முதலே பல துன்பங்களை அனுபவித்து வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்ட டிக்கன்ஸ் இப்போது பேரும் புகழும் பணமும் வந்த பின் குடும்பத்தை மறந்து விடுவாரா என்ன? அமெரிக்கா போய் வந்த பிறகு, ஐரோப்பிய நாடுகளுக்கும் அவர் சென்ற போது தம் குடும்பத்தாரையும் உடன் அழைத்துச் சென்றார். டிக்கன்ஸின் கற்பனையிலிருந்து, மாஸ்டர் அம்பிரியின் கடிகாரம், கிறிஸ்துமஸ் கரோல், மணியோசை, டாம்பே அண்டு சன் போன்ற ஏராளமான நாவல்கள் வெளிவந்து கொண்டேயிருந்தன. டிக்கன்ஸ் தாம் கண்டதையும், கேட்டதையும் நாவலாக்கினார். இது மக்கள் மத்தியிலே அவருக்கு நிலைத்த புகழை ஏற்படுத்திக் கொடுத்தது. நாவல் எழுதுவதில் மட்டுமல்ல, நாடகத்துறையிலும் அவர் சிறந்து விளங்கினார்.''

''அப்படியா?''

''ஆமாம். தாமே நாடகம் எழுதி, அதில் தாமே முக்கியப் பாத்திரங்களில் நடித்தார். நடிகர்களுக்கு அலங்காரம், மேடை நிர்வாகம் அனைத்தையும் தாமே செய்தார். இந்த நாடகத்துக்கு மக்கள் பெரும் ஆதரவு அளித்தார்கள். பல ஊர்களில் இந்த நாடகத்தை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் இரவு பகல் உழைத்த டிக்கன்ஸின் உடல் நிலை நாளுக்கு நாள் குன்றியது. இருந்தும் அவர் மனம் குன்றாமல் 'டெய்லி நியூஸ்' என்னும் பத்திரிகையின் ஆசிரியர் பதவியை ஏற்றுக்கொண்டார். சிலகாலம் இருந்துவிட்டு அதில் விருப்பமில்லாமல் ஆசிரியர் பதவியை விட்டு விலகி, 'குடும்பப்பேச்சு' என்னும் வாரப் பத்திரிகையை ஆரம்பித்தார். இப்பத்திரிகை எட்டாண்டுக் காலம் சிறப்பாக நடந்தது.''

''இதற்குப் பிறகு வேறு என்னென்ன முயற்சிகளில் ஈடுபட்டார்?''

''டிக்கன்ஸ் ஊர் ஊராகச் சென்று பேசினார். இரவு பகல் என்று பாராமல் எழுதி எழுதிக் குவித்தார். சமுதாயச் சீர்கேட்டைத் துணிந்து எடுத்துக் காட்டினார்; மக்கள் வாழ்வதற்கான வழிவகைகளை நாவல்களிலே வடித்துத் தந்தார். ஓயா உழைப்புக் காரணமாக அவர் உடல் நிலை கெட்டது. அவர் கடைசியாக 'எட்வின் ட்ரூடின் மர்மம்' என்ற துப்பறியும் நாவலை எழுதிக் கொண்டிருந்த போது காலமானார். அப்போது அவருக்கு வயது ஐம்பத்தெட்டு.''

''பல்வேறு நாட்டு மக்களின் உள்ளங்களையும் உணர்ச்சிகளையும் தம் ஏராளமான கதைகள் மூலம் கவர்ந்து வந்த நாவலாசிரியர் சார்லஸ் டிக்கன்ஸின் உடல், கவிஞர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடுகாட்டில் புதைக்கப் பட்டது. அவரது புகழ் அன்று முதல் இன்று வரை அழியாப் புகழாக விளங்கி வருகிறது. அவருடைய நாவல்கள் இன்றும் எல்லா நாட்டு மக்களாலும் விரும்பிப் படிக்கப்படுகின்றன. அவரது வாழ்க்கை தம்பி தங்கைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும்கூட ஒரு பாடமாகும்.''




## திடீர் எக்ஸ்-ரே சாதனம்

கண் இமைக்கும் நேரத்தில் மூடிய பெட்டிக்குள் என்ன இருக்கிறது என்பதை, பெட்டியைத் திறக்காமலேயே படம் பிடித்துக் காட்டும் திடீர் எக்ஸ்-ரே சாதனம் ஒன்று பிரிட்டனில் அறிமுகமாகியிருக்கிறது.

ஒரு மேஜையின் மேல் பகுதிபோல் இருக்கும் கண்ணாடித் தகடுதான் இந்தப் புதிய எக்ஸ்-ரே சாதனம். இதன் அடியில் எல்லாவித எலக்ட்ரானிக் சாதனங்களும் வைத்திருக்கிறார்கள். இந்தக் கண்ணாடியின் மேல், பெட்டியை வைத்து எடுத்தால் போதும், அதனுள் இருப்பவை என்னென்ன என்பதை இந்த நுண்கருவிகள் படம் பிடித்து, அதே வினாடியில் போட்டோ தந்துவிடும். சாதாரண எக்ஸ்-ரே யூனிட்டைப் போல 'டெவலெப்' செய்துதான் படம் தரும் என்ற நிலை இதில் இல்லை. பெட்டியை வைத்து எடுத்த அதேநேரத்தில் அதன் உட் பகுதியைப் படம் பிடித்து, போட்டோவையும் தரவல்லது இந்தச் சாதனம்.



விமானப் பயணங்களில் பெட்டிகளில் வெடிகுண்டுகளை அல்லது ஆயுதங்களை எடுத்துச் செல்கிறார்களா என்று கண்காணிக்கவும், பெட்டிக்குள் கடத்தல் பொருள்கள் உள்ளனவா என்று பார்க்கவும் இச்சாதனம் உதவும். இச்சாதனம் இதன் வகைகளிலேயே மிக நவீனமானது; சிக்கனமானது. பெட்டியைத் திறக்காமல், உரிமையாளருக்குக் கோபம் ஏற்படுத்தாமல் சோதித்துவிடக்கூடியது. தெற்கு இங்கிலாந்தில் உள்ள 'தார்ன் லேட்டிங் ஒர்க்ஸ்' என்ற நிறுவனத்தினர் கண்டுபிடித்துள்ள இந்தச் சாதனம் ஆயிரக்கணக்கான படங்களை எடுக்க வல்லது. சாதாரண எக்ஸ்-ரே யூனிட்டில் ஒவ்வொரு முறையும் பிலிம் மாற்றிடவேண்டும். இதில் அந்தத் தொல்லையும் கிடையாது.

மருத்துவ உபயோகத்திற்கு இதனைப் பயன்படுத்த முடியாது. அதற்கேற்ற சாதனம் தயாரிப்பதில் இந்நிறுவனத்தினர் தீவிரமாக உள்ளனர்.

## சைவ இறைச்சி

தயிரிலிருந்து இறைச்சியின் பண்புகள் உள்ள மிகு புரத உணவுப் பொருள் ஒன்றை அமெரிக்க வேளாண்மைத் துறை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இதைச் சைவ இறைச்சி என்று கூறலாம். நெடுநேரம் சூடுபடுத்தினாலும் இது உடைந்து துண்டாகி விடுவதில்லை. பிடித்தமான மணம், காரம் முதலியன சேர்த்து உண்ணலாம்.

குறிப்பாக வளர்ச்சி குறைவான நாடுகளில் கோடிக் கணக்கான மக்கள் பால் பருகுவதில்லை. அவர்கள் இந்தப் புதிய சைவ இறைச்சியைத் துணை உணவாக உண்டு, தம் சாப்பாட்டிலுள்ள ஊட்டச் சத்துக் குறைகளை நிறைசெய்து கொள்ளக்கூடும். இச் சைவ இறைச்சியில் அதிக அளவு (பால்) புரதச் சத்து உள்ளது.

வாஷிங்டன் நகரிலுள்ள வேளாண்மைத் துறையின் ஊட்டச் சத்து ஆராய்ச்சிப் பிரிவைச் சேர்ந்த நோபிள் பி. வாங், ஒவன் டபிள்யூ. பார்க்ஸ் என்னும் இரு இரசாயன வல்லுநர்கள் இப்புதிய தயிர் உணவை உருவாக்கியுள்ளார்கள். ஏடு எடுத்த பாலோடு கால்ஷியம் குளோரைடு சேர்த்து, தயிர் தயாரித்து, பின்பு அதைச் சூடுபடுத்துகிறார்கள். அடுத்துச் சிறு சிறு துண்டுகளாக அதை வெட்டி, கொதிக்கும் எண்ணெயில் வறுக்கிறார்கள். சற்றுப் பழுப்புநிறம் வந்ததும் எடுத்துவிடுகிறார்கள்.

வறுத்த தயிரைத் தண்ணீரில் போட்டு, குளிர் பெட்டியில் இரு வாரங்கள் வரையில் கெடாமல் வைத்திருக்கலாம். உரிய காப்புப் பொருள் சேர்த்து, வீட்டு வெப்ப நிலையில், மூன்று மாதம் வரையில் கூடக் கெடாமல் வைத்திருக்கலாம். வறு தயிரைப் பயன்படுத்தி, இறைச்சி மணமுள்ள குழம்பு தயாரித்து, டப்பாக்களில் அடைத்து வைக்கலாம். உண்பதற்குரிய பண்டங்கள் செய்யலாம். இனிப்புப் பண்டங்களும் செய்யலாம்.



வறு தயிரை வாணிப முறையில் விற்பனை செய்யத் தொடங்குவதன் பொருட்டு, மேற்கொண்டும் ஆராய்ச்சிகள் செய்து வருகிறார்கள்.


அண்ணன் காட்டிய வழி
13
கதை நம்பியின் தம்பி
படம்: குமார்
இளங்கோ! உனக்குத் தெரியுமா சேதி? நேற்று அண்ணாவே முத்துவின் வீட்டுக்குப் போறாராம்....
முத்துவையும் வேலனோடு சேர்ந்து ஒத்துழைக்கணும்னு கேட்டிருப்பார் அவனும் சரிமின்னு சொல்லியிருப்பான்!
அதுதான் இல்லை! முத்துவை எதிலும் கலந்து கொள்ள வேண்டாம் என்று சொல்லப் போறாராம்!
இதுவும் வேலனுக்காக இருக்கும்! இதையெல்லாம் இப்படியே வளரவிடக்கூடாது, அண்ணாவுக்கு நீங்க எல்லாரும் பயந்தாலும் நான் மட்டும் தனியா நின்னு முடிவு கட்டுறேன் பாருங்க!
செல்வன் வீட்டில்
அப்பா! எனக்கு ஒண்ணுமே புரியலையே!
எனக்கு மட்டும் புரியுதா என்ன?
புரியாமலா இப்படிப்பேசுறீங்க?
நான் என்ன சொன்னேன்?
தவறு செய்தால் தண்டனை தானா கிடைக்கும்னு சொன்னீங்களே!
இந்தப் புத்தகத்தைப் படித்தால் நீ என்னமோ சொல்றியே?
செந்தாமரை! புரியும்படியாச் சொல்லுன்னு எத்தனை தடவை கேட்கிறது? சொல்லேன்!
வந்து..... வந்து நம்ப திட்டம் எல்லாம் கெட்டுப் போச்சு.... கடிதத்தை மாற்றி நம்ப ரகசியத் திட்டத்தை எடுத்துக் கொண்டுபோய் வேலன் கொடுத்திட்டான்!
அப்படியா?
ஐயயோ.... அண்ணாகிட்டே கொடுத்திட்டேனே!
தொடரும்

# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மருத்துவ மனைகளுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் முதலியவற்றை வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழே கொடுக்கப்பட்டுள்ள அரசு மருத்துவமனைகளுக்கு 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் ஆரம்பமாகும் அல்லது ஒவ்வொரு விஷயத்திலும் அதிகாரியால் ஒப்பந்தப் புள்ளி ஏற்றுக்கொள்ள குறிப்பிடப்படும் அத்தகைய இதர நாளிலிருந்து 1973-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31-ஆம் நாளோடு முடிவடையும் காலத்திற்கு உணவு மற்றும் இதர மருத்துவ மனைகளுக்குத் தேவையான பொருள்கள் வழங்குவதற்கான முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 1972-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 7-ஆம் நாள் வெள்ளிக்கிழமையன்று மாலை 2 மணிவரை சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலர்கள், கண்காணிப்பாளர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும் என்று இதனால் அறிவிக்கப்படுகிறது—

(1) அரசு மாவட்ட தலைமையிட மருத்துவ மனை, நாகப்பட்டினம்.

(2) கும்பகோணம், மன்னார்குடி, மாயூரம், திருவாரூர், பட்டுக்கோட்டை, திருத்துறைப் பூண்டி, சீர்காழி, நன்னிலம், அதிராம்பட்டினம், அறந்தாங்கி, பொறையார், திருக்காட்டுப்பள்ளி, கூத்தாநல்லூர், திருப்பனந்தாள், பேராவூரணி ஆகிய இடங்களிலுள்ள அரசு மருத்துவ மனைகள் மற்றும் திருத்துறைப்பூண்டியில் உள்ள அரசுப் பெண்கள் மற்றும் சிசு மருத்துவமனை.

(3) பாபநாசம், குற்றாலம், குடவாசல், சுவாமிமலை, அம்மாப்பேட்டை, வைத்தீஸ்வரன் கோவில், திருவிடமருதூர், நாச்சியார் கோயில், வலங்கைமான், சுந்தரப் பெருமாள் கோயில் மற்றும் கிளியனூர் ஆகிய இடங்களிலுள்ள அரசு மருந்தகங்கள்.

குறிப்பு:— திருத்துறைப்பூண்டி பெண்கள் மற்றும் சிசு மருத்துவ மனைக்கான ஒப்பந்தப் புள்ளி, திருத்துறைப் பூண்டி அரசு மருத்துவமனை மருத்துவ அலுவலர், அவர்களால் அவரது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும்.

தேவைப்படும் பொருள்களின் அட்டவணையுடன் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரதியும் மற்றும் ஒப்பந்த நமூனாவின் பிரதியும் மேற்படி அலுவலர்களிடமிருந்து மேற்படி நமூனாக்களின் விலையான ரூ. 5-ம், விற்பனை வரிக்காக காசு (15) பதினைந்தையும் சேர்த்து ஒரே செலானில் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகைகள் திரும்பப் பெறக் கூடியதல்ல. இக்கட்டணம் ரூ. 5.15-ஐ சென்னை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவிலோ அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் எந்தக் கிளைகளிலோ அல்லது ஏதேனும் அரசுக் கருவூலங்களிலோ தமிழ்நாடு அரசின் கணக்கிற்கு முறையே, "XXIII. Medical- I Director of Health Services and Family planning—G. Miscellaneous other receipts" "XII Sales Tax receipts under the State Sales Tax Act.—General Sales Tax" என்ற தலைப்பின்கீழ் செலுத்தப்படவேண்டும். விற்பனை வரி செலுத்துவதை விவரமாக செலானில் குறிப்பிட்டுள்ள (on what Account with authority if any Head of Account-ன்) கீழ் குறிப்பிட வேண்டும். நமூனாக்களைப் பெறுவதற்காக சம்பந்தப்பட்ட மருத்துவ மனை அல்லது நிறுவனங்களில் அலுவலகத்தில் எந்த வேலை தினத்திலும் காலை 11 மணி மற்றும் மாலை 5 மணிக்கு இடையில் செலான்கள் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

எக்காரணத்தை முன்னிட்டும் ரொக்கம் பெற்றுக்கொள்ளப் பட மாட்டாது.

குறிப்பு:—(1) ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் 1971-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முதல் நாளன்றோ அல்லது அந்த நாளுக்குப் பிந்திய ஏதாவதொரு நாளிலோ பெறப்பட்ட சால்வென்சி சர்டிபிகேட்டை, அதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள நமூனாவில் ஒரு தாசில்தார் கையொப்பத்துடனோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரின் நற்சான்றுடன் கூடிய அதன் நகல் பிரதியையோ கட்டாயமாக இணைத்து அனுப்ப வேண்டும்.

(2) ஒப்பந்தத்தின் மதிப்பீடானது ரூ. 10,000-க்கும் மேம்பட்டதாக இருப்பின் அத்தகைய இன்கம்டாக்ஸ் கிளியரன்ஸ் சர்டிபிகேட் ஒன்றை இணைத்து அனுப்ப வேண்டும். சேல்ஸ் டாக்ஸ் கிளியரன்ஸ் சர்டிபிகேட் ஒன்றையும் ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

(3) ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் நாளன்றோ அதற்குப் பிந்திய ஏதாவது ஒரு நாளிலோ தாசில்தார் அந்தஸ்திற்குக் குறையாத ரெவின்யூ அலுவலர் அல்லது தாசில்தார் சார்பில் செயல்படும் ஹெட்குவாட்டர்ஸ் டெபுடி தாசில்தாரிடமிருந்து பெறப்பட்ட நேஷனலிடி சர்டிபிகேட் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் ஒருவரின் நற்சான்றுடன் கூடிய அதன் நகல் பிரதியையோ இணைத்து அனுப்ப வேண்டும்.

(4) ஒப்பந்தப் புள்ளி கொடுப்பவர், ஒப்பந்தத்தைக் கொடுத்த பின்பு தன்னுடைய ஒப்பந்தம் சம்பந்தமாக இவ்வலுவலகத்திற்குத் தனிப்பட்ட முறையில் எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளக்கூடாது.

**டாக்டர் கா. குழந்தைவேலு,**
எம். பி. பி. எஸ்., மாவட்ட மருத்துவ அலுவலர், தஞ்சை இருப்பு, நாகப்பட்டினம்.

21-10-1971.

(த..ஆர்.7)

## பயிற்சி

### சைனிக் பள்ளி

அமராவதி நகர்,

கோயம்புத்தூர் மாவட்டம்,

5-வது வகுப்புக்கு 1972-ஆம் ஆண்டு ஜூலை வகுப்புத் தொடருக்கான நுழைவுத் தேர்வு.

1972 பிப்ரவரி மாதம் 19, 20 தேதிகளில் நுழைவுத் தேர்வு நடைபெறும். (விடைகளை, தமிழ், ஆங்கிலம், இந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆகிய மொழிகளில் எழுதலாம்.) இந்த தேர்வில் தேர்ச்சி பெற்ற சிறுவர்கள் நிர்ணயிக்கப்படும் தேதியன்று நேர்முகப் பேட்டி மற்றும் மருத்துவ தேர்வுக்கு தேர்வு போர்டு முன் ஆஜராகவேண்டும்.

வயது :—1962 ஜூலை 2 மற்றும் 1963 ஜூலை 1-ந் தேதிக்கு இடையே பிறந்திருக்க வேண்டும். (இரண்டு நாட்களும் உட்பட).

தமிழ் நாட்டில் தேர்வு நிகழும் இடங்கள்—

| | |
|---|---|
| சென்னை. | திருநெல்வேலி. |
| கடலூர். | சேலம். |
| தஞ்சாவூர். | வேலூர். |
| திருச்சிராப்பள்ளி. | அமராவதிநகர். |
| மதுரை. | |

பள்ளி பாடத்திட்டம்—

திறமையான கல்வி, உணவு வசதி மற்றும் விளையாட்டு பயிற்சிகள் அளிக்கப்படும். நல் ஒழுக்கமும், உடற்பயிற்சிகளும் விசேஷ முக்கியத்துவத்துடன் கவனிக்கப்படும். தேசிய பாதுகாப்பு அகாடமி நுழைவுத் தேர்வுக்கும் மத்திய செகண்டரி கல்வி போர்டால் நடத்தப்படும் அகில இந்திய உயர் செகண்டரி தேர்வுக்கும் (புகுமுக வகுப்பிற்கு சமமானது) சிறுவர்களைத் தயார் செய்யும். போதனை மொழி ஆங்கிலம். தவிர உயர்-கீழ் மட்டத்தில் மாணவர்கள் தமிழ் அல்லது இந்தியை கட்டாய பாடமாக தேர்ந்தெடுக்க வேண்டும்.

பள்ளிக் கட்டணம்—

ஆண்டுக்கு ரூ. 2,050 (உணவு, இருப்பிடம், போதனை, பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் ஆகிய செலவுகள் உட்பட); உடை வகைகள் கட்டணம் (outfit charges) ரூ. 300 முதல் ஆண்டும், மற்றும் ரூ. 150 பின்வரும் ஆண்டுகளிலும், செலுத்த வேண்டும். எச்சரிக்கைத் தொகை ரூ. 150 (இது பள்ளியை விட்டுச் செல்லும்போது திருப்பித் தரப்படும்). கைச்செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 100.

தகுதி மற்றும்—வருமான அடிப்படையில் அரசாங்க உதவித் தொகை திட்டங்கள்—

தமிழ்நாடு :—தமிழ் நாட்டில் நிலைத்து வாழ்ந்து வரும் சிறுவர்களுக்கும் மற்றும் இதற்குச் சேர்த்துக்கொள்ளும் வருடத்தில் ஜனவரி 1-ஆம் தேதியன்று உள்ளபடி குறைந்த பட்சம் மூன்று வருடங்களுக்குத் தமிழ் நாட்டில் தொடர்ந்து உத்தியோகத்தில் இருந்து வந்திருக்கும் மற்ற மாநிலங்களைச் சேர்ந்த பெற்றோர்களின் பிள்ளைகளுக்கும் தாராளமாக உபகாரச் சம்பளம் கிடைக்கும்.

கூட்டாகப் பெற்றோர்களின் மாத வருமானம் ரூ. 400, ரூ. 500, ரூ. 700, ரூ. 1,000 வரையில் இருக்குமானல் அப்பொழுது அளிக்கப்படக்கூடிய உபகாரச் சம்பளத்தின் மதிப்பு முறையே முழுதும், முக்கால், பாதி, கால் பாகம்.

பாதுகாப்பு அமைச்சகம் :—பணிபுரிந்து வரும் மாஜி JCOக்கள், ORகள் மற்றும் அவர்களுக்குச் சமமான கடற்படை விமானப்படைகளில் பதவிகளை வகித்தவர்களின் பிள்ளைகளுக்கு அளவான எண்ணிக்கையுள்ள பாதுகாப்பு அமைச்சகத்தின் உபகாரச் சம்பளங்கள் கிடைக்கும்.

உள்துறை அமைச்சகம் :—மத்திய அரசு நேரடி ஆட்சியின் பகுதிகளைச் சேர்ந்த சிறுவர்களுக்குத் தாராளமான உபகாரச் சம்பளங்கள் கிடைக்கும்.

விண்ணப்பம் மற்றும் விளக்கக் குறிப்புகள் :—விண்ணப்பப்படிவம், பள்ளி விளக்கக் குறிப்புகள், மாதிரி வினாத்தாள் ஆகியவைகள் வேண்டுவோர் 90 காசு தபால் தலையும் அதனோடு 5 காசு வரித்தபால் தலையும் ஒட்டிய 42 செ. மீ.×15 செ. மீ. அளவுள்ள சுயவிலாசமிட்ட உறையுடன் முதல்வர், சைனிக் பள்ளி, அமராவதிநகர் (அமராவதி நகர் தபால் அலுவலகத்தில் பெறுமாறு), அவர்கள் பெயருக்கு ரூ. 3-க்கான கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டருடன் முதல்வர் அவர்களுக்கு மனுச்செய்து பெறலாம். மேலும் மனுவில் எந்த மொழியில் வினாத்தாள் தேவை என்பதைக் குறிப்பிட வேண்டும்.

கடைசி தேதி :—குறிப்பிட்ட படிவத்தில் பூர்த்தி பெற்ற விண்ணப்பங்களுடன் ரூ. 5-க்கான கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டரை இணைத்து முதல்வருக்கு 20—1—1972-ஆம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

### திண்டுக்கல் கோட்டம்

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்கள் சார்பாகவும், திண்டுக்கல் (நெடுஞ்சாலை கிராமப்பொறியியல் பணித்துறை) கோட்டப் பிராந்தியத்தில் உள்ள அரசினர் சாலைகளில் 1972-73-ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு வேலைகளுக்கான மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (டெண்டர்கள்) அட்டவணையில் திண்டுக்கல் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல்) அவர்களால் அவர்களுடைய அலுவலகத்தில் 20-1-1972-ஆம் தேதி பிற்பகல் 4-00 மணி வரையில் (கோட்டப் பொறியாளர் அலுவலக நேரப்படி) பெற்றுக்கொள்ளப்படும். பெற்றுக் கொண்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தினமே பிற்பகல் 4-05 மணி அளவில் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி பற்றிய விவரங்கள் குறிப்பிட்ட அறிவிப்புப் பட்டியல்களிலும் பொதுவான நிபந்தனைகளுடன் அட்டவணையும் மேற்படி விவரக் குறிப்புக்களும் திண்டுக்கல் (நெடுஞ்சாலைகிராமப் பணித் துறை) கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் 10-1-1972-ஆம் தேதி முதல் 19-1-1972-ஆம்தேதிவரை (இரு நாட்களும் உட்பட) அலுவலக நேரத்தில் எல்லா வேலை நாட்களிலும் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு வேலைக்கான அட்டவணைப் பட்டியலில் அடக்க விலை விற்பனை வரி உட்பட ரூ. 5.18 (ரூபாய் ஐந்து காசு பதினெட்டு மட்டும்) ஆகும். இந்தத் தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தர இயலாது. 20-1-1972-ஆம் தேதி ஒப்பந்தப் புள்ளிகள் விற்கப்படமாட்டாது.

ஒவ்வொரு வேலைக்கான வேலை விவரங்கள் முன் வைப்புத் தொகை, விவரங்கள் அடங்கிய அட்டவணை இவ்வலுவலகத்திலும் இதன் அனைத்து உட்கோட்ட உதவிப் பொறியாளர் (நெ. கி. ப. து.) அலுவலகங்களிலும், இதன் அனைத்துப் பிரிவு அலுவலகங்களிலும் (நெ.) உள்ள அறிவிப்புப் பலகையில் 10-1-1972-ஆம் தேதி முதல் 19-1-1972-ஆம் தேதிவரைவிளம்பரம் செய்யப்படும். முன்வைப்புத் தொகை திண்டுக்கல் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) கோட்டப் பொறியாளர் அவர்களின் எல்லைக்குட்பட்ட அரசினர் கருவூலங்கள் ஏதேனும் ஒன்றில் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலுத்துச் சீட்டு இணைக்கப்பட வேண்டும். இதைத்தவிர கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை) திண்டுக்கல் சார்பில் மாற்றப்பட்ட பன்னிரண்டு ஆண்டுதேசிய தற்காப்புப் பத்திரங்களும், மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின் சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல்டு வங்கிகளால் வழங்கபடும் வங்கி உத்தரவாதங்களும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், முன் வைப்புத் தொகைக்காகப் பெற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத் தொகை இல்லாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

**வி. எம். ராமதாஸ் ராவ்,**
கோட்டப் பொறியாளர்,
(நெ.கி.ப.து.), திண்டுக்கல்.

(த. ஆர். 1)

---

### அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரி

பாளையங்கோட்டையில் இருக்கும் அரசாங்க இந்தியமுறை வைத்தியக் கல்லூரியைச்சார்ந்த மருத்துவமனைக்கு 1972-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி, முதல் அல்லது ஒப்பந்தம் அங்கீகரிக்கும் அதிகாரி குறிப்பிடும் தேதியிலிருந்து 1973-ம் வருடம் மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி வரை தேவைப்படும் உணவுப் பொருள்களும், இதரச் சாமான்களும் வழங்குவதற்கு (சப்ளை செய்வதற்கு) முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் தமிழக அரசின் ஆளுநரின் சார்பில் அவருக்காகவும், உத்தரவின் படியும் மேற்படி வைத்தியக் கல்லூரியின் முதல்வரால் 1972-ஆம் வருடம் ஜனவரி மாதம் 24-ஆம் தேதி பிற்பகல் 2·00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் படிவங்கள், தேவைப்படும் சாமான்களின் பட்டியல், விதிகள் அடங்கிய அட்டவணை முதலியவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) XXIII Medical Miscellaneous என்ற தலைப்பிலும், விற்பனை வரி 15 காசு மட்டும் XII Sales Tax என்ற தலைப்பிலும் ரிசர்வ் பாங்கியில் அல்லது ஸ்டேட் பாங்கியில் அல்லது அரசினர் கருவூலங்களில் செலுத்தி, மேற்படி இரண்டு செலான்களையும் வைத்தியக் கல்லூரித் தலைவரிடம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:—(1) ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் 1971-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 1-ஆம் தேதிக்குப்பின் தாசில்தார் கையொப்பமிட்ட சொத்துக்களின் பெறுமானச் சான்றிதழ் (Solvency Certificates) அல்லது அதன் உண்மையான நகல் கெஜட் பதிவான அலுவலரால் கையொப்பமிட்டாவது அனுப்ப வேண்டும்.

(2) ஒப்பந்தம் கொடுக்கப்படும் சாமான்களின் மதிப்பு ரூ. 10,000 மேற்பட்டால் வருமானவரி பாக்கியில்லாமல் செலுத்தியதற்குரிய அத்தாட்சியும் ரூ. 1,000-க்கு மேற்பட்டால் விற்பனை வரி கட்டி முடித்த அத்தாட்சியும் தேசிய இனச்சான்றும் ( Nationality Certificate ) ஒப்பந்தத்துடன் சேர்த்து அனுப்பப்படவேண்டும்.

(3) ஒப்பந்த நிபந்தனை நமூனாவையும் பொருள்களின் அட்டவணையையும் நன்றாகப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். சம்மதத்திற்கு அறிகுறியாக மேற்படி நமூனாவையும் அட்டவணையையும் கையெழுத்திட்டுஒப்பந்தத்துடன் திருப்பித் தர வேண்டும்.

**முதல்வர்,**
தமிழ்நாடு அரசாங்க இந்திய முறை மருத்துவக் கல்லூரி.

(த. 8)

## நெடுஞ்சாலே கிராமப் பொறியியல் துறை

தேசீய நெடுஞ்சாலே வேலேகள் (மதுரை வட்டம்).

கீழே குறிப்பிட்டுள்ள வேலேக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களே மேற்பார்வைப் பொறியாளர் (தேசீய நெடுஞ்சாலே), மதுரை அவர்கள் நெ. 11, ஒளவையார் தெரு, நரிமேடு, மதுரை-2 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 12—1—1972 புதன்கிழமை அன்று பிற்பகல் 3-30 மணிவரையில் (அலுவலகக் கெடிகாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தப் புள்ளிகள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்கு திறக்கப்படும்.

| எண். | வேலேயின் பெயர். | கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் விலாசம். |
|---|---|---|---|
| 1 | மதுரை—கன்னியாகுமரி தேசீய நெடுஞ்சாலே 7—கி.மீ. 37/6-55/0 சாலேயை அகலப்படுத்தி பலப்படுத்துதல். | 32,100 | கோட்டப்பொறியாளர் தேசீய நெடுஞ்சாலே, மதுரை-2. |
| 2 | ஷை கி.மீ. 55/0-65/0 சாலேயை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 24,800 | ஷை |
| 3 | ,, கி.மீ. 65/0-77/0 சாலேயை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 31,500 | ஷை |
| 4 | ,, கி.மீ. 77/0-88/4 சாலேயை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 29,100 | ஷை |
| 5 | ,, கி.மீ. 95/0-105/0 சாலேயை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 25,900 | ஷை |
| 6 | ,, கி.மீ. 105/0-115/0 சாலேயை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 30,000 | ஷை |
| 7 | ,, கி.மீ. 115/0-125/0 சாலேயை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 27,800 | ஷை |
| 8 | ,, கி.மீ. 125/0-134/0 சாலேயை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 19,000 | ஷை |
| 9 | ,, கி.மீ. 134/0-146/4 சாலேயை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 31,300 | ஷை |
| 10 | ,, கி.மீ. 170/0-183/0 சாலேயை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 25,600 | ஷை |
| 11 | ,, கி.மீ. 183/0-195/0 சாலேயை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 36,200 | ஷை |
| 12 | ,, கி.மீ. 195/0-203/0 சாலேயை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 21,400 | ஷை |
| 13 | ,, கி.மீ. 203/0-213/0 சாலேயை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 20,200 | ஷை |
| 14 | ,, கி.மீ. 213/0 224/0 சாலேயை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 31,700 | ஷை |
| 15 | ,, கி.மீ. 224/0-231/6 சாலேயை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 21,700 | ஷை |
| 16 | சேலம்—திண்டுக்கல் தேசீய நெடுஞ்சாலே 7—கி.மீ. 345/0-355/0 சாலேயை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 31,000 | கோட்டப்பொறியாளர், தேசீய நெடுஞ்சாலே திருச்சி கோ-1. |
| 17 | தேசீய நெடுஞ்சாலே எண் 45—கி.மீ. 403/0-417/250 சாலேயை அகலப் படுத்தி விரிவுபடுத்துதல். | 33,700 | ஷை |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனைவா [illegible] மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம், கோட்டப்பொறியாளர் அலுவலகம் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை-2, மேலும் கோட்டப் பொறியாளர் அலுவலகம், தேசிய நெடுஞ்சாலை, திருச்சிகோட்ட எண் 2 விலாசத்திலிருந்து 5—1—1972 முதல் 11—1—1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணயபாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக்கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகையை மேற்கண்ட தனிக் கோட்டப்பொறியாளர்கள் (தேசிய நெடுஞ்சாலை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும் இது தவிர 10 வருடத் தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும் 12 வருட தேசீயத் தற்காப்பு அத்தாட்சிகளும் மாநில அரசு ஈட்டுப்பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்

பாங்கு காரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத்தொகைக்கான ரசிது இல்லாத ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

(த. ஆர். 3)

**பி. ஜெயராமன்,**
மேற்பார்வைப்பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை),
மதுரை-2.

---

## ஒப்பந்தப் புள்ளி

### திண்டுக்கல் நகராட்சி

திண்டுக்கல் நகராட்சியின் நல அலுவலகத்திற்குத் தேவையான துப்புரவு வேலைக்காகக் கருவிகள் வழங்குவதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 10—1—1972-ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 4 மணி வரை நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக் கொள்ளப்படும்.

தேவையான பொருட்களின் பட்டியலையும் இதர நிபந்தனைகளையும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பி. வீரகேசவன்,**
ஆணையர்,
திண்டுக்கல் நகராட்சி.

(த.7)

### எழுதுபொருள் அச்சுத் துறை

தமிழக ஆளுநருக்காகக், கீழ்க்கையொப்பமிட்டவரால் முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 19—1—1972 மாலை 3·00 மணி வரை அரசு அச்சகத்திற்குத் தேவையான பலவிதமான பொருள்கள் வழங்குவதற்கு வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தங்கள் விவர அட்டவணையில் டைப் செய்து அனுப்பப்படவேண்டும். விவர அட்டவணைகளை ரூபாய் இரண்டு மட்டும் செலுத்தி, விற்பனை அலுவலர், அரசு வெளியீட்டு அலுவலகம், சென்னை-2 அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம். மற்ற விவரங்களுக்கு, இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, சென்னை-1 அவர்களுக்கு எழுதவும்.

**ஜி. ரங்காராவ்,**
இயக்குநர்.

அரசினர் எழுது பொருள் அச்சுத் துறை இயக்குநர் அலுவலகம் சென்னை-1.

3—12—1971.

(த. ஆர். 6)

## ஏலம்

### வனத்துறை

தமிழக அரசினர் மரக்கிடங்கு, பொள்ளாச்சி.

சுமார் 500 கன மீட்டர் முதல் 800 கன மீட்டர் வரை (ஈட்டி, தேக்கு, கரிமருது, தடசு, பில்லமருது மற்றும் பலஜாதி) மரங்கள் ஆகியவைகளை 25—1—1972-ஆம் தேதி தமிழக அரசு ஆளுநர் அவர்கள் சார்பாக தென்கோவை மாவட்ட வன அலுவலர் அவர்களால் அல்லது அவரது உத்தரவு பெற்றவர்களால் பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏலம் காலை 9 மணி முதல் தொடர்ச்சியாக நடத்தப்படும்.

மற்ற விவரங்கட்கு பொள்ளாச்சியிலுள்ள தமிழக அரசினர் மரக்கிடங்கின் வனச்சரக அலுவலருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

**பூ. க. பொன்னுசாமி,**
மாவட்ட வன அலுவலர்,
தென் கோவை பிரிவு.

7-12-1971.

(த. 4)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப் பணித்துறை

டி.எண்.வி. 25/71-72.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க் கண்ட வேலையை மேற்கொள்வதற்காக மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திருநெல்வேலி-கன்னியாகுமரி வட்டம், திருநெல்வேலி-2 அவர்களால் 12-1-1972 மாலை 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 4 மணிக்குத் திறக்கப்படும்.

| | |
|---|---|
| வேலையின் பெயர் .. | R.C.C. Box for the reach 0-0-486 to 0-1-275 of Karungal distributary. ஒன்று கட்டுதல். |
| ஒப்பந்த வடிவம் .. | மொத்தத் தொகை. |
| கட்டுத் தொகை .. | ரூபாய் 4,300 |
| ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை. | ரூபாய் 20 |
| விற்பனை வரி .. | ரூ. 0.70 |
| வேலையை முடிக்க வேண்டிய காலம். | 4 மாதங்கள். |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்தில் "P. W. III O. R. Receipts" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, இராதாபுரம் கால்வாய் கோட்டம், நாகர்கோயில், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரி "XII S.T. (b) Receipts under the State Sales tax act—General Sales Tax என்ற தலைப்பில் செலுத்தப்படவேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களையும் இதர விவரங்களையும் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திருநெல்வேலி-கன்னியாகுமரி வட்டம், திருநெல்வேலி-2 அவர்கள் அலுவலகத்தில் 16-12-71-லிருந்து 7-1-72 வரை நேரிலோ அஞ்சல் மூலமோ, மேலாளருக்கு, ஒப்பந்தப் புள்ளிப் பத்திர விலையையும் விற்பனை வரியையும் செலுத்தியதற்கான ரசீதை உடன் வைத்து மனுச் செய்து பெற்றுக்கொள்ளலாம். இத்தேதிக்குப் பிறகு வரும் மனுக்கள் ஏற்கப்படமாட்டா. மேற்கொண்டு விவரங்களை அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் பெறலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,**
திருநெல்வேலி, கன்னியாகுமரி வட்டம்,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி-2.

(த. ஆர். 4)

## ஒப்பந்தப் புள்ளி

### பாளையங்கோட்டை நகராட்சி

நகராட்சி ஆணையாளர் அவர்களால் அடியிற் குறிப்பிட்ட வேலைக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 12-1-72-ஆம் தேதி மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். இதர விவரங்களை அலுவலக நேரங்களில் நகராட்சிப் பொறியாளர் அவர்களிடம் தெரிந்து கொள்ளலாம்.

வேலை முடிக்க வேண்டிய காலம் இரண்டு மாதம்.

| மதிப்பீடு எண். | வேலையின் விவரம். | மதிப்பீட்டு தொகை. | கட்டுத் தொகை முதலில். | கட்டுத் தொகை பிறகு. |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. |
| 1971 72 | காந்திமார்க்கெட்டில் வடபக்கம் மேல் கடைசியில் உள்ள இரும்பு கேட் உள்ள இடத்தில் இரண்டு கடைகள் கட்ட. | 8,500 | 213 | 212 |

(த.9)

**ஜி. கே. அருணாசலம்,**
ஆணையர் (பொறுப்பு).

## ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு

### பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் : திருவையாற்றில் 1 உதவி ஆய்வாளர், 4 தலைமைக் காவலர்கள் 18 காவலர்கள்ஆகியோருக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.

பார்வை : தமிழரசு தேதி 1-11-1971, 16-11-71-இல் வெளியிட்ட ஒப்பந்த அறிக்கை.

மேற்கண்ட வேலைக்கான ஒப்ப அறிவிப்புகள் பெறும் தேதி 6-1-'72 அன்று மாலை 3.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 5-1-'72 அன்று மாலை 5·00 மணி வரை கிடைக்கும். மற்ற விதிகளில் மாற்றம் ஏதும் இல்லை.

**ரா. வேணுகோபால்,**
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
தஞ்சை வட்டம், தஞ்சாவூர்.

(த.ஆர்.5)

## ஒப்பந்தப் புள்ளி

### நாகர்கோவில் நகராட்சி

நாகர்கோவில் நகராட்சி மகாத்மா காந்தி நூற்றுண்டு நினைவு மருத்துவமனைக்கு மருந்துகள் வழங்குவதற்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நகராட்சி ஆணையர் அல்லது அவரது ஆணை பெற்றவரால் 12–1–1972 மாலை 4 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். மேற்கொண்டு விவரங்களுக்கு ரூ. 1·03 நகராட்சி அலுவலகத்தில் செலுத்தி ஒப்பந்த அட்டவணைப் பெற்றுக் கொள்ளலாம்.

மதிப்புத் தொகை—ரூ. 3,000.
பொறுப்புத் தொகை—ரூ. 100.

நாகர்கோவில், **பி. தங்கவேலு,**
10–12–1971. ஆணையர்.

(த. 1)

## ஏல விளம்பரம்

### திருச்சிராப்பள்ளி நகராட்சி

திருச்சிராப்பள்ளி நகராட்சிக்கு சொந்தமான கிழ் அரண் சாலையில் லூர்துசாமி பிள்ளை பூங்காவுக்குத் தென்புறத்தில் புதிதாக கட்டப்பட்டிருக்கும் 3 கடைகளில் வியாபாரம் செய்து கொள்ளும் குத்தகை உரிமையை 31–3–1973 உள்ள காலத்திற்கு நகராட்சி அலுவலகத்தில் தனித்தனியே, ஆணையரால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 20–12–71-ம் தேதி காலை 11·00 மணிக்கு ஏலம் விடப்பெறும். ஏலக்கட்டுப்பாடும் மற்ற நிபந்தனைகளும் அலுவலக நாட்களில் அலுவலகத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

**தே. கோவிந்தராசன்,**
ஆணையர்.

திருச்சி,
7–12–71.
(த. 2)

## ஒப்பந்தப் புள்ளி

### அரக்கோணம் நகராட்சி

இந் நகராட்சி உபயோகத்திற்குத் தேவையான மின்சார விளக்குகள், உபகரணங்கள்சப்ளை செய்ய மூடி முத்திரையிடப் பட்ட ஒப்பந்த புள்ளிகள் அடியிற் கையொப்பமிட்டவரால் 11–1–72 தேதி மாலை 4·00 மணி வரையில் அரக்கோணம் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே 4·15 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தகாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். மேலும் விவரங்களும், ஒப்பந்தப் புள்ளி நமூனுக்களும் நகராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் ரூ. 1·00 விற்பனை வரி 3½ சதவிகிதம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**க. ரா. குட்டியப்பன்,**
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
அரக்கோணம்
4–12–71.
(த. 3)

## ஒப்பந்தப் புள்ளி

### நாகர்கோவில் நகராட்சி

நகர் மன்றத்திற்குச் சுமார் ரூ. 32,000 மதிப்புள்ள பொது மராமத்து வேலைகளுக்குரிய குடிநீர் விநியோகக் குழாய்கள் அமைப்பதற்கும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12–1–72 மாலை 4 மணி வரை ஆணையரால் பெற்றுக் கொள்ளப்படும். ஏனைய கூடுதல் விவரங்கள் நகர்மன்ற பொறியாளர்அலுவலகத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

**பி. தங்கவேலு,**

நாகர்கோவில்,
9–12–1971. ஆணையர்.
(த. 6)

## ஏல விளம்பரம்

ந.க.எண். 1945/71, பி2.

பொருள் :— பழைய ஆங்கில தட்டெழுத்து இயந்திரத்தை ஏலம் விடுதல்—சம்பந்தமாக.

அம்பத்தூர் நகரியத்திற்குச் சொந்தமான நீண்ட காலம் உபயோகத்திலிருந்து வந்த ஒரு ஆங்கிலத் தட்டெழுத்து இயந்திரம் மாடல் என். J 667632 உள்ளதை 10–1–1972-ஆம் தேதி அன்று அம்பத்தூர் நகரியத்தில் மாலை சுமார் 3·00 மணியளவில் நிருவாக அதிகாரி அவர்களால் பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏலம் கேட்க விரும்புவோர் ரூ. 50 டிபாசிட்டாக முன் பணம் செலுத்திக் கேட்க வேண்டும். இது சம்பந்தமாக மேற்கொண்டு விவரங்கள் அறிய அலுவலக நேரத்தில் நிருவாக அதிகாரியை நேரில் சந்திக்கவும்.

**டி.எம். வெங்கட்டராமன்,**
நிருவாக அதிகாரி.

அம்பத்தூர்,
2–12–1971.
(த. 5)

## ஏல விற்பனை

சேலம் மாவட்ட நில அளவை அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் எம்.எஸ். எக்ஸ். 3649 எண்ணுள்ளதான ஒரு பழுதடைந்த வில்லீஸ் ஜீப் மாவட்ட நில அளவை அலுவலகம் கோட்டை சேலம்-2 என்ற விலாசத்தில் 17–1–1972 காலை 11 மணிக்கு சேலம் மாவட்ட நில அலுவலக அளவை அலுவலக உதவி இயக்குநர் அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனை நிபந்தனைகள் போன்றவை விற்பனையின்போது அறிவிக்கப்படுவதுடன் 1971 நவம்பர் மற்றும் 1971 டிசம்பர் சேலம் ஜில்லா கெஜட்டிலும் பிரசுரிக்கப்படும்.

ஏலம் கேட்க விரும்புவோர் மேற்கண்ட ஜீப் காரை அலுவலக வேலை நாட்களில் காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரை பார்த்துக்கொள்ளலாம். இது சம்பந்தமான விவரங்களை அடியிற் கண்ட அதிகாரியிடம் தெரிந்து கொள்ளலாம்.

**வெ. க. வெங்கடாசலம்,**
உதவி இயக்குநர்,
நில அளவை அலுவலகம்,

சேலம்-1,
31–12–1971.
(த. 10)

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம்), பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவைபோன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண் 17, சர்.பி.டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 12—1—1972 பிற்பகல் 3-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் :—

மேலூர் குடிநீர்த் திட்டம்—450 எம்.எம். (18'') உள் விட்டமுள்ள சிமெண்டு குழாய்கள் (ஆர்.சி.சி. பைப்புகள்) விநியோகிப்பது.

ஒப்பந்த வகை:— மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை ரூ. 3,780,—இத்தொகை கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் மதுரை பொதுச் சுகாதாரம் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு :—6 மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை ரூ. 10·37—(விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் மதுரை பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து 14, இராமமூர்த்தி ரோடு, சின்ன சொக்கிகுளம் என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினை 5—1—1972 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
(பொ.சு. பொ.),
குடிநீர், வடிகால் வாரியம்.

மதுரை-2,
3—12—1971.

(த·7)



வேலையின் பெயர் :—நந்தலாற்றிலிருந்து பிரியும் ஏ.14 இடியார் கால்வாய் 0/0 முதல் 7·520 கி. மீ. வரை நவீனப்படுத்துதல்.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் கடைசியாக பெறும் நாள் 12—1—1972-க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தப் பத்திரங்கள் பெறுவதற்கான மனு 10—1—1972 வரை பெற்றுக்கொள்ளப்படும். மற்ற நிபந்தனைகள் ஏற்கனவே 16—11—1971 அரசு இதழில் அறிவித்திருந்த அன்று வெளியான தமிழரசு இதழில் அறிவித்திருந்த ஒப்பந்த நிபந்தனைகள் மாற்றம் ஏதும் இல்லை.

**தனி மேற்பார்வைப் பொறியாளர்,**
காவிரி வளர்ச்சிப்பணி
வட்டம், தஞ்சாவூர்.

(த·3)

## ஒப்பந்தத் தேதி நீடிப்பு

### பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—கோடியக்கரையில் ஒரு ஆய்வாளர் மாளிகைக் கட்டுதல் பற்றி.

பார்வை—தமிழரசு 15—11—1971-ல் வெளிவந்த ஒப்பந்த அறிவிப்பு.

மேற் கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்டஒப்பந்த அறிவிப்புகள் பெறும் தேதி 20-1-1972 அன்று மாலை 3-00 வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 19—1—1972 அன்று மாலை 5-00 வரை கிடைக்கும். மற்ற விதிகளில் எவ்வித மாறுதலும் இல்லை.

**ஆர். வேணுகோபால்,**
மேற்பார்வைப் பொறியாளர், தஞ்சாவூர்
வட்டம், தஞ்சாவூர்.

(த.4)

## ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை, சேலம் கோட்டம்

*அரசாங்கச் சாலைகளின் 1972—73-ஆம் வருடத்திய வருடாந்திர பராமரிப்பு வேலைகள்.*

தமிழ்நாடு அரசு ஆளுநர் அவர்களுக்காகவும் ஆளுநர் அவர்களின் சார்பாகவும் உத்தரவுப் படியும் சேலம் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறைக் கோட்டப் பொறியாளர் (டிவிஷனல் இஞ்சினியர்) அவர்களால் சேலம் கோட்டத்திற்குட்பட்ட அரசாங்கச் சாலைகளின் 1972—73ஆம்வருடத்திற்கான எல்லாப் பராமரிப்பு வேலைகளுக்கும் அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் சேலம் கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) அவர்களால் அவர்களுடைய அலுவலகத்தில் சேலம்-5. 21—1—1972-ஆம் நாள் பிற்பகல் 3-00 மணி வரை (அலுவலகக் கடிகார மணிப்படி) பெற்றுக் கொள்ளப் படும். மேற்படி ஒப்பந்தங்கள் 21—1—1972 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்கள் நியமனம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் சேலம் நெடுஞ்சாலை கோட்டப் பொறியாளர் அலுவலக மேலாளர் அவர்களிடம் ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 3-11 (விற்பனை வரி உட்பட) வீதம் கட்டணம் செலுத்தி (இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது) அலுவலக நாட்களில் அலுவலக நேரப்படி நாள் 5—1—1972 முதம் 20—1—1972 வரை விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் பத்திரங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தப் புள்ளி தேதியன்று (அதாவது 21—1—1972) கொடுக்கப்படமாட்டாது.

கட்டுத் தொகை இல்லாமல் வரும் ஒப்பந்தங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா. கட்டுத் தொகை கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப) சேலம் அவர்கள் சார்பில் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின் கீழ் அரசாங்கக் கருவூலத்தில் செலுத்திச் செல்லுச் சீட்டை (சலான்) ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். தமிழ்நாடு அரசுக் கடன்பத்திரங்கள் கோட்டப் பொறியாளரின் சார்பில் மாற்றியதும், பேங்க் டிமாண்ட் டிராப்ட்டும், கட்டுத் தொகைக்குப் பெற்றுக்கொள்ளப் படும். பாங்கு காரண்டி முன் வைப்புத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால் ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் மேற்படி பாங்க் காரண்டிக்கு உண்டான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்கவேண்டும். தவறினால் ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தத்துடன் வருமான வரி, விற்பனை வரி, சான்றிதழ் ஆகியவைகளை ஏற்கனவே சமர்ப்பிக்காமலிருந்தால் ஒப்பந்தத்துடன் வைத்து அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பாவிடில் அவர்களுடைய ஒப்பந்தங்கள் அங்கீகரிக்கப்படாமல் இருக்க ஏதுவாகும்.

வேலை விவரங்கள் ஒவ்வொரு வேலைக்குண்டான முன் வைப்புத் தொகை ஆகிய விவரங்கள் அடங்கிய அட்டவணை இவ்வலுவலகத்திலும் அதன் உட் கோட்ட உதவிப் பொறியாளர் அலுவலகங்களிலும், பிரிவு அலுவலகங்களிலும் உள்ள அறிவிப்புப் பலகைகளில் 10—1—1972 லிருந்து விளம்பரப்படுத்தப்படும்.

**ஜே. ர. கொர்னிலியஸ்,**
கோட்டப் பொறியாளர்,
(நெ.கி.ப.), சேலம்-5.

(த.2)

---

## ஒப்பந்தப் புள்ளி

### சிறைத் துறை

1972-73-ஆம் ஆண்டிற்குப் பூந்தமல்லி, சைதாப்பேட்டை, செங்கற்பட்டு மற்றும் மதுராந்தகம் கிளைச் சிறைச்சாலைகளுக்கு உணவுப் பொருள் முதலியன ஒவ்வொரு நாளும், அன்றையத் தேவைக்கேற்ப வழங்குவதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ் கையொப்பமிட்டவரால் 2—2—1972-ஆம் நாள் பகல் மூன்று மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அனுப் [illegible] உணவுப் பொருள்கள் கிளைச் சிறைச்சாலைக்கு வழங்குவதற்கான ''ஒப்பந்தப் புள்ளி'' என்று எழுத வேண்டும். (எந்த கிளைச் சிறைச்சாலைக்குரிய ''ஒப்பந்தப் புள்ளி'' என்பதை இங்குத் தவறாமல் குறிப்பிட வேண்டும்). எக் காரணத்தை முன்னிட்டும் ''ஒப்பந்தப் புள்ளிகள்'' நேரில் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது. 'ஒப்பந்தப் புள்ளிகள்' பதிவு அஞ்சல் மூலம் கீழ் கையொப்பமிட்டவரின் பெயருக்கு அனுப்பப் பட வேண்டும்.

ஒப்பந்தங்கள் 3-3-72-ஆம் நாள் மாலை 4 மணிக்குத் திறக்கப்படும்.

'ஒப்பந்த' நமூனா மற்றும் விவரங்கள் சென்னை மத்திய சிறை அலுவலகத்திலும் குறிப்பிட்ட கிளைச் சிறைச்சாலையிலும் ரூ. 1.05 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இந்தத் தொகை திருப்பியளிக்கப்படமாட்டாது.

**மு. பகவதி முருகன்,**
கண்காணிப்பாளர்,
மத்திய சிறை, சென்னை-3.

(த.24)

---

## ஏல விற்பனை

### பொதுப் பணித்துறை

இத்துறைக்குச் சொந்தமான லாரி எம்.டி.சி. 6493 (ஆஸ்டின் 1951 மாடல்) 28—1—72 அன்று முற்பகல் 11 மணிக்கு தஞ்சை முதலாம் உட்கோட்ட உதவிப் பொறியாளரால் பூதலூர் பிரிவு அலுவலகத்தில் ''எப்படி எங்குள்ளதோ'' அந்நிலையில் பொது ஏலத்தில் விற்கப்படும்.

பூதலூர் பிரிவு அலுவலக வளாகத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் இந்த லாரியைப் பிரிவு அலுவலரின் அனுமதியுடன் பார்வையிடலாம். ஏல விற்பனையை அங்கீகரிக்கவோ, ரத்து செய்யவோ, அல்லது தள்ளிவைக்கவோ பொதுப்பணித்துறைக்குப் பூரண உரிமை உண்டு. இது சம்பந்தமான இதர விவரங்களைத் தஞ்சை முதலாம் உட்கோட்ட உதவிப் பொறியாளரிடமிருந்து பெறலாம்.

**நிருவாகப் பொறியாளர்,**
க.கா. கோட்டம், தஞ்சாவூர்.

(த.27)

## ஒப்பந்தப் புள்ளி

# குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர் வடிகால் வாரியம்) பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண் 17, சர் பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முக வரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற் பார்வைப் பொறியாளர் அவர்களால், 19—1—1972 (புதன் கிழமை) பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன் னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவ ரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

| | |
|---|---|
| வேலையின் பெயர்: | பெரியகுளம் வடிகால் திட்டம்—வடிகால் நீரேற்றிகள் அளித்தல்— நிருமாணித்தல் — சம்பந்தமாக. |
| ஒப்பந்த வகை : | மொத்தத்தொகை. |
| முன்வைப்புத் தொகை : | ரூ. 4,875 (ரூபாய் நான்காயிரத்து எண்ணூற்று எழுபத்தைந்து). |

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச்சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் மதுரை பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை, கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு : ஆறு மாதம்.

| | |
|---|---|
| ஒப்பந்தப் படிவங்களின் விலை. | ரூ. 15·55 (விற்பனை வரி உட்பட) (ரூபாய் பதினைந்தும், ஐம்பத்தைந்து காசும்). |

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் மதுரை பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து 14, கே. இராமமூர்த்தி தெரு, மதுரை-2 என்னும் முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 17—1—1972 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மதுரை-2,
4—12—1971.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம்,
குடிநீர் வடிகால், வாரியம்.

(.த 14)

## விளம்பரம்

# மீஞ்சூர் பேரூராட்சி

சைதைக் கோட்டம்

செங்கை மாவட்டம்

1958-ஆம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டப் பிரிவு 120-ன் படியும் அதையொட்டி விதிக்கப்பட்ட வீட்டு வரி விதிப்பு, வசூல் பற்றிய விதி 6 (4)-ன்படியும் செங்கை மாவட்டம், மீஞ்சூர் பேரூராட்சியில் இருந்து தெரியப்படுத்து கிற விளம்பரம்.

மீஞ்சூர் பேரூராட்சி தனது 29—11—1971, 172-வது தீர் மானத்தில் மீஞ்சூர் பேரூராட்சி எல்லையிலுள்ள வீடுகளுக்கு விதிக்கப்படுகிற வரி விகிதத்தை கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கத் தீர்மானித்திருக்கிறது. கீழே குறிப்பிடுகிற திருத்தி அமைக்கப்படுகிற வரி சம்பந்தமாக ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 15—1—1972-க்கு முன் மீஞ்சூர் பேரூராட்சி நிருவாக அதிகாரிக்குத் தங்களுடைய ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொள்ளலாம். 15—1—1972-க்கு பின் வரும் ஆட்சேபணைகள் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. திருத்தியமைக்கப்படுகிற வரி விகிதம் 1—4—1972 முதல் அமுலுக்கு வரும்.

| ஏற்கெனவே விதிக்கப்பட்டிருக்கும் வரி விகிதம். | 1—4—1972 முதல் விதிக்கப் பட இருக்கும் வரி விகிதம். | காலம். |
|---|---|---|
| வாடகை விகிதத்தில் ஆறுமாத காலத்திற்கு 5 (ஐந்து) சதமானம். | வாடகை விகிதத்தில் ஆறு மாத காலத்திற்கு 10 சதமானம் (பத்து சதமானம்.) | 1—4—1972 முதல் திருத்திய வரி விகிதம் அமுலுக்கு வரும். |

குறிப்பு:—1—4—1972 முதல் வருடத்திற்கு ஒரு தடவை வசூல் செய்து வந்ததை, ஆறு மாத காலத்திற்கு ஒரு தடவையாக ஒரு வருடத்திற்கு இரண்டு தடவை வசூலிக்கப் படும்.

பேரூராட்சி அலுவலகம்,
மீஞ்சூர்,
10—12—1971.

**நிருவாக அதிகாரி,**
பேரூராட்சி மன்றம்,
மீஞ்சூர்.

(த. 8)

## போக்குவரத்துத் துறை, சென்னை-2

தமிழ்நாடு ஆளுநருக்காக, ஆளுநர் சார்பில் தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை, சென்னை-2 அவர்களால் கீழ்க் கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் அண்ணா சாலை, சென்னை-2-ல் உள்ள போக்குவரத்து இல்லத்தில், தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் மாலை 3-00 மணி வரை கீழே ஐந்தாவது காலத்தில் குறிக்கப்பட்டுள்ள தேதியில் பெற்றுக் கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும் வேலை விவரமும். | முடிக்கும் காலம். | முன்வைப் புத் தொகை | ஒப்பந்தத் தேதி. | ஒப்பந்த விதிகளின் விலை (விற்பனை வரி உட் பட). |
|---|---|---|---|---|
| | | ரூ. | | ரூ. காசு. |
| 1. அசோக் நகர் பணி மனையின் உள்ளே மின்சார வசதி அமைத்தல். | ஒரு மாதம். | 200 | 19–1–72 | 5-20 |
| 2. அசோக் நகர் பணி மனையில் பராமரிப்புக் கூடத்திற்கும், சாலை விளக்கிற்கும் மின் வசதி அமைத்தல். | ஒரு மாதம். | 1,600 | 19–1–72 | 20-80 |

ஒப்பந்தம் : மொத்தத் தொகை

ஒப்பந்தங்கள் மேலே குறிப்பிட்ட தேதியில், மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனுக்கள், வரைப்படங்கள் முதலியவற்றை, நிருவாகப் பொறியாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, சென்னை-2 அலுவலகத்தில் மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கு, மேற்குறிப்பிட்ட தொகைகளைக் கட்டி, கீழ்க்கண்ட (2—1—72 லிருந்து 18—1—1972) முடிய தேதிகளில் எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத் தொகைகளை ' நிருவாகப் பொறியாளர் ' தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை, சென்னை-2 அவர்களுக்கு, அரசாங்கக் கருவூலத்தில், ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின் கீழ் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத்தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

சி. சிவானந்தா,
தலைமைப் பொறியாளர்.

(த. 1)

## ஏல விற்பனை

### வேளாண்மைத் துறை

திருவாரூர் வேளாண்மைக் கருவிகள் பணிமனை பொதுக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 17—1—1972 மாலை 3 மணிக்கு நிலம் சமன்படுத்தும் TD 14, TD 9, TD 6, T 6 இயந்திரங்களும் அதன் புதிய உதிரி உறுப்புகளும் (Bulldozer Spare Parts) மற்றும் இயந்திரக் கலப்பையின் உதிரி உறுப்புகளும் (Tractor Spare Parts கலப்பையின் உறுப்புகளும் ( Plough Parts ) பொது ஏலத்தில் விடப்படும்.

மேற்கூறிய உதிரி உறுப்புகளின் அட்டவணையையும், ஏலம் பற்றிய குறிப்புரைகளும் மேற்படி அலுவலகத்தில் 1—1—1972 முதல் 13—1—1972 வரை ரூபா. 1·04 (ரூபா ஒன்றும் 4 காசு மட்டும்) ஐ காசோலை மூலமாகவோ, அல்லது ' டிமாண்ட் டிராப்ட் ' மூலமாகவோ அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். (இந்த ரூபா திருப்பிப் பெற இயலாது) மேற்கூறிய இணை உறுப்புகளை எல்லா அலுவலக வேலை நேரத்திலும் பார்வையிடலாம்.

அரசின் நலன் கருதி, ஏலத்தை ரத்து செய்யவோ, ஒத்திவைக்கவோ, பொதுக் கண்காணிப்பாளருக்கு உரிமை உண்டு.

ஆர். குப்புராஜ்,
பொதுக் கண்காணிப்பாளர்,
வேளாண்மைக் கருவிகள் தொழிற் கூடம்,
திருவாரூர்.

(த.5)

## பொள்ளாச்சி நகராட்சி

கீழ்க்காணும் வேலைகளுக்கு ஒவ்வொரு வேலைக்கும் தனித் தனி உறைகளில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையர் அவர்களால் அவரது அலுவலகத்தில் 12–1–1972 தேதி மாலை 4-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். அவை அன்றே மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் வேண்டுவோர் ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 5 விற்பனை வரி ரூபாய் 3½ சதவிகிதமும் நகராட்சிக் கருவூலத்தில் செலுத்திச் செலுத்துச்சீட்டுடன் நகராட்சி மராமத்துப் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்து 11–1–1972 வரை பெற்றுக் கொள்ளலாம். மேலும் விவரங்கட்கு நகராட்சி மராமத்துப் பொறியர் அலுவலகத்தில் வேலை நேரங்களில் விசாரிக்கவும்.

| வரிசை எண். | கட்டின் நடப்பு எண். | வேலையின் விவரம். | தொகை. மதிப்பீடு ரூ. | முன் வைப்புத் தொகை. ரூ. | வேலையை முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|---|---|
| 1 | இ1/18531/71. | காந்தி சந்தையில் ‘ எ1 ’ பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல். | 8,085 | 202 | இரண்டு மாதம். |
| 2 | ஷெ | காந்தி சந்தையில் ‘எ2 ’ பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல். | 9,900 | 248 | ,, |
| 3 | ஷெ | காந்தி சந்தையில் ‘பி1’ பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல். | 9,273 | 232 | ,, |
| 4 | ஷெ | காந்தி சந்தையில் ‘பி2’ பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல். | 9,273 | 232 | ,, |
| 5 | ஷெ | காந்தி சந்தையில் ‘சி1’ பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல். | 5,610 | 140 | ஒரு மாதம். |
| 6 | ஷெ | காந்தி சந்தையில் ‘சி2’ பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல். | 5,610 | 140 | ,, |
| 7 | ஷெ | காந்தி சந்தையில் ‘டி’ பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல். | 7,029 | 175 | ,, |
| 8 | ஷெ | காந்தி சந்தையில் ‘ இ1 ’ பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல். | 6,435 | 160 | ,, |
| 9 | ஷெ | காந்தி சந்தையில் ‘ இ2 ’ பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல். | 6,435 | 160 | ,, |
| 10 | ஷெ | காந்தி சந்தையில் ‘ எப்1 ’ பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல். | 6,105 | 153 | ,, |
| 11 | ஷெ | காந்தி சந்தையில் ‘ எப்2 ’ பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல். | 6,105 | 153 | ,, |
| 12 | ஷெ | காந்தி சந்தையில் ‘ ஜி1 ’ பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல். | 7,920 | 198 | இரண்டு மாதம். |
| 13 | ஷெ | காந்தி சந்தையில் ‘ ஜி2 ’ பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல். | 7,920 | 198 | ,, |

| வரிசை எண். | கட்டின் நடப்பு எண். | வேலையின் விவரம். | மதிப்பீடு தொகை. | முன் வைப்புத் தொகை. | வேலையை முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. | |
| 14 | இ1/18531/71 | காந்தி சந்தையில் மாட்டிறைச்சிக் கடைகளைச் சுற்றிலும் உள்ள இடத்திற்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல். | 11,507 | 288 | இரண்டு மாதம். |
| 15 | இ1/14382/71 | செல்லக்குமாரக் கவுண்டர் வீதி கந்தன் செட்டி வீதி, அய்யாவு செட்டி வீதி, ரயில்வே லயன் சந்து ஆகியவற்றில் சாக்கடை மராமத்து செய்தல் மற்றும் ரயில்வே சந்துக்கு வடபுற ரோடுக்குத் தார் தளம் போடுதல். | 16,335 | 404 | மூன்று மாதம். |
| 16 | இ1/18050/71. | உடுமலை ரோடு நகரமன்ற குறைந்த வருவாய் ஊழியர் குடியிருப்பில் 42 வீடுகளுக்கு மராமத்து செய்தல். | 11,608 | 290 | இரண்டு மாதம். |
| 17 | இ1/16263/71. | நகராட்சி தினசரிக் காய்கறிச் சந்தையில் புதிய லேயவுட் பிரகாரம் பாதைகளுக்கு சிமென்ட் காங்கிரீட் தளம் அமைத்தல். | 7,304 | 183 | ,, |
| 18 | இ1/18069/71. | பாலகோலபுரம் நடுநிலைப் பள்ளி வகுப்பறைகளுக்கு காங்கிரிட் தளம் போடுதல். | 7,403 | 185 | ,, |

பொள்ளாச்சி,
14–12–1971.

**பி. கே. முகம்மது அலி,**
ஆணையர்,

(த.19)

## ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு

### பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்:—வடார்க்காடு மாவட்டம், செங்கத்தில் அரசினர் மருத்துவ மனைக் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி 29–1–1972 வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. 29–1–1972 மாலை 3-00 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதே நாள் 3-15 மணிக்கு அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 12–1–1972 முதல் 28–1–1972 வரை அலுவலக நேரங்களில் விற்கப்படும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதுமில்லை.

**க. சு. இராமசுவாமி,**
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்டம், வேலூர் 1.

(த.12.)

## ஒப்பந்தப் புள்ளி

### திருப்பூர் நகராட்சி

நகராட்சி சிப்பந்திகள் சீருடைக்கான கீழ்க்கண்ட உருப்படிகள் தைத்துக் கொடுக்க மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12–1–72-ஆம் தேதி மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் அல்லது அவர் அங்கீகாரம் பெற்றவர்களால் பெற்றுக் கொள்ளப்படும்.

புஷ் கோட்டுகள், ஷர்ட்டுகள், முழுக்கால் சட்டைகள், அரைக்கால் சட்டைகள். மொத்த உருப்படி உத்தேசமாக 1050.

மற்ற விவரங்களைச் சுகாதாரப் பிரிவில் அலுவலக நாட்களில் காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரை தெரிந்து கொள்ளலாம்.

**ஆர். சீனிவாசன்,**
ஆணையர்.

(த.21)

## குடிநீர் வடிகால் வாரியம்

### எண் 19029/71 டி-1

நாள் : 6—12—1971

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம், வீராணம் திட்ட வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் பொதுப்பணித் துறை உரிய பிரிவில் பதிவு செய்துகொண்டுள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து உரிய வடிவத்தில் 17–1–1972 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. வேலையின் பெயர் .. சென்னை கூவம் ஆறு காலேஜ் பாலத்துக்கும் ஆண்ட்ரூஸ் பாலத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் ரிவெட்மெண்ட் வேலைகளுக்காக 'Manufacturing and supplying mechanically viberated precast Cement Concrete slabs' வழங்குதல்.
2. ஒப்பந்த வடிவம் .. கே-2.
3. கட்டுத் தொகை .. ரூ. 2,500.
4. வேலையை முடிக்க வேண்டிய காலம். ..
5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை. ரூபாய் 10.
6. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும் காலம். 20–12–1971-லிருந்து 12–1–1972 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிருவாகப் பொறியாளர், கூவம் அபிவிருத்திக் கோட்டம், சென்னை-5 அவர்கள் கணக்கில் P. W. III O. R. என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலத்தில் கட்டிப் பெறலாம். இதற்கான விற்பனை வரி, அமலில் உள்ள விகிதத்தில் XII b. Sales tax miscellaneous என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். தனித் தனி சலான்களில் ஒப்பந்தப் பத்திரங்கள் பெறுவதற்கும், இதர விவரங்கள் பெறுவதற்கும் ஆன விவரங்களைக் கீழ்க்கண்டவரின் அலுவலகத்திலிருந்து பெறலாம்.

மேற்பார்வைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வீராணம் திட்ட வட்டம், சென்னை-5.

எந்தவிதக் காரணமும் கூறாமல், எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும், பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ நிராகரித்துவிட ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்கும் அதிகாரம் பெற்ற அலுவலர் அவர்களுக்கு—மேற்பார்வைப் பொறியாளர் (ம.ந.வா.பொ.), அவர்களுக்கு உரிமை உண்டு.

**மேற்பார்வைப் பொறியாளர்** (ம.ந.வா.பொ.)

(த.18)

---

## சங்கரன்கோயில் நகராட்சி

கீழ்க்கண்ட சாலைகளுக்குத் தார் பூசும் வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் சங்கரன்கோயில் நகராட்சி ஆணையர் அவர்களால் 12–1–1972-ஆம் தேதி புதன்கிழமை மாலை 4-00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். வேலைகளுக்கு எதிராகக் குறிப்பிட்டத் தொகையை ஒப்பந்தப் புள்ளியுடன் முதல் டெபாசிட்டாகக் கட்ட வேண்டும். பாக்கியுள்ள அதே டெபாசிட் தொகையை ஒப்பந்தப் புள்ளி ஒப்புக்கொண்ட ஒரு வார காலத்தில் கட்ட வேண்டும். ஒப்பந்தப் புள்ளி வடிவங்களும், விவரங்களும் நகராட்சி அலுவலகத்தில் ரூ. 2.56 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். மற்ற விவரங்களை அலுவலக வேலை நேரத்தில் தெரிந்துகொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளி டெபாசிட் கட்டவும், படிவங்கள் வாங்கவும் கடைசித் தேதி 10–1–1972 ஆகும்.

| வேலை விவரம். | மதிப்பீடு. | கட்டுத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1. திருமஞ்சணக்கிணற்றுத் தெருவிலிருந்து சத்திரம் வடக்குத் தெரு வரை நாடார் தெரு வழியாக தூசு படியாத ரோடு போட. | 9,200 | 230 |
| 2. கழுகுமலை ரோட்டிலிருந்து குழுவர் தெரு வரை திருநீலகண்ட ஊரணி மேலக்கரை வழியாக. | 17,000 | 425 |

13–12–1971.

(த.20)

**ஜானகிராமன்,**
ஆணையர்.

## ஒப்பந்தப் புள்ளி

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

வேலூர் கோட்டம்

தமிழ்நாடு அரசு ஆளுநர்க்காகவும், அவர் சார்பிலும், வேலூர் நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை கோட்டப் பொறியாளர், (நெ.கி.ப.) அவர்களால் 1972–73-ஆம் வருட சாலைகளின் பராமரிப்பு வேலைக்கான முத்திரையிடப்பட்ட சதவிகித ஒப்பந்தப் புள்ளிகள் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் 21–1–1972-ஆம் தேதி (அலுவலக கடிகாரப்படி) மாலை 3 மணி வரையில் பெற்றுக் கொள்ளப் படும். அன்று மாலையே 3-15 மணிக்கு கோட்டப் பொறியாளர் அவர்களால் ஒப்பந்தக்காரர் அல்லது அவருடைய அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப் படும்.

ஒப்பந்தப் புள்ளி வடிவங்களை மேற்படியார் அலுவலக மேலாளரிடமிருந்து விண்ணப்பித்து ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியே ரூ. 6.21 வீதம் செலுத்தி (சலான் மூலமாக) 10-1-72 ஆம்தேதி முதல் 19-1-72 தேதி வரையிலும் எல்லா அலுவலக நாட்களில் காலை 10-30 மணி முதல் மாலை 5 மணி வரையில் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களுக்கான தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது.

வேலையின் விவரங்கள் ஒவ்வொரு வேலைக்கும் கட்டுத் தொகை போன்ற விவரங்களைக் கோட்டப் பொறியாளர் (நெ. கி.ப.) வேலூர் மற்றும் உதவிப் பொறியாளர் (நெ.கி.ப.), பிரிவு அலுவலர், (நெ.) அலுவலகங்களில் விளம்பரப் பலகையில் அறிவிக்கப்படும்.

கட்டுத் தொகையைக் ''கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.), வேலூர்'' ''ரெவின்யூ டெபாசிட்'' கணக்கு என்ற தலைப்பின் கீழ் அரசாங்கக் கருவூலங்களில் அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் செலுத்தி அந்தச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும். அப்படி இணைக்கப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**ஆ. அப்பாசாமி,**
கோட்டப் பொறியாளர்,
(நெ.கி.ப.), வேலூர், வ.ஆ.

(த 13)

## ஏலம்

## கோவை நகராட்சி

கோவை நகராட்சிக்குச் சொந்தமான ஆர்.எஸ். புரம் சாஸ்திரி மைதானத்தில் 1–3–1972 முதல் தொடர்ச்சியாக 45 நாட்களுக்கு பொருட்காட்சி நடத்தும் உரிமையை நகராட்சி அலுவலகத்தில் 19–1–72-ஆம் தேதி காலை 11-00 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஏல நிபந்தனைகள் அடங்கிய பட்டியலுக்கு ரூ. 2 நகராட்சிக் கருவூலத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆணையர்.**

(த 15)

## ஏல விற்பனை

### வனத்துறை

மதுரை தெற்கு வனக்கோட்டம், மதுரை-20.

மதுரை தெற்கு வனக்கோட்டம் 1972–73-ஆம் வருடத்திய விறகு கப்புகளும், அரைவெட்டுக் கப்புகளும், மதுரை தெற்கு வனக் கோட்ட அலுவலகத்தில் 7–2–72 காலை 10 மணிக்கும், 8–2–72-ல் காலை 10-30 மணிக்கும் முறையே பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

மேல்விவரங்களுக்கு இவ்வலுவலகத்திற்கு அல்லது சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலருக்கு விண்ணப்பம் செய்யவும்.

**இரா. செல்லையா,**
மாவட்ட வன அலுவலர்,
மதுரை தெற்குக் கோட்டம்.

மதுரை-20,
7–12–1971
(த.16)

## வேலை வாய்ப்பு

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

தமிழ்நாடு தொழில்கள் சபார்டினேட் சர்வீஸில் இரண்டு பட்டுத் தொழில் ஆய்வாளர் நியமனத்திற்கான மனுக்கள் 25—1—1972 மாலை 5-00 மணிக்கு வரவேற்கப்படுகின்றன.

சம்பளம்:—

ரூ. 325—15—475—20—575—25—650 மாதத்திற்கு.

வயது:—

1–7–1972-ல் 28 வயதிற்குக் குறைவாக.

தகுதி:—

(1) பி.ஏ. அல்லது பி.எஸ்ஸி. அல்லது பி.எஸ்ஸி. (விவசாயப் பட்டம்).

(2) பட்டுத் தொழிலில் 6 மாதத்திற்குக் குறையாத அனுபவப் பயிற்சி.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதியினர், பிற்பட்ட வகுப்பினர் விசயத்தில் வயது வரம்பு கிடையாது. தங்கக் கட்டுப்பாடுச் சட்டத்தினல் பாதிக்கப்பட்ட பொற்கொல்லரின் மகன்கள், மணமாகாத மகள்கள் 1–1–1963-ல் அல்லது அதற்குப் பிறகு முழு நேர அடிப் படையில் அண்டர் ஆபீஸர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர்இன்ஸ்ட்ரக்டராகப் பணிபுரிந்த முன்னுள் தேசிய மாணவர்ப் படையைச் சேர்ந்தவராக இருந்தால் வயது விசயத்தில் சலுகை உண்டு. இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1–4–72 அன்று 40 வயதிற்குக் குறைவானவர்கள் 1–1–64-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் விசயத்திலும், இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப் பட்டவர்கள் விசயத்திலும் வயது வரம்பு உட்படத் தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு வடிவங்களையும், இதர விவரங்களையும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம்எழுதி, 23 செ.மீ. உள்ள தன் முகவரி எழுதிய 0.30 காசு நூல் அஞ்சல் வில்லை ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

(த.9)

## பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்.—சென்னை இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனையில் அமைக்க இருக்கும் புற்று நோய்க் கட்டடத்திற்கு பைல் (pile) கடைக்கால் அமைக்க;—

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காக மேற்பார்வைப் பொறியாளர் பொதுப் பணித்துறை, சென்னை-செங்கற்பட்டு வட்டம் சென்னை-5 அவர்களால் சென்னை-5 சேப்பாக்கத்திலுள்ள அவர்கள் அலுவலகத்தில் 12—1—1972 பிற்பகல் 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை-செங்கற்பட்டு வட்டம், பொதுப்பணித் துறை, சென்னை-5 அவர்களால் அதே நாளில் பிற்பகல் 3-15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம் .. .. மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை .. ரூ. 5,250.
3. வேலை முடிக்க வேண்டிய காலம் ... ஆறு மாதங்கள்.
4. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை .. ரூபாய் 30 (ரூபாய் முப்பது மட்டும்) கருவூலத்திலோ (அல்லது) இந்திய ரிசர்வ் பாங்கியிலோ 'P.W. remittances III Other remittances" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் கட்டடக் கோட்டம் (1) சேப்பாக்கம், சென்னை-5 அவர்கள் கணக்கில் செலுத்தப்படல் வேண்டும்.
5. விற்பனை வரி.. .. .. ரூபாய் 1.05 (ரூபாய் ஒன்றும் ஐந்து காசுகள் மட்டும்) அதே சலானில் குறித்துக் கருவூலத்திலோ இந்திய ரிசர்வ் பாங்கியிலோ '' XII '' விற்பனை வரி 'B' மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரவினம் என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்.
6. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் அலுவலக நேரத்தில் விற்பனையாகும் தேதி. 3—1—1972 முதல் 11—1—1972 முடிய
7. ஒப்பந்தப் புள்ளி தேதி .. 12—1—1972 (பிற்பகல் 3-00 மணி வரை).

மேற்கண்ட விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொதுப் பணித்துறை, சென்னை-செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை 5-ல் அலுவலக நாட்களில் வேலை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். எந்த ஒப்பந்தப் புள்ளிகளையும் (அல்லது) எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எவ்விதக்காரணமும் கூறுமல் நிராகரித்துவிட மேற்பார்வைப் பொறியாளர், (பொ.ப.து.,) சென்னை-செங்கற்பட்டு வட்டம் சென்னை-5 அவர்களுக்கு உரிமையுண்டு.

**பி. கே. கந்தசாமி,**
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை-செங்கற்பட்டு வட்டம்.

(த. 26)

## பட்டுக்கோட்டை நகராட்சி

பட்டுக்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான லாரி, டிராக்டர் முதலானவைகளுக்குத் தேவையான கீழ்க்கண்ட அளவுகள் உள்ள டயர்கள் தேவைப்படுகின்றன. இவைகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் 10—1—1972 மாலை 4 மணி வரை கீழே கையொப்பமிட்டிருக்கும் நகராட்சி ஆணையர் அவர்களால் வாங்கப்படும்.

1. லாரி டயர்கள்—8 × 25—20 .. .. இரண்டு.
2. லாரி ட்யூப்புகள்—8 × 25—20 .. .. இரண்டு.
3. டிராக்டர் பின் சக்கர டயர்கள்—11—36. இரண்டு.
4. டிராக்டர் பின் சக்கர ட்யூப்புகள்—11—36. இரண்டு.
5. டிராக்டர் முன் சக்கர டயர்—600—19 இரண்டு.
6. டிராக்டர் முன் சக்கர ட்யூப்புகள்—600—19. இரண்டு.

ஒப்பந்தப் புள்ளி கொடுக்க விரும்புபவர்கள் ஒவ்வொரு இனத்திற்கும் ரூ. 50 காப்புத் தொகை செலுத்தி, ஒப்பந்தப் புள்ளியுடன் ரசீதை இணைத்து அனுப்ப வேண்டும். இது சம்பந்தமாக மற்ற எல்லா விவரங்களையும் அலுவல் நேரத்தில் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள் வேண்டுவோருக்கு வழங்கப்படும்.

**கே. வெங்கடேஸ்வரன்,**
ஆணையர்.

(த.22)

## ஒப்பந்தப் புள்ளி

### இராஜபாளையம் நகராட்சி

நகராட்சி சுகாதாரப் பிரிவிலுள்ள எம்.டி. ஆர். நிர் 5712 ஹிந்துஸ்தான் டிராக்டருக்குத் தேவையான புதிய ஸ்பேர் சாமான்கள் மாற்றி ரிப்பேர் செய்து பெயிண்ட் அடித்துக் கொடுக்கவும், எம்.டி.ஆர் 5713 டேங்கருக்கு ஏற்பட்ட சில்லரை ரிப்பேர்கள் செய்து பெயிண்ட் அடித்துக் கொடுக்கவும் எம்.டி.ஆர் 5714 டிரெய்லருக்குச் சில்லரை ரிப்பேர்கள் செய்து பாடியில் தகடு அடித்துப் பெயிண்ட் அடித்துக் கொடுக்கவும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 19–1–1972-ஆம் தேதி மாலை 3-30 மணிக்கும் அதற்கு முன்பும் நகராட்சி ஆணையர் அவர்களாலும் அவர்கள் அதிகாரம் பெற்றவர்களாலும் பெறப்படும். ஸ்பேர் சாமான்கள் சப்ளை செய்வதற்கும், ரிப்பேர் வேலைகளுக்கும் பெயிண்ட் அடிப்பதற்கும் ஆகும் கூலிக்குத்தனித்தனியேஒப்பந்தங்கள் கொடுக்கலாம். ஒப்பந்தம் அனுப்பும் உறைமேல் ''டிராக்டருக்குப் பழுது பார்க்கும் வேலைக்கு'' என்ற விவரம் குறிப்பிடவேண்டும். மேலும் அத்துடன் ரூ. 200 (ரூபாய் இருநூறு மட்டும்) கட்டுத் தொகை நகராட்சி கஜானவில் கட்டி அதன் அத்தாட்சியுடன் அனுப்பவேண்டும். ஒப்பந்தங்கள் 19—1—1972-ஆம் தேதியில் மாலை 4–00 மணிக்கு ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறந்து அறிவிக்கப்படும். நகராட்சி ஆணையர் ஒப்பந்தங்களைக் காரணமன்னியில் ஒப்புக்கொள்ளவோ நிராகரிக்கவோ செய்யலாம். வண்டிகளுக்குச் செய்ய வேண்டிய வேலை விவரங்களையோ தேவையான சாமான்கள் விவரங்களையோ நகரசபை அலுவலக நேரத்தில் நேரில் தெரிந்து கொள்ளலாம்.

**டி. எஸ். சுப்பையா, பி. ஏ.**

ஆணையர்,
இராஜபாளையம் நகராட்சி.

16–12–1971.

(த. 45)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள்கீழ்க் குறிப்பிட்டவேலைக்காக மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை திருநெல்வேலி, கன்னியாகுமரி வட்டம்; பாளையங்கோட்டை, அவர்களால் 28–1–1972 மாலை 3–00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்: ஆத்தங்கரை கிராமத்தருகில் வைப்பாறு குறுக்கே அணைக்கட்டு ஒன்று கட்டுதல்.

ஒப்பந்த வடிவம்: மொத்தத் தொகை.

கட்டுத் தொகை: ரூ. 17,500.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை ரூ. 20.

விற்பனை வரி: ரூ. 0.70

வேலை முடிக்கவேண்டியகாலம். 18 மாதங்கள்.

2. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது) எந்தக், கருவூலத்திலாவது "P. W. III O. R. receipt" என்ற தலைப்பில், மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, தூத்துக்குடிக் கோட்டம், தூத்துக்குடி அவர் தம் கணக்கில் விற்பனை வரி'' XII. S. T. (b) under the State Sales-tax Act, General Sales-Tax" என்ற தலைப்பிலும் செலுத்த வேண்டும்.

3. ஒப்பந்தப் புள்ளிப் படிவம், மற்ற விவரங்களை, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, திருநெல்வேலி, கன்னியாகுமரி வட்டம், திருநெல்வேலி-2 அவர்தம் அலுவலகத்தில் 10–1–1972 முதல் 23–1–1972 வரை எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில், ஒப்பந்தப் புள்ளிப் பத்திர விலை, விற்பனை வரி செலுத்தப்பட்ட செல்லுச் சீட்டை மேலாளர் அவர்களிடம் தபால் மூலமாகவோ நேராகவோ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மனுக்கள் பெறப்படும் தேதிக்குப் பின்னர் வரும் மனுக்கள் கவனிக்கப்பட மாட்டாது.

4. மற்ற விவரங்கள், இந்த அலுவலகத்தில், எல்லா வேலை நாட்களிலும் அலுவல் நேரங்களில் பெறலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**

பொதுப்பணித்துறை.
திருநெல்வேலி,
கன்னியாகுமரி வட்டம்.

(த. 41)

## ஒப்பந்தப் புள்ளி

### மதுரை மருத்துவக் கல்லூரி

மதுரை மருத்துவக் கல்லூரி எரிவாயு உற்பத்திப் பகுதிக்கு விறகு கொடுப்பதற்கான ஒப்பந்தப் புள்ளி, கல்லூரி முதல்வரால் 20—1—1972 தேதி பிற்பகல் 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். இதன் விவரம் :

நன்ருகக் காய்ந்து, உடைக்கப்பட்டு 18 அங்குலம் நீளத்திற்கு வெட்டப்பட்டு எரிவாயு உற்பத்திக் கருவிக்கு உதவும் வகையில் பலஜாதி காட்டு விறகு கொடுத்தல்.

ஒப்பந்தப் புள்ளிக் காலம்:— 1—4—1972 முதல் 31–3–1973 வரை.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை ரூ. 5-00. விற்பனை வரி ரூ. 0·18. மற்ற விவரங்கள் முதல்வர் அலுவலகத்தில் எல்லா வேலை நாட்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**டாக்டர் எஸ். ஏ. கபீர்,**

முதல்வர்.

(த.56)

### திருத்தம்

'தமிழரசு' 1—12—1971 இதழின் 76-ஆம் பக்கத்தில் வெளிவந்துள்ள 'தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை ஒப்பந்தப் புள்ளி' விளம்பரத்தில் விற்பனை வரி மூன்று சதவிகிதம் என்றிருப்பதற்குப் பதிலாக $3\frac{1}{2}$ சதவிகிதம் என்றும், 'விற்பனை வரி....XXII' என்றிருப்பதற்குப் பதிலாக 'விற்பனை வரி..XII' என்றும் திருத்தி வாசித்துக் கொள்ளவும்.

## குடிநீர் வடிகால் வாரியம்

### வீராணம் திட்டம்

வேலையின் பெயர்:—அழுத்தப்பட்ட காங்ரீட் குழாய்களைத் தென் ஆர்க்காட்டிலுள்ள வெல்லாறு மேலாகத் தூக்கிப்பிடிக்க அழுத்தப்பட்ட காங்ரீட்டினால் ஒரு பாலம் கட்டுதல்.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், மேலே கூறப்பட்டுள்ள வேலைக்காக, பொதுப் பணித்துறை அல்லது மற்ற அரசுத்துறைகள் பெரிய நிறுவனங்களில்பதிவுசெய்து கொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்ததாரர்களிடமிருந்து, தனித்தலைமைப் பொறியாளர், வீராணம் குடிநீர் வழங்கு திட்டம் மற்றும் கூவம் மேம்பாட்டுத் திட்டம், வீராணம் சேப்பாக்கம், சென்னை-5 அவர்தம் அலுவலகத்தில், 19—1—1972 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வர வேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்—மொத்தத்தொகை.
2. கட்டுத் தொகை—ரூ. 10,000.
3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 10; விற்பனை வரி ரூ. 0·37.
4. வேலை முடிக்க வேண்டிய காலம்—10 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை ''III. Suspense–G. Remittance–(iii)Other Remittances–TWAD Board Funds'' '' என்ற தலைப்பில் அரசுக் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவிலோ, மேற்பார்வைப் பொறியாளர், வீராணம் திட்டக் கோட்டம், வடக்கு அவர்தம் கணக்கில் செலுத்த வேண்டும். ஒப்பந்தப் புள்ளிப் படிவம், தனித் தலைமைப் பொறியாளர், வீராணம் குடிநீர் வழங்கு திட்டம், சென்னை-5, அவர்தம் அலுவலகத்தில் 3–1–1972 முதல் 17–1–1972 வரை தொகை செலுத்திய செல்லுச் சீட்டைக் கொடுத்துப் பெறலாம்.

**தனித் தலைமைப் பொறியாளர்,**
குடிநீர் வடிகால் வாரியம்.

(த. 37)

## அரசினர் பொது மருத்துவ மனை

1972–73-ஆம் ஆண்டுக்காகக் கீழ்க்கண்டவைகளுக்கான ஒப்பந்தம் குறித்து, டீன், அரசினர் பொது மருத்துவமனை, சென்னை-3, அவர்களால் 1972 ஜனவரி 3-ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 2 மணி வரை மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. மருத்துவமனையின் 'கேஸ்' இயந்திரத்தில் (Coal tar குவியல்களை அப்புறப்படுத்தல்.
2. கயிறு, பஞ்சு மெத்தைகள், தலையணைகள் செய்தல்.
3. தங்காத நோயாளிகள் (அவுட் பேஷன்ட்) பிரிவின் சைக்கிள் ஸ்டாண்டு குத்தகை.

ஒப்பந்த நிபந்தனைகள், பத்திரங்கள் படிவங்கள் முதலியவைகளைப் பெற, இந்திய ரிசர்வ் பாங்கியிலோ, இந்திய ஸ்டேட் பாங்கு கிளையிலோ அல்லது அரசாங்கக் கருவூலத்திலோ ''XXIII Medical II Director of Medical Education J miscellaneous'' என்ற தலைப்பில் ரூ. 5 செலுத்திச் சலானை உடன் வைத்து டீன் அவர்களின் அலுவலகத்துக்கு மனுச்செய்து பெறலாம். எக்காரணம் கொண்டும் இத்தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

அரசினர் பொது மருத்துவமனை,
சென்னை-3,
15–12–1971.

**எம். நடராஜன்,**
டீன்.

(த. 42)

## பழைய சாக்குகள் விற்பனை

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட இடங்களிலுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான பழைய சாக்குகள் விற்பனை செய்ய ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறைகளில், மாவட்டவருவாய்த் துறை அலுவலர், தஞ்சாவூர் என்ற விலாசமிட்டு 8–2–1972 பகல் 1-00 முடிய வரவேற்கப்படுகிறது. அவைகள் அதே நாளில் மாலை 3-00 மணிக்கு திறக்கப்படும். ஒப்பந்த விதி முறைகள், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் மற்றும் இம்மாவட்டத்திலுள்ள தாலுகா விநியோக அலுவலர் அலுவலகங்களிலும் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

அட்டவணை.

| | | |
|---|---|---|
| 1. | கோபால் செட்டியார் ரைஸ்மில், சாக்கோட்டை | 3,770 |
| 2. | கோபால் செட்டியார் ரைஸ்மில், பேரளம். | 22,750 |
| 3. | கோபால் செட்டியார் ரைஸ்மில் மருங்கூர். | 6,200 |
| 4. | மத்திய சேமிப்புக் கிடங்கு, தஞ்சாவூர் | 3,500 |
| 5. | தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு, தஞ்சாவூர். | 1,492 |
| 6. | தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு, மாயூரம். | 5,529 |

**மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்,**
தஞ்சாவூர்.

(த. 25)

## ஏல விற்பனை

## கால்நடை பராமரிப்புத் துறை

கீழ்க்கண்ட விவரப்படி அபிசேகப்படியிலுள்ள 17 மாடுகள் திருநெல்வேலி மாவட்டக் கால்நடைப் பண்ணையில் 10—1—1972 காலை 10-00 மணியளவில் பகிரங்கமாக ஏலம் விடப்படும். தேவைப்பட்டால் மறு நாளும் தொடர்ந்து ஏலம் விடப்படும். ஏலம் கேட்க விரும்புவோர் ரூ. 50 முன் பணமாகக் கட்ட வேண்டும். கால்நடைகளைப் பண்ணை அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

| | | |
|---|---|---|
| 1. | முர்ரா எருமை | 1 |
| 2. | முர்ரா எருமைக் கிடாரி. | 2 |
| 3. | கிர் காளைகள் | 2 |
| 4. | கிர் காளைக் கன்று. | 2 |
| 5. | முர்ரா காளை .. | 3 |
| 6. | வேலை மாடுகள் .. | 6 |
| 7. | முர்ரா காளைக்கன்று | 1 |
| | | 17 |

**கண்காணிப்பாளர்,**

மாவட்டக் கால்நடைப் பண்ணை, திருநெல்வேலி.

(த-54)

## ஒப்பந்தப் புள்ளி

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை

செங்கற்பட்டு தெற்குக்கோட்டம் செங்கற்பட்டு.

1972—73-ஆம் வருடாந்திர சாலை பராமரிப்பு வேலைக்கான ஒப்பந்த அறிவிப்பு.

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை), செங்கற்பட்டு தெற்குக் கோட்டம், செங்கற்பட்டு அவர்களால் 1972—73-ஆம் ஆண்டு அரசாங்க சாலைகள் பராமரிப்பு வேலைகளுக்கு மூடி முத்திரையிட்ட சதவிகித ஒப்பந்தப் புள்ளிகள், எண் 12/13, வரதாரெட்டித் தெரு, வேதாசலம் நகரில் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 19—1—1972-ஆம் தேதி (அலுவலகக் கடிகாரப்படி) பிற்பகல் 2-00 மணி (இரண்டு மணி) வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் அன்று மாலை 2-05 மணிக்கு (இரண்டு மணி ஐந்து நிமிடம்) ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்கள் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனுக்கள் முதலியன மேற்படியார் அலுவலக மேலாளரிடமிருந்து ஒவ்வொரு வேலைக்குமான ஒப்பந்தப் பத்திரங்களுக்கு ரூ. 3·11 (ரூபாய் மூன்றும் காசு பதினொன்று மட்டும்) விற்பனை வரி உட்பட செலுத்தி (இத் தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது) 10—1—1972-ஆம் தேதி முதல் 18—1—1972-ஆம் தேதி வரை அலுவலக நேரங்களில் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

முன் வைப்புத் தொகையை செங்கற்பட்டு கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) அவர்களின் பெயருக்கு "வருவாய் வைப்புத் தொகை" என்னும் தலைப்பில் இக்கோட்ட எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். செல்லுச் சீட்டு இன்றி வரும் ஒப்பந்தப் பத்திரங்கள் கண்டிப்பாகத் தள்ளுபடி செய்யப்படும்.

ஒவ்வொரு வேலைக்கும் உண்டான வேலை விவரங்கள் வைப்புத் தொகை விவரங்கள் அடங்கிய அட்டவணை இக்கோட்ட அலுவலகத்திலும் இதன் உட்கோட்ட உதவிப் பொறியாளர் (நெடுஞ்சாலை) அலுவலகங்களிலும் உள்ள அறிவிப்புப் பலகைகளில் 10—1—1972 லிருந்து விளம்பரம் செய்யப்படும்.

**அ. வெங்கட்ட ரங்கராஜு,**

கோட்டப் பொறியாளர் (நெ.கி.பொ.ப.), செங்கற்பட்டுதெற்குக்கோட்டம்,

18—12—1971

(த.55)

## ஒப்பந்தப் புள்ளி

கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) சைதாப்பேட்டை, சென்னை-15

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் சோதனை செய்யப்பட்ட பல அளவுகளில் M. S. ராடுகள் ஜனவரி 72 முதல் மார்ச் 72 வரை வழங்குவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை, சைதாப்பேட்டை, சென்னை-15 அவர்களால் 5—1—1972 மாலை 3-30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை எழுத்து மூலம் வேண்டி விற்பனை வரி உட்பட ரூ. 5·18 (ஐந்து ரூபாய் பதினெட்டு காசு மட்டும்) செலுத்தி சைதாப்பேட்டைக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் (நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை) 29—12—1971 முதல் 4—1—1972 முடிய அலுவலக நேரங்களில் (காலை 10-30 மணி முதல் மாலை 5-00 மணி வரை) ஒப்பந்த நிபந்தனை விவரங்களைப் பெறலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்திற்காக செலுத்தப்பட்ட தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

**த. மோகன்,**

கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.).

(த. 52)

## தொழில் வணிகத்துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ்க்கண்ட வேலைகளை மேற்கொள்வதற்காக தொழில்துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் கீழே குறிப்பிடப்பட்ட தேதிகளில் மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

வேலையின் பெயர் :

(1) மதுரை தொழில் பேட்டையில் (ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள்) உள்ளதாக, தொழிலாளர்களுக்கான குடியிருப்புகள் மொத்தம் 3 பிளாக்குகள் கட்டுதல். இந்த வேலைக்கு கட்டுத் தொகை ரு.3,300. இந்த வேலையை முடிக்க வேண்டிய காலம் 8 மாதங்கள்.

(2) மதுரை தொழில் பேட்டையில் (ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள்) உள்ளதாக தொழிலாளர்களுக்கான குடியிருப்புகள் இரண்டு பிளாக்குகள் கட்டுதல். இந்த வேலைக்கு கட்டுத் தொகை ரூ. 2,200. இந்த வேலையை முடிக்க வேண்டிய காலம் 6 மாதங்கள்.

இந்த இரண்டு வேலைகளுக்கும் ஒப்பந்தப் படிவம்: மொத்தத்தொகை.

இந்த இரண்டு வேலைகளுக்கும் ஒவ்வொன்றுக்கும் ஒப்பந்தப் பத்திரங்கள் விலை ரூ. 10·40.

இவ்விரண்டு வேலைகளிலும் ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி 24—12—1971.

இந்த இரண்டு வேலைகளுக்கும் ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறக் கடைசித் தேதி 11—1—1972.

ஒப்பந்தப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) அலுவலகம், மதுரை கோட்டம், தொழில்பேட்டை மதுரையில் மேலே குறிப்பிட்ட தேதியிலிருந்து அலுவலக நேரத்தில் கிடைக்கும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்டத் தொகையான ரூபாய் 10·40-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XXIX Industries—Other receipts" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) மதுரைக் கோட்டம், தொழில் பேட்டை, மதுரை அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத்தொகையைச் சலான் வடிவிலோ, கால் டிபாசிட் ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) மதுரைக் கோட்டம் அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்து, கட்டுத் தொகையாக ஏற்றுக்கொள்ளப்படும். தேசிய சேமிப்புப் பத்திரங்களும் சம்மந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சென்னை-2.

**ஏ பி மேத்யூ,**
மேற்பார்வைப் பொறியாளர்.
கட்டுமானப் பகுதி.

(தூ. 44)

## ஈரோடு நகராட்சி

ஈரோடு நகராட்சி காவேரி ரோடு உயர்நிலைப்பள்ளி என்.சி.சி. அறை, உடற்பயிற்சி ஆசிரியர் அறை மற்றும் தச்சுத் தொழிற்கூடம் ஆகியவற்றிற்கு மின் ஒயரிங் செய்து மின் விளக்குகள் அமைத்திட 18—1—1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

இதர விவரங்களுக்கு நகராட்சிப் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

**க. ஜனார்தனம்,**
ஆணையர்.

13-12-1971.

(தூ. 40)

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் துறை

### தேசிய நெடுஞ்சாலை வேலைகள் (மதுரை வட்டம்)

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரை யிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (தேசீய நெடுஞ்சாலை), மதுரை அவர்கள் நெ. 11, ஔவையார் தெரு, நரிமேடு, மதுரை-2 விலாசத்தி லுள்ள அவருடைய அலுவலகத்தில் 12—1—1972-ஆம் தேதி அன்று பிற்பகல் 3-30 மணிவரையில்(அலுவலக கடிகாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதி யன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

| வேலையின் பெயர். | கட்டுத் தொகை | ஒப்பந்தப் புள்ளி கிடைக்கும் விலாசம். |
|---|---|---|
| | ரூ. | |
| 1 தொண்டி—சுந்தரபாண்டி யன்பட்டினம் சாலை கி.மீ. 3/2 (மைல் 1/7) பாலம் கட்டுதல். | 9,095 | கோட்டப் பொறியாளர் (தேசீய நெடுஞ்சாலை) பிரிவு எண் 1 திருச்சி. |
| 2 தொண்டி-சுந்தரபாண்டியன் சாலை கி.மீ. 1/8 (மைல் 1/1) பாலம் கட்டுதல். | 8,080 | ஷை |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனைவரி உள்பட ரூ 20·70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் தேசிய நெடுஞ்சாலை திருச்சிக் கோட்ட எண்-1, திருச்சி-1 விலாசத்திலிருந்து 5—1—1972 முதல் 11—1—1972 வரையி லான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத்தொகை டெபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளர்கள் (தேசீய நெடுஞ் சாலை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பில் செலுத்திய தியதற்கான செலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சி களும், மாநில அரசு ஈட்டுப்பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்கு களால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்கு காரண்டிகளைச் சமர்ப்பிக்கும் பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிரா கரிக்கப்படும்.

முன்பணம் வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**பி. ஜெயராமன்,**
மேற்பார்வைப் பொறியாளர் (தேசீய நெடுஞ்சாலை),
மதுரை-2.

(த.51)

## போக்குவரத்துத் துறை

### அண்ணா சாலை, சென்னை-2

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் நிருவாகப் பொறியாளர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை, சென்னை-2 அவர்களால், வரும் மூன்று வருடத்திற்குக் கீழ்க் கண்ட கடைகள் குத்தகைக்கு, அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அண்ணாசாலை, சென்னை-2-ல் உள்ள போக்குவரத்து இல்லத்தில் 20—1—1972 மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

பெரம்பூர் பேருந்து நிலையம்—

| | |
|---|---|
| 1. 1-வது நம்பர் ஸ்டால் ... | தேநீர் விற்பது. |
| 2. 2-வது நம்பர் ஸ்டால் .. | குளிர் பானங்கள் வி[illegible] பது, வெற்றிலை, பாக்கு விற்பது. |
| 3. 3-வது நம்பர் ஸ்டால் ... | பழங்கள், காய்கறிக[illegible] விற்பது. |

அயனாவரம் பேருந்து நிலையம்—

| | |
|---|---|
| 1. 1-வது நம்பர் ஸ்டால் .. | தேநீர் விற்பது. |
| 2. 2-வது நம்பர் ஸ்டால் .. | பழங்கள், காய்கறிக[illegible] விற்பது. |
| 3. 3-வது நம்பர் ஸ்டால் .. | குளிர் பானங்கள், வெற்றிலை, பாக்கு விற்பது. |
| 4. 4-வது நம்பர் ஸ்டால் .. | புத்தகங்கள் விற்பது. |

ஒப்பந்தத்திற்கான விதிகள் நிபந்தனைப் பத்திரங்க[illegible] முதலியவற்றை, நிருவாகப் பொறியாளர், போக்குவரத் இல்லம், சென்னை-2 அவர்களிடம் ரூ. 1·04 கட்டி எல்ல அலுவலக நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்த கள் 20—1—1972 மாலை 3·15 மணிக்குத் திறக்கப்படும். எ காரணத்தைக் கொண்டும் இந்தப் பணம் திருப்பித்த மாட்டாது.

**இயக்குநர்.**

(த.49)

## பொதுப் பணித் துறை

ஆர்சி. 10956/71/டி5. நாள் 14-12-71.

வேலையின் பெயர் :—

(1) ஒசூர் அரசினர் மருத்துவமனையில் 25 படுக்கைகள் வார்டு கட்டுதல்.

(2) ஒசூர் அரசினர் மருத்துவமனையில் அவுட்பேஷண்ட் பிளாக் கட்டுதல்.

(3) ஒசூர் அரசினர் மருத்துமனையில் மகப்பேறு-அறுவைச் சிகிச்சை பிளாக் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கூறப்பட்ட வேலைகளை மேற்கொள்வதற்காக மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, சேலம்-தர்மபுரி வட்டம், சேலம்-4 அவர்களால் 24-1-72 மாலை 3-00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

| | வேலை (1) | வேலை (2) | வேலை (3) |
|---|---|---|---|
| 1 ஒப்பந்த வடிவம். | மொத்தத் தொகை. | மொத்தத் தொகை. | மொத்தத் தொகை. |
| | ரூ. | ரூ. | ரூ. |
| 2 கட்டுத் தொகை (சலான் வடிவம் அல்லது தேசிய சேமிப்புப் பத்திரம், ஷெட்யூல் பாங்குகளில் கால் ரசீது டிபாசிட் அல்லது டிமாண்டு டிராப்ட், மாநில அரசுக் கடன் பத்திரங்கள், மின்சார வாரியக் கடன் பத்திரங்கள் வடிவில் ஏற்கப்படும்). | 2,000 | 4,000 | 3,500 |
| 3 ஒப்பந்தப் பத்திரங்கள்விலை (கருவூலத்தில் அல்லது இந்திய ரிசர்வ் பாங்கில் "P. W. Remittances III other remittances" என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர் பொ. ப. து. கட்டடக் கோட்டம், சேலம்-5 கணக்கில் செலுத்தப்பட வேண்டும். | 20·00 | 20·00 | 20·00 |
| 4 விற்பனைவரி (XII Sales Tax (d) Miscellaneous என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். | 0·70 | 0·70 | 0·70 |
| 5 வேலையை முடிக்க வேண்டிய காலம். | 6 மாதங்கள். | 9 மாதங்கள். | 8 மாதங்கள். |
| 6 ஒப்பந்தப் பத்திரங்கள் விலைக்குக் கிடைக்கும் தேதிகள் (மேற்பார்வைப் பொறியாளர், பொப.து. சேலம்-தர்மபுரி வட்டம், சேலம்-4 அவர்கள் அலுவலகத்தில்). | 3-1-72 லிருந்து 21-1-72 வரை. | 3-1-72 லிருந்து 21-1-72 வரை. | 3-1-72 லிருந்து 21-1-72 வரை. |

மாநில அரசுக் கடன் பத்திரங்கள், தமிழ்நாடு மின்சார வாரியக் கடன் பத்திரங்கள் ஆகியவையும் மதிப்பில் 25 சதவிகிதம் குறைவாக ஏற்றுக்கொள்ளப்படும்.

கால் ரசீது டெபாசிட்டுகள், பிக்சட் டெபாசிட் ரசீதுகள் ஆகியன கட்டுத் தொகைக்காக, வசூலாவதைப் பொறுத்து ஏற்கப்படும்.

**ஆர். ராதாகிருஷ்ணன்,**
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 43)

## திருப்பூர் நகராட்சி

நகராட்சி செவிலித்தாய், மகப்பேறு உதவியாளர்கள், ஆயாக்கள் ஆகியவர்களுக்கு 1971-72-ஆம் ஆண்டிற்குச் சீருடைகள் வழங்குவதற்கான ஜவுளி ரகங்களுக்கு மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 17-1-'71-ஆம் தேதி மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் அல்லது அவர் அதிகாரம் பெற்றவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். மற்ற விவரங்களை நகராட்சி அலுவலகத்தில் பொதுச் சுகாதாரப் பிரிவில் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

**ஆர். சீனிவாசன்,**
ஆணையர்

(த.23)

## பொதுப்பணித் துறை

### சென்னை—செங்கற்பட்டு வட்டம்

வேலையின் பெயர்:—தாம்பரம் காச நோய் மருத்துவ மனையில் ( T. B Sanatorium ) பணி புரியும் செவிலியர்களுக்காகக் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும். மேற்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 11—1—1972 மாலை 3·00 மணிவரை மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, சென்னை-செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் வரவேற்கப் படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3·15 மணிக்கு அங்கே வந்துள்ள ஒப்பந்தப்புள்ளிக்காரர் களின் முன்னிலையில் பிரிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் எல்லா அலுவலக நாட்களிலும் விற்பனைக்குக் கிடைக்கும்.

| | | |
|---|---|---|
| 1. ஒப்பந்த வடிவம் | ... | மொத்தத் தொகை. |
| 2. கட்டுத் தொகை | ... ... | ரூ. 7,500 |
| 3. வேலையை முடிக்க வேண்டிய காலம். | .. | ஆறு மாதங்கள். |
| 4. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை. | .. | ரூ. 40 (நாற்பது) விற்பனை வரி 3 சத வீதம். |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை திருப்பித் தர மாட்டாது. P.W.D. Remittances III Other Remittances என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை, கட்டடக் கோட்ட எண் (1), சேப்பாக்கம், சென்னை-5 அவர் கள் கணக்கில் கருவூலத்திலோ, ரிசர்வ் பாங்கியிலோ கட்ட வேண்டும். விற்பனை வரி (3 சத வீதம்) அதே சலானில் ''XII Sales Tax (b) Receipt under States Sales Tax Act General Sales Tax'' என்ற தலைப்பில்கருவூலத்திலோ ரிசர்வ் பாங்கியிலோ கட்டப்படவேண்டும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்காக மனுக்கள் மேற்கண்ட சலான்களில் அசலுடன் அனுப்பப்படவேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை சென்னை-செங்கற்பட்டு வட்டம் அவர்கள் எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையோ அல்லது ஏதாவது ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ நிராகரிக்கும் உரிமை பெற்றுள்ளார்.

மற்ற விவரங்கள் மேற்கண்ட மேற்பார்வைப் பொறி யாளர் அவர்கள் அலுவலகத்தில் எல்லா அலுவலக நாட்களி லும் அறிந்து கொள்ளலாம்.

**பி. கே. கந்தசாமி,**
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித் துறை.,
சென்னை-செங்கற்பட்டு வட்டம், சென்னை-5.

(த.50)

---

## நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

### தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக அன்னார் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12—1—1972 மாலை 3 மணிவரை பெற்றுக்கொள்ளப் படும்.

| வேலையின் பெயர். | கட்டுத்தொகை. |
|---|---|
| சென்னை, திருச்சி தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் மைல் (106—8-ல்) கி.மீ. 173/8-ல் பாலம் கட்டுதல். | 3,930 |

ஒப்பந்தப் புள்ளிகள் 12—1-1-72 அன்றே மாலை 3·15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப் படும். ஒப்பந்தத்திற்காக நமூனுக்கள் வரை படங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலை கோட்டம் II கிண்டி அலுவலகத்தில் 5—1—1972 முதல் 11—1—1972 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25·88 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும், திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் II கிண்டி, சென்னை-25 அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலிருந்தும் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின்கீழ் கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் II , கிண்டி பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கி பொறுப் புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

**தி. மு. ஆ. ஜெயராமன்;**
**மேற்பார்வைப் பொறியாளர்.**

(த. 57)

## ஒப்பந்தப் புள்ளி

### தொழில் வணிகத்துறை

வேலையின் பெயர் : மதுரை கப்பலூர், அபிவிருத்தி செய்யப்பட்ட மனை எஸ்டேட்டில் Tansi Furniture and Engineering Workshopக்கு அலுவலகக் கட்டடம் தொழில் கூடக் கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் மேற்கூறப்பட்ட வேலையை மேற்கொள்வதற்காகத் தொழில்துறை மற்றும் இதர அரசுத் துறைகளில் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் 11—1—1972 அன்று மாலை 3·00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3·10 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில்துறை, 35/2, உட்ஸ்ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 ஒப்பந்த வடிவம் | .. .. | மொத்தத் தொகை. |
| 2 கட்டுத் தொகை | .. .. | ரூபாய் 3,000 (ரூபாய் மூவாயிரம் மாத்திரம்). |
| 3 மாதிரி வரைப்படத்துடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலைக்குரிய விற்பனை வரியும் சேர்த்து. | .. | ரூபாய் 10·40 |
| 4 வேலை முடிக்க வேண்டிய காலம். | .. | 6 மாதங்கள். |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர், (கட்டுமானம்), மதுரைக் கோட்டம் தொழில்பேட்டை, மதுரை அவர்களது அலுவலகத்தில் 28—12—1971 அன்று முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்படத் தொகையான ரூபாய் 10·40ஐ எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ '' XXIX. Industries–other receipts என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) மதுரைக் கோட்டம் தொழில் பேட்டை, மதுரை அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத்தொகையைச் சலான் வடிவிலோ, 'கால்டிபாசிட்' ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) மதுரைக் கோட்டம் மதுரை அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாகப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூடக் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுப் கொள்ளப்படாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**சி. பி. மாத்யூ,**
மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமானப் பகுதி.

சென்னை-2.

(த. 71)

## வேளாண்மைத்துறை ஏலம்

திருவாரூர் வேளாண்மைக் கருவிகள் பணிமனை பொதுக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 17—1—1972 மாலை 3 மணிக்கு நிலம் சமன்படுத்தும் இயந்திரங்களும், அதன் புதிய, மற்றும் உதிரி உறுப்புகளும் (TD 14, TD. 9, TD 6, T. 6 மற்றும் இயந்திரக் கலப்பையின் உதிரி உறுப்புகளும் ( Bulldozer Spare Parts ) கலப்பையின் உறுப்புகளும் ( Tractor Spare Parts ) பொது ஏலத்தில் விடப்படும். மேலும் பழைய தள்ளுபடி செய்யப்பட்ட இயந்திரங்களின் உதிரிப் பாகங்களும், அதே தினத்தன்று காலை 10 மணிக்கு ஏலம் விடப்படும்.

மேற்கூறிய புதிய உதிரி உறுப்புகளின் அட்டவணையையும், ஏலம் பற்றிய குறிப்புக்களும், மேற்படி அலுவலகத்தில் 1—1—1972 முதல் 11—1—1972 வரை ரூபா 1.04 (ரூபா ஒன்றும் 4 காசு மட்டும்) காசோலை மூலமாகவோ அல்லது 'டிமாண்ட் டிராப்ட்', மூலமாகவோ அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம் (இந்த ரூபா திருப்பித் தர இயலாது). மேற்கூறிய இனை உறுப்புகளை எல்லா அலுவலக வேலை நேரத்திலும் பார்வையிடலாம்.

அரசின் நலம் கருதி, ஏலத்தை ரத்து செய்யவோ, ஒத்தி வைக்கவோ, பொதுக் கண்காணிப்பாளருக்கு உரிமை உண்டு.

**பொதுக் கண்காணிப்பாளர்,**
அரசு வேளாண்மைக் கருவிகள் தொழிற்கூடம்,
திருவாரூர்.

(த-58)

## ஏல விளம்பரம்

### விழுப்புரம் நகராட்சி

தமிழக முதல்வர் அறிஞர் அண்ணாதுரை நகராட்சிப் பேருந்து நிலையத்தில் புதியதாகக் கட்டியுள்ள சிற்றுண்டிச் சாலையை 25–1–1972 முதல் 31–3–1973 வரை பயன்படுத்திக் கொள்ளும் உரிமையை 1972-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 20-ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10 மணிக்கும், தேவைப்பட்டால் அதற்குப் பின் ஒத்தி வைக்கப்படும் தேதிகளிலும், நகர்மன்ற அலுவலகத்தில் நகராட்சி ஆணையரால் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும். ஏலம் விழுப்புரம் நகர் மன்றம் அல்லது ஒப்பந்தக் குழுவின் உறுதிக்கு உட்பட்டது. ஏலம் கேட்க விழைவோர் முதலில் பொறுப்புத் தொகை ரூ. 200 செலுத்த வேண்டும். ஏல உறுதி செய்த பின்னர் கூடுதல் பொறுப்புத் தொகையாக ரூ. 100 செலுத்த வேண்டும். மற்ற சிறப்பு நிபந்தனைகள் சம்பந்தமாக அலுவலகத்தில் நேரிலோ கடித மூலமோ தெரிந்து கொள்ளலாம்.

பெ. இ. பத்மநாபமேனன்,
ஆணையர்.

விழுப்புரம் நகராட்சி,
17–12–1971.

(த. 39)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் லிமிடெடின் யூனிட், தமிழ்நாடு அரசின் நிறுவனம்)

நாளொன்றுக்குச் சுமார் 50 டன் கருங்கற்களை கலனிவாசல் கிராமம், காரைக்குடி துணைத் தாலுகாவிலிருந்து உடைத்து, நமது தொழிற்சாலை, ஆலங்குளத்திற்கு ஜனவரி, 1972 முதல் ஓராண்டுக் காலத்திற்கு எடுத்துச் செல்வதற்கு 21—1—1972 வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

நிபந்தனைகள், ஒப்பந்தப் புள்ளிப் படிவம், இதர விவரங்களை பொதுமேலாளர், தமிழ் நாடு சிமெண்ட்ஸ், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் அஞ்சல் (வழி) ராஜபாளையம், ராமநாதபுரம் மாவட்டம் அவர்களிடம் ரூபாய் 10.35 மட்டும் 21—12—1971 முதல் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். (இந்தத் தொகைத் திருப்பித் தரப்பட மாட்டாது).

பொது மேலாளர்.

(த. 32)

## ஒப்பந்தப் புள்ளி

### கோயம்புத்தூர் கோட்டம்

கோயம்புத்தூர் நெடுஞ்சாலை கிராமப் பணித்துறைக் கோட்டப் பொறியாளர் (டிவிஷனல் இன்ஜினியர்) அவர்களால் 1972–73-ஆம் வருடத்திய அரசாங்கச்சாலைகள் பராமரிப்பு வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கோயம்புத்தூர் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் 21—1—1972-ஆம் நாள் பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் 21—1—1972-ஆம் நாள் பிற்பகல் 3-15 மணிக்கு கோயம்புத்தூர் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கோயம்புத்தூர் நெடுஞ்சாலை கோட்டப் பொறியாளர் அலுவலக மேலாளர் அவர்களிடம் ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 3-11 வீதம் (விற்பனை வரி உட்பட) கட்டணம் செலுத்தி அலுவலக நாட்களில் 10—1—1972 முதல் 20—1—1972 வரை விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. 21—1—72 ஒப்பந்தப் புள்ளிகள் பெறும் தினத்தன்று எக்காரணத்தை முன்னிட்டும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கொடுக்கப் படமாட்டாது. முன் பணவைப்புத் தொகையைக் கோயம்புத்தூர் கோட்டப் பொறியாளரின் பெயரில் அரசினர் கருவூலத்தில் '' வருவாய் வைப்புத் தொகை '' க்கு (ரெவின்யூ டெபாசிட்) செலுத்தி அதற்கான செல்லுச் சீட்டை (செலவான) அல்லது கோடிட்ட (கிராஸ்டு) பேங்க் டிராப்ட் ஒப்பந்த அறிவிப்புப் பத்திரத்துடன் இணைக்க வேண்டும். மேற்படி முன்பண வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாகத் தள்ளுபடி செய்யப்படும். வருமான வரி, விற்பனை வரி செலுத்தியதற்கான அத்தாட்சிப் பத்திரங்கள் ஒப்பந்த அறிவிப்புப் பத்திரத்துடன் இணைக்க வேண்டும். பாங்க் காரண்டி முன் வைப்புத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டுமேயானால் ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் மேற்படி பாங்க் காரண்டிக்கு உண்டான ஒப்புதலையும் ஒப்பந்தப் துடன் இணைக்க வேண்டும்.

ஒவ்வொரு வேலைக்கான முன் பணவைப்புத்தொகை, ஒப்பந்தப் புள்ளிகள் பற்றிய நிபந்தனைகள் முதலிய முழு விவரங்கள் அடங்கிய விளம்பர அறிக்கையைக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில், மற்றும் இக்கோட்டத்தைச் சேர்ந்த உதவிப் பொறியாளர் மற்றும் பிரிவு அலுவலர் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

கு. வெங்கட்ராம்,
கோட்டப் பொறியாளர்,
(நெ.கி.ப), கோவை.

கோயம்புத்தூர்,
13—12—1971

(த. 53)

## பொதுப்பணித் துறை

ஆர்.சி. 38700/71-டி5. நாள் : 13—12—1971.

வேலையின் பெயர்:—சேலம் அரசினர் கல்லூரியில் பட்டமேல் படிப்புக்குக் கூடுதல் வகுப்பு அறை கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநர் சார்பில் மேற்கண்ட வேலைக்காக மேற்பார்வைப்பொறியாளர், பொதுப்பணித் துறை, சேலம். தர்மபுரி வட்டம் சேலம்-4 அவர்களால் 17—1—1972 மாலை 3·00 மணிவரை மூடி மூத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3·15 மணிக்கு, அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 | ஒப்பந்த வடிவம் .. .. | மொத்தத் தொகை. |
| 2 | கட்டுத்தொகை (சலான் வடிவில் (அ) தேசியச் சேமிப்புப் பத்திரம் ஷெட்யூல் பாங்கின் டெபாசிட், கால் ரசீது டிராப்டுகள், மாநில அரசுக் கடன் பத்திரங்கள் (அ) தமிழ்நாடு மின்வாரியக் கடன் பத்திரங்கள் ஏற்கப்படும். | ரூ. 4,000. |
| 3 | ஒப்பந்தப் பத்திரங்கள் விலை (இதனைக் கருவூலத்தில் (அ) இந்திய ரிசர்வ் பாங்கில் "P. W. Remittances III other Remittances" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் கட்டடக் கோட்டம் சேலம்-5 அவர்கள் கணக்கில் செலுத்த வேண்டும்). | ரூ. 20·00 |
| 4 | விற்பனை வரி (இதனை XII Sales Tax (d) Miscellaneous என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்). | ரூ. 0·70 (எழுபது காசுகள் மட்டும்.) |
| 5 | வேலையை முடிக்க வேண்டிய காலம். | 8 மாதங்கள். |
| 6 | ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாட்கள் (கிடைக்குமிடம் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித் துறை, சேலம்—தர்மபுரி வட்டம், சேலம்-4). | 29—12—1971லிருந்து 13—1—1972 வரை. |

மாநில அரசுக் கடன் பத்திரங்கள் தமிழ்நாடு மின்சார வாரியக் கடன் பத்திரங்களும், மதிப்பில் 25 சதவிகிதம் கழித்து விற்கப்படும். கால் ரசீது டிபாசிட்டுகள், பிக்சட் டிபாசிட்டுகள் ஆகியவை வசூலாவதைப் பொறுத்துக் கட்டுத் தொகைக்காக ஏற்கப்படும்.

**ஆர். ராதாகிருஷ்ணன்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை, சேலம்—தர்மபுரி வட்டம்,
சேலம்—4.

(த. 67)

## ஏலம்

### செங்கோட்டை நகராட்சி

1972—73-ஆம்ஆண்டுக்கு செங்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான சந்தை, சந்தையின் முன் பக்கமுள்ள கடைகள், கறிக் கடைகள், (Mutton Stalls) ஆடடிக்கும் சாலை, பேருந்து நிலைய சிற்றுண்டி விடுதி, ஸ்டால்கள், மற்றும் பலன்தரும் மரங்களின் மகசூலை அனுபவிக்கும் உரிமை, தெருக்களில் விழும் பன்றி எருவைப் பொருக்கி எடுக்கும் உரிமை, புல் அறுக்கும் உரிமை, பழைய கம்போஸ்டு டிப்போ நிலத்தில் பயிரிடும் உரிமை ஆகியவைகளை 27—1—1972 வியாழக்கிழமை காலை 10-00 மணி முதல் தொடர்ந்து செங்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் வைத்து ஆணையரால் பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் ஏல விளம்பரத்தில் கண்டுள்ள கட்டுத் தொகையைக் கட்டி செல்வ நிலைச் சான்றிதழ் தாக்கல் செய்து ஏலம் கேட்க வேண்டும். மற்ற விவரங்களை நகராட்சி அலுவலகத்தில் வேலை நேரங்களில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

அத்துடன் நகராட்சிக்கு 1972—73-ஆம் வருடத்திற்குத் தேவையான ஸ்டேஷனரி சாமான்கள், கன்சர்வன்சி வண்டிகளின் டியூப் வல்கனைசிங், வாகன வரித் தகடுகள், டிராக்டருக்குத் தேவையான டீசல், என்ஜின் ஆயில், பொதுச் சுகாதாரப் பிரிவிற்குத் தேவையான சுண்ணம் புத்தூள், மண்வெட்டி, பிக்காஸ், சாக்கடை அள்ளும் கரண்டி, குப்பைக் கூடைகள், லைப்பாய் சோப்புகள், உணவு கலப்பதற்கு ஜாதிக்காய் பெட்டி, பாட்டில்கள், சுகாதார வண்டிகள் இழுக்கும் மாடுகள் சப்ளை செய்யவும், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 27-1-1972-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 3-00 மணி வரை ஆணையரால் பெற்றுக்கொண்டு அன்று மாலை 3-30 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஏனைய விவரங்களை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

**ஆணையர்,**
செங்கோட்டை நகராட்சி.

18–12–1971.

(த. 72)

## கோவை நகராட்சி

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12—1—1972-ஆம் தேதி மாலை 3 மணிவரை நகராட்சி பொதுப்பணிப் பொறியர் அவர்களால் பெறப்படும். ஒப்பந்தப் புள்ளிகளின் மேலுறையில் வேலையின் பெயரும் தேதியும் குறிப்பிட்டு ஆணையர், கோவை நகராட்சி என்று விலாசமிட்டு அனுப்பி வைக்க வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் 12—1—1972-ஆம் தேதி மாலை 3·30 மணிக்கு நகராட்சி பொதுப்பணிப் பொறியர் அவர்களால் திறக்கப்படும். இவ்வேலைகளுக்கான ஷெட்யூல் பாரங்கள் நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை அதற்குண்டான தொகையை நகராட்சி கருவூலத்தில் செலுத்தி பொதுப்பணித் துறைப் பொறியாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலையின் பெயர். | கட்டுத் தொகை. | ஷெட்யூல் பாரம் விலை. | முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|
| | ரூ. | ரூ.காசு. | |
| 1. கோவையில் ரங்கே கவுடர் வீதியில் குடோனும் அதன் மேல் மாடியில் அலுவலகமும் கட்டுதல். | 1,130 | 10·35 | 6 மாதங்கள். |
| 2. கோவையில் இராமலிங்கம் காலனி ஆரம்பப்பள்ளியில் முதல் மாடிக் கட்டடம் கட்டுதல். | 1,400 | 10·35 | ஷி |
| 3. கோவை, செல்வபுரத்தில் நகராட்சிக்குச் சொந்தமான இடம். டி.எஸ். எண் 483/3-ல் சுற்றிலும் மதில் சுவர் கட்டுதல். | 763 | 5·18 | 3 மாதங்கள். |

கி. அப்பாநாராயணன்,
ஆணையர்.

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை

### சிவகங்கைக் கோட்டம்

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் சிவகங்கை நெடுஞ்சாலை கிராமப் பொறியியல்பணித்துறைக் கோட்டப் பொறியாளர் அவர்கள் சிவகங்கைக் கோட்டத்திற்குட்பட்ட அரசினர்சாலைகளில் 1972-73-ஆம் வருடப் பராமரிப்பு மற்றும் தனி பராமரிப்பு வேலைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் சிவகங்கைக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்திற்கு 19—1—1972-ஆம் நாள் (புதன்கிழமை) பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். அன்று பிற்பகல் 3-15 மணிக்கு ஒப்பந்தங்கள், ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட ஏஜெண்டுகள் முன்னிலையில் கோட்டப் பொறியாளரால் திறக்கப்படும்.

ஒப்பந்த விவரங்களும் குறிப்பிட்ட நமூனுக்களும் நிபந்தனைகளும் கோட்டப் பொறியாளர் அலுவலக மேலாளரிடமிருந்து 10—1—1972 தேதி முதல் 18—1—1972 (இரண்டு நாட்களும் உட்பட) எல்லா அலுவல நேரங்களிலும் ஒவ்வொரு வேலைக்கும் ஒப்பந்தப் புள்ளிகள் சதவீதம் ரூ. 3.11, பட்டியல் 5.18 விற்பனை வரி உட்பட செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தர மாட்டாது. 18—1—1972-க்குப் பின் எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தப் புள்ளிகள் விற்பனை செய்யப்பட மாட்டாது.

முன் வைப்புத் தொகைக்கான கருவூல ரசீதுகள் இணைக்கப்படாத ஒப்பந்தங்களும், காலதாமதமாக வரும் ஒப்பந்தங்களும் கோட்டப் பொறியாளர் பெயருக்கு மாற்றப்படா. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரங்களுடன் இணைக்கப்பட்ட ஒப்பந்தங்கள் தள்ளுபடி செய்யப்படும். அப்படி மாற்றப்பட்ட பத்திரங்களைக் கோட்ட அலுவலகத் தலைமை எழுத்தாளரிடம் கொடுத்து, அதற்கான ரசீதைப் பெற்று, அந்த ரசீதை மட்டும் ஒப்பந்தங்களுடன், வேலையின் பெயர் விவரத்துடன் இணைக்க வேண்டும். இது தவிர, முன் வைப்புத் தொகைக்கான உத்தரவாதம் இணைக்கப்பட்டால், ரிசர்வ் வங்கியின் அங்கீகாரம் பெற்று அத்துடன் இணைக்கப்படல் வேண்டும். இவ்விதம் ரிசர்வ் வங்கியின் அங்கீகாரமும் இணைக்கப்படாத வங்கி உத்திரவாத ரசீதுகள் இணைக்கப்பட்ட ஒப்பந்தங்கள் தள்ளுபடி செய்யப்படும். பரிசுப் பத்திரங்கள் முன் வைப்புத் தொகையாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

எஸ். நடராஜன்,
கோட்டப் பொறியாளர்,
(நெ.கி.ப.)

(த.64)

## ஏல விளம்பரம்

### இராசிபுரம் நகராட்சி

1972–73-ஆம் ஆண்டிற்கு அடியிற்கண்ட குத்தகைகள் நகராட்சி ஆணையர் அவர்களால் 19—1—1972-ஆம் தேதி புதன்கிழமை மாலை 3·00 மணிக்கு இராசிபுரம் நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகள் நேரிலோ அல்லது தபால்மூலமாகவோ இலவசமாய்ப் பெற்றுக் கொள்ளலாம்.

| குத்தகை விவரமும் காலமும். | | கட்டுத் தொகை. |
|---|---|---|
| | | ரூ. |
| 1. செவ்வாய்க்கிழமை வாரச் சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் பாத்யதை. | 1—4—1972 முதல் 31—3—1973 முடிய. | 500 |
| 2. தினசரி சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் பாத்யதை. | ஷை | 500 |
| 3. பேருந்து வண்டி நிலையமும் (பஸ் ஸ்டாண்டும்) குதிரை ஜட்கா மாட்டு வண்டிப் பட்டையும் சேர்ந்து. | ஷை | 300 |
| 4. கால்நடை வெட்டுமிடம் (ஸ்லாட்டர் ஹவுஸ்). | ஷை | 200 |
| 5. நகராட்சி எல்லைக்குள் விழும் பன்றி எருக்களைத் தங்கள் செலவில் சேகரம் செய்து எடுத்துக்கொள்ளும் பாத்யதை. | ஷை | 500 |
| 6. தினசரி சந்தையிலுள்ள 16 கசாப்பு கடைகள். | ஷை | 200 |

### II ஒப்பந்தப் புள்ளி

இராசிபுரம் நகராட்சிக்கு 1972–73-ஆம் ஆண்டிற்கு (1—4—1972 முதல் 31—3—1973 முடிய) கீழே குறிப்பிட்டவைகள் விநியோகம் செய்வதற்காக 20–1–1972-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4·00 மணிவரையில் மூடி மூத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராவை ஆணையர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் 20—1—1972-ஆம் தேதி மாலை 4·30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன் திறக்கப்படும்.

இதர விவரங்கள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

| விவரம். | கட்டுத் தொகை. |
|---|---|
| | ரூ. |
| 1 நகராட்சி குப்பை வண்டிகளுக்கு மாடுகள் விநியோகம் செய்ய. | 100·00 |
| 2 நகராட்சிக்கு வேண்டியவைகளை அச்சிடுதல். | 25·00 |
| 3 எழுது பொருள்கள் முதலிய சாமான்கள் விநியோகம் செய்ய. | 25·00 |
| 4 கூடை, விளக்குமாறு, சுண்ணாம்பு விநியோகம் செய்ய. | 25·00 |

நகராட்சி அலுவலகம்,
இராசிபுரம்.
17—12—1971

**வே. பாலசுப்பிரமணியன்,**
ஆணையர்.

(த. 65)

## ஒப்பந்தப் புள்ளி

### தூத்துக்குடி நகராட்சி

சத்திரம் தெரு பிரசவ ஆஸ்பத்திரிக்கு 4 எண்ணம் 4' 0'' சீலிங் பேன் சப்ளை செய்ய விலைப் புள்ளிகள் 17–1–1972 மாலை 4 மணி வரை ஆணையரின் நேர்முக உதவியாளர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்கு உடைக்கப்படும். நகரமன்றத்திற்கு ஒரு விலைப் புள்ளியையோ அல்லது எல்லா விலைப் புள்ளிகளையுமோ எவ்விதக் காரணமும் காட்டாமல் தள்ளிவிட உரிமை உண்டு. மற்றும் விவரங்களுக்கு பொறியாளர் அவர்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

கட்டுத் தொகை ரூ. 60.

**கே. என் கிருஷ்ணமூர்த்தி,**
பி.ஏ.,பி.இ.,
பொறியாளர்.

தூத்துக்குடி.

(த.62)

கீழ்க்கண்ட வேலைகளுக்கு ஆணையரின் நேர்முக உதவியாளர் அவர்களால் 17—1—1972 மாலை 4 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 4·30 மணிக்கு உடைக்கப்படும். நகர மன்றத்திற்கு ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எவ்வித காரணமும் காட்டாமல் தள்ளிவிட உரிமை உண்டு. மற்றும் விவரங்களுக்குப் பொறியர் அவர்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

| வேலையின் விவரம். | கட்டுத் தொகை ரூ. |
|---|---|
| 1 பெரியகாட்டன் ரோட்டிற்கு வடபகுதியில் உள்ள கான்களைப் பழுது பார்க்க. | 450 |
| 2 பெரியகாட்டன் ரோட்டிற்கு தென்பகுதியில் உள்ள கான்களைப் பழுது பார்க்க. | 315 |
| 3 நகரில் குறுக்குக் கான்களையும் மடைகளையும் பழுதுபார்க்க. | 250 |

தூத்துக்குடி.

**கே. என். கிருஷ்ணமூர்த்தி,** பி.ஏ.பி.இ.
பொறியர்.

(த. 61)

---

## அரக்கோணம் நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கோணம் நகராட்சி ஆணையரால் 12—1—1972-ஆம் தேதி மாலை 4 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு, அன்று மாலை 4·15 மணிக்கு அப்பொது வந்துள்ளவர்களின் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி நமூனுக்களும், முழு விவரங்களையும் நகராட்சி அலுவலகத்தில் வேலை நேரங்களில் 11—1—1972-ஆம் தேதிவரை மனுசெய்து ஒவ்வொரு பிரதிக்கும் ரூ. 5·00 (விற்பனை வரி நீங்கலாக) நகராட்சி கருவூலத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | மதிப்பீட்டுத் தொகை. ரூ. | முதல் கட்டுத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 காந்திரோடுலிருந்து வட தர்மராஜா கோவில் தெரு வரை, சத்தியமூர்த்தி தெரு ராஜாஜி 1-வது தெரு வழியாக ராஜாஜி 2 மற்றும் 3 தெருக்களும் உட்பட தார் சமதளம் அமைத்தல், தாங்கு சுவர் கட்டுதல், மற்றும் குறுக்குப் பாலங்களைப் பழுது பார்த்தல். | 51,000 | 1,275 |
| 2 காவனூர் ரோடிற்கு கம்புருட்டி தெரு சந்திப்பிலிருந்து நகராட்சி எல்லை வரை தார் சமதளம் அமைத்தல், தாங்குசுவர் கட்டுதல், மற்றும்குறுக்குப் பாலங்களுக்கு மராமத்து வேலைகள். | 51,000 | 1,275 |

அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர் மேற்கொண்டு 4-வது காலத்தில் குறிப்பிட்டுள்ள முதல் கட்டுத் தொகைக்குச் சமமான தொகையை மறுபடியும் செலுத்த வேண்டும்.

அரக்கோணம்,
18—12—1971.

**கா. ரா. குட்டியப்பன்,**
நகராட்சி ஆணையர்.

(த. 63)

---

## பொது (செய்தி, மக்கள் தொடர்பு) துறை.

தமிழ்நாடு திரைப் படப் பிரிவில் ரூ. 350—15—500—20—600 சம்பள விகிதத்தில் வணிகக் கணக்கர் (Commercial Accountant) நியமனத்திற்கு மனுக்கள் வரவேற்கப்படுகின்றன. மனுதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் வணிக இயல் பட்டம் (Degree in Commerce) பெற்றவராகவும் 30 வயதுக் குட்பட்டவராகவும் இருக்க வேண்டும். ஏதாவது வணிக நிறுவனம் ஒன்றில் திரைப்படத் தொழிலில் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம் வேண்டும். அரசுச் சார்பு நிறுவனத்தில் அல்லது அரசு வணிக நிறுவனத்தில், வணிகக் கணக்குப் பொறுப்பு வகித்த அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை உண்டு. மனுக்கள் 25—1—1972-க்குள் கீழ்க்கண்டவருக்கு வந்து சேர வேண்டும்.

அரசுச் சார்புப் பணிகளில் அல்லது அரசு அலுவலகப் பணிகளில் உள்ளவர்கள் முறை வழி மூலம் மனுச் செய்யலாம்.

**இயக்குநர்,**
செய்தி-மக்கள் தொடர்பு,
பொது (செய்தி- மக்கள் தொடர்புத்) துறை, சென்னை-9.

(த.59)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

ஆர்.சி. எண் : டி1/45580/71-4, 16—12—1971.

வேலையின் பெயர்:— தர்மபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி வட்டம், நாளபள்ளி கிராமத்துக்கு அருகில் காட்டு ஓடைக்குக் குறுக்கே குளம் அமைப்பு.

மேற்கண்ட வேலைக்காக, மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, சேலம்—தர்மபுரி வட்டம், சேலம்-4 அவர்களால் 24—1—1972 மாலை 3·00 மணிவரை பெற்றுக் கொள்ளப் படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3·15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

ஒப்பந்த வடிவம் ... — கே-2.
கட்டுத் தொகை ... ... ரூ. 6,900.

(சலான் வடிவில் அல்லது தேசீயச் சேமிப்பு பத்திரமாக அல்லது ஷெடியூல் பாங்கின் டிபாசிட்டால் ரசீதாக அல்லது டிமாண்ட் டிராப்டாக ஏற்கப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும் மின்சார வாரியக் கடன் பத்திரங்களும் ஏற்கப்படும்).

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை ... ரூ. 15·00 (ரூபாய் பதினைந்து மட்டும்).

(கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ "P. W. Remittances III other Remittances" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொதுப் பணித்துறை, தர்மபுரி கோட்டம், தர்மபுரி அவர்கள் கணக்கில் செலுத்த வெண்டும்).

விற்பனை வரி ... ... ... ரூ. 0·53 (ஐம்பத்து மூன்று காசுகள்).

XII Sales Tax, miscellaneous என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் காலம். 13—1—1972விருந்து 22—1—1972வரை.

பத்திரங்கள் கிடைக்கும் இடம். மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித் துறை, சேலம்—தர்மபுரி வட்

(மாநில அரசுக் கடன் பத்திரங்களும், மின்சார வாரியக் கடன் பத்திரங்களும் மதிப்பில் 25 சதவிகிதம் கழித்து ஏற்றுக் கொள்ளப்படும். கால் ரசிப்ட் டிபாசிட்டுகள், பிக்சட் டிபாசிட்டுகள் ஆகியவை வசூலாவதைப் பொறுத்து, கட்டுத்தொகைக்காக ஏற்கப்படும்).

ஆர். ராதாகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித் துறை.

(த.74)

## ஒப்பந்தப் புள்ளி

### மன்னார்குடி நகராட்சி

கீழ்க்கண்ட நகராட்சி வேலைகளுக்காக 5—1—1972-ஆம் தேதி மாலை 4·00 மணிவரை கீழ் கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படும். இதர விவரங்களை நேரிலோ, தபாலிலோ கோரி பெறலாம்.

| வேலையின் விவரம். | மொத்த மதிப்பீட்டுத் தொகை. | கட்டுத் தொகை. |
|---|---|---|
| நகராட்சிரோடு வேலைகள், கட்டட வேலைகள், சில்லரை பராமரிப்பு வேலைகள் (மொத்தம் 16 வேலைகள்). | ரூ. 91,200 | ஒவ்வொரு வேலைக்கும் மதிப்பீட்டில் 5 சதவிகிதம். |

நகராட்சி அலுவலகம்,
மன்னார்குடி.
15—12—1971.

கோ. முருகன், பி. ஏ.
ஆணையர்.

(த. 73)

## தடிகள் ஏலம்

### தேக்கு, மருது, வேங்கை, வெந்தேக்கு மற்றும் பல ஜாதிகள்

இடம் :—அரசாங்கத் தடிமண்டி, பேட்டை.
தேதியும் நேரமும் :—10–1–1972 முற்பகல் 9.00.
அளவு :—ஏறத்தாழ 300 கனமீட்டர்.

மேற்கொண்டு விவரங்களுக்குப் பேட்டையிலுள்ள மண்டிச் சிறகு அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

எஸ். கொண்டாஸ்,
மாவட்ட வன அலுவலர் திருநெல்வேலி தெற்கு பிரிவு.

## நெடுஞ்சாலை கிராமப்பணித் துறை
## சென்னை வட்டம், சென்னை-25

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 12-1-1972 அன்று மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் விவரமும். | முன்வைப்புத் தொகை. | ஒப்பந்தப் புள்ளி கிடைக்குமிடம். |
|---|---|---|
| | ரூ. | |
| 1. அழகியநத்தம் கிராமத்திற்கு அருகே பெண்ணாற்றின் குறுக்கே ஒரு மூழ்கு பாலம் கட்டுதல் (தென்ஆர்க்காடு மாவட்டம்) (மறு அழைப்பு). | 20,875 | கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), கடலூர். |

ஒப்பந்தங்கள் 12-1-1972 அன்றே மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனுக்கள் வரை படங்கள், முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), கடலூர் அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ரூ. 51.75 செலுத்தி 27-12-1971 முதல் 11-1-1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத் தொகையைச் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராமப் பணித் துறை), கடலூர் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை), கடலூர் பெயரில் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்பைத் தாங்கிய ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான "ரிசர்வ்" வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டா.

சென்னை-25,
12-12-1971.

ஜி. ஜார்ஜ் ஜேகப்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம்.

(த.28)

---

## பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப் பணித்துறை தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 9-2-1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| 1. வேலையின் பெயர் .. | சாக்கோட்டையில் விதை பதனிடும் இரு கிடங்குகட்குக் கட்டடம் கட்டுதல். |
| 2. ஒப்பந்த வகை .. | மொத்தத் தொகை. |
| 3. பிணைப் பணம் (செலுத்துச் சீட்டு மூலம் பெற்றுக்கொள்ளப்படும்). | ரூ. 6,500. |
| 4. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (கருவூலத்தில் பொ.ப செலுத்துத் தொகை III மற்றைய செலுத்துத் தொகை என்னும் தலைப்பில் செயற் பொறியாளர், கட்டடக் கோட்டம், திருவாரூர், அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும்). | ரூ. 30.00. |
| 5. விற்பனை வரி அரசினர் கருவூலத்தில் XII விற்பனை வரி பி. பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி என்ற தலைப்பில் செலுத்துதல் வேண்டும். | ரூ. 1.05. |
| 6. கால அளவு .. .. | ஆறு மாதங்கள். |
| 7. ஒப்பந்தப் பத்திரம் கிடைக்க ஆரம்பிக்கும் நாள். | 17-1-1972. |

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த. 29)

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை

தஞ்சாவூர் கோட்டம்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்கள் சார்பாகவும், தஞ்சாவூர் நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை கோட்டப் பிராந்தியத்தில் உள்ள அரசினர் சாலைகளில் 1972—73-ம் ஆண்டிற்கான ஒப்பந்தப் புள்ளிகள் அட்டவணைப் பட்டியல்களில் தஞ்சாவூர் கோட்டப் பொறியாளர் (நெ.கி. ப.து.) அவர்களால் அவர்களுடைய அலுவலகத்தில் 1972-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 2—00 மணி வரையில் (கோட்டப் பொறியாளர் அலுவலக நேரப்படி) பெற்றுக்கொள்ளப்படும். பெற்றுக்கொண்ட ஒப்பந்த அறிவிப்புகள் அன்றைய தினமே பிற்பகல் 2—15 மணி அளவில் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களது நியமனம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த அறிவிப்பு பற்றிய விவரங்கள் குறிப்பிட்ட அறிவிப்பு பட்டியல்களிலும் பொதுவான நிபந்தனைகளுடன் அட்டவணையும் மேற்பட்ட விவரக் குறிப்புகளும் தஞ்சாவூர் நெடுஞ்சாலை கிராம பணித்துறை கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் 10—1—1972 முதல் 18—1—1972 வரை (இரு நாட்கள் உள்பட) அலுவலக நேரத்தில் எல்லா வேலை நாட்களிலும் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு வேலைக்கான அட்டவணைப் பட்டியலில் அடக்க விலை விற்பனை வரி உட்பட ரூ. 5.20 (ரூபாய் ஐந்தும் காசு இருபது மட்டும்) ஆகும். இந்தத் தொகை எக்காரணம் முன்னிட்டும் திருப்பித்தர இயலாது. 19—1—1972-ம் தேதி ஒப்பந்தப் பட்டியல்கள் விற்கப்படமாட்டாது.

ஒவ்வொரு வேலைக்கான வேலை விவரங்கள் முன் வைப்புத் தொகை விவரங்கள் அடங்கிய அட்டவணை இவ்வலுவலகத்திலும், இதன் அனைத்து உட்கோட்ட உதவிப் பொறியாளர் அலுவலகத்திலும், இதன் அனைத்துப் பிரிவு அலுவலகங்களிலும் உள்ள அறிவிப்புப் பலகையில் 10—1—1972 முதல் விளம்பரம் செய்யப்படும். முன் வைப்புத் தொகை தஞ்சாவூர் நெடுஞ்சாலைக் கிராமப் பொறியியல் பணித் துறை கோட்டப் பொறியாளர் அவர்களின் எல்லைக்குட்பட்ட அரசினர் கருவூலங்கள் ஏதேனும் ஒன்றில் “ ரெவின்யூ டெபாசிட் ” என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலுத்துச் சீட்டு இணைக்கப்பட வேண்டும். இதைத் தவிர கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) தஞ்சாவூர் பெயருக்கு வாங்கப்பட்ட பன்னிரண்டு ஆண்டு தேசிய தற்காப்புப் பத்திரங்களும், மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் வங்கிகளால் வழங்கப்படும் வங்கி உத்தரவாதங்களும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் முன் வைப்புத் தொகைக்காக பெற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை இல்லாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

அ. அண்ணாமலை,
கோட்டப் பொறியாளர், (நெ.கி.ப.து.),
தஞ்சாவூர்.

(த. 79)

---

## நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1.

கீழ்க்கண்ட வேலைக்கு 29—12—1971 அன்று வரை பெற்றுக் கொள்ளப்பட இருக்கும் இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 19—1—1972 அன்று மாலை 3 மணி வரை ஆளுநருக்காக அவர் சார்பில் தேசீய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் குறளகக் கட்டட நான்காவது மாடியில் உள்ள அவரது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட அன்றே அவர்களால் 3—15-மணிக்குத் திறக்கப்படும்.

| | வேலை விவரம். | முன்வைப்புத் தொகை. |
|---|---|---|
| (1) | பவானி குமாரபாளையம் புறச் சாலையில் காவிரியின் குறுக்கே பாலம் கட்டுதல். | ரூ. 1,15,550. |

ஒப்பந்தத்திற்கான நமூனக்கள் வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசீய நெடுஞ்சாலைக் கோட்டம், சேலம், அலுவலகத்தில் 21—12—1971 முதல் 18—1—1972 வரை பெற்றுக் கொள்ளலாம். மற்ற நிபந்தனைகளில் மாறுதல் இல்லை.

தி. மு. ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
தேசீய நெடுஞ்சாலை வட்டம்.
சென்னை-1.

(த. 81)

# வெற்றிமிகு புத்தாண்டின் விளக்கொளி பரவட்டும்!

## இன்றே வாங்குங்கள்
## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

உங்கள் புத்தாண்டை மேலும் ஒளிமயமாக்குங்கள்.

(ஒவ்வொரு வரிசைக்கும்)

## முதல் பரிசு : ஒரு லட்சம் ரூபாய்




| | | |
|---|---|---|
| 5 இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 10 ஆயிரம் | ரூ. | 50,000 |
| 10 மூன்றாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5 ஆயிரம் | ரூ. | 50,000 |
| 50 நான்காவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 1000 | ரூ. | 50,000 |
| 1000 ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 100 | ரூ. | 1,00,000 |

மோத்தப் பரிசுகள் 4264.

மோத்தப் பரிசுத் தோகை*

# ரூ. 14,00,000

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்

## குலுக்கல் நாள்: 31-1-1972

தமிழ்நாடு பரிசுச் சீட்டு இதுவரை.
268 லட்சாதிபதிகளை உருவாக்கியுள்ளது.



வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை
தமிழ்நாடு அரசு, சென்னை-9.

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர்,
தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2.

* 4 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது

## ஒப்பந்தப் புள்ளி

### வீட்டு வசதி வாரியம்

(தெற்கு கோட்டம்)

எண்: எஸ். 7/6565/71 நாள்: 14—12—1971.

கீழ்க்கண்ட வேலைகளுக்காக உறையின்மீது வேலையின் பெயரும் ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் எழுதப்பட்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 6—1—1972 வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3·05 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளி தாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர் .. .. இந்திரா நகரில் குறைந்த வருமானப் பிரிவினருக்கான அடுக்கு வீடுகள் (Flats) டைப் டிசைன் 2-பி/70 படி (24 அடுக்கு வீடுகள்).

வேலையின் சுமார் மதிப்பு .. ரூ. 1,86,000.

ஒப்பந்த வடிவம்......மொத்தத் தொகை

கட்டுத் தொகை .. .. ரூ. 2,800.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை .. ரூ. 10·00 (திருப்பித்தரப் படாது). வி.வ.

ஒப்பந்தப் பத்திரங்கள் மற்றும் விவரங்களை நிருவாகப் பொறியாளர் அலுவலகத்தில் (தெற்கு) எல்லா அலுவல நாட்களிலும் காலை 10 மணியிலிருந்து மாலை 2 மணிவரை பெறலாம்.

**எஸ். குமரேசன்,**
நிருவாகப் பொறியாளர் (தெற்கு).

(த. 66)

## ஏல விளம்பரம்

### இராசிபுரம் நகராட்சி

1972—73-ஆம் ஆண்டிற்கான அடியிற்கண்ட குத்தகைகள் நகராட்சி ஆணையர் அவர்களால் 19—1—1972-ஆம் தேதி புதன் கிழமை மாலை 3-00 மணிக்கு இராசிபுரம் நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ இலவசமாய்ப் பெற்றுக் கொள்ளலாம்.

1—4—1972 முதல் 31—3—1973 முடிய

| | குத்தகை விவரமும் காலமும். | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 | செவ்வாய்க் கிழமை வாரச்சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் உரிமை. | 500 |
| 2 | தினசரி சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் உரிமை. | 500 |
| 3 | பேருந்து வண்டி நிலையமும் (பஸ் ஸ்டாண்டும்) குதிரை (ஜட்கா) மாட்டு வண்டிப் பேட்டையும் சேர்ந்து. | 300 |
| 4 | கால்நடை வெட்டுமிடம் (ஸ்லாட்டர் ஹவுஸ்.) | 200 |
| 5 | நகராட்சி எல்லைக்குள் விழும் பன்றி எருக்களைத் தங்கள் செலவில் சேகரம் செய்து எடுத்துக்கொள்ளும் உரிமை. | 500 |
| 6 | தினசரி சந்தையிலுள்ள 16 கசாப்புக் கடைகள் | 200 |

(த.87)

**ஆணையர்,**
இராசிபுரம்.

## ஒப்பந்தப் புள்ளி

### சின்கோனத் துறை

நீலகிரி அரசினர் சின்கோனத் தோட்டங்களில் நடுவட்டம், மோயாறு, மூக்கர்வுட், சேவசோலா, சேரன்கோடு கோட்டங்களிலும் மருத்துவச் சத்தெண்ணெய் தொழிற்சாலைக் குடியிருப்பிலும் கக்கூஸ் கட்ட (Aqua Type Latrines) வேலை மொத்த மதிப்பு ரூ. 55,000, தமிழ்நாடு ஆளுநர் சார்பில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள் 15-1-1972 மாலை 3-00 மணிக்குள் வந்து சேர வேண்டும். அவை அதே நாள் மாலை 3-30 மணிக்குக்கீழே கையொப்பமிட்டவராலோ அவரது அரசிதழ் பதிவு அலுவலராலோ பிரிக்கப்படும்.

விவரங்களையும், ஷெடியூல், களையும், மேற்பார்வையாளர், அரசினர் சின்கோனத் தோட்டங்கள், நடுவட்டம், நடுவட்டம் (அஞ்சல்), நீலகிரி அவர்களிடமிருந்து, விற்பனை வரி உட்பட ரூ. 2.07 ரொக்கமாகவோ அல்லது மணியார்டர் மூலமோ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**இயக்குநர்,**
சின்கோனத் துறை,
உதகமண்டலம்.

(த: 110)

## ஒப்பந்தப்புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, திருநெல்வேலி தெற்குக் கோட்டம் (இருப்பு) பாளையங்கோட்டை

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் திருநெல்வேலி தெற்கு (நெ.கி.ப.து.), கோட்டப் பொறியாளர் அவர்களால் திருநெல்வேலி தெற்குக் கோட்டத்திற்குட்பட்ட அரசினர் சாலைகளின் 1972–73-ஆம் ஆண்டுப் பராமரிப்பு வேலைகளுக்கு அரக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் பாளையங்கோட்டையிலிருக்கும் அவர்களுடையஅலுவலகத்தில் 28–1–1972 வெள்ளிக்கிழமை மாலை 2-00 மணி வரை (அலுவலகக் கடிகாரப்படி) பெற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் தனித் தனிக் கவரில் வேலையின் பெயரை எழுதி, கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, திருநெல்வேலி தெற்கு (இருப்பு), பாளையங்கோட்டை என்ற விலாசம் எழுதி ஒப்பந்தங்கள் கொடுக்கப்பட வேண்டும். கிடைத்த ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 2-15 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்டவர்கள் முன்னிலையில் கோட்டப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் நமுனுக்கள் முதலியன அலுவலக நேரங்களில் மேலாளரிடமிருந்து 29–12–1971 முதல் 27–1–1972 வரை ரூ. 5.18 வரி உட்பட (ஒவ்வொன்றுக்கும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை எக் காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

முன் வைப்புத் தொகைக்கான சான்றுகள் இணைக்கப்படாத ஒப்பந்தங்களும், காலதாமதமாக வரும் ஒப்பந்தங்களும் கோட்டப் பொறியாளர் பெயருக்கு மாற்றப்படாத அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரங்களுடன் வரும் ஒப்பந்தங்களும்தள்ளுபடி செய்யப்படும்.

வேலைக்குரிய முன் வைப்புத் தொகை அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி திருநெல்வேலி தெற்குக் கோட்ட எல்லையிலுள்ள அரசினர் கருவூலத்தில் ''வருவாய் வைப்புத் தொகை'' என்ற தலைப்பில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும். முன் வைப்புத் தொகைக்காக டிமாண்ட் டிராப்ட் இணைக்கப்படுவதாயிருந்தால் அவை திருநெல்வேலி ஸ்டேட் பாங்கில் மாற்றத் தக்கதாக இருக்க வேண்டும். இது தவிர முன் வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப்படுகின்ற வங்கி உத்திரவாதத்துடன் ரிசர்வ் வங்கியின் அங்கீகாரமும் பெற்று அவ்விரண்டையும் இணைக்கப்பட வேண்டும். இவ்விதம் ரிசர்வ் வங்கியில் அங்கீகாரம் இணைக்கப்படாத ஒப்பந்தங்களும் தள்ளுபடி செய்யப்படும். பரிசுப் பத்திரங்கள் முன் வைப்புத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**எஸ். கிருஷ்ணவிஜயன்,**

கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.து.), திருநெல்வேலி தெற்கு

பாளையங்கோட்டை,
18–12–1971.

(த. 90)

---

## ஏலம்

### வேளாண்மைத் துறை

திருவாரூர் வேளாண்மைக் கருவிகள், பணிமனைப் பொதுக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 17—1—1972 மாலை 3 மணிக்கு நிலம் சமன்படுத்தும் TD. 14, TD. 9, TD. 6, T. 6 இயந்திரங்களும், அதன் புதிய மற்றும் உதிரி உறுப்புகளும் (Buldozer spare parts) மற்றும் இயந்திரக் கலப்பையின் உதிரி உறுப்புகளும் (Tractor spare parts) கலப்பையின் உறுப்புகளும் (Plough parts) பொது ஏலத்தில் விடப்படும். மேலும் பழைய தள்ளுபடி செய்யப்பட்ட மேற்படி இயந்திரங்களின் உதிரி பாகங்களும், அதே தினத்தன்று காலை 10 மணிக்கு ஏலம் விடப்படும்.

மேற்கூறிய புதிய உதிரி உறுப்புகளின் அட்டவணையையும், ஏலம் பற்றிய குறிப்புரைகளும், மேற்படி அலுவலகத்தில் 1 ஜனவரி 1972 முதல் 11 ஜனவரி 1972 வரை ரூபாய்1.04 (ரூபாய் ஒன்றும் 4 காசு மட்டும்) காசோலை மூலமாகவோ, அல்லது 'டிமாண்ட் டிராப்ட்' மூலமாகவோ அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். (இந்த ரூபாய் திருப்பிப் பெற இயலாது.) மேற்கூறிய இணை உறுப்புகளை எல்லா அலுவலக வேலை நேரத்திலும் பார்வையிடலாம்.

அரசின் நலம் கருதி, ஏலத்தை ரத்து செய்யவோ, ஒத்தி வைக்கவோ, பொதுக் கண்காணிப்பாளருக்கு உரிமை உண்டு.

**ஆர். குப்புராஜ்,**

பொதுக் கண்காணிப்பாளர், அரசு வேளாண்மைக் கருவிகள் தொழிற் கூடம், திருவாரூர்.

(த. 123)

---

## ஒப்பந்தப் புள்ளி

### தஞ்சாவூர் நகராட்சி

நகராட்சி நகர் நலப் பிரிவிற்கு இரண்டு டீசல் டிராக்டர்கள், இரண்டு டிரயிலர்கள் வழங்குவதற்கான முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை நகராட்சி ஆணையர் அவர்களால் 6 ஜனவரி 1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மற்ற விவரங்கள் ஆணையருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

**கே. சக்ரபாணி,**

ஆணையர் (பொறுப்பு).

நகராட்சி அலுவலகம்,
தஞ்சாவூர்-2,

(த. 124)

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர் வடிகால் வாரியம்) பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில், பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்ததாரர்களிடமிருந்து எண். 17, சர் பி.டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், 10–1–1972 திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3–30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் : ஸ்ரீரங்கம் குடிநீர்ப் பெருக்குத் திட்டம்—50,000 லிட்டர் கொள்ளளவுள்ள உயர்மட்ட உறுதி பெறு கற்காரை நீர்த்தாங்கி கட்டுதல்.

ஒப்பந்த வகை : மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை: ரூ. 500 (ரூபாய் ஐந்நூறு மட்டும்)

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி-3 பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்படவேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு: நான்கு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை : ரூ. 5·18 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து பி 15, தில்லை நகர் மெயின் ரோடு, திருச்சி-3, என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 7–1–1972 வெள்ளி மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம்,
குடிநீர், வடிகால் வாரியம்.

மதுரை-2,
15–12–1971.

(த. 78)

---

## இராசிபுரம் நகராட்சி

கீழ்க்கண்ட பணியைச்செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும்.

| | வேலையின் பெயர். | மதிப்பீட்டுத் தொகை. | கட்டுத் தொகை. |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1 | பேருந்து நிலையத்தில் பிரயாணிகள் தங்கும் விடுதி கட்டுதல். | 99,400 | 3,950 |
| 2 | வி. நகர் 5, 6, 7 தெருக்களுக்குத் தார் போடுதல். | 24,000 | 600 |
| 3 | கோனேரிப்பட்டி எக்ஸ்டன்ஸன் I & II சபாபதி மில்தெரு செட்டியண்ண நாயக்கன் தெரு கோனேரிப்பட்டி ஆதித்திராவிடர் தெரு தார் போடுதல். | 24,000 | 600 |
| 4 | வாரச் சந்தையில் 5 கடைகள் கட்டுதல் முதல் பிளாக். | 14,000 | 350 |
| 5 | வாரச் சந்தையில் 5 கடைகள் கட்டுதல் இரண்டாவது பிளாக். | 14,000 | 350 |

இன்னும் இதர 14 வேலைகள் சாக்கடை கட்டுதல் தார் ரோடு போடுதல் மராமத்து செய்தல் முதலியன. மொத்த வேலைகளின் மதிப்பீடு ரூ. 2,27,005. மற்ற விவரங்களுக்கு அஞ்சல் மூலமோ அல்லது நேரிலோ அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**வெ. பாலசுப்ரமணியன்,**
ஆணையர்.

(த 36)

## ஒப்பந்தப் புள்ளி

### வனத்துறை

கீழ்க்காணும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி களை ''வனப் பொறியாளர், திருச்சி'', தமிழ்நாடு, ஆளுநர் சார்பாக வரவேற்கிறார்.

'' உள்ளூர்தாண்டா—பர்கூர் சாலை அமைத்தல்—6.4 கி. மீ. பர்கூர் வனச்சரகம், கோவை வடக்கு வனக்கோட்டம். ''

அச்சாரம் ரூ. 4,200 (இ.எம்.டி.).

ஒப்பந்தப்புள்ளி பெற்றுக் கொள்ளவும், திறக்கவும் கடைசி நாள் 5–1–1972, நேரம் முறையே மாலை 3-00 மணி—3-05 மணி.

2. ஒப்பந்தப் பத்திரங்களை ''வனப் பொறியாளர், 1-எ, ராயல் ரோடு, கன்டோன் மென்ட், திருச்சி-1 '' என்ற முக வரியிலிருந்து ரூ. 1.04 செலுத்தி 25-12-1971 முதல் 4-1-1972 வரை அலுவலக வேலை நேரங் களில் எல்லா வேலை நாட்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**ச. சண்முகசுந்தரம்,**
வனப் பொறியாளர்.

திருச்சி,
21–12–1971.
(த.93)

## ஒப்பந்தப் புள்ளி

### ஸ்டான்லி மருத்துவமனை

28–1–1972 வெள்ளிக்கிழமை அன்று பகல் 2 மணி வரை முதல் வர், அரசினர் ஸ்டான்லி மருத் துவ மனை, சென்னை-1 அவர்க ளால் 1–4–1972 முதல் 31–3–1973 முடிய உள்ள ஓராண்டுக் காலத்திற்கு தேங்காய் நார் மெத்தை, பஞ்சு மெத்தை, தலையணைகள் இவைகளில் பஞ்சு அல்லது நார் அடைத்துத் தைப் பதற்கும், பஞ்சு, தரையைச் சுத் தம் செய்யும் நூல் மட்டைகள் ஆகிய பொருள்களை வழங்கு வதற்கும், 1–4–1972 முதல் 31–3–1973 முடிய உள்ள ஓராண்டுக் காலத்திற்குத் துவிச் சக்கர வண்டிகளை நிறுத்தி வைப்பதற்கான இடத்தைக் குத் தகை எடுப்பதற்கும், அரக்கு முத்திரையிட்ட உறைகள் பெற் றுக் கொள்ளப்படும் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகின் றது. ஒப்ப விவரத்தினுடைய நிபந்தனைகள், ஒப்ப விவர நமூ னக்கள், வழங்கும் பொருள் களுடைய விவரங்கள் ஆகியவை களை ஸ்டான்லி மருத்துவ மனை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இவ்விவரங் களைப் பெறுவதற்கு ரூபாய் ஐந்தை '' XXIII Medical J. Misc தலைப்பின் கீழும் மூன்றரை சத விகித விற்பனை வரி 18 காசுகளையும் அதற்கு 5 சத விகித வருமான மேல் வரி XII Sales Tax-Receipts under the Sales Tax Act-General Sales Tax'' என்ற தலைப்பின் கீழும் ரிசர்வ் வங்கியிலோ அல் லது ஏதாவதொரு ஸ்டேட் வங்கிகிளையிலோ அல்லது அரசாங் கத்தில் ஏதாவதொரு கருவூலத் திலோ செல்லுச் சீட்டு மூலம் செலுத்தி அந்தச் செல்லுச் சீட்டை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பி அளிக்கப்படமாட்டாது.

டாக்டர் **எம். ஜி. பிரபு,**
முதல்வர்

(த.102)

## ஒப்பந்தப் பள்ளி

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார் பிலும், கீழ்க்காணும் வேலைக் கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், வடி கால் வாரியம்) பொதுப் பணித் துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப் பந்தக்காரர்களிடமிருந்து எண் 17, சர் பி. டி. ராஜன் சாலை மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச்சுகாதாரப் பொறி யியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், 19–1–1972 பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாள ராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவ ருடைய அலுவலகத்தில் வைத் துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்:—குழித்தலை குடிநீர்த் திட்டம்—இரண் டாம் நிலை—தலைமை நீரேற்று நிலையம் — நீரேற்றிகளும் அதன் பாகங்களையும் அளித் தல்—நிர்மாணித்தல் சம்பந்த மாக.

ஒப்பந்த வகை:—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை:— ரூ. 1,600 (ரூபாய் ஆயிரத்து அறுநூறு மட்டும்).

இத் தொகை, கருவூலச் செலான் பண உத்திரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்திரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடி வில் திருச்சிராப்பள்ளி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகை யில் செலுத்தப்பட்டு அதற் கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு:—ஆறு மாதம்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை. —ரூ. 15.55 (ரூபாய் பதினைந் தும், காசு ஐம்பத்தி ஐந்து மட்டும், விற்பனை வரி உட் பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருச்சிராப்பள்ளி பொதுச் சுகாதாரப் பொறி யியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து பி-15, தில்லை நகர் மெயின் சாலை, திருச்சிராப்பள்ளி-3 என்ற முக வரியில் உள்ள அவர் அலுவலகத் தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 17-1-1972 மாலை 5 மணி வரையில் ஒப்பந் தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
பொதுச் சுகாதாரப் பொறி யியல் வட்டம், குடிநீர், வடி கால் வாரியம்.

மதுரை-2,
10–12–1971.
(த.106)

## தொழில் வணிகத் துறை

வேலையின் பெயர் : கிண்டி தொழிற்பேட்டையில் வட புறத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளில் காரை வேலை உட்பட மண் வடிகால் அமைத்தல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் மேற்கூறப்பட்ட வேலையை மேற்கொள்வதற்காக தொழில் துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்ததாரர் களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் 18—1—1972 அன்று மாலை 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1. ஒப்பந்த வடிவம் | .. .. | மொத்தத் தொகை. |
| 2. கட்டுத் தொகை | .. | ரூபாய் 3,200 (ரூபாய் மூவாயிரத்து இருநூறு மட்டும்.) |
| 3. மாதிரி வரைபடத்துடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையும், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலைக்குரிய விற்பனை வரியும் சேர்த்து. | | ரூபாய் 10.40. |
| 4. வேலையை முடிக்க வேண்டிய காலம். | | ஆறு மாதங்கள். |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர், வடக்குப் பிரிவு, தொழில் வணிகத்துறை, தொழிற்பேட்டை கிண்டி-32 என்னும் முகவரியில்உள்ள நிருவாகப்பொறியாளர் (கட்டுமானம்) வடக்குக் கோட்டம் அவர்களது அலுவலகத்தில் 20—12—1971 அன்று முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்டத் தொகையான ரூபாய் 10.40-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ 'XXIX' இண்டஸ்டிரீஸ்—அதர் ரசிப்ட்ஸ்'' என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) வடக்குக் கோட்டம் தொழில் வணிகத்துறை, தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32, அவர்களது கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

கட்டுத் தொகையைச் சலான் வடிவிலோ, ''கால் டிபாசிட்'' ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) வடக்குக் கோட்டம், அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவீதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**சி. பி. மாத்யூ,**
மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமானப் பகுதி.

சென்னை—2.
(த.85)

---

இராசிபுரம் நகராட்சிக்கு 1972—73-ஆம் ஆண்டிற்கு (1—4—1972 முதல் 31—3—1973 முடிய) கீழே குறிப்பிட்டவைகள் விநியோகம் செய்வதற்காக 20—1—1972-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4-00 மணிவரையில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகரவை ஆணையர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் 20—1—1972-ஆம் தேதி மாலை 4-30 மணிக்கு அச்சமயம் நேரில் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

இதர விவரங்கள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

| | விவரம். | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 | நகராட்சி குப்பை வண்டிகளுக்கு மாடுகள் விநியோகம் செய்ய. | 100 |
| 2 | நகராட்சிக்கு வேண்டியவைகளை அச்சிடுதல் | 25 |
| 3 | எழுது பொருள்கள் முதலிய சாமான்கள் விநியோகம் செய்ய. | 25 |
| 4 | கூடை, விளக்குமாறு, சுண்ணும்பு விநியோகம் செய்ய. | 25 |

**வெ. பாலசுப்ரமணியன்,**
ஆணையர்.

இராசிபுரம்.
17—12—1971.
(த.86)

## நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை

அரசாங்கச் சாலைகளின் 1972–73-ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்பு வேலைகள்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் அவர்களுக்காகவும் ஆளுநர் அவர்களின் சார்பாகவும், நாமக்கல் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறைக் கோட்டப் பொறியாளர் அவர்களால் நாமக்கல் கோட்டத்திற்குட்பட்ட அரசாங்கச் சாலைகளின் 1972–73-ஆம் ஆண்டிற்கான எல்லா பராமரிப்பு வேலைகளுக்கும் அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) நாமக்கல் அவர்களால் அவர்களது அலுவலகத்தில் 28—1—1972-ஆம் நாள் பிற்பகல் 3-30 மணி வரை (அலுவலகக் கடிகார மணிப்படி) பெற்றுக் கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் 28—1—1972 அன்றே பிற்பகல் 4-00 மணிக்கு ஒப்பந்தக்காரர் அல்லது அவர்கள் நியமனம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் நாமக்கல் (நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித் துறை) பொறியாளர் அலுவலக மேலாளர் அவர்களிடம் ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 3.11 (விற்பனை வரி உட்பட இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது) வீதம் கட்டணம் செலுத்தி அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் காலை 10-30 முதல் மாலை 5 வரை 10—1—1972 முதல் 27—1—1972 வரை விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் பத்திரங்கள் எக்காரணத்தைக் கொண்டும் 28—1—1972-ஆம் நாள் கொடுக்கப்பட மாட்டாது.

கட்டுத் தொகை இல்லாமல் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் அங்கீகரிக்கப்பட மாட்டாது. கட்டுத்தொகை கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) நாமக்கல் அவர்கள் சார்பில் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின்கீழ் அரசாங்கக் கருவூலத்தில் செலுத்தி, செல்லுசீட்டை (செலான்) ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். தமிழ்நாடு அரசுக் கடன் பத்திரங்கள் கோட்டப் பொறியாளரின் சார்பில் மாற்றியதும் பேங்க் டிராப்டும் கட்டுத் தொகைக்காகப் பெற்றுக் கொள்ளப்படும். பாங்கு காரண்டி முன் வைப்புத் தொகையாக ஏற்றுக் கொள்ள வேண்டுமானால் ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் மேற்படி பாங்க் காரண்டிற்கு உண்டான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும். அப்படித் தவறினால் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப் புள்ளியுடன் வருமான வரி விற்பனை வரி சான்றிதழ் ஆகியவைகளை ஏற்கனவே சமர்ப்பிக்காமலிருந்தால் அவைகளை இணைத்து அனுப்பவேண்டும். அப்படி அனுப்பாவிடில் அவர்களுடைய ஒப்பந்தப் புள்ளிகள் அங்கீகரிக்கப்படாமல் இருக்க ஏதுவாகும்.

வேலை விவரங்கள் ஒவ்வொரு வேலைகளும் முன்வைப்புத் தொகை ஆகிய விவரங்கள் அடங்கிய அட்டவணை இவ் வலுவலக அறிவிப்புப் பலகையிலும் ஒவ்வொரு உதவிப் பொறியாளர் பிரிவு அலுவலகர் காரியாலய அறிவிப்புப் பலகைகளிலும் 10—1—1972-ஆம் நாளிலிருந்து விளம்பரப் படுத்தப்படும்.

**கு. நடராஜன்,**
கோட்டப் பொறியாளர்.

நாமக்கல்
24—12—71.

(த.28)

---

### வனத்துறை

கீழ்க்காணும் வேலைகளை மேற்கொள்ளுவதற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாக சேரங்கோடு தேயிலைக் கோட்ட வன அலுவலர் அவர்களால் 17—1—1972-ஆம் தேதி காலை 12-30 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒவ்வொரு ஒப்பந்த விண்ணப்பமும் கீழ்க் குறிப்பிட்ட வைப்புத் தொகை அரசுக் கருவூலத்தில் செலுத்திய சலானுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

| | வேலையின் விவரம். | மதிப்பீட்டுத் தொகை. | வைப்புத் தொகை. |
|---|---|---|---|
| 1 | சேரங்கோடு மெயின் ரோடில் கட்டுக்கள் (சோலிங்)புதைத்தல் | 22,700 | 750 |
| 2 | சேரங்கோடு கோட்ட ரோடு இரண்டில் கட்டுக்கள் புதைத்தல். | 21,800 | 700 |
| 3 | சேரங்கோடு மெயின் ரோடில் 15 கல்வர்டுகள் கட்டல். | 12,500 | 400 |
| 4 | சேரங்கோடு வளைவு ரோடில் கட்டுக்கள் புதைத்தல். | 6,250 | 200 |
| 5 | சேரங்கோடு 1970-71 நர்சரிக்குப் போகும் ரோடில் கட்டுகள் புதைத்தல். | 9,500 | 300 |
| 6 | சேரங்கோடு ரோடு நெம்பர் 1 & 1-ஏல் கட்டுக் கற்கள் புதைத்தல். | 9,500 | 300 |

மேற்குறிப்பிட்ட வேலைகள் 31—3—1972-க்குள் முடிக்கப்படவேண்டும். ஒப்பந்த நமூனாவும் மற்றும் ஒப்பந்த விவரங்களும் ரூ. 4.12 சேரங்கோடு தேயிலைக் கோட்ட அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

**க. க. சோமசுந்தரம்,**
கோட்ட வன அலுவலர்.

(த.83)

## நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித் துறை, கிருட்டிணகிரிக் கோட்டம்

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாக கிருட்டிணகிரி நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறைக் கோட்டத்தில் உள்ள அரசினர் சாலைகளின் 1972—73 வருடத்திற்கான பராமரிப்பு வேலைகளுக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (டெண்டர்) அட்டவணை நமூனுக்களில் கிருட்டிணகிரிக் கோட்டப் பொறியாளர் அவர்களால் அவர்களுடைய அலுவலகத்தில் 1972-ஆம் வருடம் ஜனவரி மாதம் 19-ஆம் தேதி புதன் கிழமை அன்று பிற்பகல் 2—00 மணி (இரண்டு மணி) வரையில் (அலுவலகக் கடிகாரப்படி) பெற்றுக் கொள்ளப்படும். பெற்றுக்கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் அன்றைய தினம் பிற்பகல் 2—15 மணி அளவில் (இரண்டு மணி பதினைந்து நிமிடம்) ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்கள் நியமனம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த அறிவிப்புப் பற்றிய விவரங்கள் குறிப்பிட்ட நமூனுக்களும், பொதுவான நிபந்தனைகளும் அட்டவணையும், மேற்படி விவரக் குறிப்புகளும் கிருட்டிணகிரி கிராமப் பொறியியல் பணித் துறைக் கோட்டப் பொறியாளர் அலுவலக மேலாளரிடம் 10—1—1972 முதல் 18—1—1972 வரை அலுவலக நேரங்களில் (பணிபுரியும் நாட்களில்) விண்ணப்பம் எழுதிக் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான அடக்கவிலை ரூ. 5.18 (ரூபாய் ஐந்து காசு பதினெட்டு) விற்பனை வரி உட்பட செலுத்தியாக வேண்டும். இந்தத் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது. ஒப்பந்த அறிவிப்பு நமூனுக்கள் ஒப்பந்த அறிவிப்பு அன்று அதாவது 19—1—1972 அன்று எக்காரணம் கொண்டும் விற்கப்படமாட்டாது.

வேலை விவரங்கள், ஒவ்வொரு வேலைக்கு உண்டான வைப்புத் தொகை விவரங்கள் அடங்கிய அட்டவணை இவ்வலுவலகத்திலும் அதன் உட்கோட்ட உதவிப் பொறியாளர் அலுவலகங்களிலும் பிரிவு அலுவலகங்களிலும் உள்ள அறிவிப்புப் பலகைகளில் 10—1—72 தேதியில் இருந்து விளம்பரப்படுத்தப்படும்.

வேலைக்கான வைப்புத் தொகை கிருட்டிணகிரிக் கோட்டப் பொறியாளர் பெயரில் அரசாங்கக் கருவூலத்தில் ''வருவாய் வைப்புத் தொகை'' என்ற தலைப்பில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்த அறிவிப்புடன் இணைக்க வேண்டும். செல்லுச் சீட்டின்றி வரும் ஒப்பந்த அறிவிப்புகள் கண்டிப்பாகத் தள்ளுபடி செய்யப்படும். ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த அறிவிப்புடன் வருமானவரிச் விற்பனைவரி சான்றிதழ்களையும் அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்பாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

**ச. பாலகிருஷ்ணன்,**
கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.),
கிருட்டிணகிரி.

(த. 80)

## அரக்கோணம் நகராட்சி

கீழ்கண்ட வேலைகளுக்கு அரக்கோணம் நகராட்சி ஆணையரால் 12—1—1972-ஆம் தேதி மாலை 4 மணிவரை முடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 4.15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி நமூனுக்களையும் முழு விவரங்களையும் நகராட்சி அலுவலகத்தில் வேலை நேரங்களில் 11—1—1972-ஆம் தேதி வரை மனுச்செய்து ஒவ்வொரு பிரதிக்கும் ரூ. 5·00 (விற்பனை வரி நீங்கலாக) நகராட்சிக் கருவூலத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

| வ. எண். | வேலையின் பெயர். | மதிப்பீடுத் தொகை. | முதல் கட்டுத் தொகை. |
|---|---|---|---|
| 1 | காந்திரோடு முதல் வடதர்ம ராஜாகோயில் தெரு வரை சத்தியமூர்த்தி தெரு ராஜாஜி 1வது தெரு வழியாக ராஜாஜி 2 மற்றும் 3 தெருக்களுக்கும் உட்பட தார்சமதளம் அமைத்தல், தாங்கு சுவர் கட்டுதல் மற்றும் குறுக்குப் பாலங்களைப் பழுது பார்த்தல். | 51,000 | 1,275 |
| 2 | காவனூர் ரோட்டிற்குக் கம்பு குட்டித் தெரு சந்திப்பிலிருந்து நகராட்சி எல்லை வரை தார் சமதளம் அமைத்தல், தாங்கு சுவர் கட்டுதல் மற்றும் குறுக்குப் பாலங்களுக்கு மராமத்து வேலைகள். | 51,000 | 1,275 |

அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர் மேற்கொண்டு 4-வது காலத்தில் குறிப்பிட்டுள்ள முதல் கட்டுத் தொகைக்குச் சமமான தொகையை மறுபடியும் செலுத்தவேண்டும்.

**க. ரா. குட்டியப்பன்,**
நகராட்சி ஆணையர்.

அரக்கோணம்,
18—2—1971.

(த.78)

## அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

கீழ்க்கண்ட பதவிகளுக்கான மனுக்கள் 8—2—1972 மாலை 5·00 வரை வரவேற்கப் படுகின்றன:—

1. தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத் துறை கீழ்நிலைப் பணியாளர் தொகுதியில் கள ஆய்வு விளக்க நிலைய (நல்வாழ்வுக் கல்விக் கழகம்) ஆசிரியர் பதவி—1 நியமனம்.

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 400—15—475—20—575—25—650.

வயது : 1—7—1972-ல் 30 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும்.

கல்வித் தகுதி : (அ) பி. ஏ. அல்லது பி.எஸ்சி. பட்டத்துடன் பி.டி. பட்டமும் பெற்று 5 ஆண்டுகள் கல்வி கற்பித்துள்ள அல்லது ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அனுபவம் (அல்லது)

(ஆ) பி. ஏ. அல்லது பி.எஸ்சி. பட்டத்துடன் எம். ஈடி. பட்டமும் பெற்று 2 ஆண்டுகள் கல்வி கற்பித்துள்ள அல்லது ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அனுபவம்.

2. தமிழ்நாடு கல்வி கீழ்நிலைப் பணியாளர் தொகுதியின் கீழ், சேலம் அரசினர் பொறியியல் கல்லூரியில் 'போர்மேன் இன்ஸ்ட்ரக்டர்' பதவி—1 நியமனம்.

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 400—15—475—20—575—25—650.

வயது : 1—7—1972-ல் 35 வயதுக்குக்குறைவாக இருக்க வேண்டும். உடல் ஊனமுற்றோருக்கு 10 ஆண்டுகள் வரை வயது வரம்பு தளர்த்தப்படும்.

கல்வித் தகுதி : (1) மாநில தொழில் நுட்பக்கல்வி மற்றும் பயிற்சிக் கழகத்தினால் வழங்கப்பட்ட இயந்திரப் பொறியியல் டிப்ளமாவுடன், அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பொறியியல் பணிமனையில் 3 ஆண்டுகளுக்குக் குறையாத செய்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது (2) தொழில் வணிகத்துறை அல்லது சென்னை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அளித்துள்ள ஒரு தொழிற்கல்வி நிலையச் சான்றிதழுடன் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பொறியியல் பணிமனையில் 7 ஆண்டுகளுக்குக் குறையாத செய்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும். மேற் கூறப்பட்ட அனுபவம் என்பதற்குக் கீழ்க்கண்ட தொழில்களில் ஒன்றிலோ அல்லது அதற்கும் அதிகமாகவோ அனுபவம் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும்.

(அ) கார்பண்டரி மற்றும் அல்லது பேட்டர்ன் மேக்கிங்.

(ஆ) பிட்டிங். (இ) ஸ்மித்தி.

(ஈ) பௌண்டரி. (உ) மெசினிஷ்ட்.

(ஊ) வெல்டிங். (எ) டூல் மேக்கிங்.

(ஏ) டர்னிங்.

**3. தமிழ்நாடு நிலைப்பணியாளர் தொகுதியின் கீழ் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் உள்ள நூலகத்தில் நூலகர் பதவி—1 நியமனம்.**

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூபாய் 275—10—375—15—450.

வயது : 1—7—1972-ல் 30 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும். உடல் ஊனமுற்றவர்களைப் பொறுத்த வரையில் உச்ச வயது வரம்பு 10 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும்.

கல்வித்தகுதி : மானியம் வழங்கும் காரணத்தை முன்னிட்டு பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக் கழகத்தின் ஒரு பட்டம் (ஆ) நூலக அறிவியல் சான்றிதழ் அல்லது டிப்ளமா (இ) தமிழ்மொழி அல்லாத ஆனால் மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற தென் இந்திய மொழிகளில் ஏதேனும் ஒன்று அல்லது அதிகமான மொழிகளில் எழுதுதல் மற்றும் படிக்கும் திறமை.

**4. தமிழ்நாடு பொறியியல் கீழ்நிலைப் பணியாளர் தொகுதியின் கீழ், மைய பாலிடெக்னிக்கில் மீனள தொழில் நுட்பவியல் மற்றும் கடற்போக்குவரத்துப் பொறியியல் பிரிவில் முதுநிலை பயிற்றுநர் பதவி —1 நியமனம்.**

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூபாய் 400—15—475—20—575—25—650.

வயது : 1—7—1972-ல் 30 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும். உடல் ஊன முற்றவர்களைப் பொறுத்த வரையில் உச்ச வயது வரம்பு 10 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும்.

கல்வித் தகுதி : (அ) விலங்கியல் இளநிலைப் பட்டத்தில் முதல் அல்லது இரண்டாம் வகுப்பில் தேர்வு பெற்றிருப்பதுடன் மீனளம் பற்றி 2 ஆண்டுகள் கல்வி கற்பித்த அல்லது செய்முறை அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.

அல்லது (ஆ) மாநில தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியத்தினுல் வழங்கப்பட்டுள்ள மீனள தொழில் நுட்பவியல் மற்றும் கடற்போக்குவரத்துப் பற்றிய டிப்ளமாவுடன் ஏதேனும் ஒரு பாலிடெக்னிக்கல் இளநிலை பயிற்றுநர் நிலைமைக்குக் குறையாமல் அல்லது அதற்குச் சமமான பதவிக் வகித்து 2 ஆண்டு கல்வி கற்பித்த அல்லது செய்முறை அனுபவம் பெற்று இருக்க வேண்டும்.

**5. தமிழ்நாடு தொழில் துறைக் கீழ்நிலைப் பணியாளர் தொகுதியின் கீழ், தூத்துக்குடியில் உள்ள பொட்டாசியம் குளோரைடு நிலையத்தில் உதவி இரசாயனப் பொறியாளர் பதவி—2 நியமனங்கள்.**

சம்பளம்: மாதம் ஒன்றுக்கு ரூபாய் 400—15—475—20—575—25—650.

வயது : 1—7—1972-ல் 30 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும்.

கல்வித் தகுதி : (1) ஏதேனும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது வாரியத்தின் ஒரு இரசாயனப் பொறியியல் பட்டம் அல்லது வாரியத்தின் இரசாயனத் தொழில்நுட்பவியலிலாவது அல்லது இரசாயனப் பொறியியலிலாவது ஒரு டிப்ளமா பெற்றிருக்க வேண்டும்.

மற்றும் (2) முன்னேடித் தொழிற்சாலை ஆய்வு அல்லது இரசாயனத் தொழிற்சாலை அமைப்பு முறை அல்லது இரசாயனத் தொழிற்சாலையை இயக்குவித்தலில் ஒரு ஆண்டிற்குக் குறையாத செய்முறை அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.

**6. தமிழ்நாடு பொதுக் கீழ்நிலைப் பணியாளர் தொகுதியின்கீழ், மாநிலத் துறைமுகத் துறையில் இயந்திர மேற்பார்வையாளர் பதவிகள்—3 நியமனங்கள், மின்சார மேற்பார்வையாளர் —2 நியமனங்கள்.**

சம்பளம்.: மாதம் ஒன்றுக்கு ரூ. 325—15—475—20—575—25—650.

பட்டதாரிகளுக்கு வழக்கமான படிகளுடன் ரூபாய் 400 அடிப்படை ஊதியம் கொடுக்கப்படும்.

வயது : 1—7—1972-ல் 30 வயதுக்குக் குறைவாக இருக்கவேண்டும்.

கல்வித் தகுதி :

I. இயந்திர மேற்பார்வையாளர் :

(1)(அ) இயந்திரப் பொறியியல் பட்டம் அல்லது

(ஆ) சென்னையில் உள்ள மாநில தொழில் நுட்பக்கல்வி மற்றும் பயிற்சி வாரியம் அல்லது இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு நிறுவனம் அல்லது வாரியம் அல்லது வேறு ஏதேனும் மாநில அரசுகள் வழங்கியுள்ள இயந்திரப் பொறியியல் டிப்ளமா மற்றும்,

(2) பட்டம் அல்லது டிப்ளமா பெற்றபின், பெரிய சென்டிரியூகல் அல்லது சென்டிரி மெட்டல் பம்புகள், இரும்பு அமைப்புகள் வின்செஸ், இன்டர்னல் கம்பஷன் இயந்திரங்கள், நீராவி இயந்திரங்கள், கொதிகலன்கள், மற்றும் பணிமனை இயந்திரங்கள் ஆகியவைகளை அமைத்தல், இயக்குதல், பராமரித்தல் ஆகியவற்றில் 3 ஆண்டுகளுக்குக் குறையாத செய்முறை அனுபவம்.

II. மின்சார மேற்பார்வையாளர்கள் :

(1) மின்சாரப் பொறியியல் பட்டம் (அல்லது) (ii) சென்னையிலுள்ள மாநில தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியம் அல்லது இந்திய அரசினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு நிறுவனம் அல்லது வாரியம் அல்லது ஏதேனும் ஒரு மாநில அரசு வழங்கியுள்ள மின்சாரப் பொறியியல் டிப்ளமா மற்றும்,

(2) பட்டம் அல்லது டிப்ளமா பெற்றபின் டிரான்ஸ்பார்மர், ஸ்விட்சி கியர்கள் விநியோக லைன்கள் மற்றும் சுமார் 100 குதிரைத்திறன் கொண்ட ஏ.சி. மோட்டார்கள் ஆகியவைகளை அமைத்தல், இயக்குதல், பராமரித்தல் ஆகியவற்றில் 3 ஆண்டுகளுக்குக் குறையாத செய்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

குறைந்த பட்சப் பொதுக் கல்வித் தகுதியிலும் மேம்பட்ட பொதுக் கல்வித் தகுதியுடைய தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைச்சாதியினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை. ஏனைய தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைச்சாதியினர் ஆகியோருக்கு உச்ச வயது 5 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு ஆணையால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், முன்னாள் தேசிய மாணவர் படையில் 2—1—1963-ல் அல்லது அதற்குப் பிறகு முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபிஸ் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜ்ண்ட் மேஜராகப் பணியில் அமர்த்தப்பட்டவர்களுக்கும் வயது வரம்பில் சலுகை உண்டு. தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து திரும்பி வந்தவர்கள் 1-7-1972-ல் 40 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களாக இருப்பினும் 1—1—1964-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்தவர்களாக இருப்பினும், இலங்கை, பர்மா, ஆகியவற்றிலிருந்து அகதிகளாகத் திரும்பியவர்களாக இருப்பினும் வயது வரம்பு உட்பட கல்வித் தகுதி தளர்த்தப்படும். விவரங்களையும் மனுவடிவங்களையும் ''செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2'' என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி அத்துடன் 23 செ.மீ. நீளமுள்ள சுய முகவரி எழுதப்பட்ட, அஞ்சல் தலை (30 காசு) ஒட்டிய 'நூல் அஞ்சல்' என்று மேலே எழுதப்பட்ட உறையையும் உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

(த. 89)

## வேலைவாய்ப்பு

ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தில் மேலஉளூர் மருத்துவ மனையில் காலியாக உள்ள டாக்டர் வேலைக்கு ஒரு எம். பி. பி.எஸ். தகுதி பெற்ற மருத்துவ அலுவலர் தேவைப்படுகிறார். 1970-ஆம் ஆண்டு தமிழக அரசு இரண்டாவது புதிய சம்பள விகிதப்படி சம்பளமும் இதர படிகளும் வழங்கப்படும். விருப்பம் உள்ளவர்கள் உடனடியாக விண்ணப்பத்தைக் கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**சா. சீனிவாசன்,** ஆணையர்.

ஊராட்சி ஒன்றியம், ஒரத்தநாடு,
(த.109) தஞ்சாவூர் மாவட்டம்.

## ஏல விற்பனை

நாளது 5—1—1972-ஆம் ஆண்டு அன்று பகல் 3 மணி அளவில் அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையின் அலுவலகக் கட்டடத்தில் அதிகாரிகள் உணவு விடுதி நடத்துவதற்கான ஏலம் நடைபெறும்.

மேற்கண்ட உணவு விடுதி நடத்துவதற்கான நிபந்தனைகளைக் கீழே கையொப்பமிட்டுள்ள அலுவலருடைய அலுவலகத்திலிருந்து நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம். கடிதம் மூலமாகப் பெறுவதானால் அதற்குரிய அஞ்சலக வில்லைகள் ஒட்டப்பட்ட விலாசமிட்ட உறை (கவர்) ஒன்றையும் அனுப்ப வேண்டும்.

**டாக்டர் எம். ஜி. பிரபு,** எம்.டி.
எப்.சி.சி.பி.(யு.எஸ்.ஏ.),
முதல்வர்.

அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனை, சென்னை-1,
18—12—1971.

(த.103)

## வீட்டு வசதி வாரியம்

## சென்னை கிழக்குக் கோட்டம்

எண். எம். இ.4/1487/71, நாள் 16—12—71.

வியாசர்பாடி அருகே வடசென்னை புறநகர்ப் பகுதித் திட்டத்திற்கான கீழ்க்கண்ட வேலைகளுக்காக வேலையின் பெயர் ஒப்பந்ததாரரின் பெயர் ஆகியவை உறைமீது குறிப்பிடப்பட்ட மூடி முத்திரையிட்ட தனித்தனியான ஒப்பந்தப் புள்ளிகள் அதனதன் பெயர்களுக்கு எதிரில் குறிப்பிடப்பட்ட நாட்களில் மாலை 3 மணிக்குமுன் கிடைக்குமாறு அடியில் கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அப்போது வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் அதே நாளில் மாலை 3-05 மணிக்குப் பிரிக்கப்படும்.

| எண்ணும், வேலையின் விவரம். | வேலையின் மதிப்பீடு. ரூ. | கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்தப் புள்ளி விலை (விற்பனை வரி தனி). ரூ. | ஒப்பந்தப் புள்ளிகள் கிடைக்கும் தேதி. | ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்குரிய கடைசி தேதி. |
|---|---|---|---|---|---|
| 1. கழிவுநீர் வெளியேற்றும் பம்பிங் கூடம் கட்டுதல். | 1,50,000 | 2,250 | 10 | 10—1—72 | 22—1—72 |
| 2. நடுத்தர வருமானப் பிரிவு வகைக் குடியிருப்புகள் ஒன்றில் நான்கு அடுக்கு வீடுகள் டிசைன் 3A/68 படி 11 பிளாக்குகள் கட்டுதல். | 6,93,000 | 10,400 | 20 | 3—1—72 | 12—1—72 |
| 3. கிடங்கோடு கூடிய உதவிப் பொறியாளர் அலுவலகம் ஒன்று கட்டுதல். | 58,500 | 880 | 10 | 3—1—72 | 7—1—72 |
| 4. வடிநீர் வெளியேற்றும் பம்பிங் கூடம் கட்டுதல். | 12,500 | 190 | 5 | 3—1—72 | 12—1—72 |
| 5. தடுப்புச் சுவர் (ரீடையினிங்) கட்டுதல் .. | 2,00,000 | 3,000 | 10 | 10—1—72 | 24—1—72 |
| 6. தாழ்வுப் பகுதிகளை நிரப்பிச் சமப்படுத்துதல் .. | 6,16,400 | 9,250 | 20 | 10—1—72 | 24—1—72 |
| 7. சாலையின் ஒரு பகுதிக்குத் தார் ரோடு போடுதல். | 1,24,700 | 1,875 | 10 | 10—1—72 | 24—1—72 |
| 8. 6'', 9'' விட்டமுள்ள ஸ்டோன்வேர் (Stone ware) குழாய்களைத் தருவித்தல். | 1,65,000 | 2,475 | 10 | 3—1—72 | 22—1—72 |
| 9. லெட்வுல், 6'' விட்டமுள்ள வெண்டிலேடிங் ஷாப்டுகளை அதன் உதிரிப் பொருள்களுடன் தருவித்துக் கொடுத்தல். | 75,000 | 1,125 | 10 | 3—1—72 | 18—1—72 |
| 10. பட்டினப்பாக்கக் கடற்கரை எஸ்டேட்டிற்கு 10'' விட்டமுள்ள (250 மி.மி.) C.I குழாய்களை அதன் உதிரிப் பாகங்களுடன் தருவித்துக் கொடுத்தல். | 1,35,000 | 2,025 | 10 | 10—1—72 | 24—1—72 |
| 11. தாழ்வுப் பகுதிகளை நிரப்பிச் சமப்படுத்துதல். | 2,50,000 | 3,750 | 15 | 10—1—72 | 24—1—72 |
| **N.M.N.H. Scheme II** | | | | | |
| 12. 80 அடி அகலமுள்ள ரோட்டிற்குக் கிராவலோடு கூடிய மெட்டல் ரோடு போடுதல். | 85,000 | 1,275 | 10 | 10—1—72 | 24—1—72 |

மேற்கொண்ட விவரங்களையும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களையும் நிருவாகப் பொறியாளர் (கிழக்குக் கோட்டம்), அவர்கள் அலுவலகத்தில் உரிய விலையைச் செலுத்தி எல்லா அலுவலக நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 2 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். எந்தவித காரணமும் கூறாமல் எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் ஏற்க அல்லது நிராகரிக்கக் கீழே கையொப்பமிட்டவருக்கு உரிமை உண்டு.

**டி. சாமுவேல்தம்பி, பி. இ.,**
சென்னை கிழக்குக் கோட்டம்,
வீட்டு வசதி வாரியம்.

சென்னை-35,
16—12—71.

(த.104)



உங்களுக்கு வேண்டிய
எல்லாமே இங்கே கிடைக்கும்
குறளகம்
சென்னை.1
கதர்-கைத்தொழில்
அங்காடி
தொலைபேசி எண்கள் : 20461. 20462. 20463. 20464. 20465.
கைவண்ணப்
பொருள்களின்
களஞ்சியம்

## நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம். சென்னை-1.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 12—1—1972 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கு பெற்றுக்கொள்ளப்படும்.

| வரிசை எண். | வேலை விவரம். | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 | சென்னை சித்தூர்—பெங்களூர் சாலையில் (தே.நெ. எண் 4) கி.மீ. 92/4 மை. 57/4)-ல் உள்ள பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல். | 3,300 |
| 2 | கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) கி.மீ. 133/4-ல் (மை. 76/2)-ல் உள்ள பாலத்தைப் புதுப் பித்துக் கட்டுதல். | 1,000 |
| 3 | கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) கி.மீ. 128/10 (மை. 79/5)-ல் உள்ள பாலத்தைப் புதுப் பித்துக் கட்டுதல். | 930 |
| 4 | கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) கி.மீ. 127/10 (மை. 80/3)-ல் உள்ள பாலத்தைப் புதுப் பித்துக் கட்டுதல். | 940 |
| 5 | கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) கி.மீ. 126/2-ல் (மை. 81/4)-ல் உள்ள பாலத்தைப் புதுப் பித்துக் கட்டுதல். | 1,400 |
| 6 | கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) கி.மீ. 121/0-ல் (மை. 84/5)-ல் உள்ள பாலத்தைப்புதுப் பித்துக் கட்டுதல். | 1,220 |
| 7 | கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) கி.மீ. 106/8-ல் (மை. 93/8)-ல் உள்ள பாலத்தைப் புதுப் பித்துக் கட்டுதல். | 2,020 |
| 8 | கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) கி.மீ. 102/6-ல் (மை. 96/6)-ல் உள்ள பாலத்தைப் புதுப் பித்துக் கட்டுதல். | 2,230 |
| 9 | கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) கி.மீ. 87/2-ல் (மை. 105/4)-ல் உள்ள பாலத்தைப் புதுப் பித்துக் கட்டுதல். | 2,620 |
| 10 | கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) (கி.மீ. 79/4 (மை. 110/3)-ல் உள்ள பலத்தைப் புதுப் பித்துக் கட்டுதல். | 1,200 |
| 11 | கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) கி.மீ. 75/8) (மை. 112/3)-ல் உள்ள பாலத்தைப் புதுப் பித்துக் கட்டுதல். | 1,280 |
| 12 | கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) கி.மீ. 63/8 (மை. 119/8) உள்ள பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல். | 3,150 |

ஒப்பந்தப் புள்ளிகள் 12—1—1972 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப் படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள் வரைப்படங்கள் முதலிய வற்றைக் கோட்டப்பொறியாளர் (நெ.)தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் எண் 1. இரண்டாவது மாடி, குறளக கட்டடம் சென்னை-1 அலுவலகத்தில் 5—1—1972 முதல் 11—1—1972 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25.88 கட்டி பெற்றுக்கொள் ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட கட்டுத் தொகையைக் கோட்டப்பொறி யாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம். எண் 1, அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் எண் 1 சென்னை-1 பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியாவது ஒப்பந் தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

குறிப்பிட்ட கட்டுத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

**தி. மு. ஆ. ஜெயராமன்,**
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.)

(த. 98)

## பொறியியல் பணித்துறை

வேலையின் பெயர்: வட சென்னை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி யில் விடுதி கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான ஒப் பந்தப் பத்திரங்கள் பெறும் கடைசி நாள் 15-12-1971-லி ருந்து 27-1-72 மாலை 3·00 மணி என ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வேலைக்கான ஒப்பந் தப்புள்ளிப்பத்திரங்கள் இவ்வலு வலகத்தில் 17-1-1972 முதல் 25-1-1972 வரை கிடைக்கும்.

மற்ற நிபந்தனைகளில் மாறுதல் ஏதும் இல்லை.

**பி.கே. கந்தசாமி,**
மேற்பார்வைப் பொறியாளர்
சென்னை-செங்கற்பட்டு வட்டம்.

(த.105)

# ஒப்பந்தப் புள்ளி

ந. க. எண் 20856/71—2/நாள் 15—12—1971.

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநரின் சார்பில் பொதுப் பணித் துறை மதுரையில் உள்ள இராமநாதபுரம் பெரு வட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க் கண்ட வேலைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிட மிருந்தும் கீழே குறிப்பிட்டுள்ள கண்மாய் பாசனத்தில் உள்ள நில உரிமை பெற்றோர்களிடமிருந்தும் மேற்பார்வைப் பொறியாளரின் அலுவலகத்தில் 25—1—1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரையில் அரக்கு முத்திரையிடப்பெற்ற உறையில் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர் .. அருப்புக்கோட்டை வட்டம் குண்டாற்றின் குறுக்கே அணைக்கட்டும் வேலையும் வெள்ளத்தடுப்புக் கரையும் அமைத்து நாராயணக் காவேரி கால்வாய் மூலம் தண்ணீர் வழங்கும் திட்டம்.

ஒப்பந்த வகை .. கே. 2.

கட்டுத் தொகை. ரூ. 13,100 (ரூபாய் பதின்மூன்றாயிரத்து நூறு மட்டும்).

ஒப்பந்தப் புள்ளி விலை. ரூபாய் 20.70 (வரி உட்பட).

வேலை முடிக்க வேண்டிய காலம். ..12 மாதங்கள்.

வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் 25—1—1972 அன்று மாலை 4-30 மணிக்கு அலுவலகம் வந்த ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் மேற்படியார் அலுவலகத்தில் திறக்கப்படும். மேற்கண்ட வேலைகளை எடுத்துச் செய்ய விரும்புவோர் ஒப்பந்தப் பத்திரத்திற்கான தொகை ரூ. 20·70-ஐ அரசாங்கக் கருவூலத்தில் 2 கருவூல ரசீதுடன் செலுத்தி மேற்படி ரசீதுடன் மேற்பார்வைப் பொறியாளர் (பொதுப்பணித்துறை) இராமநாதபுரம் பெரு வட்டம், மதுரை-1 என்ற விலாசத்திற்கு மனுச் செய்தால் ஷி வேலைக்கான ஒப்பந்தப்பட்டியல் விதிகள் முதலியவைகள் ஒப்பந்தப் புள்ளியுடன் வழங்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளியின் விலையான ரூ. 20-ஐ பி.டபிள்யூ.டி. 111 ஒ.ஆர். என்ற கணக்குத் தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, சிவகங்கைக் கோட்டம், சிவகங்கை அவர்கள் கணக்கிலும் விற்பனை வரிக்காக ரூ. 0.70 காசை "12 விற்பனை வரி" என்ற கணக்குத் தலைப்பிலும் அரசாங்கக் கருவூலத்தில் தனித்தனியாகச் செலுத்தி ரசீதுகளை அனுப்ப வேண்டும். இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி கொடுக்கும்பொழுது உறையின் மேல் வேலையின் பெயரும் கருவூல ரசீது எண்ணும் எழுதப்பட்டிருக்க வேண்டும். உறை மூடி அரக்கு முத்திரை வைக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த அலுவலகத்தின் மூலம் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தில்தான் தொகை குறிப்பிட்டுக் கொடுக்க வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் (பொதுப்பணித்துறை), இராமநாதபுரம் வட்டம், மதுரை அலுவலகத்தில் 17—1—1972 முதல் 22—1—1972 முடிய விற்பனைக்காக இருக்கும். ஒப்பந்தப் புள்ளி கோரி வரப்படும் மனுக்கள் இவ்வலுவலகத்திற்கு 22—1—1972 மாலை 5 மணிக்குள் வந்து சேர வேண்டும். அதற்குப் பின் வரும் மனுக்கள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அஞ்சல் மூலமாக ஏற்படும் தாமதத்திற்கோ அல்லது இழப்பிற்கோ இத்துறையினர் பொறுப்பாக மாட்டார்கள். இதுபோன்ற செயல் இத்துறையினர் பொறுப்பிற்கு அப்பாற்பட்டதாகும்.

இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்பும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து கட்டுத் தொகையை அரசாங்கக் கருவூலத்தில் செலுத்திய கருவூல ரசீது மூலமாகவோ அல்லது ஷெட்யூல்டு வங்கிகளின் மூலமாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசு செக்யூரிட்டிகள் தமிழ்நாடு மின்சார வாரியக் கடன் பத்திரங்கள் அரசாங்கச் சேமிப்புப் பத்திரங்கள் முதலியவைகள் அவைகள் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு இவற்றில் எது குறைவாக உள்ளதோ அவற்றில் 5 சதவீதம் குறைவாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு விதமாகவும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்புவோர் நடப்பு அத்தாட்சியாகச் சான்றிதழ் கொடுக்க வேண்டும்.

ஆயக்கட்டுதார்கள் பங்கெடுத்துக் கொண்டால் டெபுடி தாசில்தாருக்குக் குறையாத ரெவின்யூ அதிகாரியிடமிருந்து சொத்து உரிமை சர்டிபிகேட்டும், வாங்கி ஒப்பந்தப் புள்ளியுடன் இணைக்க வேண்டும். கட்டுத் தொகை செலுத்தாமலோ அல்லது இவ்வலுவலகத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தில் தொகை குறிப்பிட்டுக் கொடுக்காமலோ இருந்தால் இவை மேற்பார்வைப் பொறியாளரால் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் எக்காரண அறிவிப்பையும் உரிமைப் படுத்தாமல் ஏதாவது அல்லது வரப்பெற்ற அத்தனை ஒப்பந்தப் புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை பெற்றுள்ளார்.

ரெ. ராமசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்.
(பொ.ப.து.)

(த. 107)

## நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக அன்னார் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்குமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 19-1-1972 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்குப் பெற்றுக்கொள்ளப் படும்.

| வரிசை எண். | வேலையின் பெயர். | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 | தேசிய நெடுஞ்சாலை எண் 45 சென்னை-திருச்சி-திண்டுக்கல் சாலையில் மைல் 113/4-ல் கடில நதியின் மீது பாலம் திரும்பக் கட்டுதல். | 45,300 |
| 2 | தேசிய நெடுஞ்சாலை எண் 45 சென்னை-திருச்சி-திண்டுக்கல் சாலையில் மைல் 113/4ல் கட்டும் பாலத்திற்கு வடக்குப் பக்கம் அணுகுச் சாலை அமைத்தல். | 2,180 |
| 3 | தேசிய நெடுஞ்சாலை எண் 45 சென்னை-திருச்சி-திண்டுக்கல் சாலையில் மைல் 113/4-ல் கட்டும் பாலத்திற்குத் தெற்கு பக்கம் அணுகுச் சாலை அமைத்தல். | 2,080 |
| 4 | தேசிய நெடுஞ்சாலை எண் 45 சென்னை திருச்சி-திண்டுக்கல் சாலையில் மைல் 41/7-ல் கி.மீ. 68/3-4 பாலம் திரும்பக் கட்டுதல் | 4,270 |
| 5 | தேசிய நெடுஞ்சாலை எண் 45 சென்னை திருச்சி-திண்டுக்கல் சாலையில் மைல் 137/4-ல் கி.மீ. 222/8-ல் பாலம் திரும்பக் கட்டுதல். | 1,470 |
| 6 | தேசிய நெடுஞ்சாலை எண் 45 சென்னை-திருச்சி-திண்டுக்கல் சாலை கி.மீ. 104/4-ல் (மைல் 64/2-ல்) சிறு பாலம் திரும்பக் கட்டுதல். | 6,610 |

ஒப்பந்தப் புள்ளிகள் 19-1-1972 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப் படும். ஒப்பந்தத்திற்கான நமூனக்கள், வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ.), தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம்-11 கிண்டி, சென்னை 25 அலுவலகத்தில் 11-1-1972 முதல் 18-1-1972 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25.88 கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக்கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலை கோட்டம் 11, கிண்டி அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்தினுள்ளும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின்கீழ் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் 11, கிண்டி பெயரில் செலுத்திச் செல்லுச்சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியையாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

[illegible]குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றிவரும் ஒப்பந்தங்கள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

தி.மு.ஆ. ஜெயராமன்,

மேற்பார்வைப் பொறியாளர் (நெ.)

(த. 101)

## வனத்துறை

## வனப்பொறியாளர் கோட்டம்

கீழ்க்காணும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை "வனப் பொறியாளர், திருச்சி" தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வரவேற்கிறார்.

"சிக்கள்ளி—திக்னரி சாலை அமைத்தல் 3.8 கி.மீட்டர், தலைமலை வனச்சரகம் கோவை வடக்கு வனக் கோட்டம்" அச்சாரம் ரூ. 1,530 [இ.எம்.டி.].

ஒப்பந்தப் புள்ளிப் பெற்றுக்கொள்ளவும், திறக்கவும் கடைசி நாள் 5-1-1972. நேரம் முறையே மாலை 3 மணி, 3-05 மணி.

2. ஒப்பந்தப் பத்திரங்களை "வனப்பொறியாளர், 1-ஏ, ராயல் ரோடு, கண்டோன்மென்ட், திருச்சிராப்பள்ளி-1 என்ற முகவரியிலிருந்து ரூ. 1.04 நேரிலோ அல்லது பண ஆணை மூலமாகவோ, செலுத்தி 20—12—71 முதல் 4—1—72 முடிய அலுவலக வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ச. சண்முகசுந்தரம்,

திருச்சிராப்பள்ளி-1,

19—12—71.

வனப் பொறியாளர்.

(த. 91)

## மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம்

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திருச்சி வட்டம், திருச்சி அவர்களால், திருச்சியிலுள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக்கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர். — புதுக்கோட்டை ராஜா கல்லூரியில் எட்டு போதனை அறைகள் கொண்ட கட்டடம் கட்டுதல்.
2. ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கான கடைசித் தேதியும் நேரமும். — 24—1—1972 மாலை 3-00 மணி.
3. பிணைப்பொறுப்புத் தொகை. — ரூ. 3,100 (ரூபாய் மூவாயிரத்து நூறு மட்டும்).
4. ஒப்பந்த முறை.. — மொத்தத் தொகை.
5. முடிக்க வேண்டிய.. காலம். — ஐந்து மாதங்கள்.
6. ஒப்பந்தப் பத்திரத்.. தின் விலை. — ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்).
7. விற்பனை வரி .. — ரூ. 0.88 (எண்பத்தெட்டு காசுகள் மட்டும்).
8. ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி. — 10—1—1972.
9. விரும்பும் ஒப்பந்ததாரர்களின் முன்பாக ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும் தேதி மற்றும் நேரம். — 24—1—1972 மாலை 3-30 மணி.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விற்பனை வரியையும் அரசின் கருவூலத்தில், "XXXVII Public Works—State Revenue Miscellaneous" மற்றும் "XII Sales tax (b) Receipts under the State Sales Tax Act General Sales Tax" என்ற தலைப்புக்களின் கீழ் சலானில் செலுத்தலாம். இந்த சலான் மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறுமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலேயே எந்த ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்த மற்ற விதிகளும் விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நா. முத்துகிருஷ்ணன்,
திருச்சி வட்ட மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 108)

## வீட்டுவசதி வாரியம்

(தெற்குப்பகுதி)

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: S.2/7182/71 நாள்: 16—12—1971

கீழ்க்கண்ட வேலைகளுக்குத் தனித்தனியான மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வேலையின் பெயருடன், 5-1-1972 வரையிலும் வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர். — பெசண்டு நகரில் S.M.N.H. திட்டத்தில சமூக நலக்கூடம் கட்டுதல்.

வேலையின் சுமார் மதிப்பு .. ரூ. 2,21,000.
கட்டுத் தொகை .. ரூ. 3,325.
ஒப்பந்தப்புள்ளிப் படிவ விலை .. ரூ. 15+விற்பனை வரி.
(இது திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது).

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களும் ஏனைய விவரங்களும் நிர்வாகப் பொறியாளர் அலுவலகத் (தெற்கு) திலிருந்து அலுவலக நாட்களில் காலை 11 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-05 மணிக்கு வந்துள்ள ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறக்கப்படும். எக்காரணமும் காட்டாமல் எந்த ஒப்பந்தப்புள்ளிகளையும் ஏற்கவோ, தள்ளவோ கீழ்க்கையெழுத்திட்டவர்க்கு உரிமை உண்டு.

எஸ். குமரேசன்,
நிர்வாகப் பொறியாளர்.

(த.132)

சென்னை அரசினர் அச்சகத்திற்கு '' ஒரு சா அண்டு நைப் கிரைண்டிங் மிஷின் '' (Saw and knife grinding Machine) விற்பனை செய்வதற்காக, வியாபாரிகளிடமிருந்து 20-1-1972 பிற்பகல் 3-00 மணி வரையில் அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். மேற்கொண்டு இதுபற்றி தேவை [illegible] தற்கு, இயக்குநர், எழுது பொருள் மற்றும் அரசினர் அச்சகத்துறை, சென்னை-1 முகவரிக்கு எழுதவும்.

தி. சண்முகம்,
இணை இயக்குநர்.

அரசினர் எழுது பொருள் அச்சுத் துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-1.
17— 2—1971.
(த.97)

## வேலை வாய்ப்பு

### சுற்றுலா டாக்சி ஆபரேட்டர்களை அங்கீகரிப்பதற்காக ஆய்வுக் குழு

தென்னாட்டில் சுற்றுலா டாக்சி ஆபரேட்டர்களை ஊக்குவிப்பதற்காக 'டூரிஸ்ட் டாக்சி ஆபரேட்டர்கள்' என்று இந்திய அரசாங்கம் அங்கீகரிப்பதற்கு மனுக்களை ஆய்வு செய்யவும், பரிந்துரைக்கவும், ஆய்வுக் குழு ஒன்றை அரசினர் அமைத்துள்ளனர்.

குழுவின் உறுப்பினர்கள் விவரம் :

1. தமிழ்நாடு அரசாங்கச் சுற்றுலா இயக்குநர் ;
2. சென்னை போக்குவரத்து துணை கமிஷனர் ;
3. இயக்குநர், இந்திய அரசுச் சுற்றுலா அலுவலகம், சென்னை.

இக்குழு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூடும். இக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் சென்னையிலுள்ள இந்தியச் சுற்றுலா அலுவலக இயக்குநர், தெரிந்தெடுக்கப்பட்ட நபர்களின் மனுக்கள் 'சுற்றுலா டாக்சி ஆபரேட்டர்' என்ற அங்கீகாரத்துக்காக இந்திய அரசாங்கத்துக்கு அனுப்பி வைப்பார்.

சுற்றுலா டாக்சி ஆபரேட்டர்கள் அங்கீகாரத்துக்கு முக்கிய நிபந்தனைகள் வருமாறு :—

1. போதிய அளவு அலுவலர்கள் தொலைபேசி வசதியுடன் அலுவலகம் இருக்க வேண்டும் ;
2. வண்டி நிறுத்த சரியான இடவசதி இருக்க வேண்டும் ;
3. வாடகைக்கார் விஷயங்களில் குறைந்தது 2 ஆண்டு அனுபவம் இருத்தல் வேண்டும் ;
4. சுற்றுலா சம்பந்தமாகத்தான் புக்கிங் செய்யப்படுகிறது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளும் வகையில் சுற்றுப் பயண நிறுவனங்கள் அல்லது ஹோட்டல்களுடன் நேரடித் தொடர்பு இருக்க வேண்டும் ;
5. இத்துறை அவ்வப்போது வகுத்துத்தரும் முறையில் நடமாட்டம் பதிவேடு ஒன்றை வைத்திருக்க வேண்டும். சுற்றுலாக் கணக்கில் எந்த அளவுக்கு அலுவல் நடந்திருக்கிறது என்பதைச் சரிபார்த்துக் கண்டறியும் வகைகளில் 'பில்' புத்தகம் கணக்குப் பதிவேடு ஆகியவை வைத்திருக்கவேண்டும்.

மேற்கொண்டு விவரங்களுக்குச் சுற்றுலா இயக்குநர், பொது (சுற்றுலா) துறை, கோட்டை, சென்னை-9 அவர்களுக்கு எழுதுக.

**ஏ. எஸ். அஹலுவாலியா,**

அரசு அடிஷனல் செயலாளர்,
சுற்றுலா இயக்குநர்.

(த.134)

## ஒப்பந்தப் புள்ளி

### வனத்துறை வனப்பொறியாளர் கோட்டம்

கீழ்க்காணும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை ''வனப் பொறியாளர், திருச்சி'' தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வரவேற்கிறார்.

''சித்தேரி—சூரியக்கடை சாலை அமைத்தல் 6.4 கிலோ மீட்டர்—அரூர் சரகம்—தர்மபுரிக் கோட்டம்''.

முன்பணம் ரூ. 1,740.

ஒப்பந்தப் புள்ளிப் பெற்றுக்கொள்ளவும், திறக்கவும் கடைசிநாள் முறையே 12-1-1972 மாலை 3 மணி, 3-05 மணி.

2. ஒப்பந்தப் பத்திரங்களை ''வனப் பொறியாளர், கன்டோன்மெண்ட், திருச்சி-1 என்ற முகவரியிலிருந்து ரூ. 1-04 பணமாகவோ அல்லது பண ஆணை மூலமாகவோ செலுத்தி 25-12-1971 முதல் 11-1-1972 வரை எல்லா வேலை நாட்களிலும், அலுவலக வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**ச. சண்முகசுந்தரம்,**

வனப் பொறியாளர், திருச்சி.

(த. 92)

## ஏல விற்பனை

### மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம்

பழுதடைந்த நிலையிலுள்ள துறையூர் வட்டார ஜீப் எம்.எஸ். ஒய். 9833 17—1—1972-ஆம் தேதி பகல் 12 மணிக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளர் (பஞ்சாயத்து வளர்ச்சி) அவர்களால் அரசினர் விதிமுறைகளின்படி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலம் சம்பந்தமான விவரங்களை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். மோட்டார் வாகனத்தை நேரில் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

**மாவட்ட ஆட்சியாளர்.**

திருச்சிராப்பள்ளி.

(த.99)

பழுதடைந்த நிலையிலுள்ள தாந்தோணி வட்டார ஜீப் எம். எஸ்.எக்ஸ். 3832, 25—1—1972 ஆம் தேதி 11 மணிக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியாளரின் உதவியாளர் (பஞ்சாயத்து வளர்ச்சி) அவர்களால் அரசினர் விதிமுறைகளின்படி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலம் சம்பந்தமான விவரங்களை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். மோட்டார் வாகனத்தை நேரில் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

**மாவட்ட ஆட்சியாளர்**

திருச்சிராப்பள்ளி.

(த.100)

## குடிநீர் வடிகால் வாரியம்

## வீராணம் திட்ட வட்டம், சென்னை-5

எண் : 17396/டி8/71. நாள்: 16—12—1971

வடக்கு பக்கிங்ஹாம் கால்வாயின் கிழக்குக் கரையில் கீழ்க் குறிப்பிட்டுள்ள பகுதிகளில் வெள்ளக் கரைகள் அமைப்பு வேலைக்காகப் பொதுப் பணித்துறை உரிய பிரிவில் பதிவாகியுள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து உரிய வடிவத்தில் மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், மேற்பார்வைப் பொறியாளர், வீராணம் திட்ட வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த வடிவம்—கே-2.

வேலைப்பகுதி : (Reacher) விவரம் :—

1. எண்ணூர் '' லாக் ''கிலிருந்து 10/1லிருந்து 9/5 வரை உள்ள வேலை. இந்த வேலைக்குக் கட்டுத் தொகை ரூ. 3,900.

2. எண்ணூர் ' லாக் ' கிலிருந்து 9/5லிருந்து 9/0வரை உள்ள வேலை. இந்த வேலைக்குக் கட்டுத் தொகை ரூ. 3,200.

இந்த இரண்டு வேலைகள் ஒவ்வொன்றுக்கும் ஒப்பந்தப் புள்ளித்தேதி 12—1—1972 மாலை 3 மணிவரை.

இந்த வேலைகள் ஒவ்வொன்றுக்கும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி 27—12—1971லிருந்து 10—1—1972 வரை.

இந்த வேலைகள் ஒவ்வொன்றும் முடிக்கப்பட வேண்டிய காலங்கள் 4 மாதங்கள்.

இந்த வேலைகள் ஒவ்வொன்றுக்கும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை ரூ. 10 விற்பனை வரி 40 காசுகள். ஒப்பந்தப் பத்திரத்திற்கான கட்டணம் அரசுக் கருவூலத்தில், நிர்வாகப் பொறியாளர், கூவம் அபிவிருத்திக் கோட்டம், சென்னை-5 அவர்கள் கணக்கில் ' P. W. III O.R. ' என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரி அமலில் உள்ள விகிதத்தில் தனிச் சலானில் '' XII-b—General Sales Tax '' என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள், இதர விவரங்களைக் கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
வீராணம் திட்ட வட்டம்,
சென்னை-5.

(த.133)

## பல்லாவரம் நகராட்சி

பல்லவபுரம் நகராட்சி அலுவலகத்திற்கு அடியிற்கண்ட பொருட்கள் வழங்க 12—1—1972-ஆம் தேதி புதன் கிழமை காலை 11·00 மணிவரையில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு 11·05 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப் படும். ஒப்பந்தப் புள்ளிகள் கட்டுத் தொகை ரொக்கமாகச் செலுத்தி ரசீதுடன் கொடுக்கப்பட வேண்டும். இது சம்பந்தப்பட்ட இதர ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

| வரிசை எண். | விவரம். | தேவைப் படும் எண்ணிக்கை. | கட்டுத் தொகை. |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 1 | 1,000 காலன் கொள்ளளவும் சுமார் 6·1 மெட்ரிக் டன் பாரம் தாங்கக் கூடியதுமான டாங்க் பொருத்தப் பட்ட இரண்டு அச்சு, நான்கு டயர் சக்கரங்களுடன் கூடிய டேங்கர் டிரயிலர் ஒன்று வழங்க. | 1 | 600 |
| 2 | சுமார் 10·56 மெட்ரிக் டன் பாரம் தாங்கக் கூடிய இரண்டு அச்சும் நான்கு டயர் சக்கரங்களுடன் கூடிய கீழ்க்கண்ட அளவுப்படி டிராக்டர் டிரயிலர் ஒன்று வழங்க. | 1 | 900 |

அளவு—
14':3''×7':3''×2'·6''

**டி. எஸ். சிவசாமி,** பி.ஏ.,
தனி அலுவலர்,
பல்லவபுரம் நகராட்சி.

நாள்: 9—12—1971
(த.130)

## வீட்டு வசதி வாரியம்

தெற்குக் கோட்டம்

எண் : 1318/எஸ்/7/71.

வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளி அனுப்புகின்றவரின் பெயரும் உறையின்மீது எழுதப்பட்ட, முடிமுத்திரையிட்ட தனித்தனி ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்கண்ட வேலைகளுக்காக ஒவ்வொரு இனத்திற்கும் குறிப்பிட்டுள்ள தேதியன்று மாலை 3-00 மணிக்குள் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்குக் கிடைக்குமாறு, வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-05 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் விவரமும். | மாதிரி எண். | தோராய மதிப்பு. | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை. | ஒப்பந்தப் புள்ளிப் பெறுவதற்குரிய கடைசி நாள். |
|---|---|---|---|---|---|
| | | ரூ. (இலட்சத்தில்). | ரூ. | ரூ. | |
| 1 பெசன்ட் நகரில் 2 எம்.ஐ.ஜி. பிளாக் கட்டுதல். | எஸ்.டி. 159/70 | 2·30 | 3,450 | 15·00 + விற்பனை வரி. | 4—1—1972 |
| 2 ஷை | ஷை. | 2·30 | 3,450 | 15·00 + விற்பனை வரி. | 4—1—1972 |
| 3 ஷை | ஷை. | 2·30 | 3,450 | 15·00 + விற்பனை வரி. | 5—1—1972 |
| 4 ஷை | ஷை. | 2·30 | 3,450 | + 15·00 விற்பனை வரி. | 5—1—1972 |
| 5 வெங்கட்டாபுரத்தில் ஒரு 'ஏ' பிளாக் கட்டுதல். | எஸ்.டி. 140/71. | 3·00 | 4,560 | 15·00 + விற்பனை வரி. | 4—1—1972 |
| 6 வெங்கட்டாபுரத்தில் ஒரு 'பி' பிளாக் கட்டுதல். | எஸ்.டி. 142/71. | 3·00 | 4,560 | 15·00 + விற்பனை வரி. | 4—1—1972 |
| 7 வெங்கட்டாபுரத்தில் ஒரு 'சி' பிளாக் கட்டுதல். | ஷை. | 3·00 | 4,560 | 15·00 + விற்பனை வரி. | 5—1—1972 |
| 8 வெங்கட்டாபுரத்தில் ஒரு 'டி' பிளாக் கட்டுதல். | ஷை. | 3·00 | 4,560 | 15·00 + விற்பனை வரி. | 5—1—1972 |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், மற்றும் இதர விவரங்களை நிருவாகப் பொறியாளர் (தெற்கு), தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அவர்கள் அலுவலகத்திலிருந்து எல்லா அலுவலக நாட்களிலும் காலை 10-00 மணி முதல் மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

36, அண்ணாசாலை,
நந்தனம் (அஞ்சல்)
சென்னை-35
(த. 131)

**எஸ். குமரேசன்,**
நிருவாகப் பொறியாளர்,
தெற்குக்கோட்டம்.

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணா சாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-2.


வெற்றி நமதே


தமிழக முதல்வர்




தமிழக முதல்வர்

# தமிழரசு

1—1—1972 இதழின்

இலவச இணைப்பு

# பதிப்புரை

இந்தியா மீது பாகிஸ்தான் படையெடுத்தது. போர்த்தீ மூண்டது. ஏறத்தாழ மூன்று கிழமைகள் அமெரிக்க நாட்டில் சுற்றுப் பயணம் செய்து தாய்நாடு திரும்பும் தமிழக முதல்வருக்கு இங்கு— தமிழகத்தலைநகரில் வரவேற்பு ஏற்பாடுகள் செய்யப் பட்ட நேரத்தில், ‘ எனக்கு வரவேற்பு வேண்டாம் அந்த வரவேற்புக் கூட்டத்தையே பாகிஸ்தானின் வெறித்தாக்குதலைக் கண்டிக்கவும் நாம் உறுதி மொழி எடுப்பதற்குமான கூட்டமாக நடத்துங் கள் ’ என்று விருப்பம் தெரிவித்தார்கள். அவ் விருப்பத்திற் கிணங்கக் கலைவாணர் அரங்கில் நடைபெற்ற அந்தக் கண்டனக் கூட்டத்தில்,

‘‘ இனி நம்மிடையே எத்தகைய வேறுபாடும் இல்லாமல் நாமனைவரும் இந்தியாவின் கட்சி ’ என்ற அளவில் ஒன்றுபட்டிருக்கிறோம் என்பதைப் பகைவர்க்கு உணர்த்துவோம்—இந்தியா வெற்றி பெற்றது—தன் எதிரிகளைப் புறங்காட்டி ஓடச் செய்தது—இந்தியா இனி வேறு யாராலும் வெல்ல முடியாத நிலையைப் பெற்றது என்ற அந்தக் கட்டம் தோன்றுகிற வரை நமக்குள் தாக்கிக் கொள்வதை ஒத்திவைத்து ஒன்றுபடுவோம்! வாருங்கள், வாருங் கள்! ’’ என்று அனைத்துக் கட்சியினருக்கும் அன்ப ழைப்பு விடுத்தார்கள்.

அந்த அன்பழைப்பைத் தொடர்ந்து 1971-ஆம் வருடம் டிசம்பர் மாதம் 6-ஆம் நாளில் தமிழ் நாடு சட்டப் பேரவையிலும், மேலவையிலும் பாகிஸ்தான் படையெடுப்புக் கண்டனத் தீர்மா னத்தை முன்வைத்துப் பல்வேறு அரிய கருத்துக் களை வெளியிட்டார்கள். அப்போது, பாகிஸ்தா னுக்கு ஏற்பட்ட இழப்பைக் குறித்துப் பேசுகை யில்,

‘‘இவை யாவும் இழப்பின் ஆரம்பம்தான்— இழப்பின் முடிவு எதுவாக இருக்குமோ ? ஒருவேளை பாகிஸ்தானாகவே இருந்தாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை ’’ என்று தெரிவித்தார்கள். மேலும், பேசு கையில்,

‘‘ யாகியாகான் சொல்லியிருக்கிறார், ‘ இதுதான் என்னுடைய கடைசி யுத்தம் ’ என்று. அவருடைய முடிவை—சாதகத்தை இவ்வளவு முன்கூட்டியே

தெரிவித்திருப்பதற்கு நாமெல்லாம் மகிழ்ச்சியடைகின்றோம்' என்றும்,

'' இன்றைக்குப் பங்களா தேஷ் இந்திய அரசின் சார்பாக அங்கீகரிக்கப்பட்ட மகிழ்ச்சிகரமான செய்தி வந்திருக்கிறது. இன்னும் இரு வார காலத்திற்குள் பங்களா தேஷ் முழுவதும் பாகிஸ்தான் கையிலிருந்து விடுவிக்கப்பட்டு, விடுதலை வீரர்களிடம் ஒப்படைக்கப்படுகிற செய்தி நிச்சயமாக வர இருக்கிறது என்பதனை நாமெல்லாம் எதிர்பார்க்கலாம்.

''பங்களா தேஷ் புதிய அரசின் கொடி, விடுதலை வீரர்களின் புகழ் பாடியவண்ணம் பறக்கப் போகிறது!

'' இன்னும் 10 அல்லது 15 நாட்களில் கூடப் போர் முடிந்து விடக் கூடும்.''

என்பன போன்ற பல்வேறு கணிப்புகளைத் தெரிவித்தார்கள். அந்தக் கணிப்பின்படி, யாகியா கானுக்கு இதுவே கடைசிப் போராகி, பங்களா தேஷ் முழுவதும் விடுவிக்கப்பட்டு, விடுதலை வீரர்களிடம் ஒப்படைக்கப்படும் புதிய வங்கம்—சுதந்திர வங்கம் உதயமாகி விட்டது ! பங்களா தேஷ் புதிய அரசின் கொடி, விடுதலை வீரர்களின் புகழ் பாடிய வண்ணம் பட்டொளி வீசிப் பறக்கிறது ! போரும் முடிந்து விட்டது !

' வெற்றி நமதே ! எதிரிகள் வீழ்வது உறுதி ' என்று முதல்வர் அவர்கள் வானொலியில் முழக்கினார்கள். இன்று நமது வெற்றியை உலக நாடுகள் பாராட்டுகின்றன.

இந்தப் போரின் தொடர்பாகத் தமிழக முதல்வர் அவர்கள், சட்டப் பேரவையிலும் மேலவையிலும் ஆற்றிய பேருரைகளையும், வானொலி உரையையும், சுதந்திர வங்கம் உதயமானதைப் பாராட்டிச் சட்டப் பேரவையிலும் மேலவையிலும் தீர்மானம் நிறைவேற்றி ஆற்றிய பேருரைகளையும் இங்கே தொகுத்துத் தருகிறோம் !

வணக்கம்.

சென்னை,
20-12-1971

செய்தி-மக்கள்தொடர்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

# வெற்றி நமதே

இந்தியா மீது பாகிஸ்தான் படையெடுத்திருப்பதைக் கண்டித்துத் தமிழ்நாடு சட்ட மன்றத்திலும் மேலவையிலும் முதல்வர் கலைஞர் அவர்கள் *1971*-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 6-ஆம் நாளில் முன்மொழிந்த தீர்மானம் :—

“கிழக்கு வங்கத்தின் ஜனநாயகக் குரலை மதிக்க மறுத்து, அதன் காரணமாக அந்த மக்கள் கொதித்தெழுந்து சுதந்திர வங்கதேச முழக்கத்தைச் செய்ய முன்வந்தபோது, அவர்கள் மீது ஈவு இரக்கமின்றி இராணுவ நடவடிக்கைகள் மேற்கொண்டு பல லட்சக்கணக்கானவர்களைக் கொன்று குவித்ததோடு அல்லாமல் ஒரு கோடி அகதிகளை இந்திய நாட்டின் மீது சுமத்தியதன் மூலம் மறைமுகமான தாக்குதலைத் தொடங்கிவிட்ட பாகிஸ்தான் சர்வாதிகாரி, இறுதியாக இந்திய மண்ணின் மீது படையெடுக்கவே துணிந்துவிட்ட செயலைத் தமிழக மக்கள் அனைவரின் சார்பில் இப்பேரவை வன்மையாகக் கண்டிப்பதோடு, எதிரிகளை முறியடித்து இந்தியா பெருவெற்றி பெறுவதற்கு எல்லா விதமான ஒத்துழைப்பையும் மத்திய அரசுக்குத் தரும் என்னும் உறுதியையும் மேற்கொள்கிறது.

நாடு காக்கப் போர்க்களம் புகுந்துள்ள வீர மறவர்களை வாழ்த்துவதிலும் அவர்தம் அருந் தியாகச் செயல்களைப் போற்றுவதிலும் இப்பேரவை பெருமை கொள்கிறது.

வெளிப் பகையை விரட்டியடிக்கப் போதுமான ஆற்றலை, உட்பகை எதுவும் உருவாகாத சூழ்நிலை தான் தோற்றுவிக்கும் என்பதை உணர்ந்து, சாதிமத பேதங்கள், அரசியல் மாறுபாடுகள் அனைத்தையும் மறந்து மக்களின் பேரணி ஓரணி யாகத் திரண்டு நின்று, எதிரிகளை வென்றிட வேண்டிய அவசியத்தையும் இப்பேரவை வலி யுறுத்துகிறது.

சர்வாதிகாரக் கொள்கை, மக்களாட்சித் தத்து வத்தின் மீது நடத்தத் தொடங்கியுள்ள இந்தப் போராட்டத்தின் இறுதி வெற்றி, இந்தியா போற்றி வருகிற ஜனநாயகத்திற்கே என்ற நம்பிக்கையை இப்பேரவை பிரகடனம் செய்கிறது.

தொடக்கக் காலத்திலிருந்தே பாகிஸ்தானின் மனிதாபிமானமற்ற போக்கை இந்திய நாடு உலக நாடுகள் அனைத்திற்கும் தெளிவாக்கியிருப்பதோடு, நியாயமுணர்ந்து நடக்கும் நாடுகள் பலவற்றின் ஆதரவையும் பெற்றுள்ளது. அவ்வண்ணம் ஆதரவு தர முன்வந்துள்ள நாடுகளுக்கு இப்பேரவை நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

பகைப்புலம் மாய்த்து வாகைசூடும் வண்ணம் இந்தியப் படையினர் ஊக்கமும் உறுதியும் கொண்டிடப் போருக்குத் தேவையான ஆள்—பொருள்—கருவி அனைத்தையும் வழங்கிடவும் பிரதமர் எடுக்கும் முடிவுகளை ஏற்று உறுதுணை யாக இருக்கவும் தமிழ் நாட்டு அரசுக்குத் தமிழ் மக்கள் தயக்கமின்றி ஒத்துழைப்பு நல்கிட வேண்டு மென்று இப்பேரவை கேட்டுக்கொள்கிறது.''

## தத்துவப் போர்

*இந்தத் தீர்மானத்தை இந்த அவையிலுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் ஒரே மனதாக ஏற்றுக்கொண்டு தங்களுடைய ஆதரவைத் தெரிவிப்பார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இது ஓர் உணர்ச்சி மயமான கட்டத்தில்-நாட்டின் எழுச்சி பொங்கி வழிந்து காணப்படுகின்ற நேரத்தில் நிறைவேற்றப்படுகிற மிக முக்கியமான தீர்மானமாகும்.*

இன்றைக்கு இந்தியாவிற்கு ஏற்பட்டிருக்கின்ற இந்த நெருக்கடியை எப்படியும் நாம் சமாளிப்போம் என்கின்ற உறுதியைப் பெற்றிருக்கிறோம் என்றாலும், எப்படி எப்படிச் சமாளிக்க வேண்டும் என்பதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து அதன்படி நடக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இன்று நேற்றல்ல—நீண்ட நெடுங்காலமாகவே, கடும்பகை இருந்து வந்திருக்கிறது. இந்தப் பகைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டிய தருணமாகத்தான் இந்தத் தருணம் வாய்த்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

பாகிஸ்தான் இந்தியா மீது இன்றைக்குத் தொடுத்திருக்கின்ற இந்தப் போர் ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது



தொடுத்திருக்கிற போர் என்று கருதுவதைக் காட்டிலும், ஒரு தத்துவம் இன்னொரு தத்துவத்தின் மீது தொடுத்திருக்கிற போர் என்று சொன்னால் அது மிகையாகாது.

தீர்மானத்திலே குறிப்பிட்டிருப்பதுபோல சர்வாதிகார-மனப்பான்மையோடு, சர்வாதிகாரக் கொள்கையில் வெறி பிடித்து அலைந்து கொண்டிருக்கிற பாகிஸ்தானுடைய சர்வாதிகாரி, இந்தியாவில் நாம் கட்டிக் காத்து வருகிற ஜனநாயகத் தத்துவத்தின் மீதும், நம்முடைய வாழ்க்கை முறையின் மீதும், நம்முடைய மதச் சார்பற்ற கொள்கையின் மீதும் இன்றைக்குப் படை எடுத்திருக்கிறார் என்று நாம் திட்டவட்டமாகக் கொள்ளவேண்டும்.

### தவறான பிரச்சாரம்

அமெரிக்க நாட்டுக்கு நான் சென்றிருந்த நேரத்தில் அங்கே ஒரு தவறான பிரச்சாரம், இப்போது பாகிஸ்தான் தொடுத்திருக்கிற போர் பற்றிப் பத்திரிகைகளில் கட்டுரை வாயிலாகச் செய்யப்படுவதை நேரில் காண்கிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் ஏற்பட்டிருக்கிற இந்தத் தகராறு இன்று நேற்று அல்ல. பல நூற்றாண்டுக்காலமாக இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே இருந்து வருகிற தகராறினுடைய மற்றொரு கட்டம்தான் என்று அந்த நாட்டிலுள்ள சில பத்திரிகைகள் வருணித்திருப்பதை நான் கண்டேன்.

சில நிருபர்களைச் சந்தித்த நேரத்தில் அது தவறு என்பதற்கான விளக்கங்களை அளிக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

இது, இந்து—முஸ்லிம் தகராறு அல்ல. இந்தியாவில் இன்றைக்கு முஸ்லிம்களே இல்லாமல் இல்லை. குறிப்பாகச் சொல்லப்போனால் இந்தியாவில் இருக்கிற முஸ்லிம்களுடைய தொகை இன்றைக்குப் பாகிஸ்தானில் இருக்கிற முஸ்லிம்களின் எண்ணிக்கையைவிட அதிகமானது என்று சொன்னால் அதை யாரும் மறுக்க இயலாது.

அந்த அளவுக்குப் பாகிஸ்தானைவிட இன்றைக்கு இந்தியாவில் அதிகமான முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய உரிமைகள் இங்கே மதிக்கப்படுகின்றன. அவர்களுடைய நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன. அவர்கள் அனைவருமே இந்து முஸ்லிம்கள் என்கிற அளவில் இல்லாமல் இந்தியர்கள் என்கிற அளவில் ஒன்றுபட்டு இந்த நாட்டினுடைய சுதந்திரத்தைக் காப்பாற்றுவதிலும், இந்த நாட்டுக்கு வருகிற ஆபத்துக்களைத் தவிர்ப்பதிலும் முன்னிற்கின்ற காட்சியினை நாம் காண்கின்றோம்.



ஆகவே இப்போது நடைபெறுகிற இந்தப் போராட்டம் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும், இந்துக்களுடைய நாட்டுக்கும் முஸ்லிம்களுடைய நாட்டுக்கும் நடைபெறுகிற போராட்டம் என்று யாரும் கற்பனைகூடச் செய்துகொள்ளத் தேவையில்லை என்று அந்த நிருபர்களிடையே சொன்னேன்.

அக்கிரமமாகவும், தணியாத வெறி காரணமாகவும் பலமுனைகளிலே கேடு உண்டாக்க வேண்டும் என்பதற்காகவும் மறைமுகமாக இருக்கின்ற வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு இந்தியாவை எப்படியாவது தோற்கடிக்க வேண்டுமென்கிற நிலைமையிலேதான் இன்று பாகிஸ்தானின் சர்வாதிகாரி இத்தகைய காரியங்களைச் செய்து வருகின்றார்.

இந்தத் தெளிவான விளக்கத்தை இந்தப் பேரவையில் நாம் அனைவரும் கொள்வதோடு, வெளியிலும் வற்புறுத்திக் கூறுவது நீண்ட நெடுங்காலமாக நாம் ஏற்படுத்தியிருக்கிற வகுப்பு ஒற்றுமையை இந்த நேரத்தில் நிலைநிறுத்தப் பயன்படும். போர்ச் சூழ்நிலையைப் பயன்படுத்தி வகுப்பு ஒற்றுமைக்கு உலை வைக்கின்ற முயற்சியை முறியடிக்கும் வகையிலும் இது அமையும் என்று நான் குறிப்பிட்டேன்.

### அகதிகள் பிரச்சினை



முதன் முதலாக இந்தியா பாகிஸ்தான் அகதிகளால் படையெடுக்கப்பட வேண்டிய நெருக்கடியான கட்டத்திற்கு ஆளானது. பாகிஸ்தானின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிற கிழக்கு வங்கத்தில் ஜனநாயக ரீதியில் நடைபெற்ற

தேர்தல் முடிவு மதிக்கப்படாமல், சர்வாதிகாரியினுடைய காலடியில் மிதிக்கப்பட்டு அந்த ஜனநாயக எழுச்சிக்கு நாயகனுகத் தோன்றிய திரு முஜிபுர் ரகிமான் சிறைப் பிடிக்கப்பட்டு, லட்சக்கணக்கான மக்கள் கிழக்கு வங்கத்தில் கொல்லப்பட்டு, ஒரு கோடி மக்களுக்கு மேல் அகதிகளாக இந்தியாவுக்கு வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

ஒரு கோடி அகதிகள் இந்தியாவுக்கு வந்திருக்கிருர்கள் என்ருல் வேறு நாடுகளில் உள்ளவர்களே என்னிடத்தில் கேட்கிருர்கள், ''55 கோடி மக்கள் இருக்கிற இந்தியாவில் இன்னும் ஒரு கோடி மக்களைத் தாங்கிக் கொள்ளக்கூடாதா?'' என்று.

ஐம்பத்தைந்து கோடி மக்கள் தொகை இருக்கிற ஒரு நாட்டில் மேலும் மக்கள் தொகை பெருகுகிறது என்பது வேறு, திடீரென நுழைகிருர்கள் என்பது வேறு.

நம்முடைய நாட்டு மக்கள் தொகை பெருகக்கூடாது என்பதற்காகப் பல்வேறு திட்டங்களையும், முயற்சிகளையும் எடுத்துக்கொண்டிருக்கிற நேரத்தில், பெருகுவது மாறித் திடீரென்று மக்கள் தொகை நுழைந்தால் அதை ஓர் அரசு எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியும்? எப்படிச் சமாளிக்க முடியும்? சமாளிக்க முடியாமல் எவ்வளவு கஷ்டத்தை இந்திய அரசு அனுபவிக்கிறது? இதுவரை எவ்வளவு கஷ்டத்தை இந்திய அரசு அனுபவித்திருக்கிறது? இது வரை எவ்வளவு கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறது என்பவற்றை எல்லாம் அனைத்துலக நாடுகளுக்கு நாம் எடுத்து விளக்கியிருக்கிருேம்.

இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அனைத்துலக நாடுகளில் மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின் மூலம் இந்தியாவின் நிலைமையை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிருர்கள்.

பாகிஸ்தான் செய்கிற அட்டூழியங்கள் வேறு நாடுகளில் இருக்கிற அரசுகளால் ஒருவேளை மறைக்கப்பட்டாலும் அந்த நாட்டு மக்கள் உண்மையை நிச்சயமாக உணர்ந்திருக்கிருர்கள் என்றே நம்புகிறேன்.

### அமெரிக்க மக்களின் அனுதாபம் யாருக்கு ?

குறிப்பாக, அமெரிக்க நாட்டு அரசாங்கம் இந்திய-பாகிஸ்தான் விஷயத்தில் இருவரையும் சமமாகவே கருதுகிறது என்ருலும், இந்தியாப் பக்கம் இல்லாமல் பாகிஸ்தானை முழு மூச்சாக ஆதரிக்க அல்லாடிக் கொண்டிருக்கிறது

என்றாலும் அந்த நாட்டில் நான் கவனித்த வரையில் அமெரிக்க நாட்டு மக்கள் பெரும்பாலானவர்கள் தங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தை இந்தியாவின் பக்கம்தான் திருப்பிவிட்டிருக்கிறார்கள்.

அமெரிக்க டெலிவிஷனில் அவர்கள் கண்ட காட்சிகளைப்போல— அந்த அளவுக்குச் செய்திகளை நாம் நம்முடைய பத்திரிகைகளில் கண்டிருக்க முடியாது. கிழக்கு வங்கத்திலே பாகிஸ்தான் நடத்திய அட்டூழியங்களை—வெறியர்களுடைய அடக்குமுறைகளை நேரிடையாகப் படம் எடுத்து டெலிவிஷனில் காட்டினார்கள். டாக்கா நகர் அருகில் பல வீடுகளுக்குத் தீயிடப்பட்டிருப்பதைப் பார்த்தேன். மகளிர் பலர் மானபங்கம் செய்யப்பட்டதை—கற்பழிக்கப்பட்டதைப் பார்த்தேன். அதுமாத்திரம் அல்ல. அந்தப் பிணங்களைக் கூடப் புதைக்க முடியாமல் நீண்ட குழி வெட்டி அதில் ஒன்றின் மீது ஒன்றாக அவற்றை இழுத்தெறிந்த காட்சிகளையும் டெலிவிஷன் படத்தில் காட்டினார்கள்.

இப்படிப்பட்ட கோரக் காட்சிகளை எல்லாம் கண்ட அமெரிக்க மக்களில் பெரும்பான்மையானவர்கள் தங்களுடைய முழு ஆதரவை இன்றைக்கு இந்தியாப் பக்கம் திருப்பியிருக்கிறார்கள்.

அந்த நாட்டு அரசு எவ்வாறு இருந்தாலும் இன்றைக்கு அந்த நாட்டு மக்களுடைய ஆதரவு இந்தியாவின் பக்கம்தான் இருக்கிறது.

பாகிஸ்தான் வெறியர்களின் அட்டகாசங்களையும், அட்டூழியங்களையும், துரத்தப்பட்டிருக்கிற அகதிகளின் எண்ணிக்கையையும் எல்லா நாட்டு மக்களும் அறிந்திருக்கிறார்கள்.

## புலியை இடறியிருக்கிறார் யாகியாகான்

ஆரம்பத்தில் ஒரு கோடி மக்களை நாம் தாங்கித்தீர வேண்டிய கஷ்டம் ஏற்பட்டது. அதற்கடுத்துத் தங்களுக்குத் தனி நாடு வேண்டுமென்ற அளவுக்கு உணர்ச்சி மேலிட்டு, அது ஒடுக்கப்படுகிற நிலைமையில் வங்கதேச விடுதலை வீரர்கள் சுதந்திரச் சிங்கநாதம் முழக்கி—ஜனநாயகத்தை அழிக்கக் கிளம்பிய சர்வாதிகார ஆட்சியை எதிர்த்தார்கள்.

அதனால் ஆத்திரம் அடைந்த பாகிஸ்தானுடைய சர்வாதிகாரி, தன்னுடைய நாட்டில் ஒரு பகுதி என்று அவர் கருதிக் கொண்டிருக்கிற-கற்பனை செய்து கொண்டிருக்கிற கிழக்கு வங்கம் கைவிட்டுப் போய்விடும் என்பதனை உணர்ந்தவுடன் தான் இந்தியா மீது படை எடுத்திருக்கிறார்.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், தூங்குகின்ற புலியை இடறியிருக்கிறார் பாகிஸ்தானின் சர்வாதிகாரி என்று சொன்னால் அது மிகையாகாது.




இந்தியாவின் விமானப் படைத் தளங்கள் சிலவற்றின் மீது அனாவசியமாகத் தாக்குதலை நடத்தினார்கள். நாம்தான் இந்தப் போராட்டத்திலே குதித்தவர்கள் என்றெல்லாம் உலகத்தினர் கற்பனை செய்து கொள்ளவேண்டுமென்ற முயற்சிகளைச் செய்தார்கள். ஆனால் அவை அனைத்தும் தவறு—பொய்யான வாதம் என்பதை ஆக்ரா மீதும், அமிர்த சரஸ் மீதும் அவர்கள் நடத்திய விமானப் படையெடுப்பு மெய்ப்பித்து விட்டது.

இழப்பின் தொடக்கம் இது ; இறுதி . .

ஆனால் ஒருநாள், நம் மீது அவர்கள் தாக்குதல் நடத்தினார்கள் என்ற செய்தியை நம் நாட்டுப் பத்திரிகைகளும், வெளி நாட்டுப் பத்திரிகைகளும் வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இன்றைக்கு நாம் நடத்துகிற எதிர்த்தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் பாகிஸ்தான் திணறிக் கொண்டிருக்கிற காட்சியைப் பார்க்கிறோம். இந்திய நாட்டு விமானங்கள், உள்ளே பிரவேசித்த பாகிஸ்தான் விமானங்களைச் சுட்டு வீழ்த்தியிருக்கின்றன. இன்றையக் கணக்குப்படிப் பார்த்தால் பாகிஸ்தானின் 47 விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டிருக்கின்றன. இந்திய விமானங்கள் 17 தான் சுட்டு வீழ்த்தப்பட்டன. பாகிஸ்தான் 47 விமானங்களை இந்தப் போரினால் இழந்திருக்கிறது.

மேற்குப் பாகிஸ்தானிலும், 61 டாங்கிகளை பாகிஸ்தான் இழந்திருக்கின்றது என்கிற புள்ளி விவரம் நமக்குக் கிடைத்

திருக்கிறது. மேலும் 3 கப்பல்களை, பாகிஸ்தான் இழந்திருக்கிறது. நீர் மூழ்கிக் கப்பல் ஒன்றையும் பாகிஸ்தான் இழந்திருக்கிறது.

இவைகள் எல்லாம் பாகிஸ்தானின் இழப்பின் ஆரம்பம்தான். இழப்பின் முடிவு எதுவாக இருக்குமோ? ஒரு வேளை பாகிஸ்தானாக இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்தியாவின் பலம் பாகிஸ்தானுக்கு மட்டுமல்ல, அகில உலகத்திற்கும் காட்டப்படுகிற அளவில் உயர்ந்திருக்கிறது என்பதில் பெருமைப்பட வேண்டும்.

நமது போர் வீரர்களுக்கு உற்சாகத்தை அளிக்கவும், அவர்கள் போர்க்களத்தில் உத்வேகத்துடன் போராடவும் அவர்களுக்குப் பின்னால் நாம் அனைவரும் இருக்கிறோம் என்கிற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்படும்படிச் செய்ய வேண்டும்.

### கோஸிஜின் அறிக்கை கூறுவதென்ன ?

இன்றையக் காலைப் பத்திரிகைகளில் வந்திருக்கும் செய்தியானது மேலும் நமக்கு ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது. சோவியத் நாட்டின் பிரதம மந்திரி கோஸிஜின் அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றார். 'இந்தத் தகராறில் உலக நாடுகளில் எந்த நாடாவது தலையிட்டால் அது தவறு' என்று அவர் கூறியிருப்பது போற்றத்தக்கதாகும். அதாவது 'இந்தப் போரில் வேறு எந்த நாடாவது தலையிட்டால், நாங்களும் தலையிடுவோம்' என்று கூறுவதாகத்தான் நாம் இதற்குப் பொருள் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட நல்லெண்ணத்தோடு இந்தியாவை அணுகுகின்ற நாடுகளுக்கெல்லாம் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

### வங்க தேசம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது

தமிழ்நாட்டு மக்கள் இந்தப் போராட்டத்தில் தங்களுடைய கடமையினைக் கட்சி, மதம் இப்படிப்பட்ட பல்வேறு வேறுபாடுகளைக் கடந்து நிச்சயமாக வழங்குவார்கள் என்பதனைத் திட்டவட்டமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். தீர்மானத்தை வழிமொழிந்து பேசிய அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், தீர்மானத்தை முன்மொழிந்தவன் என்ற முறையில் என்னுடைய அன்பான நன்றியை மிகுந்த பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தீர்மானம் முன்மொழியப்பட்டு வழிமொழியப்படுகிற நேரத்தில் இந்தத் தீர்மானத்தை வலுப்படுத்துகிற அளவுக்கு டெல்லி நாடாளு மன்றத்தில் இருந்து நமக்குக் கிடைத்த செய்தி பங்களா தேஷ் இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது என்பதாகும்.**

பங்களாதேசம் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது என்ருல் கிட்டத்தட்ட ஐந்து கோடி மக்களைக் கொண்ட ஒரு புதிய நாடு இன்றைக்கு முளைத்திருக்கிறது என்று பொருளாகும். நான் ஏன் முளைத்து இருக்கிறது என்று சொன்னேன் என்ருல், அது துளிர் விட்டுச் செடியாகி, அரும்பு வைத்துக் காயும், கனியும் குலுங்குகிற அளவுக்கு வெகு விரைவில்



அகில உலக நாடுகளில் ஒன்ருக அமைய இருக்கிறது என்பதனுல்தான்.

அமெரிக்க அரசு பாகிஸ்தானுடைய போக்கை ஆதரித்து இருக்கிறது என்பதை இங்கே பேசிய அனைத்துக் கட்சித் தலைவர்கள் சொன்னுர்கள்.

**மக்களும் அரசும்**

நான் குறிப்பிட்டது அமெரிக்க நாட்டு மக்களுடைய ஆதரவு இந்தியாவுக்கு இருக்கிறது என்றுதான். அமெரிக்க அரசினுடைய ஆதரவு இந்தியாவுக்குச் சரியான அளவில் இல்லை. அவர்கள் அதிலே மழுப்புகிருர்கள் அல்லது மறைக்கிருர்கள். அல்லது மறைமுகமாகச் சர்வாதிகார பாகிஸ்தான் பக்கம் சாய்கிருர்கள் என்ற அந்தக் கருத்தில் நான் எந்தவிதமான மாறுபாடும் கொண்டிடவில்லை.

ஒரு நாட்டின் மக்களுடைய எண்ணம் மதிக்கப்படுகின்ற எண்ணமாகும். ஏனென்ருல் அமெரிக்க நாடு ஜனநாயக நாடு. அங்கே மக்கள், அரசை மாற்றுவதற்கு வல்லவர்கள். அந்தச் சூசகத்தை நான் புரிந்து கொண்டிருக்கிற காரணத்திஞல் அமெரிக்க நாட்டு மக்கள் நம் பக்கம் இருக்கிருர்கள் என்று சொல்கிறேனே அல்லாது வேறு அல்ல. ஒரு சர்வாதிகார நாடாக இருந்தால் அந்தச் சர்வாதிகாரி வாழ்கிற வரையில்—ஆள்கிற வரையில் அந்த நாட்டு அரசின் கொள்கை மாருதிருக்கலாம். அங்கே மக்கள் கருத்துக்கு மதிப்பு இல்லாத காரணத்திஞல், ஜனநாயக நாட்டில்—மக்கள் நினைத்தால் அது மகேசன்

குரலாக மாறி—இருக்கிற ஆட்சியை மாற்ற முடியும். அப்படி மாறியிருக்கிற நிலையையும் ஜனநாயக நாடுகளில் நாம் பார்க்கிறோம்.

அதன் காரணமாகத்தான் அமெரிக்க நாட்டு மக்களின் எழுச்சி நம் பக்கம் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

நான், முன்பு உதவி ஜனாதிபதியாக இருந்தவரும் இப் போது செனட்டராக உள்ளவருமான திரு. ஹம்ப்ரே அவர் களைச் சந்தித்து அரை மணி நேரம் பேசிக் கொண்டிருந் தேன். அப்போது அவர் என்னிடம் சொன்னது, ''உங்கள் பிரதமரிடத்தில் சொல்லுங்கள், அமெரிக்க நாட்டு மக்கள் இந்தியாவின் பக்கம்தான் இருக்கிறார்கள். நான் இந்தியாவின் பக்கம்தான் இருக்கிறேன். என்போல் பல செனட்டர்கள் இந்தியாவின் பக்கம்தான் இருக்கிறார்கள்'' என்பதுதான்.

செனட்டர்கள் என்கிற போது அங்கே நூறு செனட்டர் கள் இருக்கிறார்கள். ஐம்பது மாநிலங்கள்—மாநிலத்திற்கு இரண்டு செனட்டர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகி றார்கள். அந்த செனட்டர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப் பட்டிருக்கிற அறையைப் பார்த்தால் மூன்று முதல் மந்திரி யின் அறைக்குச் சமமான இடமாக இருக்கிறது.

அந்த இடமே போதவில்லை என்று அவர்கள் குறைப் பட்டுக் கொள்கிறார்கள். இவ்வளவு பெரிய பணக்கார நாட்டில் எனக்கு இருக்கிற சிறிய அறையைப் பாருங்கள் என்றால் இதை இங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுப் பொறுமைப்பட வேண்டும் என்று சொல்லவில்லை.

அந்த அளவுக்கு நாள்தோறும் 500 கடிதங்களுக்குப் பதில் எழுத வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு செனட்ட ருக்கும் 15 அலுவலர்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டு அங்கே பணி புரிந்து வருகிறார்கள். அவர்களது கருத் துக்கு மிகுந்த மதிப்பு இருக்கிறது. அதற்காகச் சொன் னேன்.

அமெரிக்க நாட்டில் நிக்சன் கட்சியைச் சேர்ந்த திரு கூப்பர் அவர்களையும் சந்தித்தேன். மிகப் பெரியவர்—வயதானவர்—இந்திய நாட்டின் தூதுவராக இருந்தவர்—இந்திய மக்களுடைய அன்பு உள்ளத்தை நன்கு தெரிந்து வைத்திருக்கக்கூடிய பெரியவர் ஆவார். அவர் நிக்சன் கட்சியைச் சேர்ந்தவர் என்றாலும் முழு அன்பும் முழு ஆதரவும் இந்தியாவின் பக்கம்தான். இதை இந்திய மக்களிடத்தில் மிகத் தெளிவாகச் சொல்லலாம் என்று என்னிடத்தில் அறிவித்தார்கள்.

### வங்கத்தை அமெரிக்கா அங்கீகரிக்கும் நாள் வரும்

இவைகளை எல்லாம் சொல்லுவதற்குக் காரணம் அங்கே தேர்தலுக்கு ஓராண்டுக் காலமே இருக்கிறது. மக்கள் மன நிலைக்கேற்ப அங்கே ஆட்சி மாறக்கூடும். இன்றைக்கு இருக்கிற அரசு நம்முடைய நியாயத்தை உணர மறுத்தாலும், இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட பங்களா தேஷை அங்கீகரிக்க மறுத்தாலும் நாளை என்ன ஆகும் என்று சொல்ல முடியாது.



முன்பு சீனாவை அங்கீகரித்தார்களா? யாரை அங்கீகரித்தார்கள்? தைவானை அங்கீகரித்தார்கள். ஒரு தீவில் வசித்த சியாங்கே ஷேக்கை ஆதரித்தார்கள். பாகிஸ்தானைத்தான் நாங்கள் அங்கீகரிப்போம் என்று சொல்வது போல அன்றைக்குச் சியாங்கே ஷேக்கை ஆதரித்தார்கள். தைவானை ஆதரித்து—ஐ.நா. சபையில் உட்காருவதற்கு இடம் ஒதுக்கினார்கள். ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன? சியாங்கே ஷேக் தூதுவர் உட்கார்ந்த இடத்தில் மாசே துங்—சூயென்லாய்—அரசாங்கத்தின் தூதுவர் உட்காருவதை நாம் காண்கிறோம். சீனாவை ஒப்பிட்டுப் பேச விரும்பவில்லை. நிலைமையைத்தான் ஒப்பிட்டுப் பேச விரும்புகிறேன்.

அதைப் போல ஒரு காலத்தில் நிச்சயமாக பாகிஸ்தான் சர்வாதிகாரிகளின் பிரதிநிதியை விட்டு—பங்களாதேஷ் பிரதிநிதியை ஏற்கிற காலம் வரும்—பங்களா தேஷை அங்கீகரிக்கிற காலமும் வரும்.

### தியாகத்தால் புகழ்பெற வேண்டும்

ஆகவேதான் இன்றைக்குப் பங்களாதேஷை இந்திய அரசின் சார்பாக அங்கீகரிக்கப்பட்ட மகிழ்ச்சிகரமான செய்தி வந்திருக்கிறது. இன்னும் இருவார காலத்திற்குள் பங்களா தேஷ் முழுவதும் பாகிஸ்தான் கையில் இருந்து விடுவிக்கப் பட்டு விடுதலை வீரர்களிடத்தில் ஒப்படைக்கப்படுகிற செய்தி நிச்சயமாக வர இருக்கிறது என்பதனை நாம் எல்லாம் எதிர்பா க்கலாம்.

இந்த நேரத்திலே நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில்-குறிப்பாக இந்தத் தீர்மானத்தை விவாதித்துக் கொண்டிருக்கிற தமிழ் மாநிலத்தைப் பொறுத்த வரையில்

வகுக்கப்பட வேண்டிய பல நடவடிக்கைகளை எல்லாம் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். முதலாளிகள், வணிகக் கோமான்கள்—இவர்கள், போரைப் பயன்படுத்திக் கொண்டு கள்ளச் சந்தை, இருட்டு வியாபாரம் இவைகளிலே தங்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ள முனையக்கூடாது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று சொன்னார்கள்.

நாம் கேள்விப் பட்டிருக்கிறோம், "சென்ற உலக மகா யுத்தத்தின் போது, சாதாரணமாக ஏழையாக இருந்த ஒருவர் பெரும் பணக்காரராகி, எப்படி வசதி என்றால் 'யுத்தத்தில் நன்றாகச் சம்பாதித்து விட்டார்' என்பதாக. இப்படி ஓர் அடைமொழியைச் சேர்த்துச் சொல்லப்பட்டதை எல்லாம் நாம் இந்தத் தடவை பெறக்கூடாது. இந்தத் தடவை யுத்தத்தில் கரமிழந்தார், கால் இழந்தார், நிறையத் தியாகம் செய்தார் என்கிற புகழை ஈட்டிக் கொள்ள வேண்டுமேயல்லாது யுத்தத்தில் சம்பாதித்து விட்டார் என்கிற அடைமொழியைப் பெறுகிற அளவுக்கு அந்தஸ்துத் தோன்றுவதற்கு இடமளித்தல் ஆகாது.

போர்வீரர் குடும்பமும் அரசாங்கமும்

அதில் தமிழ்நாட்டு அரசாங்கம் மிகக் கூர்மையாக இருந்து, கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை அனைத்துக்கட்சித் தலைவர்களுக்கும் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு ஹண்டே அவர்கள் இரண்டு மூன்று கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்கள் இன்றைக்குக் குறிப்பாகப் போர்க்களத்திற்குச் செல்கிற வீரர்களுக்கு நல்ல பாதுகாப்பு இருக்க வேண்டும் என்றார்கள். சாவில் இருந்து போர் வீரர்களைக் காத்துக் கொள்ளப் பாதுகாப்பு இல்லை. போர்க்களத்திற்குச் செல்கிறவர்களே ஓரளவு திரும்பி வர மாட்டோம் என்கிற உறுதியோடு செல்கிறார்கள். வெற்றி பெற்றே திரும்பி வருவோம் என்கிற அளவில் செல்கிறார்கள். போர்க் களத்திற்குச் சென்றவர்களை நாம் பார்த்திருக்கிறோம்—கேள்விப்பட்டிருக்கிறோம். போர்க்களத்திற்குச் சென்றவனின் உடை திரும்பி வந்து, மாதாவின் கண்ணீரால் நனைந்தது என்பதாக. அவன் திரும்பவில்லை, அவன் அணிந்திருந்த உடைதான் வந்தது என்று. இன்னும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம், எத்தனையோ அண்ணன்மார்களைப் போர்க்களத்தில் இழந்த தம்பிமார்கள் கண்ணீர் விட்டு நின்றதாக. ஏன் இதுவும் கூடக் கேள்விப்பட்டிருக்கிறோம். காதலியர்கள்—போர்க்களத்தில் தங்கள் காத

லனை இழந்து பூ இழந்து, பொட்டு இழந்து, பொலிவிழந்து சோகச் சித்திரமாகக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தார்கள் என்பதை.



ஆகவே, எந்தச் சூழ்நிலையில் சென்ருன்- யுத்தத்தில் மாண்டான் என்பது வேறு. இப்பொழுது சாவதற்காகவே செல்கிருன்; போர் முனைக்குச் செல்லும் வீரர்கள் சாவதற்காகவே செல்கிறவர்கள். அவர்கள் தங்களைப் பிணமாக ஆக்கிக் கொள்வதன்மூலம் இந்த நாட்டு மண்ணின் மானத்தைக் காப்பாற்றவேண்டும். இந்த நாட்டுச் சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டும். இந்த நாட்டு மண்ணின் உரிமை காப்பாற்றப்படவேண்டும் என்று சொல்கின்ற போர்வீரர்களின் குடும்பத்தைக் காப்பாற்றுகின்ற முழுப் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது.

டாக்டர் ஹண்டே அவர்கள் குறிப்பிட்டதைப் போல, ரிசர்வ் நிதியிலிருந்து உதவக்கூடிய நிறுவனங்கள் வீரர்களின் குடும்பங்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பை நிச்சயமாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்த அவையின் சார்பாக வேண்டுகோள் விடுக்கின்றேன்.

### அள்ளித்தருக

இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடியைப் போர் வீரர்கள் மட்டும் சமாளித்து விடுவார்கள் என்று நாம் கைகட்டி, வாளா இருத்தல் கூடாது; அப்படி இருக்கவும் முடியாது. இந்திய நாட்டில் இருக்கிற ஒவ்வொரு குடிமகனும் நெருக்கடிப் பொறுப்புக்களை உணர்ந்தாகவேண்டும். போர்க் கருவிகளைப் புதிது புதிதாக வாங்குவதற்கும், போர்த் தளவாடங்களை உற்பத்தி செய்வதற்கும் ஏராளமான பணம் தேவைப்படும். அதை அட்டியின்றித் தருவதற்கும் இந்தியாவில் இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனும் தயாராக இருக்க வேண்டும். அதில் தயக்கம் காட்டக் கூடாது.

அதிலும், தமிழகம் இந்தியாவில் இருக்கிற எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக இருக்க வேண்டும். நான், தமிழ்நாட்டில் இருக்கிற நாலரைக் கோடி மக்கள் மீதும் நம்பிக்கை வைத்து, இதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். போருக்கான நிதியைத் திரட்டுகிற பணி ஆரம்பமாக வேண்டும்.

தமிழகத்தில் பொதுப் பணியாளர்கள், பொது நோக்கு உடையவர்கள் போர் வீரர்களுக்குத் தேவைப்படுகிற மருந்து களை வாங்கிப் போர்முனைகளுக்கு அனுப்புதல், தேவையான உடைகளை வாங்கி அனுப்புதல், மேலும் போர்முனைக்குச் சென்று போரில் ஈடுபட்டிருக்கும் வீரர்களின் குடும்பங் களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருதல் ஆகிய காரியங்களில் நாட்டில் உள்ள நல்லவர்கள் ஈடுபடவேண்டும். இப்போது நாம் நெருக்கடியான கட்டத்தில் இருக்கிறோம். யுத்த நேரத்தில் போர்க்களத்திலே இருக்கிற வீரர் களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கவும், போர்க்காலச் செலவுகளை ஈடுகட்டவும் ஒவ்வொரு நாளும் செலவழித்து வருகின்ற ரூபாய்க்கு வழி வகை செய்யவும் அரசு மாத்திர மல்லாமல் இந்தியாவில் இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனும் கடமைப் பட்டிருக்கிறோம். அந்த வகையிலே, யுத்த நிதி திரட்டப்படுமானால் அதற்கு நம்மால் இயன்ற தொகையைத் தந்திட வேண்டும்.

தமிழ்நாட்டு மக்கள் நல்ல காரியத்திற்குத் தொகை வழங்க என்றுமே தயங்க மாட்டார்கள். அதுவும் இப்படிப் பட்ட நெருக்கடியான காலத்திலே இந்த மண்ணுக்கு வந்த ஆபத்தை நீக்குகின்ற வகையில் அவர்கள் மனந்தளராமல் பெருந் தொகையைத் தந்துதவுவார்கள் என்பது நமக்கெல் லாம் தெரியும்.

இன்று காலையிலே பேரவையிலேகூட நான் அறிவித் திருக்கிறேன். அமைச்சர் பெருமக்கள் 500 ரூபாய் யுத்த நிதிக்குத் தருகிறார்கள் என்றும், சட்டப்பேரவை உறுப்பினர் ஒவ்வொருவரும் 100 ரூபாய்க்குக் குறையாத தொகையைத் தரவிருக்கிறார்கள் என்றும். அவர்களுக்கெல்லாம் இந்த மன்றம் இளைத்ததில்லை. இங்கிருக்கும் உறுப்பினர்கள் நூற்றுக்கு மேல் இருநூறு கூடக் கொடுக்கத் தயாராக இருப்பார்கள் என்பதை அறிவேன். ஆகவே 100 ரூபாய்க் குக் குறையாத ஒரு தொகையை இந்த மன்றத்திலே இருக் கிற உறுப்பினர்கள் தர வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். (கையொலி எழும்புகிறது) தருவீர்கள் என்பதற்கு அடையாளமாக நான் உங்களுடைய கையொலியைப் பெற் றிருக்கிறேன்.

## இரத்த தானம்

இரத்த தானம் செய்வது மிக முக்கியமான செயலாகும். அதற்கு ஏற்ற வகையிலே இங்குள்ள சட்டப்பேரவை உறுப் பினர்களும், மேலவை உறுப்பினர்களும் ரத்த தானம் செய்ய அவர்களுடைய 'குரூப்'புகளைப் பார்த்துக் கணக்கெடுக்க இங்கேயே நாளை அல்லது மறுநாள் மருத்துவர்கள் வந்து

சோதனை செய்ய இருக்கிறார்கள். இரத்த தானம் செய்ய விரும்பும் சட்டப் பேரவை உறுப்பினர்களும் மேலவை உறுப்பினர்களும் இங்கேயே யுத்தத்திலே ஈடுபட்டிருக்கும் சிப்பாய்களுக்குத் தேவையான ரத்தத்தைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாம் தருகின்ற ரத்தத்தினால் தேவையான ரத்தங்களை எல்லாம் தந்து விடுகிறோம் என்பதில்லை.



நாம் தருகின்ற பணம் மூலம் போருக்குத் தேவையான எல்லாப் பணத்தையும் தந்துவிடுகிறோம் என்பதுமில்லை. இப்படி நாம் கொடுப்பதன் மூலம் ஓர் அடையாளமாக நம்முடைய உணர்ச்சிகளைக் காட்டுகின்றோம். சிறு துளி பெரு வெள்ளம் என்பது போல் இந்த அடையாளம் இந்தியா முழுவதும் நிச்சயமாகப் பரவும். அப்படிப் பரவும் பொழுது, இந்தியா வெற்றிகளைப் பெறுவதற்கான வாய்ப்புக் கூறுகள் அதிகம் ஆகும். இந்தியாவின் வெற்றி ஐயப்பாட்டுக்குரியது என்று யாரும் கருதத் தேவையில்லை. உங்களுக்கு நன்றாகத் தெரியும். இன்னும் 10, அல்லது 15 நாட்களிலேகூடப் போர் முடிந்துவிடக் கூடும் என்கிற அளவுக்கு இன்றைக்கு நம்முடைய வீரர்கள் மிக்க வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள்

## இறுதி யுத்தம்

யாகியாகான் சொல்லியிருக்கிறார் இதுதான் என்னுடைய கடைசி யுத்தம் என்று. அவருடைய முடிவை—சாதகத்தை இவ்வளவு முன்கூட்டியே தெரிந்திருப்பதற்கு நாம் எல்லாம் மகிழ்ச்சி அடைகின்றோம். ஆகவே, பாகிஸ்தான் இதைக் கடைசி யுத்தமாகவே நடத்தட்டும். இனிமேல் நாங்கள் யார் பக்கமும் திரும்ப மாட்டோம் என்கிற பாடத்தைப் பெறும் அளவிற்கு இந்தியா அவருக்கு நல்ல அடியைக் கொடுக்கும் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. அதற்கு ஏற்ற வகையில் வீரம் செறிந்த தமிழ் நாட்டு மக்கள் இந்தியஅரசுக்கும் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்திக்கும் நம் எல்லையைக் காக்க எடுக்கும் பணிகளிலே எந்த நேரத்திலேயும் நல்ல ஒத்துழைப்பைத் தருவார்கள் என்பதற்கு அடையாளமாக இந்தத் தீர்மானத்தை இங்கே நிறைவேற்ற இருக்கிறோம். நான் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தை உறுப்பினர்கள் ஒரே மனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

## வெற்றி நமதே!

இன்று கொடி நாள். கொடியவர் ஆக்கிரமிப்பை எதிர்த்துத் தகர்த்து வெற்றிக் கொடி ஏந்திய இந்தியா சூளுரைக்கும் நாளும் இந் நாளேயாகும்.

இந்தியா விடுதலை பெற்றபோது பாகிஸ்தான் தோன்றியது. தோன்றிய போதே அந்த நாடு ஓர் அவலட்சண அமைப்போடு தோன்றியது. மேற்குப் பாகிஸ்தானுக்கும் கிழக்குப் பாகிஸ்தானுக்கும் இடையிலே ஆயிரம் மைல், அந்த ஆயிரம் மைலுக்கு இடையிலே நமது இந்திய பூபாகம்.

உலகிலே எந்த ஒரு நாடும் இப்படி இடையிலே ஆயிரம் மைல்களை இரு பகுதிகளுக்கிடையே பெற்றிருக்கவில்லை.

அமைப்பு முறையிலே மட்டுமல்லாமல் ஆதிக்க வெறிக்கு அடிமைப்படுவதிலும் கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் பெருந் தொல்லைக்கு ஆளாயினர்.

அவர்களது வாழ்க்கைத் தரம் உயரவில்லை. மொழி உரிமை நசுக்கப்பட்டு மொழி ஆதிக்க வெறி உச்சக் கட்டத்திற்குச் சென்று அந்த மக்களின் உணர்ச்சி, எரிமலைத் தீக்குழம்பாயிற்று.

தங்கள் மாநில உரிமைகள் நசுக்கப்படுவதைத் தாங்காத கிழக்கு வங்க மக்கள், ஜனநாயக ரீதியில் தங்கள் தீர்ப்பைச் சென்ற ஆண்டு தேர்தலில் வழங்கினர்.



மாநில உரிமை கேட்ட மக்களின் குரல்வளையை நெரிப்பது போல், தேர்தல் தீர்ப்பைப் புறக்கணித்து விட்டுக் கிழக்கு வங்க மக்களின் மதிப்பிற்குரிய தலைவர் முஜிபுர் ரகிமானையும் சிறையில் அடைத்து விட்டு, இலட்சக்கணக்கான கிழக்கு வங்கமக்களின் உயிரையும் பறித்து ஒரு கோடி மக்களை அகதிகளாக இந்தியாவுக்குத் துரத்திவிட்டு மனிதாபிமானமற்ற முறையில் பேயாட்டம் போடத் தொடங்கியது பாகிஸ்தானின் சர்வாதிகார ஆட்சி.

மிதிபட மிதிபடப் புழுவும் புலியாகும் என்பதற்கேற்ப, கிழக்குப் பாகிஸ்தான், கிழக்கு வங்கமாகி, கிழக்கு வங்கம், ' பங்களா தேஷ் ' எனச் சுதந்திர நாடாகத் தன்னை பிரகடனப்படுத்திக்கொண்டது.

பங்களா தேஷின் முக்திபாகினி என்ற விடுதலைப் படையினர், பாகிஸ்தான் ராணுவ ஆட்சிக்கு மரண அடி கொடுக்கத் தொடங்கியதும் ஆதிக்க வெறியர் யாகியாகானின் ஆத்திரம் இந்தியா மீது திரும்பியது.

'' பங்களா தேஷ் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தேவை'' என்று வலியுறுத்தியது இந்தியா செய்த குற்றமாம்.

அதற்காக அழகுமிகு தாஜ்மகால், ஒளியுமிழும் ஆக்ரா ஆகியவற்றின் மீது குண்டு வீச்சு. சீக்கியரின் பொற்கோவில் எழுந்துநிற்கும் அமிர்தசரஸ்மீதும் ஸ்ரீநகர், ஜோத்பூர் போன்ற இந்திய மண்ணிலும் எதிரிகளின் திடீர்த் தாக்குதல்.

இந்தியா மீது பாகிஸ்தான் படையெடுப்பு! ஆம்; தூங்கும் புலியை இடறி விட்டார்கள். இப்போது அதன் விளைவை அனுபவிக்கிறார்கள்.

## காய்ச்சலும் பாய்ச்சலும்

விரைவில் பங்களா தேஷில் பாகிஸ்தானின் படை இருந்த இடம் தெரியாமல் போகும். இந்திய நாடாளுமன்றத்தில் இந்தியாவின் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்களால் அங்கீகாரப் பிரகடனம் செய்யப்பட்ட '' பங்களா தேஷ் '' புதிய அரசின் கொடி, விடுதலை வீரர்களின் புகழ் பாடியபடி விரைவிலே பறக்கப் போகிறது.

பாகிஸ்தானின் தோல்விக் காய்ச்சல், இந்தியா மீது கடும் பாய்ச்சலுக்குக் காரணமாவதில் வியப்பில்லை. நெருக்கடி நீண்ட நாள் இருக்குமா என்பதை விட முற்றுமா என்ற கேள்விக்கு நாம் விடை கண்டாக வேண்டும். முற்றக் கூடும். எதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும்.

## நமது பொறுப்பு

போர்க்கால விளைவுகள், போருக்குப் பின் சமாளிக்க வேண்டிய பிரச்சினைகள் இவைகள் அனைத்தையும் மனத்திற் கொண்டு நாடு நடவடிக்கைகளை மேற்கொண்டாக வேண்டும்.

இந்த மண்ணைக் காக்கும் போரில் மான மறவர்கள் களம் நோக்கிச் சென்ற வண்ணம் இருக்கின்றனர்.

தாயின் அன்பு முத்தம் பெற்றுத் துப்பாக்கி ஏந்திக் களம் புகும் வீரர்கள்—தந்தையின் ஆசி பெற்றுத் தோள் தட்டிச்

செல்லும் தகைமைசால் மைந்தர்கள்—தோகையாள் கண்ணீர் துடைத்து எதிரியின் வியூகத்தைப் பிளக்கச் செல்லும் இளங் காளையர்—மழலைக்கு முத்த மழைபொழிந்து மாற்ருரைப் புறங்காணப் பறந்தோடும் புறநானூற்றுச் செல்வங்கள்—இவர்கள் எல்லாம் சாவின் கோரக் கரங்களுக்கு அஞ்சாமல் சமர்க்களம் செல்லும் தியாகச் சுடர்கள் அன்ருே !

விடைபெற்றுக் களம் சென்ற மகனின் ராணுவ உடைகள் மட்டும் திரும்பி வந்து அவைகளைக் கண்ணீரால் நனைக்கும் தாய்களின் பாதங்களுக்கு மலர்கள் தூவி வணங்குகிருேம். என்ருலும், அந்தத் தாயும் அந்தக் குடும்பமும் வாழும் பொறுப்பை நாமல்லவா ஏற்றுக்கொள்ள வேண்டும்?

களத்தில் நிற்போர் காக்கி உடை அணிந்த வீரர்கள்.... அந்த உடை அணியாத நாம் போர்க் களத்தில் இருக்கிற உணர்ச்சியோடு காரியங்கள் ஆற்றியாக வேண்டும்.

வெளிப் பகை யுத்தத் தளவாடங்களோடு வரும். உட்பகை, கறுப்புச் சந்தைக்காரர்கள், கொள்ளை வியாபாரிகள், பதுக்கல்காரர்கள், அவசர நிலை உணராமல் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் ஐந்தாம் படையினர் ஆகியோர் உருவிலே வரும்.

அவர்கள் மீது அரசு, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால், எதிரிகளுக்கு இடம் கொடுத்த தீங்கினைச் செய்த குற்றத்திற்கு ஆளாகும்.

அவர்களை அரசு மட்டுமன்றி நாட்டு நலனில் அக்கறையுள்ள பொதுமக்களும் அடையாளங்காட்டிடத் தவறக் கூடாது.

## ஐந்தாம் படையினர்

போர் நேரத்தில் வதந்திகள் எதிரியின் கணைகளை விடக் கொடியவைகளாகும். வதந்திகளைப் பரப்புவோர் ஐந்தாம் படையினரில் ஒரு பிரிவினரேயாகும்.

போர்க் காலத்தில், உற்பத்தி பெருக, தொழிலாளத் தோழர்களும், தொழில் அதிபர்களும் தங்கள் ஒத்துழைப்பைத் தந்தாக வேண்டும்.

நாட்டின் பாதுகாப்பு—நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி இவைகளை மாணவ நண்பர்கள் உணர்ந்து பணியாற்றுகிருர்கள் என நம்புகிறேன். அவர்களிடையே இந்தியாவின் எதிரிகள் மாணவர் வேடத்தில் நுழையக் கூடும்—தூண்டி விடக் கூடும். அந்த எதிரிகள் தொலைவிலிருந்து அல்ல ; துரோகச் சகதியிலிருந்து முளைத்திருப்பவர்களேயாகும். அவர்

கள் சூது மதிக்கு மாணவர்களும் மற்றவர்களும் இரையாகி விடக் கூடாது.

### பாதுகாப்பு நிதி

போருக்கு நிறைய நிதி தேவைப்படுகிறது. நேற்றுச் சட்டப் பேரவையில் நிதி பற்றி நான் அறிவித்த பிறகு '' யுத்த நிதி ' குவியத் தொடங்கி விட்டது. நிதி அனுப்புவோர் 'நாட்டுப் பாதுகாப்பு நிதி' என்ற தலைப்பில் (நேஷனல் டிபன்ஸ்ஃபண்ட்) என்ற தலைப்பில் தமிழக அரசுத் தலைமைச் செயலகத்திற்கு முதலமைச்சரின் முகவரிக்கு அனுப்பிட வேண்டுறேன்.

போரில் பாதிக்கப்பட்டோர், கால், கை இழந்தோர். உயிர் இழந்தோர் ஆகியோர் குடும்பங்களைக் காப்பாற்றத் தமிழக அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும்.

### தமிழ் வீரர் குடும்பத்திற்குத் தமிழக அரசின் உதவிகள்

தமிழ்நாட்டிலிருந்து களம் சென்று போரில் இறந்தோர் குடும்பங் களுக்கும், அங்கஹீனமாகிப் பணியாற்றிடத் தகுதியிழந்தவர் குடும்பங் களுக்கும், ஐயாயிர ரூபாயும், மூன்று ஏக்கரா புன்செய் அல்லது ஒன்றரை ஏக்கரா நன்செய்யும் தமிழக அரசின் சார்பில் வழங்கப் படும். அவர்கள் வீட்டுக் குழந்தைகளின் படிப்புச் செலவுக்கும் உடைகளுக்கும் உதவி அளிக்கப்படும்

யுத்த நேரத்தில் ரத்த தானம் இன்றியமையாத அறச் செயல்! அதனைச் செய்திட அனைவரும் ஒருவரையொருவர் முந்திக்கொள்ள வேண்டும்.

செரு முனையில் நாடு!

சிங்க முழக்கம் செய்திடும் ஆற்றல் மறவர் போரில்!

எதிரிகளைத் தூளாக்கிட எக்காள முழக்கம் எங்கணும் கேட்குது!

கடைசி யுத்தமெனக் கர்ஜிக்கிறார் யாகியாகான்!

தன் முடிவைத் தானே தெரிந்துகொண்டும் போருக்குப் வந்திருக்கிறார் என்று புரிகிறது.

உண்மை உணர்ந்த நாடுகள் நம் பக்கம். நியாய முணர்ந்த தேசங்கள் நம் பக்கம்.

உண்மை உணர்ந்தும் நம்மை அலட்சியப்படுத்துகிற நாடுகள் விரைவில் திருந்துகிற அளவுக்கு இந்தப் போரில் பாடங்கற்றுக் கொடுப்போம்.

அதற்கு நம்முடைய ஒற்றுமையைப் பலப்படுத்துவோம். கட்சி, மத, சமய, சாதி வேறுபாடுகளை மறப்போம்.

வீரச் செயல் புரிவோம்! தீரத்தை நிலைநாட்டுவோம்.



வீர விருதுகள் பெறுவோருக்குத் தமிழக அரசு பொற்கிழி அளிக்கிறது. பரம வீர சக்கர விருது பெற்றவர்க்குப் பத்தாயிர ரூபாய் என்று இதுவரையில் இருப்பது பதினைந்தாயிரமாக இனிமேல் உயர்த்தி வழங்கப்படும்.

மகா வீர சக்கர விருது பெற்றவர்க்கு ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாய் என்று இதுவரையில் இருப்பது இனிமேல் பத்தாயிரமாக உயர்த்தித் தரப்படும்.

வீர சக்கர விருது மூவாயிரம் என்று இருப்பது ஐயாயிரம் ரூபாயாக இனிமேல் உயர்த்தித் தரப்படும். சேனை விருதுக்கு முதல் தடவையாக நமது தமிழக அரசின் சார்பில் மூவாயிர ரூபாய் வழங்கப்பட இருக்கிறது.

வீரர்களுக்கு அரசு காட்டும் ஊக்கத்தைப் போலவே தமிழகப் பெருமக்களும் ஊக்கம் காட்டிட வேண்டும்.

பொதுச் சேவை புரிவோர் இந்த நற்பணியில் இன்றே இறங்கிவிட வேண்டும். எதிரியை நோக்கி இந்தியாவின் 110 கோடிக்கு மேற்பட்ட கரங்கள், வீர முழக்கத்தோடு உயர்ந்துள்ள உணர்ச்சி மிகு காட்சியை அனைத்துலகும் கண்டு வியக்கும் வண்ணம் போரில் ஈடுபடுவோம்.

வெற்றி நமதே ! எதிரி வீழ்வது உறுதி !

வணக்கம்.

---

* 7—12—71ல் சென்னை வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பப் பெற்றது.

## வாழிய வங்கம்



தமிழக முதல்வர் அவர்கள், வங்கதேச வெற்றி குறித்த பாராட்டுத் தீர்மானத்தை 17—12— 1971-ல் தமிழகச் சட்டப் பேரவையில் முன்மொழிந்து ஆற்றிய முன்னுரையும் முடிப்புரையும் இங்கே தொகுத்துத் தரப்பெறுகின்றன.

### தீர்மானம்

"வங்காள தேசத்தின் உரிமைப் போராட்டம் வெற்றிகரமாக முடிந்து, சுதந்திர வங்காள தேசம் உதயமானதற்கு இந்தப் பேரவை தனது பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

வங்காள தேசத்தின் உரிமைப் போருக்கு மனிதாபிமான உணர்வுடன் ஆதரவு தந்து, பாகிஸ்தானின் போர்வெறிக்குத் தக்கபாடம் கற்பித்த இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்களுக்கு இந்தப் பேரவை பாராட்டுகளைக் குவிக்கிறது.

இன்னுயிர் தந்தும், இழப்புக்களை ஏற்றும் இந்தத் தியாகப் போரில் ஈடுபட்ட இந்திய வீரர்கள்—வங்க தேச விடுதலை வீரர்கள் அனைவருக்கும் இந்தப் பேரவை தனது மரியாதையைத் தெரிவித்துக் கொள்கிறது.

மலர்ந்துள்ள புதிய வங்காள தேசத்தின் விடுதலை வீரர் முஜிபுர் ரகிமானை உடனடியாக விடுதலை செய்வதற்கு அனைத்து நாடுகளும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இந்த விடுதலைப் போரில் அமெரிக்கா போன்ற நாடுகள் இந்தியாவுடன் ஒத்துழைக்காததையும் இந்தியாவுக்கு விரோதமாக—பாகிஸ்தானுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வருவதையும் கண்டிப்பதோடு, இந்தியாவுக்குத் துணை நின்ற சோவியத் யூனியன் போன்ற நாடுகளுக்கு இந்தப் பேரவை இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளவும் செய்கிறது."

## பாகிஸ்தானின் சரணாகதிப் படலம்

பன்னிரண்டு நாட்களாக நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் மாபெரும் வெற்றியை—மகத்தான வெற்றியை இந்தியா பெற்றுத் தந்திருக்கிறது.

பாகிஸ்தானின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டுவந்த கிழக்கு வங்க மக்கள் ஜனநாயக முறையிலே எழுப்பிய தங்கள் உரிமைக் குரல், பாகிஸ்தானத்தினுடைய சர்வாதிகாரிகளால் அலட்சியப்படுத்தப்பட்ட காரணத்தால், அந்த உரிமைக் குரல் விடுதலைக் குரலாக மாறி, பாகிஸ்தானத்தின் சர்வாதிகாரிகளுடைய அட்டூழியங்கள் அளவு மீறி, அந்தப் பகுதி மக்கள் பெரும் கொடுமைக்கு ஆளாகி, அவர்கள் ஆர்த்தெழுந்து விடுதலை முரசை வேகமாகத் தட்டி, மனிதாபிமான உணர்ச்சியுடன் அரசியல் தீர்வு காணவேண்டிய ஒரு பிரச்சினையைப் பாகிஸ்தானத்தினுடைய அதிபர் யாகியாகான் புறக்கணித்துவிட்ட காரணத்தினால் அனைத்துலக நாடுகளுக்கும் அந்தப் பேருண்மையை எடுத்துச் சொல்ல, அனைத்துலக நாடுகளில் நம்பக்கம் இருக்கின்ற நாடுகளின் பேராதரவினை எல்லாம் ஒருங்கே பெற்று, இந்தியாவினுடைய தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்தப் போராட்டத்தில் பெரிய வெற்றியினை ஈட்டித் தந்திருக்கிறார்கள்.

பத்து நாளில் யுத்தம் என்று யாகியாகான் முதலிலே முழங்கினார். இதுவே கடைசி யுத்தம் என்று பின்பு சொன்னார். இப்போது ஐ.நா. மன்றத்திற்குச் சென்றிருக்கிற பாகிஸ்தானத்தினுடைய—நியமிக்கப்பட்ட உதவிப் பிரதமர் பூட்டோ அவர்கள் ஆயிரம் ஆண்டுக் காலம் இந்த யுத்தம் நடைபெறும் என்று ஆரூடம் கணித்திருக்கிறார். ஆனால் அவர்களுடைய பேச்சுக்கள் கேலிக்குரியதாக, கிண்டலுக்குரியதாக ஆக்கப்பட்டன என்பதற்கு அடையாளமாகத்தான் இன்று வங்காள தேசம் சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டு, அதிலே மகத்தான வெற்றியினைப் பெற்றிருக்கிறது. அந்த வெற்றிக்குத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தந்த பேராதரவும், இந்திய இராணுவ வீரர்கள் காட்டிய ஆர்வமும், தங்களுடைய உயிரையும் பொருட்படுத்தாமல் போர்களிலே அவர்கள் புரிந்த சாதனைகளும், முப்படைத் தளபதிகளும், அதிலே அணிவகுத்து நின்ற வீரர்களும் நடத்திய திறமைமிக்க போராட்டமுமே காரணமாகும்.

இறுதி நேரத்திலேகூடப் போராடி, வங்கதேசத்தினுடைய தலைநகரம் டாக்காவைப் பிடித்துவிடலாம் என்ற உறுதி இருந்தாலும் மனிதாபிமான உணர்ச்சியோடு, எதிரியினுடைய வீரர்கள் அனைவருக்கும், தலைநகரில் இருக்கிற மக்கள் அனைவருக்கும் தொல்லைகள் ஏற்படுத்த விரும்பாத இந்தியா, அவர்

களுக்குக் காலக்கெடு அளித்து, இன்னும் சில மணி நேரம் வேண்டும் நாங்கள் யோசிப்பதற்கு—சிந்திப்பதற்கு என்று கேட்டதற்கு அதையும் வழங்கி, அதற்குப்பின் பாகிஸ்தானத்தினுடைய தளபதியின் சரணாகதிப் படலத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

### வானளாவிப் பறக்கிறது வங்க தேசக் கொடி

இன்றைக்கு வங்கதேசம் விடுதலை பெற்று விட்டது; சுதந்திர நாடாக ஆகிவிட்டது. அந்த நாட்டினுடைய கொடிபட்டொளி வீசி, முகிலைத் தொடப் பறக்க இருக்கிறது—பறக்கிறது.

### உரிமைக் குரல் கொடுத்த மாவீரனை விடுதலை செய்க!

இந்த நேரத்தில் இந்த மண்ணினுடைய உரிமைக்குக் குரல் கொடுத்த மாவீரன், இந்த மண்ணினுடைய விடுதலைக்கு முழக்கமிட்ட கர்ம வீரன் முஜிபுர் ரகிமான் மேற்குப் பாகிஸ்தான் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருப்பதை, அந்த மாவீரனுடைய விடுதலைக்கு உலக நாடுகளில் இருக்கின்ற எல்லா மக்களும்—நான் நாடுகளைச் சொல்லவில்லை—எல்லா மக்களும் மனிதாபிமான உணர்ச்சியோடு அவரை விடுதலை செய்ய விருப்பம் கொண்டிருப்பதை அனைவரும் அறிவோம். ஆகவே, நாம் விடுதலை பெற்றிருக்கிற வங்கதேச விடுதலை வீரர் முஜிபுர் ரகிமானை உடனடியாக விடுதலை செய்வதற்கு எல்லா நாடுகளும் முயற்சியினை மேற்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை இந்தப் பேரவையிலே நிறைவேற்றியிருக்கிறோம்.

நான் ஏற்கெனவே வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தவுடன் ஒரு கூட்டத்தில், இந்தியாவைச் சில நாடுகள் புறக்கணிக்கின்றன—அலட்சியப்படுத்துகின்றன என்றால், நாம் பெற இருக்கின்ற வெற்றிகள் அந்த அலட்சிய மனப்பான்மையைப் போக்கிவிடும்; நாம் பெற்றுக் கொடுக்கிற அந்த வெற்றி, மேலும் அகில உலகில் நமக்கு ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுத் தரும் என்று தெரிவித்ததைப்போல இன்றைக்கு அந்த வெற்றியை நாம் பெற்றிருக்கிறோம்.

வெற்றிக்கு முழுமுதல் காரணமாக இருந்த நம்முடைய படைவீரர்கள் அனைவருக்கும், வங்கதேச விடுதலை வீரர்கள் அனைவருக்கும் தலைவணங்கி வாழ்த்துத் தெரிவித்துக்கொள்வதோடு இந்த வெற்றியின் தலைவி—இந்திய மண்ணின் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கும் நான் நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் பல வெற்றிகள் நமக்கு நிச்சயமாகக் குவியும். ஆனால் நமக்கு மண்ணாசை கிடையாது என்பதைத் தெரிவிப்பதற்குஎடுத்துக்காட்டாக மேற்குப் பகுதியில் போர் நிறுத்தத்திற்கு இந்தியா தயாராக இருக்கிறதென்று அறிவித்திருக்கிறோம்.

## மக்களின் கரங்கள் யாவும் துப்பாக்கிகளாக மாறும்

போர் நிறுத்தம் செய்யப்படும் என்று பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மேலும் அதை பாகிஸ்தான் காதில் போட்டுக் கொள்ளாமல், தன் முடிவை விடாமல், வேறு பல நாடுகளின்—அமெரிக்கா, சீனா போன்ற ஆதிபத்திய நாடுகளின் தூண்டுதலினால் தாக்குவதானால், இந்திய மக்களின் அத்தனை கரங்களும் துப்பாக்கிகளாக மாறி வரும்; எதிரிகளை வீழ்த்தும் என்ற உறுதியினை இந்த அவையிலே நாம் எடுத்துக்கொள்கிறோம் என்று கூறி இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



## மரத்தடியில் பிறந்த கொடி

முன் மொழியப்பட்ட தீர்மானத்தை அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களும் வரவேற்றுப் பாராட்டி இந்த மன்றமே ஒருமுகமாக நிறைவேற்றுகிற கட்டத்தில் நான் மேலும் சில வார்த்தைகளைக் கூறுவது பொருத்தமுடையது என்று கருதுகிறேன்.

சுதந்திரக் கொடியை வங்காள தேசத்து மக்கள் ஏற்றிய நேரத்தில் அதை ஏற்றி வைத்திருப்பதற்குக் கூட அவர்களுக்கு ஓர் இடம் இல்லை. வங்க தேசத்தில் எங்கேயோ ஒரு மூலையில் ஒரு மரத்தடியில் தங்களுடைய அரசை அவர்கள் உருவாக்கினார்கள்.

இவர் ஜனாதிபதி, இவர் பிரதமர், இவர் ராணுவத் தளபதி என்றெல்லாம் அவர்கள் பிரகடனம் செய்தபோது உலக நாடுகள் கேலிக் கண்களோடு அந்தக் காட்சியைப் பார்த்து ரசித்ததையும் ' இது எங்கே நடக்கப் போகிறது? புது நாடா? இது உருவாகுமா ?' என்றெல்லாம் கேட்ட கேள்விகளையும் யாரும் மறந்திருக்க முடியாது.



இன்னமும் பத்திரிகைகளில் வந்த அந்த புகைப்படம் நம் நெஞ்சிலே பசுமையாகப் பதிந்திருக்கிறது. ஒரு மரத்தடியில் ஒரு சாதாரணத்துணி போட்டுக் கூட மூடப்படாத ஒரு மேஜையும், பழுதுபார்க்கப்பட வேண்டிய சில நாற்காலிகளும் அதிலே நான்கைந்து வங்க தேசத்தினுடைய-புதிதாக அறிவிக்கப்பட்ட நிருவாகிகளும், அவர்களுக்கு எதிரே மிகச் சொற்பமான ஒரு கூட்டமும் அதனைச் சுற்றிச் சில மரம் செடிகளும், இப்படிப்பட்ட ஒரு புகைப்படம் எல்லா ஏடுகளிலும் வெளியாகியிருந்தது.

ஆனால், இன்றைக்கு அந்தப் படம் மாறி அவர்கள் கிட்டத்தட்ட ஆறு கோடிக்கு மேற்பட்ட மக்களின் தளநாயகர்களாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

எங்கேயோ ஓர் இடத்தில்—அவர்களாகச் சூட்டிக் கொண்ட முஜிபுர் நகர் என்கிற இடத்தில் பறக்கவிடப்பட்ட அந்தக் கொடி இன்றைக்கு வங்க தேசத்தினுடைய தலைநகரமான—இந்திரா காந்தி அவர்கள், அறிவித்ததைப் போல் சுதந்திர நாட்டின் சுதந்திரத் தலை நகரமான டாக்கா நகரத்தில் பறக்கவிடப்பட்டிருக்கிறது.

### உரிமை விரும்பிகளை என்றும் ஒடுக்கி வைக்க முடியாது

இது, புறக்கணிக்கப்படுகிறவர்களும், அலட்சியப்படுத்தப்படுகிறவர்களும், உரிமையின்றி நசுக்கப்படுகிறவர்களும், விடுதலை விரும்பிகளும் என்றைக்காவது ஒரு வெற்றியை நிச்சயமாகப் பெற்றே தீர்வார்கள் என்ற நம்பிக்கையை அகில உலகிற்கும் ஜனநாயக ரீதியில் அறிவித்துக் கொண்டிருக்கிற சாட்சியமாகும்.

முஜிபுர் நகர் என்று விளையாட்டாகச் சொல்லப்பட்ட பெயர், வேடிக்கையாகக் கணிக்கப்பட்ட ஒரு நகரத்தினுடைய பெயர். ஆனால், இன்றைக்கு டாக்கா நகரத்திற்கே அந்தப் பெயரை வைக்கலாமா என்று அவர்கள் எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள்.

'டாக்கா' என்றாலே, டாக் என்ற ஒரு வகை மரங்கள் நிறைந்த இடம் என்றும், அதனால்தான் அந்த நகரத்திற்கு அந்தப் பெயர் வந்தது என்றும் கூறுகிறார்கள்.

அதேபோல், மரங்கள் அடர்ந்த ஓர் இடத்தில் ஒரு புதிய அரசு உருவாகியது. மரங்கள் அடர்ந்து இருப்பதன் காரணத்தால் அந்தப் பெயரைப் பெற்ற ஒரு தலை நகரத்தில் அந்த அரசு நிலை பெறுகிறது. அப்படி நிலைபெறுவதற்கான விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட விடுதலை வீரர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, அவர்கள் பக்கம் இருந்து, மனிதாபிமான உணர்ச்சியோடு ஜனநாயகக் கடமையினைச் செய்து முடித்த இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்களை நாடும், நானிலமும் போற்றத் தவறாது.

## வேறுபாடுகளற்றுப் போர்முனையில் நிற்கிறோம்!

திருமதி அனந்தநாயகி பேசுகையில், பெண்ணின் பெருமையை உலகம் உணர்ந்தது என்றார். கொஞ்சம் தாமதமாக உணர்ந்தாலும் (சிரிப்பு) பெண்ணின் பெருமையை உலகம் உணர்ந்திருக்கிறது.

இந்திரா காந்தி அவர்கள் எடுத்த அந்த முயற்சிகளை அனைத்து உலகத்திலுள்ள சில நாடுகள் ஆரம்பத்தில் அலட்சியப்படுத்தினாலும், அந்த நாடுகளுக்கெல்லாம் பாடம் போதிக்கும் வகையில் இந்திரா காந்தி தன் திறமையையும், ஆற்றலையும், இந்தியாவின் ஒருமித்த சக்தியையும் எடுத்துக் காட்டி, மகத்தான வெற்றியினைப் பெற்றிருக்கிறார்கள்.

இந்தப் போர் இந்தியாவின் ஒரு பக்கத்திலே நடைபெற்றாலும், அது தமிழ்நாட்டையும் பாதிக்கக் கூடிய போர் என்பதையும் யாரும் மறந்துவிடக் கூடாது.

அன்றைக்கே நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இன்றைக்குத் தமிழ்நாட்டில் தமிழ்மக்களும், ஆந்திர மாநிலம், கேரள மாநிலம், மைசூர் மாநிலம், குஜராத் மாநிலம் என்ற பாகுபாடு இல்லாமல் இந்தியா ஒன்று என்கிற ஒரே உத்வேகத்தோடு எதிரியை வீழ்த்துவதற்குப் போர்முனையில் நின்று கொண்டு இருக்கிறார்கள்.

## போருக்குப் பின்னும் போர்க்களத்தில் நாம்

தமிழ் நாட்டுக்குப் போர் வராவிட்டாலும் தமிழ்நாடு போர்முனையில் இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இன்றைக்குத் தமிழ்நாட்டு வீரர்கள் சிலர், ஏன், பலர் என்றுகூடச் சொல்லலாம். இந்தப் போராட்டத்தில் தங்கள் இன்னுயிரைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் அணிந்திருந்த ராணுவ உடைகள் அவர்களுடைய வீட்டிற்குத் திரும்ப அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்த ராணுவ உடைகளைக் கண்ணீரால் நனைத்து, அவைகளைத் தம் அருமருந்தன்ன

செல்வன் நினைவாக, வீட்டுத் தலைவனின் நினைவாகப் பேழையில் வைத்துப் பூட்டி, மலர் கொண்டு பூஜித்துக் கொண்டு இருக்கின்ற வீட்டுத் தாய்மார்கள், நம் அனுசரணைக்கும், ஆதரவுக்கும் உரியவர்கள் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

போர் வெற்றியைக் கொடுக்கும். ஆனால், போருக்குப்பின் ஏற்படுகின்ற விளைவுகளை நாடு சமாளித்துத் தீர வேண்டும். அப்படிச் சமாளிக்கின்ற ஆற்றலை நாம் அனைவரும் பெற்று இருக்கின்றோம்.

### வீரத்தாய்மார்கள் ஆறுதலும் மகிழ்ச்சியும் பெற

நம்முடைய மன்றத்தில் கட்சித் தலைவர்கள் அனைவரும் எடுத்துக் காட்டியது போல், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் அந்தக் கடமை உண்டு; இந்த நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனுக்கும் அந்தப் பொறுப்பு உண்டு; அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்ததும், மாவட்ட அதிகாரி மூலமாகத் தகவல் அந்த அந்த இடங்களுக்குத் தரப்படுகிறது. அந்த நேரத்தில், அதிகாரிகள் அந்த வீட்டாருக்கு ஆறுதல் கூறுவதற்கு முன்பாக, ஆங்காங்கே மக்கள் பிரதிநிதிகள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள், ஒன்றியத் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் சென்றார்கள் என்று சொல்லுகின்ற அளவுக்குச் சில இடங்களில் கூடுமானால் அமைச்சர்களே கூட இல்லங்களுக்குச் சென்றார்கள்—ஆறுதல் சொன்னார்கள் என்று அதிகாரிகளை முந்திக்கொண்டு நாம் நின்றால்தான் 'நம் மகன் இந்த மானப் போர்க்களத்தில் மடிந்து விட்டாலும், அந்த மகனுக்குப் பதிலாக, இதோ, இன்னொரு மகன் இருக்கிறான்' என்று அந்தத் தாய்மார்கள் மகிழ்ச்சியும் ஆறுதலும் அடைவார்கள். நம் தாய்த்திருநாடு எழுச்சியினைப் பெறமுடியும்.

### வீர மறவர்களைப் போற்றி வணங்குவோம்!

நம்முடைய நாடு புறநானூற்றுப் புகழ் கொண்ட நாடு. புறநானூற்றுத் தாய்மார்கள் வாழ்ந்த நாடு, நம் தமிழ் நாடு. இங்கே வீரத்திற்குப் பஞ்சம் இல்லை. மானத்தை நிலைநாட்ட மறவர்கள் போர்க்களத்தில் தங்கள் இன்னுயிரைப் பலி கொடுப்பது நம் நாட்டைப் பொறுத்த வரையில் புதிதல்ல.

'வெங்கொடுமைச் சாக்காட்டில், விளையாடும் தோள்
எங்கள் வெற்றித் தோள்கள்;

வெங்குருதி தனில்கமழ்ந்து வீரம் செய்கின்ற மூச்சு
எங்கள் மூச்சாம்'



—என்று தமிழ் நாட்டில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடியதற்கு ஏற்ப ஆற்றல் மறவர்கள் நிறைந்த நாடு நம் தமிழ் மாநிலம். ஆகவே, அந்தத் தமிழ்ப் பெருமக்கள் இந்தப் போராட்டத்தில் வெற்றியினைத் தேடித் தரத் தங்கள் இன்னுயிரைத் தந்திருக்கிறார்கள்; தங்கள் அங்கங்களை அறுத்துக் கொடுத்திருக்கிறார்கள்; கால் கைகளை இழந்து பச்சை ரத்தத்தைப் பரிமாறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வீர மறவர்களுக்கு இப்பேரவையின் வணக்கத்தைச் சொல்வதன் மூலம் நாம் நம்முடைய மதிப்பை உயர்த்திக் கொள்கிறோம் என்றால் மிகையாகாது.

அப்படிப்பட்ட வீரர்களுக்கு இப்போதுகூட இந்த அரசு சில விருதுகளையும், அந்த விருதுகளுக்கு ஏற்பப் பண முடிப்புக்களையும் தருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. அது போதாது என்றாலும், நம்மால் முடிந்ததைச் செய்கிறோம்; நம்முடைய இதயத்தை அந்தக் குடும்பத்தின் பக்கம் ஒப்படைக்கிறோம்.

### ஆறுதல் வழங்கும் பொறுப்பு அனைவர்க்கும் உரியது

நண்பர் டாக்டர் ஹண்டே அவர்கள் சொன்னார்கள், 'கன்னர்' ஆறுமுகம் அவர்கள் பற்றிய கடிதத்தை இந்த அவையில் குறிப்பிடுவது நல்லது என்று. அது உங்களுடைய உள்ளத்தைத் தொடக் கூடியது.

இப்படிப்பட்ட இல்லங்களிலே ஆறு என ஓடுகின்ற கண்ணீரைத் துடைப்பதற்குப் பயன்படும் என்று இதை அவையில் படிக்கிறேன். அது நீண்ட கடிதம், ஒரு பகுதியை மாத்திரம் படிக்கின்றேன். மேஜர் பால் அவர்கள், ஆபீசர் கமான்டிங், எழுதியுள்ள கடிதம் :

Unfortunately gunner Arumugam got a bullet hit in his head while fighting this action but he carried on his duties until he fell dead, in the service of our motherland. His bravery and courage has become an example and source of

inspiration for the entire unit. Gunner Arumugam was recently married and leaves behind his widow who is understood to be in the family way. We are all concerned about her and are doing our best in all possible ways. However, I shall be very grateful if you could kindly keep a fatherly and protective hand on her and extend all possible assistance to her.

இப்படிப்பட்ட கடிதங்கள், இதுபோன்ற போர்க்காலங்களில் ஏராளமாக வரக்கூடும். ஆறுமுகங்கள் ஆயிரம் ஆயிரம் தோன்றக்கூடும். ஆறுமுகங்களுடைய குடும்பங்களுக்கு ஆறுதல் வழங்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு. அந்தப் பணியில் நாம் ஈடுபடுவோமேயானால் தான் இந்தியாவில் இருக்கின்ற 55 கோடி மக்களும், தமிழ் நாட்டில் இருக்கின்ற 4 கோடி மக்களும் போர்க்களத்தில் நிற்கின்றோம் என்கிற உணர்ச்சி எதிரிகளுக்கு உருவாகும்.

## பூட்டோவும் வீட்டோவும்

இப்பொழுதும், இந்தியா, நான் தொடக்கத்தில் குறிப்பிட்டது போல், மண்ணைசை பிடித்து அலையவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாகப் போர் நிறுத்தம் செய்கிறது என்று அறிவித்திருக்கிறது.

ஒன்றை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

முதலிலே இந்தியாவின் மீது போர் தொடுத்தது பாகிஸ்தான். ஆக, போர் தொடுத்ததில் முந்திக்கொண்டது பாகிஸ்தான். ஆனால் இன்றைக்குப் போர் நிறுத்தம் செய்கிறோம் என்பதில் முந்திக் கொண்டிருப்பது இந்தியா.

இதை மனத்தில் கொண்டு உலக நாடுகளில் சில நாடுகள், தாங்கள் எடுத்த அநியாயமான முடிவுகளிலிருந்து தங்களை மாற்றிக்கொள்ளாவிட்டால், இந்தியா அவர்களுக்குக் கட்டாயம் மேலும் *புத்திதரத்தக்க அளவுக்குப் பாடத்தைப் புகட்டும் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகம் இல்லை.

இன்றைக்கு அமெரிக்காவின் கையில் 'பூட்டோ' இருக்கலாம்; ஆனால் ரஷ்யாவின் கையில் 'வீட்டோ' இருக்கிறது.

(பலத்த கையொலி)

## நியாயத்திற்குப் பாடுபடும் நாடுகள் நம் பக்கமே !

இன்றைக்கு ஐ.நா. மன்றங்கள்—நியூயார்க் நகரத்திலிருந்து வரும் செய்திகள் தெரிவிப்பது என்னவென்றால், நல்ல நாடுகள், நியாயத்திற்குப் பாடுபடும் நாடுகள் நியாயத்தின் பக்கம்ஆதரவு கோரும் நாடுகள் நம்பக்கம்இருக்கின்றன. அந்த நாடுகளுக்கு நாம் மேலும், மேலும், மீண்டும், மீண்டும் இந்தப் பேரவையின் சார்பில், 4 கோடி தமிழ்மக்களின் சார்பில், நம் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளும் இந்த நேரத்தில், இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

(பலத்த ஆரவாரம்)

[ஒருமனதாக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப் படுகிறது என்று பேரவைத் தலைவர் அறிவித்தார்.]